மஞ்சரி

ஜூன், 1958

விளம்பி - ஆனி

40 நயா பைசா

கண்ணாடிக் குழந்தை

பிரிட்டனில் கல்விப் புரட்சி

லட்சம் தந்த பரிசு

(ஜெர்மன் கதை)

உழவன் மகள்

(சீன நாவல்)

அனைத்துக்கும் அன்பே ஆதாரம்

ஊக்கம் இல்லையேல் வாழ்வு இருள். அறிவு இல்லையேல் ஊக்கம் வீண். வேலை இல்லையேல் அறிவு பாழ். அன்பு இல்லையேல் வேலை வீண். அன்போடு நீ வேலை செய்தால் உனக்கு நீயே கட்டுப்படுகிறாய்; பிறருக்குக் கட்டுப்படுகிறாய்; கடவுளுக்குக் கட்டுப்படுகிறாய்.

—கலில் கிப்ரான்

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர் :
என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர் :
தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனாபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
கௌரி அம்மாள்
கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்
கி. தாமோதரன்

ஓவியர்கள் :
ஸாமி, மகான், சுசி, சுப்பு

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை-4. பிரதி ஆங்கில மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 40 நயா பைசா (6½ அணா). வருஷ சந்தா ரூ. 4' (ரூ. 4-12-0). சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புங்கள். விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

'மஞ்சரி'யிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 11] ஸ்தாபிதம்: நவம்பர் '47 :: ஜூன் 1958 [இதழ் 6

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

தேவிகுளம் தேர்தல் : கேரளச் சட்ட சபைக்குத் தேவிகுளம் தொகுதியில் நடந்த உப தேர்தலில் மொத்தம் லட்சத்துக்கு மேற்பட்ட வோட்டுக்கள் பதிவாயின. சுமார் 7000 வோட்டு வித்தியாசத்தில் கம்யூனிஸ்ட் அபேட்சகர் வென்றூர்; காங்கிரஸ்காரர் தோற்றூர். தேர்தலுக்குமுன் கம்யூனிஸ்ட் மந்திரிகள் தாங்கள் தேர்தல் பிரசாரம் செய்வதில்லை என்று சொன்ணர்கள். அந்தக் கட்சியைச் சேர்ந்த மற்றவர்களே பிரசாரம் செய்தார்கள். பதவியில் உள்ளவர் நேரிலே தங்கள் ஆடம்பரங்களோடு வந்து பிரசாரம் செய்யாதிருப்பது ஒரு சிறப்பாகத் தோன்றும். ஆனல், இது ஒன்றும் அப்படிப் பிரமாதமான விஷயம் அல்ல. பதவியில் உள்ளவர் வருவதே சில சமயம் காரியத்தைக் கெடுத்துவிடும். ஆகவே, இதைப்பற்றியெல்லாம் நாம் பெரிதுபடுத்திப் பேசத் தேவை இல்லை. ஒன்று மட்டும் இந்தத் தேர்தலினுல் தெளிவாகிறது. தேவிகுளம் மக்களுக்குக் கம்யூனிஸ்டுகளிடம் காதல் பிறந்துவிட்டதோ, இல்லையோ; அது எப்படியானுலும், அங்கே பெரும்பாலோருக்குக் காங்கிரஸிடம் வெறுப்பு இருக்கிறது. இதை மட்டும் மறுக்க முடியாது.

* * *

பிரெஞ்சு நெருக்கடி: அல்ஜீரியா மீது பிரான்ஸ் ஆதிபத்தியம் செலுத்திக்கொண்டிருக்கிறது. அங்கே உள்ள சுதேசி மக்கள் இந்த அந்நிய ஆட்சியை எதிர்த்துச் சுதந்தரப் போராட்டம் தொடங்கினுர்கள். கிளர்ச்சிக்காரர்களுக்கும் ராணுவத்துக்கும் போர் எழுந்தது. ஆனல், தலைமையிடமான பிரான்ஸில் நிலையான சர்க்கார் என்றுமே இருப்பதில்லை. மந்திரி சபைகள் கவிழ்ந்துகொண்டேயிருப்பது அங்கே சகஜம். இதனுல் உறுதியாக ஒரு கொள்கையை அல்ஜீரியப் பிரச்னையில் பிரெஞ்சு சர்க்கார் கொண்டு செலுத்த முடியவில்லை. அல்ஜீரியாவில் உள்ள பிரெஞ்சு ராணுவத் தலைவர்களுக்கு இது பிடிக்கவில்லை. அல்ஜீரியாவில் தங்கள் இஷ்டப்படி ஆட்சி செலுத்த ஆரம்பித்தார்கள். இதுமட்டும் அல்ல; பிரான்ஸிலே, தங்களுக்குப் பிடித்த தலைவரான டிகால் என்பவரே பிரதம மந்திரியாக இருக்க வேண்டும் என்கிருர்கள். அரசியல் சட்டத்தையும் சம்பிரதாயங்களையும் எல்லாம் உதறித் தள்ளிவிட்டு, டிகாலைப் பிரான்ஸின் சர்வாதிகாரி ஆக்கிவிட வேண்டும் என்பதுதான் அவர்கள் சொல்வதற்கு அர்த்தம். இந்த நிலையில், பிரான்ஸில் ஃப்ளிம்ளின் என்பவரைப் பிரதம மந்திரியாகக் கொண்ட சர்க்கார் ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் கம்யூனிஸ்டுகள் கூட ஆதரவளித்திருக்கிருர்கள். பிரெஞ்சு சர்க்காருக்கும் அல்ஜீரியாவில் உள்ள பிரெஞ்சு ராணுவத்துக்கும் ஒருபுறம் பிணக்கு; அல்ஜீரியச் சுதேசி மக்களுக்கும் அங்குள்ள ராணுவ ஆட்சிக்கும் மறுபுறம் போர்! அல்ஜீரியாவில் தொடங்கியுள்ள ராணுவப் பிணக்குப் பிரான்ஸையும் பீடித்துவிடுமா? உள்நாட்டுக் கலகம் அங்கேயே எழுந்துவிடுமோ? அப்படி எழுந்தால், அது

ஐரோப்பிய நிலைமையையே ஏதாவது பாதிக்குமோ? இப்படி யெல்லாம் பல சந்தேகங்கள் எழுகின்றன. போகப் போகத்தான் நிலைமை தெளிவாக வேண்டும்.

*   *   *

புதுமாதிரி நம்பிக்கையில்லாத் தீர்மானம்: பிரெஞ்சு நெருக்கடியிலிருந்து, விநோத யோசனை ஒன்று கிளம்பியிருக்கிறது. பிரெஞ்சு மந்திரி சபைகள் நிலையற்றுப் போய்க்கொண்டே இருப்பதைத் தவிர்க்க, அரசியல் சட்டத்தைப் பிரெஞ்சுப் பிரதம மந்திரி திருத்தப் போகிறாராம். 'ஆக்க ரீதியான நம்பிக்கையில்லாத் தீர்மானம்' (கன்ஸ்ட்ரக்டிவ் நோ-கான்ஃபிடன்ஸ் மோஷன்) என்ற புதுமாதிரியான விதி ஒன்றைச் சட்டத்தில் அவர் புகுத்தப் போகிறாராம். ஒரு மந்திரி சபைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதானால், அடுத்த மந்திரிசபைபற்றி நிச்சயமான ஏற்பாட்டைச் சொல்லியே எவரும் கொண்டு வரவேண்டுமாம். இது தான் ஆக்க ரீதியான நம்பிக்கையில்லாத் தீர்மானம். ஒரிஸ்ஸாவில் இன்று நடப்பதுபோல மந்திரி சபைத் தொல்லைகள் அடிக்கடி நம்முடைய பல ராஜ்யங்களில் நிகழ்கின்றன. ராஜ்யங்கள் பற்றிய மட்டுமாவது இந்த ஆக்க ரீதியான நம்பிக்கையில்லாத் தீர்மான ஏற்பாடு, நம் நாட்டுக்கு மிக்க வசதியாக இருக்குமே; யாராவது அரசியல்வாதி இதுபற்றி முயற்சி எடுத்துக் கொள்வாரோ?

*   *   *

யதுநாத் சர்க்கார் மறைவு: சரித்திர உண்மைகளைப் பாரபட்சமின்றி எழுதிவந்த பிரபல இந்திய சரித்திர ஆசிரியர்களில் சிறந்து விளங்கிய இவர் சமீபத்தில் காலமானார். வாழ்வில் பல இன்னல்களும் துயரமும் அடிக்கடி நேர்ந்தும் சுமார் 60 ஆண்டுகளாகச் சரித்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்; வீண் பொழுது சிறிதும் போக்காமல் அரிய உண்மைகளை வெளியிட்டவர். புகழையோ பெருமையையோ இவர் என்றும் விரும்பியதில்லை. அரசியலில் இவர் ஈடுபடாவிட்டாலும் சில சமயம் பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகள் மூலம் தம் நாட்டு மக்களுக்கு நல்லுரை வழங்கியிருக்கிறார்.

இவருக்கு முந்தி ரமேசசந்திரர், ராஜேந்திரலால் மித்திரர், ராஜவாடே போன்ற அறிஞர்கள் இந்தத் துறையில் ஈடுபட்டாலும் மத்தியகால இந்திய சரித்திர ஆராய்ச்சியில் தக்க ஆதாரங்களைக் கொண்டு இவரே முதல் முதலாக நேர்மையான முறையில் சரித்திர சம்பவங்களை ரசமாகவும் கோவையாகவும் எழுதினார் என்று சொல்லவேண்டும். ஆங்கிலம், பிரெஞ்சு, போர்த்துகீஸ், டச்சு, பாரசீகம், மராட்டி, ராஜஸ்தானி, குர்முகி, அஸ்ஸாமி முதலிய பல மொழிகளிலும் இருந்த தஸ்தாவேஜிகளை அலசி ஆராய்ந்து முகலாயர், மராட்டியர், சீக்கியர் ஆகியோரின் அருங்குணங்களை அந்த அந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் காட்டியிருப்பது இவருடைய பெருந்தன்மைக்குச் சான்றாகும். இதற்காகவே ராஜஸ்தானம், மகாராஷ்டிரம் முதலிய பிரதேசங்களுக்குப் போய் அங்கங்கே கிடைத்த செல்லரித்த தஸ்தாவேஜுகளையும் தேடி எடுத்து வந்து பழைய வரலாற்று விவரங்களை அறிந்து வெளியிட்டார். இவை மட்டுமின்றித் தம் ராஜ்ய மொழியான வங்காளியின் வரலாற்றையும் வெகு திறம்பட எழுதி வைத்திருக்கிறார். சில சமயம் இவர் சில சரித்திர புருஷர்களைப்பற்றி வெளியிட்ட உண்மைகள் பிறருக்கு வருத்தத்தையும் எரிச்சலையும் மூட்டியபோதிலும் இவர் அதற்காக உண்மையை மறைத்து மழுப்பிவிட விரும்பவில்லை. இதனால்தான் பிற்காலத்தில் ஐரோப்பியச் சரித்திர ஆசிரியர்களும் சரி, இந்தியரும் சரி இவரை ஒரு முகமாகப் பாராட்டலானார்கள். சரித்திர வரலாற்றின் நேர்மைக்காக உழைத்த இந்த முதுபெருங் கிழவரை இந்தியா என்றும் மறக்காது; இவர் நினைவை எந்நாளும் போற்றி வரும்.

ராஜஸ்தான் சரஸ்வதி

கங்கா பொன் விழாக் காட்சிச் சாலையைப் பிக்கானீர் மகாராஜா கங்காசிங் ஜைன் பொன் விழா ஞாபகார்த்தமாக 1937-இல் பிக்கானீரில் ஸ்தாபித்தார்கள். இந்தியாவிலேயே மிகச் சிறந்த மண் பிரதிமைகள் (டெரா கோட்டா) இங்கே வைத்திருக்கிருர்கள். பிரதிமைகள் பூர்வ குப்தர்களின் காலத்தைச் சேர்ந்தவை. இவற்றைப் பிக்கானீர் டிவிஷனிலுள்ள சூரத்கட், ஹனுமான்கட் இரண்டுக்கும் இடையேயுள்ள பிரதேசங்களிலிருந்து டாக்டர் எல். பி. டெஸிட்டரி 1917-இல் கண்டெடுத்தார்.

இந்தப் பிரதேசங்கள் பெரிதும் மொகஞ்சதடோ நாகரிக காலத்தைச் சேர்ந்தவை. இவற்றில்தான் புண்ணிய நதியான சரஸ்வதி ஓடியது என்று கர்ண பரம்பரைக் கதை கூறுகிறது.

மண் பிரதிமைகளைத் தவிர இந்தக் காட்சிச்சாலையில் சரஸ்வதி தேவியின் அழகான சலவைக் கல் சிலை ஒன்றும் இருக்கிறது. இது கி. பி. 11-12-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தது. நான்கு அடி எட்டு அங்குலம் உயரமுடையது. பிக்கானீர் டிவிஷனிலுள்ள பல்லூ என்ற கிராமத்தில் கண்டெடுத்தது. ராஜஸ்தானில் உள்ள மிகச் சிறந்ததொரு சலவைக் கல் சிலை. இதுவே படத்தில் காண்பது.



ராஜஸ்தானைச் சேர்ந்த எல்லாப் பிரிவு ஓவியங்களும், முகலாய, பாரசீக ஓவியங்களும் சுவடிகளும் இங்கே இருக்கின்றன. ஜஹாங்கீர், ஷாஜஹான், ஒளரங்கசீப், ஷா ஆலம் இந்தச் சக்கரவர்த்திகள் பிக்கானீர் அரசர்களுக்கு விடுத்த பட்டயங்களை இங்கே வைத்திருக்கிருர்கள். அவை மூல சாசனங்கள்; சக்கரவர்த்திகளின் இலச்சினைகள் சகிதம் இருக்கின்றன. ஜஹாங்கீர் சக்கரவர்த்தி (கி. பி. 1596) உடுத்த பட்டு ஆடை ஒன்றும் இங்கே இருக்கிறது. அது பாரசீக ஷாவுக்கு ஆடை நெய்தவர் தயாரித்ததாம்.

தனிச் சிறப்பு வாய்ந்த பிக்கானீர் அரக்கு வேலைப்பாடுகள் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பிரசித்தி பெற்றவை. இவற்றை 'உஸ்தாதுகள்' என்ற கைவினைஞர்கள் தயாரிக்கிருர்கள். மரம், உலோகம், கண்ணுடி, கல், நெருப்புக்கோழி முட்டை, ஒட்டகத் தோல் இவற்றின் மீது அருமையான சித்திர வேலைப்பாடுகளைச் செய்கிருர்கள்.

—இந்தியத் தகவல் இலாக்காவின் குறிப்பு.

கண்ணாடி உருவந்தான் - ஆனால், எஃகுபோல் உறுதி; அலுமினியம்போல் லேசு!

கண்ணாடிக் குழந்தை

ஜான் லீயர்

மங்கிய ஒளி வீசும் அலுமினிய உறை ஒன்று மோவாயிலிருந்து துடை வரையிலும் அவனைப் போர்த்திருந்தது. உச்சந்தலையில் கவிழ்த்த உலோக வளையத்திலிருந்து தொங்கும் பிளாஸ்டிக் முகமூடிக்குப் பின்னால் அவன் முகம் தெளிவற்றுத் தெரிந்தது. கைகளிலோ கனத்த தட்டையான வெள்ளை அஸ்பெஸ்டாஸ் கையுறைகள். முதலில் அவன் என்னைப் பார்த்தான்; பிறகு திரும்பினான். அவனுக்கு முன் இருந்த உலைவாயின் கதவு மெதுவாகத் திறந்தது. உள்ளே திகுதிகு என்று அலை பாயும் தீச்சுவாலையின் ஊடே அவனுடைய பரந்த விரல்கள் புகுந்து மூடிக்கொண்டன. வெளியே வந்த அந்தக் கைப்பிடியில் கோமாளிக் குல்லாய்போல் கூம்பிய கும்பம் ஒன்றின் நுனி பளபள என்று மின்னியது.

அவனுக்கு முன்னால் ஒரு மரத் துண்டில் கெட்டியான எஃகு ஆணி ஒன்று பதிந்து தலை நிமிர்ந்து நின்றது. கும்பத்தை அவன் வெளியே எடுக்கும்போது அது எங்கே உராய்ந்ததோ அந்த இடத்தில் மரத்துண்டு தீப்பற்றி எரிந்தது. கும்பம் மேலெழும்பி ஆணியின் தலைக்கு நேராக இறங்கி மோதியது. தீப்பொறிகள் சிதறின. மறுபடியும் கும்பம் எழும்பியது. அதன் விளிம்பெல்லாம் ஒரே புகை. மரத்தோடு மரமாக ஆணித் தலை பதியும்வரைக்கும் ஆணியை அவன் அறைந்துகொண்டேயிருந்தான். அவனுடைய பிளாஸ்டிக் முகமூடியைப் பார்த்தேன். அதற்குள் மறைந்திருந்த முகம் நிமிர்ந்ததைக் கண்டேன். அலுமினிய உறைக்குள் இருப்பவன் புன்சிரிப்புச் சிரித்தான். அவன் சிரித்தது நியாயம். இதே காரியத்தை ஏற்கனவே அவன் பல முறை செய்து காட்டியிருக்கிறான். பார்த்தவர் எல்லாம் தங்கள் கண்களையே நம்ப முடியாமல் வியந்திருக்கிறார்கள். ஏனென்றால், ஆணியின்மேல் சுத்தியலைப் போலச் சுளுவாக அவன் உபயோகித்த கும்பம், உருவற்ற கண்ணாடிக் குழம்பிலிருந்தே வார்த்தெடுத்தது.

ஆணியை அறைந்த கும்பம் கண்ணாடிச் சுத்தியலா? செஞ்சூட்டில் இருக்கும் எந்தக் கண்ணாடியும் அவ்வளவு சக்திவாய்ந்த அடிகளைத் திரும்பத் திரும்பப் பொழிந்திருக்கவே முடியாது. அது என்னவோ முன்பு கண்ணாடிக் குழம்பாகத்தான் இருந்தது. இப்போது அதுவே இரும்பைப்போல் கடினமும் உறுதியும் பெற்று இறுகிவிட்டது!

நியூ யார்க் நகருக்கு அருகில் உள்ள கார்னிங் பிரதேசத்தில் இருக்கும் கார்னிங் கண்ணாடித் தொழிற்சாலையின் பல ஆராய்ச்சி நிலையங்களுள் ஒன்றில்தான் இந்த விநோதமான சுத்தியலைப் பார்த்தேன். டாக்டர் எஸ் டொனால்டு ஸ்டூக்கி என்ற நிபுணரின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக இந்த ஒத்திகை நடந்தது. 1957 மே 23-ஆம் தேதி அவருக்கு நாற்பத்திரண்டு வயசு. பிறந்த நாளன்று மற்றவர்களைப்போல் தாம் பரிசு பெற்றுக்கொள்ளாமல், அவரே லட்சக்கணக்கான மக்களுக்குப் பயன்படும் ஒரு பரிசை அளித்திருக்கிறார். கண்ணாடியிலிருந்து தோன்றி இரும்பு ஆணியையே மரத்தில் அறைந்த இந்தப்

காப்பிரைட்: தி ஸாட்டர்டே ரெவ்யூ (ஆங்கிலம்; 1-6-'57), ஐக்கிய அமெரிக்கா.

பொருள், அவரே சொந்தமாகக் கண்டு பிடித்ததுதான்.



பைரோஸெராம் தடி ஒன்றை இரண்டு முனேகளிலும் பலமான யந்திரங்கள் பிடித்து இழுக்கின்றன. இரண்டு ஆஸிடெலின் பந்தங்கள் தடிமீது தீயைச் சொரிகின்றன. தடி உருகவோ முறியவோ இல்லே.

கார்னிங் கண்ணுடித் தொழிற்சாலேயினர் இந்தப் பொருளே பைரோஸெராம் என்று குறிப்பிடுகிருர்கள். இரும்பையும் சிக்கிமுக்கிக் கல்லேயும் விடக் கடினமான தென்றும், அலுமினியத்தைப் போல் லேசானதென்றும், எடையைப் பொறுத்த அளவில் ஸ்டெயின் லெஸ் ஸ்டீலேவிட அதிகமாக - நல்ல அலுமினியக் கலப்பு உலோகங்களுக்கு இணேயாக - உறுதியான தென்றும் இதை விளம்பரப்படுத்துகிருர்கள். இது மிருதுவாகும் உஷ்ணநிலே கிட்டத்தட்ட இரும்பின் உருகு நிலேக்குச் சமமானது. தங்கம், தாமிரம் இரண்டின் உருகு நிலேக்கும் மேலே - பொதுவாக உபயோகப்படும் எஃகின் உருகு நிலேக்கு எவ்வளவோ மேலே - இதன் உருகுநிலே இருக்கிறது. ஒரு சதுர அங்குலப் பரப்புக்கு 40,000 பவுண்டு கனத்தை இந்தப் பொருளும் அலுமினியத்தைப் போலவே தாங்குகிறது. விரியாது கனந் தாங்கும் சக்தி (டென்ஸைல் ஸ்ட்ரெங்க்த்) சில வகை உருக்கிரும்புகளுக்கு இருக்கும் அளவில் பாதி இதற்கு இருக்கிறது. திடீரென்று மாறும் உஷ்ணநிலேயில் இது விரிவதோ சுருங்குவதோ, நாம் அறிந்த எந்த 'ஸெராமிக்' மண்ணேயும் விட எவ்வளவோ குறைவு. பெருஞ் சூடேற்றிய நிலேயில்கூட மிகவும் சக்தி வாய்ந்த அமிலங்கள் இதை அரிப்பதில்லே. வான வெளிப் பிரயாணி ஒருவன் கனவு காணும் தேவைகளேப் பூர்த்தி செய்வதாக, இதன் மின்சாரப் பண்புகள் அமைந்திருக்கின்றன.

இதற்கு முன் மனிதனுக்கு அநுபவமான-ஏன் அவனுடைய கற்பனேக்கும் அப்பாற்பட்ட - எந்த வெப்ப நிலேயையும் உலோக அரிப்பையும் எதிர்த்து நிற்கக் கூடிய புதுப் பொருள்களேக் கண்டுபிடிக்க விஞ்ஞானம் இப்போது அரும்பாடு பட்டுக்கொண் டிருக்கிறது. இந்தச் சமயத்தில்தான் கார்னிங் நிலேயத்தார், டாக்டர் ஸ்டுக்கியின் அற்புதக் கண்ணுடிக் குழந்தையை உலகத்துக்குத் தருகிருர்கள். என்ன குணங்களெல்லாம் இந்தப் பைரோஸெராம் என்ற கண்ணுடிக் குழந்தைக்கு இருப்பதாகக் கார்னிங் நிலேயம் கூறுகிறதோ, அவை தான் இன்றைய அணுசக்தி, ஹைட்ரஜன் சக்தி, காற்றையும் மிஞ்சிய விமான வேகம், வான வெளிப் பிரயாணம் எல்லாவற்றையும்பற்றிய ஆராய்ச்சிகளுக்குத் தேவை. எனவே, இதன் கலவைச் சூத்திரத்தை இந்த ஸ்தாபனத்தார் ரகசியமாக வைத்திருப்பதில் அதிசயமில்லே. ஸ்டுக்கியின் முறையைப்பற்றி இவர்களேக் கேட்டால், ''நாங்கள் கண்ணுடியைக் குளிர வைத்து மறுபடியும் சூடேற்றுகிருேம்'' என்பதோடு நிறுத்திக் கொள்கிருர்கள்.

பைரோஸெராமைப் பற்றிப் பொதுமக்களுக்குத் தெரிவதற்குப் பல மாத காலம் முன்னுலேயே, அமெரிக்க விமானப் படையினருக்கு இதுபற்றித் தெரியும். பறக்கும் குண்டுகள் (மிஸில்ஸ்)



பைரோஸெராமில் ஊதிச் செய்த படியும், அழுத்தி உருவாக்கிய கிண்ணமும், உருக்கி வார்த்த அலகுகளும்.

ராக்கெட்டுகள் இவற்றின் முனையில் பொருத்துவதற்காக இதை அந்தப் படையினர் வாங்கிக் கொண்டிருந்தார்கள். காற்றின் உராய்வு, மழைத்துளிகளின் அரிப்பு இரண்டையும் எதிர்த்து நிற்க இதற்குள்ள சக்திக்காகத் தான் வாங்கியதாக வெளியே சொன்னார்கள். உண்மையில் இந்த இரண்டையும் விட முக்கியமாக, தூய மின்தடுப்பு (எலெக்ட்ரிகல் இன்ஸுலேஷன்) இயல்பு இதற்கு இருக்கிறது. ஆணியடித்ததைப் போன்ற பைரோஸெராம் கும்பம் ஒன்றின் மூலமாக, எல்லாத் திசைகளிலும் சமமாக ரேடியோ சங்கேதங்களை, அல்ட்ரா ஹை ஃப்ரீக்வன்ஸி என்ற மிக உயர்ந்த விகித மின்காந்த அலையதிர்ச்சியில் ஒலி பரப்ப முடியும். எனவே, சமீபத்தில் ரேடியோ மூலம் செலுத்திய சில ராக்கெட்டுகள் சரியாகச் செல்லாததற்குக் காரணமான குறைகளை இது திருத்திவிடும்.

வேறு பல அமெரிக்க ஸ்தாபனங்களை விட முன்னதாகவே - பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின் பாதியிலேயே - கார்னிங் கம்பெனி விஞ்ஞான ஆராய்ச்சியில் இறங்கிவிட்டது. தரைப் பிரயாணங்களின் அபாயத்தைக் குறைப்பதற்காக இங்கே ஆராய்ச்சி தொடங்கினார்கள். ரெயில் பிரயாணம் உச்ச நிலையை அடைந்த காலம் அது. ரெயில் பாதையின் கைகாட்டிகளில் பதித்த கண்ணாடிகளைப் பற்றித்தான் கார்னிங் ஆராய்ச்சிச்சாலையில் பெருத்த அளவில் ஆராய்ச்சி நடந்தது. அந்தக் காலத்தில் எரியும் கைகாட்டி விளக்குகளைக் கண்டுபிடிக்க ரெயில்வேக்காரர் சிரமப்பட்டார்கள். ஏனென்றால், கண்ணாடியைப் பிரகாசப்படுத்த அதன் வெளிப்புறத்தில் அடுக்கடுக்கான வளையங்கள் கொண்ட லென்ஸுகளைப் பதித்திருந்தார்கள். அந்த வளைய முண்டுகளில் கோடையில் தூசியும் மழைக்காலத்தில் பனியும் படிந்து விளக்குகளை மங்க அடித்தன.

ரெயில் பிரயாணிகளின் நல்ல காலம், கார்னிங் நிலைய ஸ்தாபகரின் மகன் அமோரி ஹட்டன் ஜூனியருக்கு விஞ்ஞான ஆர்வம் இருந்தது. கார்னெல் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் ஜி. எஸ். மோரெர் என்பவரிடம் 1871-இல் அவர் ஒரு யோசனை கேட்டார். ரெயில் பாதை விளக்குகளில் படியும் தூசியையும் பனியையும் அகற்ற வேண்டும் என்றார். புரொபஸர் மோரெர் வெகு சுலபமாக இந்தச் சிக்கலைத் தீர்த்துவிட்டார். கைகாட்டி விளக்கின் லென்ஸை உட்புறமாகத் திருப்பி வைத்தார். லென்ஸின் வளைய முண்டுகளில் தூசியோ பனியோ படாமல் விளக்குப் பத்திரமாகிவிட்டது.

அமோரி ஹட்டனின் மகன் ஆலென்ஸன் வந்தபோது, தொழிலோடு கூடவே விஞ்ஞான ஆராய்ச்சியையும் ஒழுங்காக நடத்த ஆரம்பித்தார்கள். ரெயில்பாதைக் கைகாட்டி விளக்குகள் இப்போது எல்லாப் பருவங்களிலும் போதிய அளவு பிரகாசமாக இருந்தன. ஆனால் அவற்றின் நிறங்கள் லேசாகவும் தெளிவில்லாமலும் இருந்தன. தவிர, வெவ்வேறு பாதையில் வெவ்வேறு தரமான நிறங்களை வழங்கி வந்தார்கள்.

இந்த நிறபேதக் குழப்பத்தால் விபத்துக்கள் அடிக்கடி நேர்ந்தன. 1900-இல் யேல் யூனிவர்ஸிட்டி புரொபஸர் ஈ.டபிள்யூ. ஸ்கிரிப்சர் என்பவரும் அவருக்குத் துணையாக டாக்டர் வில்லியம் சர்ச்சில் என்பவரும், நிற விளக்குகள்பற்றி ஆராய இந்த ஸ்தாபனத்தில் அமர்ந்தார்கள். இங்கே ஆப்டிக்கல் லாபரேட்டரி (பார்வை ஆராய்ச்சிக்கூடம்) ஒன்று இந்த ஆராய்ச்சியின் பயனாக ஏற்பட்டது. 1907-இல் ஒரே விதமான பச்சை, மஞ்சள், சிவப்பு ஆகிய மூன்று நிறங்களை இவர்கள் நிர்ணயித்தார்கள். அவற்றை ரெயில்வே அஸோஸியேஷன் ஏற்றது. அமெரிக்காவிலும் கனடாவிலும் எல்லா ரெயில் பாதைகளிலும் இதே நிறங்களை உபயோகிக்கத் தொடங்கினார்கள்.



எஃகு, பித்தளை இரண்டிலும் பைரோஸெராம் ஊசி கொண்டு வெகு எளிதாய்க் கீறிவிடலாம்.

கண்ணாடியின் நிறங்களைப் பற்றி வெற்றிகரமாக ஆராய்ந்த பின்பு, கண்ணாடியையே ஹட்டன் குடும்பத்தினர் ஆராயத் தொடங்கினார்கள். 1908 - இல் ஸல்லிவன் என்ற ரசாயன நிபுணர், கார்னிங் ஆராய்ச்சிச் சாலையில் அதிகார பூர்வமான முதல் டைரக்டராகப் பதவியேற்றார். இன்னமும் ரெயில் பாதைகளிலிருந்துதான் கண்ணாடித் தயாரிப்பாளர்களுக்குக் கொழுத்த வருமானம் வந்துகொண்டிருந்தது. கைகாட்டி விளக்குகள் சரியாகிவிட்டாலும் இப்போது பிரேக்மன் என்ற சிப்பந்தியிடம் உள்ளவிளக்குகளின் கண்ணாடி விரிவதையோ சுருங்குவதையோ தடுப்பதற்காக ஸல்லிவன் ஆராய்ந்தார். போரோஸிலிகேட் என்ற பொருளைக் கொண்டு விளக்குகளின் கண்ணாடியைத் தயாரிக்கலாம் என்று கண்டுபிடித்தார். பின்பு, உஷ்ணத்தினாலும் அமில அரிப்பினாலும் கெடாத பாட்டரி ஜாடிகளைத் தயாரித்துத் தர ரெயில்வே நிர்வாகத்தினர் சொன்னபோதும், இதே சூத்திரத்தை மாற்றி மாற்றிப் பார்த்து அதையும் ஸல்லிவன் கண்டுபிடித்துவிட்டார்.

பின்னால் டாக்டர் ஜே. டி. விட்டில்டன் என்ற பௌதிக நிபுணர், கார்னிங் ஸ்தாபனத்தில் சேர்ந்தார். அவர் குடும்பத்துச் சமையல் பாத்திரங்கள் அடங்கிய கட்டைப் பிரிக்கு முன்பே விட்டில்டனின் மனைவி கேக் சுட அவசரப்பட்டாள். எனவே, அதைப் பாட்டரி ஜாடியிலேயே சுட்டெடுத்துவிட்டாள்! சில ரசாயனப் பொருள்கள் அந்த ஜாடியில் இருந்தன. ஆனால், அவள் விஞ்ஞானி யல்ல. கேக்கில் அவை கலப்பது அபாயமா, இல்லையா என்றெல்லாம் அவளுக்குத் தெரியாது. கேக் நன்றாகத்தான் வெந்தது. நாவுக்கும் சுவையாகவே இருந்தது. கண்ணாடிச் சாமான்களிலும் கேக் சுடலாம், சமைக்கலாம் என்பதை விட்டில்டன் இதிலிருந்து கண்டுகொண்டார். 1949-இல் அன்று அவர் மனத்தில் எழுந்த ஒரு கேள்விதான், டாக்டர் ஸ்டுக்கிக்கு உலகப் புகழ் சம்பாதித்துக் கொடுத்தது. ஒரு சதுர அங்குலப் பரப்புள்ள கண்ணாடியில் பத்து லட்சம் துளைகள் போட முடியுமா என்பதே அந்தக் கேள்வி.

இந்தப் பைரோஸெராமின் கதைக்குப் பின்னால் எத்தனையோ

தலைமுறைகளின் அறிவுத் தாகம் புதைந்திருக்கிறது. குழந்தைகளின் பார்வையை மயக்கும்படி ஜன்னல் கண்ணாடிகள் வர்ண ஜாலங்களை வாரி இறைத்துக்கொண் டிருப்பது முன்நாளில் சகஜம். இந்த நிறங்கள் எங்கிருந்து வருபவை? மனிதர்கள் இதுபற்றிச் சிந்தனை செய்தார்கள். கண்ணாடியின் ஒளி எவ்வளவு பிரகாசமா யிருக்கிறதோ அவ்வளவுக்கு நிறமும் பலமா யிருப்பதைக் கண்டார்கள். பாஸ்டன் நகரத்தின் பழைய வீடுகள் சிலவற்றின் ஜன்னல் கண்ணாடிகள் ஆழ்ந்த கருஞ்சிவப்பு நிறமாயின. சூரிய ஒளியிலிருந்துதான் இந்த நிறம் வந்திருக்கவேண்டும். ஆனால் ஒளிக்கற்றையின் (ஸ்பெக்ட்ரம்) எந்தக் கதிரிலிருந்து இது வந்தது?

டாக்டர் ஸ்டுக்கி மஸாச்சுஸெட்ஸ் டெக்னலஜி இன்ஸ்டிட்யூட்டில் பௌதிக ரசாயனம் (ஃபிஸிக்கல் கெமிஸ்ட்ரி) பயின்று டாக்டர் பட்டம் பெற்றார். 1940-இல் கார்னிங் ஸ்தாபனத்துக்கு வந்தார். தெர்மாமீட்டர் குழாயி லிருக்கும் ஓப்பல் கண்ணாடியைப்பற்றி ஆராய்வதற்காகவே இங்கே அவர் வந்தார். ஜன்னல் கண்ணாடிகளில் நிகழும் நிறமுறிவுக்குக் காரணம் சூரிய வெப்பத்தின் அல்ட்ரா-வயலட் கதிர்தான் என்று இதற்கு முன்பே கண்டுபிடித்திருந்தார்கள்.

கண்ணாடியில் குறிப்பிட்ட பகுதிகளை வெவ்வேறு விதமாக உஷ்ணப்படுத்துவதால் நிறங்களும் மாறும் என்பதை டாக்டர் டால்டன் என்ற நிபுணர் நிரூபித்தார். இது மட்டும் அல்ல; கண்ணாடியை வெளிச்சத்தில் வைத்தபின் சூடு காட்டி நிறத்தை இன்னும் அழுத்தமாகச் செய்து காட்டினார். அவருடைய ஆராய்ச்சி அதோடு நின்றுவிட்டது.

டால்டனின் புரட்சிகரமான பரிசோதனையில் ஸ்டுக்கிக்கு ஆர்வம் தழைத்தது. எப்படி இது நிகழ்ந்தது? கண்ணாடியின் உட்புறத்தில் அல்ட்ரா-வயலட் கதிர் தாக்கும்போது, என்ன நேர்ந்தது? கண்ணாடி செய்யப் பயன்படும் மணல், கடல் தாவரச் சாம்பல் அல்லது மரக்கரி இவற்றில் டால்டன் கலந்த ரசாயனப் பொருள்களை ஸ்டுக்கி ஆராய்ந்தார். குறிப்பிட்ட ஒழுங்கான அமைப்பு (பாட்டர்ன்) எதிலும் அவை அமையவில்லை என்பது நிச்சயமாக அவருக்குத் தெரியும். படிகங்களால்தான் ஒழுங்கான அமைப்பு ஏற்படும். கண்ணாடிக்கோ படிக அமைப்புக் கிடையாது. படிக அமைப்பு இல்லாததால்தான் கண்ணாடி கண்ணாடியாக இருக்கிறது. கண்ணாடி செய்யச் சேர்த்த பொருள்களில் ஸிரியம், காப்பர் ஸிலிக்கேட் இரண்டும் இருந்தன. ஸிரியம்தான் சூரிய ஒளியைக் கிரகித்து ரஸாயன மாறுதல் (ஃபோட்டோ கெமிக்கல் சேஞ்ஜ்) அடைந்து எலெக்ட்ரான்களை விடுவிக்கிறது என்று 1941 வாக்கில் ஸ்டுக்கி கண்டார். ஸிலிக்கேட்டிலிருந்து படியும் தாமிர அணுக்களை (காப்பர் அயான்ஸ்) இவை சூழ்ந்துகொள்கின்றன. எப்படிக் காற்றில் மிதக்கும் தூசி அணுக்கள் பனிப் படிகங்களாகி மேகங்களைத் தோற்றுவிக்குமோ அதேபோல் இந்தத் தாமிர அணுக்களும் படிகங்களாகின்றன. உருகிய கண்ணாடிக் குழம்பு ஓடும்போது குளிர்ந்து போவதால், கண்ணாடிக்குள் இருக்கும் இந்த உலோக அணுக்கள் அப்படி அப்படியே உறைந்துபோகின்றன. மறுபடியும் கண்ணாடி உருகும் வரைக்கும் இந்த நிலை இப்படியே நீடிக்கிறது. இந்த நிலையில் மற்ற ரசாயனப் பொருள்கள் விடுபட்டு இந்தப் படிகக் கருக்களைச் சூழ்ந்து, இதுவரையிலும் கண்ணாடியாக இருந்த வஸ்துவில் அவற்றைச் சீராகப் பரப்புகின்றன.

டால்டனின் அபூர்வ பரிசோதனையின் புதிர் விடுபட்டவுடன், ஸ்டுக்கி இந்த முறையைக் கண்ணாடியில் படம் தீட்ட உபயோகித்தார். சாதாரண ஃபோட்டோகிராஃபிக் நெகடிவ் பிளேட்டுகளைக் கொண்டு கண்ணாடியில் வெளிச்சம் படச் செய்து சில பகுதிகளைப் படிகமாக்கினார். வெளிச்சம் படாத மீதிப் பகுதி கண்ணாடியாகவே இருந்தது. ஃபோட்டோ ஸென்ஸிடிவிட்டி சம்பந்தப்பட்ட இந்தச்

சாதனைக்காக 1953-இல் ஸ்டூக்கி, டால்டன் இருவருக்கும் ஃப்ராங்க்லின் இன்ஸ்டிட்யூட்டிலிருந்து ஜான் ப்ரைஸ் வெதரில் அவார்டு என்ற பரிசு கிடைத்தது. அதற்குள்ளாகவே, ஸ்டூக்கி தனிப்பட்ட முறையில் ஆராய்ச்சி தொடங்கி விட்டார்.

டெலிவிஷன் திரைக்காகச் சிறு பரப்பளவில் நெருக்கமாகப் பல துளைகளை எப்படிப் போடுவது என்ற கேள்வியை விட்டில்டன் எழுப்பியவுடன், ஸ்டூக்கி தம் கண்ணாடித் துண்டுகளை வேறு கோணத்திலிருந்து ஆராயத் தொடங்கினார். படிகமுள்ள பரப்புக்கும், படிகமற்ற கண்ணாடிப் பரப்புக்கும் பௌதிக (ஃபிஸிக்கல்) வித்தியாசம் ஒன்று இருந்தது. அவற்றுக்கு வெவ்வேறு கன அடர்த்தி இருந்தது. சூடேற்றும்போது அவை விரிவதிலும் சுருங்குவதிலும் வித்தியாசம் இருந்தது. ஒருவேளை ரசாயன வித்தியாசமும் ஏதாவது இருக்கலாம் என்று தோன்றியது. அமிலங்களை உபயோகித்துப் பார்த்தார். முதலில் ஹைட்ரோஃப்ளோரிக் அமிலத்தைத் தேர்ந்தெடுத்தார். சாதாரணக் கண்ணாடியைவிடப் படிகமுள்ள கண்ணாடி, இந்த அமிலங்களில் லட்சம் மடங்கு அதிக வேகமாகக் கரைந்தது. விட்டில்டன் குறிப்பிட்ட துளைகளும் ஏற்பட்டு விட்டன. கண்ணாடியை இதுபோல் துளைபோடத் தேவையான கருவி, நெருக்கமாக ஆயிரக் கணக்கான புள்ளிகள் போட்ட ஒரு ஃபோட்டோகிராஃபிக் பிளேட்டுத்தான். அதன் வழியே வெளிச்சம் காண்பித்து, அமிலத்தைக் கண்ணாடிமீது ஊற்ற வேண்டும்.

எதிர்பாராத அந்தச் சம்பவம் இப்போதுதான் நடந்தது. ஃபோட்டோ உருவான இந்தப் பொருள் (ஃபோட்டோ ஃபார்ம் என்றே இதற்குப் பெயர் வைத்திருக்கிறார்கள்), ஆராய்ச்சிக்கூட உலைக்குள் 1949-ஆம் வருஷம் ஒரு நாள் இரவு ரொம்ப நேரம் கிடந்தது. பொதுவாக 600 டிகிரி இருக்க வேண்டிய உலை, அன்று என்னவோ 900 டிகிரியாக இருந்தது. இது கண்டு ஸ்டூக்கி வேதனை கொண்டார். அதிகச் சூடேறிய அந்தப் பொருளை ஆத்திரத்துடன் எடுத்தார். அது நழுவித் தரையில் விழுந்தது. சிதறப்போகிறதே என்று பயந்து குனிந்தார். ஆனால் அதுவோ தரையில் விழுந்தவுடன் உடையாமல் சற்று மேலே எழும்பியது.

ஏன் அது உடையவில்லை? அன்று இரவு முழுதும் ஸ்டூக்கி தூங்கவில்லை. ''எனக்கு அதைப்பற்றி ரிபோர்ட் எழுதக்கூட வெட்கமாயிருந்தது'' என்று இப்போது அவர் சொல்கிறார். 'ரொம்ப மோசமான நிகழ்ச்சிதான். ஆனால் ஏன் அது உடையவில்லை?'

வெறும் வியப்போடு மட்டும் அவர் நிற்கவில்லை. அது எவ்வளவு நேரம் உலையில் வெந்தது என்றோ, ஒவ்வோர் உஷ்ணநிலையிலும் எவ்வளவு நேரம் இருந்தது என்றோ தெரியவில்லை. எனவே, பல்வேறு நிலைகளில் இதேமாதிரி திரும்பத் திரும்ப நிகழ்த்தி ஆராய்ந்தார். முடிவில் அவருடைய சோதனைப் பொருள் கண்ணாடியே அல்ல என்று கண்டார். முற்றும் புதிய அதிசயமான குணங்கள் படைத்த படிகரூபமான வஸ்து அது.

எப்படியோ ஸ்டூக்கி தம்முடைய புதுக் கண்ணாடிக் குழந்தைக்கான சூத்திரத்தைக் கண்டுபிடித்து விட்டார். சூடேற்றும்போதும், மறுபடி சூடேற்றும்போதும் ஆக இருமுறை அல்ட்ரா-வயலட் கதிர்களில் காண்பிப்பதால் நேரும் அற்புதம் இது. அவர் இதைத் திரும்பத் திரும்ப ஆராய்ந்து பல பொருள்களைக் கூட்டியும் குறைத்தும் ஒளி பாய்ச்சும் தேவைகூட இல்லாமலே இதைச் செய்யக் கூடிய வழியை இறுதியிலே கண்டுபிடித்து விட்டார். கண்ணாடியை வைத்துக் கொண்டு, அதில் பல லட்சக் கணக்கான படிகங்களைத் தோற்றுவித்து, சூடேற்றிப் பின் குளிர வைக்கும் சாமானிய முறையைக் கைக்கொண்டார். இப்படியாக, கண்ணாடியின் குணங்களிலிருந்து அடியோடு மாறுபட்ட ஒரு புதிய பொருளை அவர் படைத்துவிட்டார்!

கார்னிங் கண்ணாடித் தொழிற்சாலையில் பைரோஸெராமை ஆயிரம் வகைகளில் தயாரிக்கிறார்கள். ஒவ்வொன்றும் பிரத்தியேகத் தேவைகளுக்கு உகந்தபடி அமைந்திருக்கிறது. பெரும்பாலான வகைகள் ஒளி புகாதவையாக இருந்தாலும், சில வகைகள் கண்ணாடி போல் ஒளி புகும்படி அமைந்திருக்கின்றன. வெறும் கண்ணாடிக்கும் அவற்றுக்கும் உள்ள வித்தியாசத்தை நம் கண்ணால் கண்டு பிடிக்க முடியாது. இவற்றில் படிகங்கள் மிகச் சிறியவையாக இருப்பதால், இவை ஒளியைப் பிரதிபலிப்பதில்லை. இந்தப் படிகங்களை உண்டாக்குவதற்காக, திரவங்களில் படிகம் எப்படி வளர்கிறது என்று ஸ்டூக்கி ஆராய வேண்டியிருந்தது. வருஷக் கணக்காகப் பொறுமையோடு நடத்திய ஆராய்ச்சியின் பயனாக, அவர் இன்று இஷ்டப்பட்டபோது படிகம் உருக் கொள்ளச் செய்ய முடியும்; படிகங்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த முடியும்; தனி அணுக்களிலிருந்து படிகம் வளர ஆரம்பிக்கும்போது எந்தச் சமயத்திலும் அதைத் தடுத்து நிறுத்த முடியும். இந்தச் சாதனை, சரித்திரத்தில் பொறிக்கவேண்டிய ஒன்று. கார்னிங்கில் உள்ளமாதிரி ஆக்கந்தரும் ஆராய்ச்சி வசதிகள் இல்லாவிட்டால், இது சாத்தியப்பட்டிராது. ஓய்வு பெற்ற தலைவர் டாக்டர் ஸல்லிவன், ஆராய்ச்சிக் கூட உபதலைவர் டாக்டர் வில்லியம், ஆராய்ச்சி மேற்பார்வையாளர் எச். ஆர். கில் அனைவருக்கும் ஹட்டன் குடும்பத்துக்கே இயல்பான ஆராய்ச்சியறிவு இருக்கிறது. பைரோஸெராமின் தந்தையான ஸ்டூக்கி அடக்கமாக, ''நாங்களே தலைவர்கள் அல்ல. ஆனால் கம்பெனிக்காரர் தங்களுடைய தினப்படி உற்பத்தியைப்பற்றியெல்லாம் எங்களுக்குத் தொந்தரவு அளிப்பதில்லை'' என்று சொல்லுகிறார்.

எல்லாவிதப் பைரோஸெராம்களுக்கும் தேவையான மூலப் பொருள்கள் முற்றும் மலிவானவை. கண்ணாடிக்குத் தேவையான அதே பொருள்கள்தான் இவற்றுக்கும் தேவை. குழாய், ரிப்பன் இரண்டையும்போல் வார்ப்புக்கு வராத உருவங்களில்கூட இவற்றின் உறுதி நிலைக்கிறது. எனவே, இவற்றின் எதிர்காலம் பற்றிச் சொல்லத் தேவையில்லை. என்றாவது ஒரு நாள், பைரோஸெராம் சுத்தியல்கூட மிகவும் சாதாரணமாகப் புழக்கத்துக்கு வந்து விடலாம்.

சட்டத்தின் குறுக்கீடு!

ஜட்ஜி: நீங்கள் ஏன் இந்த விவகாரத்தைக் கோர்ட்டுக்கு வெளியே தீர்த்துக்கொள்ளக் கூடாது?

பிரதிவாதி: அதைத்தான் நாங்கள் செய்துகொண்டிருந்தோம். போலீஸார் வந்து குறுக்கிட்டுவிட்டார்கள்.

—'க்ளேரியன்'

அரக்கியின் அன்பு

மனிதரைத் தின்னும் பழக்கமுடைய காட்டுமிராண்டிகளைச் சீர்திருத்தச் சென்றார் ஒரு பாதிரியார். அங்கே வயசு முதிர்ந்த ஒரு கிழவியைச் சந்தித்தார்.

''உனக்குக் குழந்தைகள் என்றால், பிரியம் உண்டா?'' என்று கேட்டார்.

''அது எனக்கே தெரியாது. பத்து வருஷமாக அப்படி எதையும் நான் சாப்பிட்டதில்லை'' என்றாள் அவள்.

—'நியூஸ் இல்லஸ்ட்ரியெர்ட்', கொலோன்.

டாக்டரின் வேலைக்குச் சில தாய்மார் இடையூறு செய்கிறார்கள்; சில தாய்மார் உதவி புரிகிறார்கள். நீங்கள் எந்த வகை?



டாக்டர் பாராட்டும் தாய்

மாத்யூ ரோஸென்சீன்

டாக்டரின் வேலையை நன்றாய்ச் செய்ய உதவும் தாயைக் கண்டால், அவருக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கும். அந்தத் தாய் எப்படி நடந்துகொள்வாள்? குழந்தைக்கு நோய் வந்த வரலாற்றையெல்லாம் டாக்டரிடம் மிகவும் தெளிவாக அவள் சொல்லுவாள். என்ன நடந்தது? குழந்தைக்கு என்ன கோளாறு? குழந்தையிடம் என்ன மாறுதல் ஏற்பட்டிருக்கிறது? குழந்தைக்கு ஜுரம் இருக்கிறதா இல்லையா? உடலில் வலி எப்போது ஆரம்பித்தது? அது தொடர்ந்து இருக்கிறதா அல்லது நடுநடுவே ஏற்படுகிறதா? இப்போது தேவலையா அல்லது ரொம்ப மோசமாக இருக்கிறதா? - இவை போன்ற கேள்விகளுக்கெல்லாம் தெளிவான பதில் அளிப்பாள்.

டெலிபோனில் யாராவது டாக்டரை இதோ இப்படிச் சொல்லிக் கூப்பிட்டால், அவர் ஆனந்தம் அடைவார்: ''டாக்டர், நான் தான் மிஸிஸ் வில்ஸீ பேசுகிறேன். கடந்த ஒரு வார காலமாக டேவிடுக்கு ஜலதோஷம். சளி ஒழுகிக் கொண்டு லேசாக ஜுரம் இருந்து வந்தது. நான் அவனை ஆஸ்பிரின் சாப்பிடச் சொல்லி மூக்கு மருந்தும் விட்டு, கை வைத்தியமாகச் செய்து வந்தேன். வெளியே எங்கும் போக விடாமல் வீட்டிலேயே வைத்திருக்கிறேன். இதுவரைக்கும் நன்றாகத்தான் சாப்பாடு சாப்பிட்டு வந்தான். ஆனால் திடீரென்று இன்று காலையில் அவனுக்குக் குளிர் நடுக்கம் கண்டது. ஜுரம் 103 டிகிரிக்கு ஏறிற்று. வாந்தி பண்ணினான். இருமல் இருக்கிறது. மார்பு வலிக்கிறது என்கிறான். தாங்கள் தயை செய்து இங்கே வருகிறீர்களா?''

இந்தத் தாய் தன் குழந்தையின் நடவடிக்கைகளை ஒன்று தவறாமல் கூர்மையாய்க் கவனித்திருப்பவள். இவள் கூறிய விவரத்திலிருந்து இவளுடைய குழந்தைக்கு நிமோனியா ஜுரமாக இருக்கும் என்று டாக்டர் தெரிந்துகொள்வார். தம்முடைய ஆபீஸ் வேலையெல்லாம் முடிந்ததும் முதல் காரியமாக வில்ஸீயின் வீட்டுக்கு விஜயம் செய்வார்.

ஆனால் அநேகம் தாய்மார் இப்படிக் கூப்பிடுவதில்லை. உதாரணமாக, இன்னொருத்தியிடமிருந்து வரும் டெலிபோன் அழைப்பைப் பாருங்கள்:

காப்பிரைட்: பேரெண்ட்ஸ் மகஸீன் (ஆங்கிலம்: டிசம்பர் '57), சிக்காகோ - 39, ஐக்கிய அமெரிக்கா.

குரல்: டாக்டர், சீக்கிரம் வாருங்கள்.

டாக்டர்: பேசுவது யார்?

குரல்: நான்தான் மிஸிஸ் ஜோன்ஸ். குழந்தைக்கு ரொம்பக் கடுமையாக இருக்கிறது.

டாக்: அவனுக்கு என்ன செய்கிறது?

குரல்: அவன் எப்போதும் இருப்பது போல இப்போது இல்லை.

டாக்: அப்படி என்றால்?

குரல்: ரொம்ப இளைத்துப் பலவீனமா யிருக்கிறான்.

டாக்: சாப்பாடெல்லாம் சரியாய்ச் சாப்பிடுகிறானா?

குரல்: சாப்பிடுகிறான். ஆனால் உடம்பெல்லாம் லேசாக வெளுத்திருக்கிறது.

டாக்: ஜுரம் இருக்கிறதா?

குரல்: அது என்னவோ! நான் தெர்மாமீட்டர் வைத்துப் பார்க்கவில்லை. ஆனால் அவன் தலையைத் தொட்டால் லேசாய்ச் சுடுகிறது!

டாக்: வாந்தி எடுத்தானா?

குரல்: இன்று காலை ஏதோ காறி உமிழ்ந்துகொண் டிருந்தான். வாந்தி எடுத்தானோ, இல்லை, கோழையைக் காறி உமிழ்ந்தானோ; தெரியவில்லை.

டாக்: ஏதாவது வலி இருக்கிறதா?

குரல்: போனிலேயே இருங்கள். இதோ அவனையே கேட்டுச் சொல்கிறேன்..'கண்ணு, உனக்கு வலி ஏதாவது இருக்கிறதா?'..சரிதான்; வலி இருப்பதாகவே சொல்லுகிறான்.

டாக்: எங்கே வலிக்கிறதாம்?

குரல்: 'கண்ணு, உனக்கு எங்கே வலிக்கிறது?'..அவன் மார்பிலே வலிக்கிறதாம்.

டாக்: உங்கள் குழந்தை எத்தனை நாளாக இப்படி உடம்பு சரியில்லாமல் இருக்கிறான்?

குரல: அடடா! அதை நான் கணக்குப் பண்ணவில்லையே! ஒரு வார காலமாக இருக்கலாம்.

டாக்: சரி, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அங்கே வருகிறேன்.

நல்ல அநுபவமும் தேர்ச்சியும் பெற்ற டாக்டராக இருந்தால் தான், இந்த அம்மாளின் குழந்தைக்கு உடம்பு ரொம்ப அதிகமாக இருக்கிறது என்பதை இவள் கூறிய விவரங்களிலிருந்து ஊகித்துக்கொண்டு உடனே அவசரமாகப் புறப்பட்டு வருவார். சாதாரண டாக்டராக இருந்தால், 'அவசரம் ஒன்றும் இல்லை' என்று எண்ணிச் சாவகாசமாக வருவார். தன் குழந்தையின் உடல் நிலை பற்றிய விவரங்களை முன் கூட்டியே கவனித்து அறிந்துகொண்டு டாக்டரிடம் தெளிவாகச் சொல்லத் தவறியதால், ஜோன்ஸ் தனக்குத்தானே தீம்பு செய்துகொள்கிறாள். இவளுடைய குழந்தைக்கு நிமோனியா ஜுரமேகூடக் கண்டிருக்கலாம். ஆனால் டாக்டரிடம் இவள் சரியான விவரம் சொல்லாததால், வியாதி இன்னது என்று அவருக்குப் பிடிபடாமல் போய் விடுகிறது.

அநுபவத்தின் மூலம் டாக்டர் பல தரப்பட்ட தாய்மார்களைப் பற்றியும் அறிந்துகொள்கிறார். டாக்டரை உடனே வரவேண்டும் என்று மிஸிஸ் வில்ஸீ கூப்பிட்டவுடன் அவரும் அவசரம் அறிந்து அவளுடைய வீட்டுக்கு விரைந்து வருகிறார். ஆனால் மிஸிஸ் ஜோன்ஸோ முன்னமே பல தடவை டாக்டரை உடனே வரச் சொல்லி அநாவசியமாகக் கூப்பிட்டிருந்ததால், உண்மையிலே அவசரமாக இவளுடைய வீட்டுக்கு வரவேண்டிய நேரத்தில் வராமல் இருந்துவிடுகிறார். தன் பிள்ளையின் உடல்நிலைகளைச் சரியாகக் கவனித்து அறிந்து டாக்டரிடம் இவள் சொல்லத் தவறியதுதான் அதற்குக் காரணம்.

குழந்தைகளிடம் தங்களுடைய பீதியையோ பரபரப்பையோ காட்டிக்கொள்ளாத தாய்மார்களை டாக்டர் பெரிதும் பாராட்டுகிறார். உதாரணமாக, மிஸிஸ் வில்ஸீ தன் பிள்ளை டேவிடுக்கு ஜுரம் கண்டவுடன் உஷ்ணமானியை வைத்து எத்தனை டிகிரி ஜுரம் இருக்கிறது என்று பார்ப்பாள். பரபரப்படையாமல், "டேவிட், உனக்கு ஜலதோஷத்தினால் சிறிது ஜுரம் கண்டிருக்கிறது. நம் டாக்டர் ஸ்மித்தைக்

கூப்பிட்டு உனக்கு வைத்தியம் செய்யச் சொல்லப் போகிறேன்'' என்பாள்.

ஆனல் மிஸிஸ் ஜோன்ஸோ தன் பிள்ளைக்கு உடம்பு சரியில்லை என்றவுடன், ஜுரம் எத்தனை டிகிரி இருக்கிறது என்று உஷ்ணமானியை வைத்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளாமலே பரபரப்படைந்து, ''டேவிட், உன் உடம்புக்கு என்னமோ வந்துவிட்டதேடா! ஜுரம் கண்டிருக்கிறதே! டாக்டர் ஸ்மித்தைக் கூப்பிட்டு உனக்கு ஊசி போடச் சொல்லுகிறேன்'' என்பாள்.

'டாக்டர் ஊசி போடுவார்' என்று கேட்டவுடன் குழந்தை ஒரே பயமாகப் பீதி அடைந்துவிடுகிறான். அவர் வந்ததும் அவரிடம் உடம்பைச் சரியாகக் காட்டாமல் முரண்டு செய்கிறான். டாக்டருக்குப் பையனின் உடம்பை நன்ருய்ப் பரிசோதிக்க முடிவதில்லை. அவனுக்கு என்ன உடம்பு என்பதை அறிந்துகொள்ள அவரால் இயலாமல் போகிறது.

இன்னொரு விஷயத்தையும் இங்கே சொல்ல வேண்டும். மிஸிஸ் ஜோன்ஸ், ''டேவிட், நீ ஒழுங்காக நடக்காவிட்டால் டாக்டரைக் கூப்பிட்டு உனக்கு ஊசி போடச் சொல்வேன்'' என்று சொல்லி முன்னமே அடிக்கடி பயங்காட்டியிருப்பாள். அதனல் வேறு, அவள் பிள்ளை, 'டாக்டர்' என்றவுடனேயே ஒருவித அச்சமும் பீதியும் கொண்டுவிடுகிறான்.

ஆனல் டாக்டர்கள் தேவையான நேரத்தில்தான் ஊசி போடுவார்கள். குழந்தைக்கு இதை விளக்கிவிட வேண்டும். நீண்ட நாள் நோயால் பெரிதும் அவதிப்பட்டுக்கொண்டிருப்பதைவிட ஊசி போட்டுக்கொண்டு சிறிது கஷ்டப்பட்டாலும் சட்டென்று குணம் அடைவது நல்லது என்பதைக் குழந்தைக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

டாக்டரும் நம்மைப்போல் மனித சுபாவம் கொண்டவர்தான் என்பதைத் தாய்மார்கள் நினைக்க வேண்டும். அவரைப்பற்றித் தப்பபிப்பிராயம் உண்டாக்காமல் கருணை காட்ட வேண்டும். இப்படிப்பட்ட தாய்மார்களையே டாக்டர்கள் மதிப்பது இயற்கை. சாதாரணமாகப் பல குடும்பங்களுக்கு வைத்தியராக இருக்கும் ஒரு டாக்டர், வாரத்தில் சராசரி அறுபது மணி நேரம் வேலை செய்கிருர். இதில் சில சமயம் நள்ளிரவிலும், ஞாயிற்றுக்கிழமையிலும் விடுமுறை நாளிலுங்கூட வேலை பார்க்கிருர். சிலருக்கு உடம்புக்கு வந்துவிட்டால், அவர்களால் பொறுத்துக்கொண்டிருக்க முடிவதில்லை. டாக்டரும் அதுபோல யாருக்காவது நோய் கடுமையாக இருந்தாலும் அளவுக்கு மீறிய ஜுரமாக இருந்தாலும், நேரம், காலம் பார்க்காமல் உடனே விரைந்து சென்று சிகிச்சை செய்கிருர். ஆனல் மிஸிஸ் ஜோன்ஸோ தனக்குக் கடந்த மூன்று மாத காலமாக இருந்து வரும் அல்ப வியாதியைப்பற்றிக் குறிப்பாக் ஞாயிற்றுக் கிழமையிலோ நல்ல நள்ளிரவு நேரத்திலோ டாக்டரை டெலிபோனில் கூப்பிட்டு விவாதம் தொடங்கி விடுவாள்.

மிஸிஸ் வில்ஸியோ தன் பிள்ளைக்கு 102 டிகிரி ஜுரமாக இருந்தாலும், டாக்டரை நள்ளிரவு நேரத்திலோ ஞாயிற்றுக் கிழமையிலோ கூப்பிட்டுத் தொல்லை கொடுக்க மாட்டாள். சனிக்கிழமையன்று பிள்ளைக்கு ஜுரம் கண்டால், அவனுடைய உடல் நிலைகளையெல்லாம் தெளிவாகக் கவனித்தறிந்து கொள்வாள். பிறகு டாக்டரை டெலிபோனில் கூப்பிட்டுச் சொல்வாள். அவர் மேல்கொண்டு வந்து பார்க்க வேண்டுமா வேண்டாமா என்பதை அவரிடமே கேட்டறிவாள்.

டாக்டர் வந்து பார்ப்பதற்கு முன்பாக நோயாளியின் அறையில் வேண்டிய வசதிகளையெல்லாம் சித்தம் செய்து வைத்திருக்கும் தாய்மார்களை டாக்டர்கள் பெரிதும் மதிப்பார்கள். ஒவ்வொரு வீட்டிலும் செலவிடும் நேரத்தில் எட்டு நிமிஷம் வீதம் மிச்சப்பட்டாலும் மொத்தத்தில் அவருக்கு ஒரு மணி நேரம் அதிகமாக வேலை

செய்ய வாய்ப்பு ஏற்படும்; அல்லது அந்த நேரத்தில் தம் குடும்பத்தினருடன் சந்தோஷமாகப் பொழுது போக்க அவருக்கு ஓய்வு கிடைக்கும்.

நோயாளிகளுக்குப் பக்கத்தில் டாக்டர் வந்து உட்கார்ந்து பார்ப்பதற்கு நாற்காலியும் நல்ல விளக்கும் இருக்கவேண்டும். அவர் கை துடைத்துக்கொள்ள வசதியாக ஸ்நான அறையில் சுத்தமான துண்டு தயாராக வைத்திருக்க வேண்டும். அவர் மிஸிஸ் ஜோன்ஸின் வீட்டுக்குச் சென்றால், அங்கே கதவு தாழிட்டுக் கிடக்கும். உள்ளே ரேடியோ 'ஹோ!' என்று அலறிக் கொண்டிருக்கும். எவ்வளவு நேரம் கதவைத் தட்டினாலும் பதிலே கிடைக்காது. கடைசியாகக் கதவு திறக்கும். உள்ளே சென்றால் நோயாளியின் அறையில் நாயும் பூனையும் சிறு குழந்தையும் ஒரேயடியாய்க் கூச்சல் போட்டுக் கொண்டிருக்கும். நோயாளிக்கு அருகில் டாக்டர் உட்கார்ந்து பரிசோதிப்பதற்கு வசதியாக நாற்காலி போட்டிராது. அங்கிருக்கும் மரப்பெட்டிகளில் ஏதாவது ஒன்றை அவரே இழுத்துப் போட்டுக்கொண்டு அதன்மேல் உட்கார வேண்டியிருக்கும். கை துடைத்துக்கொள்ளத் துண்டு வைத்திராது. ஜோன்ஸின் மூத்த பிள்ளையைப் பார்த்துவிட்டு வெளியே கிளம்புகையில், அவள் தன்னுடைய மற்றக் குழந்தைகளையும் பரிசோதித்துப் பார்த்து விட்டுப் போகும்படி கேட்டுக் கொள்வாள். (அவர்களுக்காக அவர் அதிகப்படியாகப் பணம் கேட்டால், ''நீர் நாசமாய்ப் போக!'' என்று மனத்துக்குள்ளே அவரை அவள் சபிக்கத் தொடங்கி விடுவாள்!)

நோயாளிக் குழந்தையின் உடல் தேறி வருகிறதா என்பதைச் சரிவரக் கவனித்து, டாக்டரிடம் புத்திசாலித்தனமான கேள்விகளைக் கேட்டு விஷயங்களை அறிந்து கொள்ளும் தாய்மார்களை டாக்டர் பாராட்டுவார். எது எல்லாம் கூடாது, மருந்து கொடுப்பது எப்படி, என்ன ஆகாரம் கொடுப்பது, குழந்தையை நடமாட விடலாமா கூடாதா என்ற விவரங்களையெல்லாம் டாக்டர் சொல்லுவார். மேலும், தம்மை மறுபடி எப்போது அழைக்கவேண்டும் என்றும் தெரிவிப்பார்.

தாம் புதிதாகக் கொடுக்கும் மருந்தைக் குழந்தை வாந்தி பண்ணாமல் இருக்கிறதா, பண்ணிவிடுகிறதா என்பதை அவசியம் தெரிந்துகொள்ள டாக்டர் விரும்புவார். ஆனால் அதற்காக மிஸிஸ் ஜோன்ஸைப் போன்றவர்கள் நடு நிசியில் தம்மை டெலிபோனில் கூப்பிட்டுத் தொந்தரவு கொடுப்பது அவருக்குப் பிடிக்காது.

டாக்டரைத் தங்களுடைய நெருங்கிய நண்பராகப் பாவித்து அவரிடம் அன்புடன் பழகும் தாய்மார்களிடந்தான் அவரும் அன்போடு நடந்துகொள்வார். இப்படிப் பெரியவர்கள் பழகுவதைக் கண்டால் குழந்தைகளும் டாக்டரைக் கண்டு பயப்படாமல் தாராளமாக அவருடன் பழகும்.

சுருங்கச் சொன்னால், நோயாளியைப்பற்றிய விவரங்களையெல்லாம் தெளிவாகக்கவனித்துடாக்டரிடம் சொல்லவேண்டும்; நோயுற்றிருக்கும் குழந்தையிடம் தாயின் பீதியையோ பரபரப்பையோ காட்டிக்கொள்ளக் கூடாது.

டாக்டர் வந்து பார்ப்பதற்கு வசதியாக நோயாளியின் அறையைச் சுத்தப்படுத்தி வைத்திருக்க வேண்டும்; அவரும் நம்மைப் போன்ற மனிதர்தான் என்று மதித்து நடக்க வேண்டும்; சந்தேகங்கள் எழுந்தால் அவரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்; டாக்டரை நாம் நண்பராகப் பாவித்துப் பழகவேண்டும். இப்படியெல்லாம் நடந்துகொள்கிறவள் எவளோ அவள்தான் டாக்டர் பாராட்டும் தாய்.

யோகம்: மன வலிமையும் உடல் வலிமையும்

சுவாமி விவேகானந்தர்

யோக சாதனையில் மன வலிமையோடு உடல் வலிமையும் அவசியம் வேண்டும். இந்திரியங்களை அடக்கச் செய்யும் தவத்தின் வருத்தத்தைப் பலமுள்ள சரீரந்தான் தாங்கும். மிகவும் சக்தியில்லாதவர்கள் யோகாப்பியாசத்தில் புகுந்தால், ஆற்றொணுக் கொடு நோய் சம்பவித்து, அவர்கள் மனமும், புத்தியும் தளர்ந்துவிடும். தீவிர பக்தியை உண்டாக்குவதற்குச் சரீரத்தைப் பலவீனமாக்குவது மருந்தன்று.

மனோபலம் அற்றவர்களுக்கு ஆத்மஞானம் பிறவாது. பக்தி மார்க்கத்தில் செல்பவனுக்கு மனத்தில் உற்சாகம் பூரணமாய் இருக்க வேண்டும். ஒருவரோடும் பேசாமல், வாயடைத்துச் சிரிப்பென்பதே தோன்றாமல், தாடையொட்டிச் சுடுமுகத்தோடு இருப்பவருக்கே பக்தி நிறைந்திருக்கும் என்று பெரும்பான்மையான ஜனங்கள் நம்புவார்கள். இப்படிப்பட்டவர்களை வைத்தியனிடம் அனுப்பிச் சிகிச்சை செய்ய வேண்டும். இவர்கள் ஒருபோதும் யோகிகள் ஆக மாட்டார்கள். மனத்தில் உற்சாகமுள்ளவன்தான் விடாமுயற்சி செய்வான். மன வலிவுள்ளவனே இடையூறுகள் எத்தனை வந்தாலும், சட்டை செய்யாமல் வென்று செல்வான். மாயை வலையினின்றும் மீள்வதாகிய இந்த வெகு கடினமான வேலையை, மனத்தில் அளவற்ற திடமுள்ளவனே செய்து முடிக்கவல்லவன்.

ஆயினும் அதிக சந்தோஷமுறுவதும் தவறு. அதிக சந்தோஷம் பிறந்தால் நிதானித்து யோசிக்க முடியாது; மனத்தின் வலிமையையும் அது வீணாக்கும். மனம் உறுதியாக ஆக, அதிக உற்சாகம் முதலிய அபிமானங்களுக்கு இடங் கொடாது. அதிக விசனம் எவ்வளவு கெடுதியோ அவ்வளவு கெடுதி அதிக சந்தோஷம். சுகம், துக்கம் இரண்டையும் சமமாய்ப் பாவித்து மனத்தை எப்போதும் ஒரே நிலையில் நிறுத்தினால் பிரம்மஞானம் தெளிவாய் விளங்கும்.

இவ்வித உபாயங்களை அனுசரித்தால், ஒருவனுக்கு ஈசுவரனிடத்தில் விசுவாசமும், அவனைத் தொழ வேண்டுமென்கிற அறிவும் பிறக்கும்.

மக்கள் சங்கீதம்

ஸ்ரீ ஜோஷி

பாரத நாட்டில் அங்கங்கே புதுமையான இன்னிசைகள் பரவியிருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் வேர் பழமையான மக்கள் சங்கீதம். தமிழ் நாட்டில் தெம்மாங்கு, காவடிச் சிந்து, ஏற்றப்பாட்டு, பூசாரிப் பாட்டு, வில்லுப் பாட்டு இப்படிப் பலவகையான நாடோடி இசைப் பாடல்கள் உண்டு. அவற்றிலுள்ள எளிமையும் கவிதைச் சுவையும் உள்ளத்தைக் கவரும். மற்றப் பிரதேசங்களிலுள்ள மக்கள் கலையைப்பற்றி ஆசிரியர் இங்கே கூறியிருக்கிறார்.

★

மக்களுடைய வாழ்க்கையில் பண்பாட்டின் போக்கு, காலத்துக்குத் தக்கபடி மாறுகிறது. அது போலவே மக்களின் கலையும் காலத்துக்குக் காலம் பல உரு வெடுக்கிறது. மற்ற நாடுகளில் இருப்பது போலவே இந்தியாவிலும் மக்கள் கலை அப்போதப்போது மாறிப் பல நிறங்கள் கொண்டிருக்கிறது. ஒரு நாட்டின் மேதையை எடுத்துக் காட்டுவது, அந்த நாட்டு மக்களின் கலைதான். அது நேராக மக்களின் வாழ்விலிருந்து உதிக்கிறது; அதன் வேர் அந்த நாட்டு மண்ணில் ஆழ்ந்து ஊன்றியுள்ளது.

உன்னதக் கலைகள் யாவுமே, மக்கள் கலையிலிருந்து தோன்றியவைதான். இசையும் அப்படியே. இன்று மிகவும் நாகரிகமாக உள்ள இசை வடிவங்களில் சில, சாமானியமான நாடோடிப் பாடல்களிலிருந்து உருவானவை. உதாரணமாக, இன்று நாம் மிகவும் உயர்வாகக் கருதும் டமார் என்ற இசை வகை, வடமதுரை, பிருந்தாவனத்துக்கு அக்கம் பக்கத்தில் மக்கள் பாடும் நாடோடிப் பாடல்களிலிருந்து உருவானதுதான்.

ஹோலிப் பண்டிகையின்போது கண்ணனுடைய விளையாடல்களைப்பற்றி கூறும் நிகழ்ச்சிகளே, இந்தப் பாட்டுக்களில் அடங்கிய விஷயம். நாளடைவில் பல்லவி சேர்ந்து, இந்தச் சாமானியப் பாடல்கள் சிறந்த இன்னிசையாக மாறி, இன்று உன்னதச் சங்கீதத்தில் இடம் பெற்றன.

இசைத் துறையில் இன்று பிரசித்தமாக இருக்கும் ராகங்களுக்கு, அங்கங்கே பல வேறு பிராந்தியங்களிலுள்ள நாடோடிப் பாடல்களின் மெட்டுகள் தூண்டுகோலாக இருக்கின்றன. ஜிஞ்ஜோடி, பீலு, தேச், பீம்பலாஸி முதலியவை நாடோடிப் பாடல் மெட்டிலிருந்து உருவானவைதான்.

அண்மையில் சங்கீதத்தில் இடங்கொண்டிருக்கும் டப்பா, டும்ரி ஆகியவையும் நாடோடிப் பாடல்களின் சந்ததிகளே. பஞ்சாபில் ஒட்டகம் ஓட்டுபவர்கள் பாடும் பாடல்கள் டப்பா வகையைச் சேர்ந்தவை. குலாம் நபி என்பவர் இதற்கு மெருகிட்டு, இசையிலே இடங் கொடுத்தார். இன்று உயர்ந்த சங்கீதத்தில், டப்பா பாடுகிறவர்களுக்குத் தனிக் கௌரவம் ஏற்பட்டுவிட்டது.

இது போலவே, டும்ரியும் இந்தியாவில் பல இடங்களிலுள்ள நாடோடிப் பாடல்களிலிருந்து பிறந்ததுதான். கஜ்ரி, சைதி, பிரஹா, ஸாவன், ஹோலி முதலிய வட இந்திய நாடோடிப் பாடல் வகைகள் டும்ரிக்கு வழி காட்டிகள்.

கரடுமுரடான நாடோடி மெட்டுகள் சன்னமான ராகமாக மாறியபோது, கிராமச் சூழ்நிலைகள் அவற்றினின்று அறவே நீங்கிவிட்டன. மொழியும் விஷயமும் மட்டும் மாறுதல் அடையவில்லை.

ஆனல் நம் நாட்டுச் சிறந்த பாரம்பரியமான நாடோடிப்

காப்பிரைட்: இந்தியன் ரெவ்யூ, (ஆங்கிலம்: மே '58), சென்னை-1.

பாடல்கள் சிறிதும் மாறுதலின்றி இன்றும் மக்களிடையே வாழ்கின்றன. அவை கிராம மக்களுடைய ஆசா பாசங்களையும் இன்ப துன்பங்களையும் சித்திரித்து, உள்ளத்தில் நிலையான இடம் பெறும் தன்மை வாய்ந்தவை.

பணக்காரர், ஏழை என்ற வேற்றுமையின்றி அவை எல்லாருக்கும் பொதுச் செல்வமாக இருக்கின்றன. காச்மீரத்திலிருந்து குமரி வரையிலும், அஸ்ஸாமிலிருந்து சௌராஷ்டிரம் வரையிலும் பாரத நாடு முழுவதிலும் பல வகையான நாடோடிப் பாடல்கள் ஏராளமாக இருக்கின்றன. ஐரோப்பாவில் சுகமான சில நாடோடிப் பாடல்களை மக்கள் மறந்துவிட்டார்கள்; அப்படி இங்கே நடக்கவில்லை. பாரத நாடு தன்னிடமுள்ள நாடோடிப் பாடல்கள் அனைத்தையும் காத்து வந்திருக்கிறது.

இன்றும் கிராமங்களில், நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு பாடியதுபோலவே, நாடோடிப் பாடல்களை மக்கள் ஆனந்தமாய்ப் பாடுகிறார்கள். மாகாணத்துக்கு மாகாணம், மொழிக்கு மொழி, பாடல்கள் மாறியிருந்தாலும் அவற்றுக்குள்ளே பொதுவான ஒற்றுமை உண்டு. ஜனங்களின் வாழ்வு பல வண்ணமாக மாறியிருந்தாலும், அவர்களுக்குள் அடிப்படையான சகோதரபாவம் இருப்பதை இந்தப் பாடல்கள் குறிக்கின்றன.

சில ஆண்டுகளுக்கு முன்பு நான் சௌராஷ்டிரத்தில் பிரயாணம் செய்தபோது, அங்கே பாடும் கர்பா பாடலின் மெட்டு என் நெஞ்சைக் கவர்ந்தது. அதற்கு முன்பு இதே மாதிரியான் மெட்டை வங்காளத்தில் கேட்டது என் நினைவுக்கு வந்தது. இப்படியே, கட்வாலிலுள்ள இசைக்கும் இமயப் பிரதேசத்து இசைக்கும் ஒற்றுமை இருப்பதை நான் கவனித்திருக்கிறேன்.

இந்தியா பல வகையான வெப்ப தட்பங்கள் கொண்ட பரந்த நாடு. அங்கங்கே பழக்க வழக்கங்களில்



மாறுதலைக் காண்கிறோம். ஆகவே, ஒவ்வோர் இடத்திலும் அதற்கென்றே உரிய பாடல்கள் இருப்பதைக் காண்கிறோம். உத்தரப் பிரதேசத்தில், கஜ்ரியும் சைதியும், பஞ்சாபில் மஹியாவும் பாங்கடாவும், வங்காளத்தில் பாவுலும் படியாலியும், மகாராஷ்டிரத்தில் லாவணியும் பொவாடாவும், குஜராத்திலும் சௌராஷ்டிரத்திலும் ராஸும் கர்பாவும் புகழ் பெற்றவை. ஆனால் இவைதான் அங்கே உள்ள பாடல்கள் என்பதில்லை. இன்னும் எத்தனையோ வகைகள் அங்கங்கே உண்டு.

பாரத நாட்டில் கிராமங்களே அதிகம். கிராமத்து மக்கள் தங்கள் தொழில்களுக்கு ஏற்றவாறு வெவ்வேறு விதமான பாடல்களைப் பாடுகிறார்கள். ஓடக்காரன் பாடுவது வேறு; உழவன் பாடுவது வேறு; ஆயன் பாட்டு வேறு. பருவத்துக்கும் பண்டிகைகளுக்கும் ஏற்றபடி மாறுபடும் பாடல்களும் உண்டு.

பலவேறு மாகாணங்களிலுள்ள நாடோடிப் பாடல்களை ஒரே அவையில் பாடும்படியான ஏற்பாடுகளை இப்போது அடிக்கடி செய்துவருகிறார்கள். அகில இந்திய ரேடியோவில் வெவ்வேறு நிலையங்களில் நாடோடிப் பாடல்களை ஒலிபரப்புகிறார்கள். இதனால் இந்தப் பாடல்கள் இப்போது பிராபல்யம் அடைந்திருக்கின்றன; இவை நகரங்களிலும் சரி, கிராமங்களிலும் சரி, நன்றாய்ப் பரவிவருகின்றன.

கம்யூனிஸக் கனவு

ரா. ஸ்ரீ. தேசிகன்

பொருளாதார சாஸ்திரத்திலேயே புரட்சி தோற்றி, மனித வாழ்வில் பெரிய அதிர்ச்சியை உண்டாக்கிய கார்ல் மார்க்ஸ் (1818 - 1883) கருத்துக்களை இதில் கட்டுரையாளர் ஆராய்கிறார்.

இயற்கையில் ஓர் இடையறாத போராட்டத்தைப் பார்க்கிறோம். எளியதை வலியது வாட்டுகிற தன்மை இயற்கையில் வேரூன்றி நிற்பதாகத் தோன்றுகிறது. பூனை எலியைப் பிடிக்கிறது; பூனையை நாய் துரத்துகிறது; சிறிய மீனைப் பெரிய மீன் தின்கிறது; மீனை மனிதன் விழுங்கி விடுகிறான். எல்லாம் 'வல்லான் வகுத்ததே வாய்க்கா'லாய்த் திகழக் காண்கிறோம். இந்த இயற்கையின் சுபாவம் மனிதனையும் விட்டு அகலவில்லை. இத்தாலியில் பிரபுக்களுக்கும் (Patricians) ஏழைகளுக்கும் (Plebeians) போர் நடந்ததன்றோ?

உலகில் முதல் முதலில் மனிதன் தோன்றிய காலத்தில், அவன் வேட்டையாடிப் பிழைத்தான். வேட்டையாடிய நிலை மாறி விவசாயத் தொழில் தலை எடுத்தது. விவசாயிகளுக்கும் வேடர்களுக்கும் போராட்டம் நிகழ்ந்திருக்க வேண்டும். இந்தப் போராட்டத்தில் விவசாயிகள் வெற்றி பெற்றார்கள். நாட்கள் தேயத் தேய நிலப் பிரபுக்கள் தோன்றினார்கள். இந்தப் பிரபுக்களின் அடிக்கீழ்க் குடியானவர்கள் நெற்றி வேர்வை நிலத்தில் சொட்டச் சொட்ட வேலை செய்தார்கள். இந்த நிலப்பிரபு ஆட்சி, (Feudalism) மத்திய காலத்தில் தலை நிமிர்ந்து நின்றது. இந்தப் பிரபுக்கள் மாபெருங் கோட்டைகளைக் கட்டிக்கொண்டு வேந்தர்களையே எதிர்த்தார்கள். குடியானவர்கள் அடைந்த இன்னல்களுக்கு எல்லை இல்லை. அடிக்கடி குடியானவர்களுக்கும் நிலப் பிரபுக்களுக்கும் பூசல்கள் நிகழ்ந்தன. வேந்தர்கள் இந்தப் பிரபுக்களைக் கண்டு அஞ்ச வேண்டிய நிலை மாறிவிட்டது. எதையும் தாக்கக்கூடிய துப்பாக்கி மருந்தும் துப்பாக்கிகளும் பீரங்கிகளும் உலகில் பிறந்துவிட்டன. இவை யாவும் மன்னர்களின் கை வசமே இருந்த காரணத்தால், இது காறும் அடங்காத பிரபுக்கள் தலை வணங்கத் தொடங்கினார்கள்.

இதற்குள் ஒரு புதிய நிலை தோன்றிவிட்டது. திசைக் கருவி (காம்பஸ்) கண்டு பிடித்தார்கள். மரக்கலங்கள் எளிதாய்க் கடல்களைக் கடக்கத் தொடங்கின. புதிய உலகத்தையும் கண்டுபிடித்தார்கள். துணிந்து கப்பல் யாத்திரை செய்கிறவர்கள் வெளி நாடுகளுக்குச் சென்று எல்லையற்ற செல்வத்தைத் திரட்டினார்கள். நிலப் பிரபுக்களின் வலிவு குன்ற ஆரம்பித்து விட்டது. புதுப்பணம் பெற்றவர்கள், பழங்கால நிலப்பிரபுக்களைப் புறக்கணித்து விட்டார்கள்.

பதினெட்டாம் நூற்றாண்டில் நீராவியின் சக்தியைப் பயன்படுத்திக்கொள்ளத் தொடங்கினார்கள். தொழிற்சாலைகள் எழுந்தன. வியாபாரிகளின் இனம் (Bourgeois) பிறந்துவிட்டது. விஞ்ஞானத்தின் விளைவாகத் தொழிற்சாலைகள் பல்லாயிரக் கணக்கான இடங்களில் தோன்றித் தேன் கூடுகள் போல ஒலித்தன. முதலாளி பிறந்துவிட்டான். இந்த முதலாளிக்கும் உழைப்பாளிகளுக்கும் போராட்டம் தொடங்கிவிட்டது. 'உழைப்பாளிகள் உழைத்து

உழைத்துப் புழுங்கிச் சாகவேண்டும்; முதலாளிகள் எல்லா இன்பங்களையும் துய்க்கவேண்டும் - இதென்ன நியாயம்?' என்ற கேள்வி உழைப்பாளிகளிடையே எழுந்துவிட்டது. 'எங்கள் வேர்வையால், எங்கள் குருதியால், நொறுங்கிப் போன எங்கள் எலும்புகளால், எங்கள் இடையருத உழைப்பால் உங்கள் இன்ப மாளிகைகளை எழுப்பிவிட்டீர்கள். இனி நாங்கள் சும்மா இருக்க மாட்டோம்' என்ற சீற்ற மொழிகள் வெடித்தெழத் தொடங்கிவிட்டன. இந்த நிலையில் ஒரு மகா புருஷர் தோன்றினர்; அவர்தான் கார்ல் மார்க்ஸ்.

கார்ல் மார்க்ஸ் 1818-ஆம் வருஷம் ட்ரீவ்ஸ் (Treves) என்ற நகரத்தில் பிறந்தார். பிரெஞ்சுப் புரட்சியும் நெப்போலியனின் ஆட்சியும், ஜெர்மனியின் இந்தப் பிரதேசத்தை மிகவும் பாதித்தன. ஆதலால், இந்த இடத்து மாந்தர்கள் விரிவான மனப் பண்பு வாய்ந்தவர்களாக இருந்தார்கள். ஒரு தேசத்தையும் சாராது சர்வதேச நோக்குடன் இவர்கள் எதையும் ஆராய்ந்து வந்தார்கள். இத்தகைய மனேபாவம் நிலவிய சூழ்நிலையில் கார்ல் மார்க்ஸ் வளர்ந்தார். இவருடைய முன்னேர்கள் யூதர்கள். இவர் சிறு குழந்தையாயிருந்தபோது, இவருடைய பெற்றோர்கள் கிறிஸ்துவ சமயத்தைத் தழுவிவிட்டார்கள்.

யூதர்களுக்குப் புறம்பான அந்நிய (Gentile) ஜாதிப் பிரபுவின் பெண்ணைக் கார்ல் மார்க்ஸ் மணந்தார். அந்தப் பெண்ணோடு வாழ்நாள் முழுவதையும் யாதொரு பிணக்கும் இல்லாது கழித்தார். அவள்பால் இவர் பேரன்பு வைத்தார். அவளும் அப்படியே இவரிடம் அன்பு வைத்தாள். இவருடைய வாழ்க்கைக் கசப்பை மாற்றியது, இவருடைய மனைவியின் கலப்பற்ற அன்பே என்று சொல்லிவிடலாம். 'இருளுக்கிடையே ஒரு வானவில் தோன்றியதை நிகர்க்கும், இவர்களுக்கிடையே அரும்பிய மாசற்ற அன்பு' என்று மொழிந்தால், அது மிகை ஆகாது.

இவர் படித்த சர்வகலாசாலையில் ஹெகல் கண்ட தத்துவம் ஆட்சி புரிந்தது; ஹெகலுக்கு விரோதமாய் லோகாயத தத்துவம் (Materialism) ஒன்றை வகுத்து வாதமிட்ட ஃபாயர்பாக் (Feuerback) கொள்கையும் இங்கே இடம் பெற்றிருந்தது. கார்ல் மார்க்ஸ் ஒரு பத்திரிகை நடத்தினர். இந்தப் பத்திரிகை மிகுந்த முற்போக்கும் தாராள மனப்போக்கும் கொண்ட கொள்கையை ஆதரிப்பது கண்டு, அதிகாரிகள் இதற்குத் தடை உத்தரவு போட்டு நசுக்கிவிட்டார்கள். 1843-ஆம் ஆண்டு இவர் ஸோஷலிஸத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யப் பிரான்சுக்குச் சென்றார். அங்கே என்கல்ஸ் (Engels) என்பவரைச் சந்தித்தார். அவர் மான்செஸ்டர் நகரில் இருந்த ஒரு தொழிற்சாலைக்கு அதிகாரி. அவர் மூலம் இங்கிலாந்தில் நிலவும் தொழில் நிலைமைகளைப்பற்றியும், பொருளாதாரத் தத்துவங்களைப் பற்றியும் மார்க்ஸ் நன்கறிய நேர்ந்தது. 1848-ஆம் ஆண்டு பிரெஞ்சு நாட்டிலும், ஜெர்மன் நாட்டிலும் கிளர்ந்தெழுந்த புரட்சிகளில் மார்க்ஸ் கலந்துகொண்டார். இதன் விளைவாக, இவர் இங்கிலாந்தில் தஞ்சம் புக நேர்ந்தது. லண்டன் மாநகரத்தில் தம் வாழ்நாள் முழுவதும் கழித்தார். நோய் நொடிகள் இவரை வாட்டின. வறுமைப் பேய் இவரைத் தொடர்ந்தது. தம் அருமைக் குழந்தைகளை இழந்தார். இவருடைய வாழ்க்கைத் துணைவியும் 1881-ஆம் ஆண்டு உயிர் நீத்தாள். 1883-ஆம் ஆண்டு தம் நாற்காலியில் சாய்ந்தபடியே கார்ல் மார்க்ஸ் மாண்டார். இவருடைய மனைவிக்குப் பக்கத்திலேயே இவரையும் புதைத்துவிட்டார்கள். ஹெலன் டிமுத் (Helene Demuth) என்ற இவர்களுடைய வேலைக்காரி இவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவளாகவே திகழ்ந்தாள். அவளும் - அன்பும் சிரத்தையும் உருவான அவளும் - அவர்களோடு பெருந்துயிலில் ஆழ்ந்துவிட்டாள்.

எத்தனையோ சோதனைகளுக்கிடையேயும் மனம் தளராமல்

மார்க்ஸ் உழைத்து வந்தார். பிரிட்டிஷ் பொருட்காட்சிச் சாலையிலுள்ள நூல் நிலையத்தில் இருக்கும் புத்தகங்களில் இடையறுது திளைத்தார். தாம் கொண்ட கருத்தை விளக்கக்கூடிய அத்தனை நூல்களையும் படித்தார். அதன் விளைவுதான் 'மூலதனம்' (Capital) என்ற புத்தகமாகும். உலகத்தில் தாம் கொண்ட கொள்கை பரவித் தொழிலாளிகளின் இன்னல் போகாதா என்ற லட்சியந்தான் இவரை இடையறுது தூண்டியது. இந்தப் புத்தகம் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய புத்தகமல்ல என்று ஜி. டி. ஹெச். கோல் (G. D. H. Cole) மொழிகிருர். இது உண்மையே. இதற்குத் தக்க மொழிபெயர்ப்பு இல்லாததால், இத்தகைய கஷ்டம் ஏற்படுகிறது. மார்க்ஸ், எங்கெல்ஸ் இருவரும் கூட்டாகத் தயாரித்த கம்யூனிஸ்டு அறிக்கை (Communist Manifesto) சம்பந்தப்பட்ட வரையில் யாதொரு சங்கடமும் இல்லை. அது மிகத் தெளிவாயிருக்கிறது.

கார்ல் மார்க்ஸ் தம் எழுத்துக்களால் மட்டும் சமுதாயத்தை ஆட்டிவைக்கவில்லை. தம் காலத்து ஸோஷலிஸ இயக்கத்திலும் இவர் கலந்துகொண்டார். இந்த இயக்கத்தையே இவர்தான் படைத்தார் என்று சொல்லுவதற்கில்லை. அந்தக் காலத்துப் பொருளாதார நிலைகளும் வகுப்புப் போராட்டங்களுந்தான் இந்த இயக்கத்துக்குக் காரணம். ஆனுல் இயக்கத்துக்கு ஒரு போக்கையும் ஓர் உருவத்தையும் கார்ல் மார்க்ஸ் அளித்தார் என்றுமட்டும் சொல்லத்தான் வேண்டும்.

கார்ல் மார்க்ஸ் எழுதிய 'மூலதனம்' என்ற நூலைப் படிக்காமலே ஒருவன் ஸோஷலிஸப் பிரசாரம் செய்யலாம். அதற்குத் தொழிலாளிகளின் அநுபவமே போதும். ஏழைக்கு ஒரு நியாயம், பணக்காரனுக்கு ஒரு நியாயம் என்பதை மக்கள் உணர்ந்திருக்கிருர்கள். ஆனுல், கார்ல் மார்க்ஸ் சரித்திரத்தின் போக்கையே இனச் சண்டைகள்தான் அமைக்கின்றன என்று கண்டார். பெரிய நிகழ்ச்சிகளும் இயக்கங்களும் பொருளாதாரத்தாலும், அரசியலாலும் ஏற்பட்ட இனப் போராட்டங்களின் விளைவுகளே என்று சரித்திர ரீதியாகச் சான்றுகள் தருகிருர். இந்தப் போராட்டம் நடந்துகொண்டேதான் இருக்கும். முதலாளிகளுக்கும் தொழிலாளிக்கும் இப்போது நடக்கிற போர்கூடச் சரித்திரத்தில் ஓர் அவஸ்தைதான். இதுவும் மாறிவிடும். இது ஓர் இறுதி அவஸ்தையே தவிர வேறில்லை; இந்தப் போர் முடியுமாஞல், இன வேறுபாடு அற்ற ஒரு சமுதாயம் ஏற்பட்டுவிடும். அப்போது யாதொரு பூசலுக்கும் இடம் இல்லை. வறுமையற்று, இன்னல்களற்று, இன வேற்றுமைகள் அற்று மாந்தர்கள் இன்புற்று வாழ்வார்கள். இந்தத் திசையை நோக்கித்தான் நிகழ்ச்சிகளும் விரைந்துகொண்டிருக்கின்றன.

சரித்திரப் போக்கை உள்ளபடி அறிய வேண்டுமாஞல், பொருளாதார நிலையில் நின்றுகொண்டுதான் நோக்க வேண்டும். எப்படி மனிதன் இயற்கைச் சக்திகளைத் தன் வசம் ஆக்கிக்கொள்ளுகிருன், எப்படிப் பண்டங்களைப் படைக்கிருன், எப்படி இனவேற்றுமைகள் ஏற்படுகின்றன என்ற விஷயங்களையெல்லாம் நோக்கிஞல், சரித்திரப் போக்கின் மர்மம் நன்ருக விளங்கிவிடும். மனிதனுடைய ஜீவாதாரத்தை ஒட்டியே பெரிய புரட்சிகள் நிகழும் என்பதில் சந்தேகமில்லை என்று இவர் மொழிகிருர். மேலும், ஒருவன் நல்லவனு, கெட்டவனு என்பதுகூடச் சூழ்நிலையைப் பொறுத்ததே. ஒழுக்கமும் நிலைக்கு நிலை மாறும். சமுதாயத்தைத் தக்கபடி அமைத்துவிட்டால், திருட்டுக்கு இடம் இல்லாமல் போய்விடும். திருட்டுத்தனம் மனிதனிடத்தில் தோன்றுவதுகூட அவனுடைய இல்லாமையின் கொடுமையே.

ஹெகல் கையாண்ட தர்க்க ரீதியை (Dialectics) இவர் பின்பற்றிஞலும், இவர் வகுத்த தத்துவம் ஹெகல் கொள்கைக்கு முற்றிலும் மாருனது என்று கூறலாம். ஹெகல் கண்ட உண்மை, பார

மார்த்திக (Spirit) வாதத்தைச் சார்ந்தது; கார்ல் மார்க்ஸ் வகுத்துக் கொண்டது லோகாயத (Materialism) வாதமாகும். தர்க்க ரீதியில் ஹெகலைப் போலவே இவர் தம் வாதத்தைச் சாதிக்கிறார்.

ஒரு நிலை என்று இருந்தால் (Thesis), அதற்கு மாறான ஒரு நிலையும் ஏற்படும் (Antithesis). இந்தப் போட்டியில் ஒன்று மற்றொன்றால் இறந்துவிடும். முரண்பாடில்லாத நிலை(Synthesis) முடிவில் தோன்றும். மறுபடியும் அதற்கு மாறான நிலை ஒன்றும் தோன்றும். எல்லாம் ஒரு விசுவ ஆத்மாவில் (Universal spirit) கரைகிறவரையில் இந்தப் போட்டி இடையறாது நிகழ்ந்துகொண்டேதான் இருக்கும் என்று ஹெகல் மொழிகிறார். இந்த விசுவ ஆத்மாவில் கார்ல் மார்க்ஸுக்கு நம்பிக்கை இல்லை. விசுவ ஆத்மாவை இங்கே இழுக்க வேண்டிய அவசியமும் இல்லை. லோகாயத தத்துவத்தைக் கொண்டே எல்லாப் பிரச்னைகளின் சிக்கல்களையும் அவிழ்த்துவிடலாம் என்பதே கார்ல் மார்க்ஸின் முடிவு.

சமயம் என்பது கற்பிதமே. 'எல்லாம் ஆண்டவன் செயல்களே' என்று சொல்லிவிட்டால், தொழிலாளிகள் தங்கள் இன்னல்களின் வெங்கசப்பை மறக்கலாம் அல்லவா? அப்போது பெருஞ் செல்வத்தில் மிதக்கிறவர்கள்மீது ஏழை மக்களுக்குச் சீற்றம் எழாது. மேலும், அவர்கள் தெவிட்டாத இன்பத்தில் திளைப்பதும் ஆண்டவன் செயலே ஆகும் அல்லவா? தவிர, இப்போது இன்னல்களின் சுமைகளைப் பொறுமையோடு ஏற்றால், மறுமையில் இன்பம் அடைய முடியும் என்ற கொள்கையையும் பரப்பிவிட்டால், ஏழை மக்கள் சும்மா இருப்பார்கள் அல்லவா? ஆகவே, 'சமய நெறிகூட ஒரு போதையே ஆகும்; பிறிதில்லை' என்று கார்ல் மார்க்ஸ் கூறிவிட்டார்.

இப்போது இருக்கிற நிலை முதலாளித்துவம் (Thesis); இதற்கு மாறாக எழுந்துள்ள நிலை (Antithesis) தொழிலாளிகளின் இயக்கம். இந்தப் போராட்டத்தில் முதலாளித்துவம் தொழிலாளிகளின் இயக்கத்தில் கரைந்து ஒன்றாய்ப் போய்விடும் (Synthesis). இப்படி லோகாயத ரீதியில் எதுவும் நிகழக் கூடும். மில், பெந்தம் இவர்களைப் போலவே கார்ல் மார்க்ஸும் ஒரு லோகாயதவாதிதான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் லோகாயத வாதம் இவரே தொடங்கினதல்ல. காலத்தால் மங்கிப்போன இந்த வாதத்துக்கு இவர் மீண்டும் உயிர் அளித்தார் என்பதுதான் உண்மை.

காண்கிறவன் இல்லாமற் போனால், காணும் பொருள் தோன்றாது என்ற கட்சியைச் சார்ந்தவர் அல்ல இவர். 'திருக் திரிச்ய பாவம்' என்று இந்தக் கட்சியை வடநூலார் கூறுவார்கள். 'மனோமயம் ஜகத்; மனம் போனால் உலகம் அழிந்துவிடும்' என்ற கொள்கைக்கு இவர் ஆதரவு அளிக்கவில்லை. காண்கிறவன் இல்லாமற் போனாலும் காணும் பிரபஞ்சம் இயங்கும் என்பது இவர் முடிவு. கார்ல் மார்க்ஸ் மனத்தத்துவத்தை அறவே அகற்றிவிட்டார் என்பதில்லை. மனத்தின் ஆற்றலை இவர் ஒப்புக்கொள்ளுகிறார். ஆனால், 'இந்த மனம் பிரபஞ்சத்தைத் தாண்டி நிற்கிறது; பிரபஞ்சத்துக்கு அப்பால் உள்ளது' என்பது இவருக்கு உடம்பாடில்லை. 'மனம் என்பதுகூட அப்போதப்போது அமையும் சமுதாயத்தின் விளைவே தவிர, சமுதாயத்தை அது தாண்டிவிடவில்லை' என்று இவர் சாற்றுகிறார். தர்க்க ரீதியில் ஹெகலுக்கும் கார்ல் மார்க்ஸுக்கும் ஒற்றுமை இருந்தாலும், இறுதித் தத்துவத்தில் வேறுபாடு உண்டு. ஹெகல் ஒரு பாரமார்த்திகவாதி; கார்ல் மார்க்ஸ் ஒரு லோகாயதவாதி.

மேலும், ஒரு பொருளின் மதிப்பு அதைப் படைப்பதற்காக நிகழ்ந்த உழைப்பைப் பற்றியது (Labour theory of value) என்ற தத்துவத்தைப் பிராசீனப் பொருளதிகார ஆசிரியர்களிடமிருந்து (Classical Economists) எடுத்து அப்படியே தம் நூலில் இவர் வைத்து இழைத்துக் கொண்டு விட்டார். ஒரு பொருளின் மதிப்பு அதன் தேவையைப்

பொறுத்தது. வாங்குகிறவனும் விற்கிறவனும் ஒரு நிலைக்கு வந்தால்தான், வியாபாரமே தொடங்கும். 'பொருளின் மதிப்பு உழைப்பைப் பொறுத்ததே' என்ற பழைய தத்துவத்தை ஏற்றுக்கொண்ட கார்ல் மார்க்ஸ்மீது பழியைச் சுமத்துவது அழகல்ல. உழைப்பின் கூலி போக எஞ்சி நின்ற தொகையான உபரி மதிப்பு (Surplus Value) எப்படி வந்தது என்பதைக் கார்ல் மார்க்ஸ் துருவி ஆராய்ந்திருக்கிறார். தொழிலாளி தன் தேவைக்கு அதிகமாகப் படைக்கிறான். இந்த உபரி மதிப்பு முதலாளிக்குப் போய் விடுகிறது. நிலம், தொழிற்சாலை இவற்றோடு இவனுக்கு நேர்முகமாக யாதொரு சம்பந்தமும் ஏற்படாத காரணத்தால், இந்த உபரி மதிப்புப்பற்றிய விவரம் இவனுக்குத் தெரிவதில்லை. தனக்குக் கிடைத்த ஊதியத்தோடு இவன் நின்றுவிடுகிறான். இப்படித் தன் உழைப்பைக் கொண்டு முதலாளிகள் இன்ப வாழ்க்கை நடத்துகிறார்கள் என்ற உண்மை தொழிலாளிக்கு உதயமானவுடன், 'உலகத்துத் தொழிலாளிகள் ஒன்று சேர வேண்டும்' என்ற கம்யூனிஸ்ட் அறிக்கை வெளி வந்தது. தொழிலாளரின் கண்களைத் திறந்தவர் கார்ல் மார்க்ஸ். 'முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையறாத போர் நிகழ்ந்து கொண்டேதான் இருக்கும். ஆனால் உலகத்திலுள்ள எல்லாத் தொழிலாளிக்கும் உரிய வெற்றியில் வகுப்புப் போர், இனப்போர் எல்லாம் மாய்ந்துவிடும். அந்த நாளில் உலகம் இன்புறும்' என்ற கனவைக் கார்ல் மார்க்ஸ் கண்டார்.

இவர் கனவு கண்ட புரட்சி, பிரெஞ்சுப் புரட்சியைக்காட்டிலும் ஒரு மாபெரும் புரட்சி என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. போல்ஷிவிக் தத்துவத்தைப்பற்றி ரஸ்ஸல் (Russell) 'போல்ஷிவிக் தத்துவமும் அநுஷ்டானமும்' (The Practice and Theory of Bolshevisim) என்ற புத்தகத்தில் அளித்த கருத்துக்கள் சிந்திப்பதற்குரியவை. பணக்காரன், ஏழை என்ற நிலையை இந்தப் புத்தகம் மாய்த்துவிட்டது. பொருளாதாரத்தால் எழுந்த அடிமைத் தளைகளை இது தகர்த்தெறிவதைக் காண்கிறோம். இனப் போர்களால் பிறக்கும் நஞ்சை, சமுதாயத்தை விட்டு இது அகற்றி விட்டது. எல்லா ஆடவர்களும் பெண்டிரும் உழைத்து உண்ண வேண்டும் என்ற தூய்மையான சூழ்நிலையை இது படைத்துத் தந்து விட்டது. 'உழைப்பே தெய்வம்' என்ற மனப்பண்பாடு இதிலிருந்து மக்கள் மனத்தில் வேரூன்றத் தொடங்கிவிட்டது. இன்பக் களஞ்சியங்களாய்த் திகழும் அரண்மனைகள் ஒரு பால்; துயர்களும் இன்னல்களும் மண்டிக் கிடக்கும் எளிய மண் குடிசைகள் ஒருபால் - இந்த நிலை மாறிவிட்டது.

உழைப்புக்கும் உழவுக்கும் வந்தனம் கூறித் தொழும் நாளன்றோ நல்ல நாள்! ஆனால், இந்த நிலையிலும் ஒரு பிரச்னை பிறக்கக்கூடும்.

உணவு, உண்டி கிடைத்தால் மட்டும் போதுமா? செல்வத்தில் திளைத்த ஒரு புத்தருக்கு வாழ்க்கையில் கசப்பு ஏற்படுவானேன்? புத்தர்பிரானைப் போன்ற மனிதர்கள் உலகெங்கும் தோன்றிவிட்டால், இந்த நிலைக்கும் பாரமார்த்திக நிலைக்கும் ஒரு போராட்டம் எழுமன்றோ? இந்த 'நிலையும் மாறுபட்ட நிலையும்' (Thesis, Antithesis) என்ற ரீதியில் சம்பவங்கள் நிகழ்ந்தால், பாரமார்த்திகமாகிற அமைதி நிலை (Synthesis) ஒன்றும் வரும்.

'போராட்டமே முன்னேற்றத்தின் சின்னம். இப்படி முன்னேறிக் கொண்டு போவதே உலக இயல்பு' என்று உலகங் கேட்க முரசடித்த கார்ல் மார்க்ஸ் என்ற சான்றோனுக்கு உலகம் கடமைப்பட்டிருக்கிறது. பண்டைய வினையால் உலகம் துன்புறுகிறது என்ற கொள்கைக்குக் குழி தோண்டினது போலச் சம்பவங்கள் நடக்கின்றன என்று சொன்னால் மிகையாகாது. மனிதனின் முயற்சியால், பேர் உழைப்பால் உலகம் உய்யும். அவன் இந்த வையகத்தை அமர நாடு ஆக்க இயலும். முயற்சி, உழைப்பு இந்த இரு தெய்வங்களையும் கைகூப்பித் தொழுவோமாக.

எங்கே பார்த்தாலும் கோயில்! ஐயாயிரம் கோயில்! எங்குமே கண்ணன் திருநாமம்!

பிருந்தாவனம்

பி. வி. விஜயம்

மகாகவி வித்தியாபதியின் கவிதைகளைப் படித்துக்கொண்டிருந்தேன். பிருந்தாவனத்தைப் பார்க்க ஆவல் பிறந்தது. இது குளிர்காலம். இந்த நாளில் வண்டினங்களையும் பொலிவுள்ள பூக்களையும் பார்க்க முடியாதுதான். ஆயினும் உச்சி வேளையில் மங்கிய வெயிலில் இரண்டு நண்பர்கள் கிடைத்ததும் புறப்பட்டுவிட்டேன் பிருந்தாவனத்துக்கு.

மகாகவி குமாரன் ஆசான் வர்ணித்த வடமதுரையிலிருந்து ஆறு மைல் வடக்கே இருக்கிறது பிருந்தாவனம். இது கிருஷ்ண பக்தர் விரும்பும் புண்ணிய பூமி. நம் நாட்டு இலக்கியங்களில் இருப்பதைவிட வசந்தனின் எழில் அதிகமாக நிறைந்து நிற்கிறது பிருந்தாவனம். வங்காளத்து ஜயதேவர், சண்டிதாஸ், பிஹாரைச் சார்ந்த வித்தியாபதி, வடமதுரையில் உதித்த ஸூர்தாஸ் போன்ற நம் நாட்டுக் கவிகளுக்குக் கிருஷ்ணனைச் சார்ந்த எண்ணற்ற காவியங்களைத் தந்த சிறந்த அழகு மிகுந்த பூமியல்லவா இது! மேலும், கோபியருக்கும் கண்ணனுக்கும் கேளிக்கைக்கு ஏற்ற சூழ்நிலையைத் தந்தது, பிருந்தாவனத்தின் இயற்கை.

நாங்கள் ஒன்றரை மணிக்கு உச்சி வேளையில் ரெயிலில் ஏறினோம். ரெயிலில் சூட்டுக்குப் பதிலாகக் குளிர் இருந்தது. வண்டியில் நாங்கள் ஐந்தாறு பேர் தான் இருந்தோம். குளிரைச் சமாளிப்பதற்குத்தானோ என்னவோ வண்டி புகை விட்டுக்கொண்டு ஓடியது. இரு புறமும் உள்ள இயற்கை அழகைப் பார்த்துக்கொண்டே போனோம்.

பிருந்தாவனத்துக்குப் போகும் வழியில் செல்வர் பிர்லா ஓர் ஆலயம் நிர்மாணம் செய்துவருகிறார். டில்லியிலும் காசியிலும் இருக்கும் பிர்லா மந்திரங்களைப் போலவே தான் இதுவும் உருவாகி வருகிறது. சிறிதாக இருந்தாலும் அழகு நிறைந்தது. பெரிய கோபுரமும் அதில் ஒரு கடிகாரமும் இங்கே அமைந்திருக்கின்றன.

பிருந்தாவனத்தில் பஸ் நிற்கும் இடத்துக்குச் சென்றோம். ஒரு கிராமத்தின் சந்தை நடந்து ஓய்ந்த இடம் போல் இருந்தது அது. எங்களுக்கு எல்லா இடங்களையும் காண்பித்துத் தருவதாகக் கூறி, ஒரு பண்டா எங்களைத் தொடர்ந்தார். ''நாங்களே பார்த்துக்கொள்கிறோம்; எங்களுக்குப் பிறர் உதவி



ரங்கநாதர் ஆலயம்

காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம்: 16-2-'58), கோழிக்கோடு.

அவசியமில்லை'' என்று சொன்னோம். அவருக்குச் சற்றுக் கோபம் வந்துவிட்டது போல் இருக்கிறது. ''இவர்கள் வங்காளிகள் அல்ல; மதராஸிகள் போல் இருக்கிறது!'' என்று யாரிடமோ அவர் கூறிக் கொண்டிருந்தது எங்கள் காதில் விழுந்தது.

பிருந்தாவனத்தில் உள்ள எல்லா இடங்களையும் பார்க்க யாராவது தெரிந்த ஒருவருடைய உதவி வேண்டும் என்பது எனக்கே தெரியும். அதனால் என் நண்பர் தேவகிநந்தனரின் வீட்டுக்கு ஒரு குதிரை வண்டியில் ஏறிச் சென்றேன். குறுகிய வழி. அதன் ஓரத்தில் துர்நாற்றம் வீசும் ஓடை. அருகில் பட்சணக் கடை. வயசு முதிர்ந்த பெண்மணிகள் கூட அதில் பலகாரங்களை வாங்கி எச்சில் பண்ணிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். வீட்டை விட்டு வெளியே இறங்கினால், திரும்ப வீடு சேரும்வரையில் தீர்த்தங்கூடச் சாப்பிடாமல் இருக்கும் நம் நாட்டுச் சகோதரிகளுக்கும் பிருந்தாவனத்துப் பெண்மணிகளுக்குந்தான் எவ்வளவு வேற்றுமை!

சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு பிருந்தாவனத்தில் பசும் புல் தரையும் அதற்குக் கரை போட்டதுபோல் ஓடும் யமுனையும் தவிர வேறு ஒன்றுமில்லை. அங்கே ஜனங்கள் அதிகமாக வாழவில்லை. புராணப் பிரசித்தி பெற்ற புண்ணிய பூமி என்பதைத் தவிர வேறு விசேஷம் ஒன்றும் அதற்கு இல்லை. பிருந்தாவனத்துக்குப் புத்துயிர் அளித்து அதன் பெருமையை எடுத்துக் காட்டியவர் வங்காளத்தில் அவதரித்த சைதன்ய மகாப் பிரபுதான். இந்தப் பூமிக்குப் புண்ணிய க்ஷேத்திரங்களில் முதல் இடம் தந்து பெரிய கோயில்களைக் கட்டத் தூண்டியவர் அந்த மகான் தான். இங்கே பழமை வாய்ந்த முக்கியமான கோயில்களைக் கட்டியவர்கள் சைதன்யரின் சிஷ்யர்களான ஸநாதன கோஸ்வாமியும் ரூப கோஸ்வாமியுந்தான். பின்காலத்தில், பக்தி உள்ள பணக்காரர்களும் அரசர்களும் எண்ணிறந்த ஆலயங்களை நிர்மாணித்தார்கள். பத்து மைல் சுற்றளவுடைய இந்தப் பிருந்தாவனத்தில் இந்தக் காலத்தில் ஐயாயிரத்து ஐந்நூறு ஆலயங்கள் சிறிதும் பெரிதுமாக இருக்கின்றன. நாங்கள் குதிரை வண்டியில் ஏறி ஊருக்குள் போய்க் கொண்டிருந்தபோது, முதலில் பெரிய பெரிய கோபுரங்கள் வானளாவி நின்றுகொண்டு வெயில் காய்வதுபோல் தென்பட்டன. பிறகு காஷாயம் தரித்த சந்நியாசிகளும் குடுமியுடைய பிராம்மணர்களும் நடமாடக் கண்டோம். அங்கே இருக்கிறவர்கள் பரஸ்பரம் வந்தனம் செய்து கொள்ளும்போது 'ராம் ராம்' என்று சொல்வதற்குப் பதிலாக 'ராதே - ச்யாம்' என்று கூறிக் கொண்டார்கள்.

நாங்கள் தேவகிநந்தனரின் வீட்டை அடைந்தோம். வீட்டிலே அவர் இல்லை. 'கோயிலுக்குப் போயிருக்கிறார்' என்ற சமாசாரத்தைப் பக்கத்து வீட்டுப் பாட்டி மூலம் எப்படியோ ஒருவிதமாய் அவருடைய மனைவி அறிவித்தாள். நாங்களும் ஆலயங்களைக் காணச் சென்றோம்.

முதலில் நாங்கள் பார்த்தது ராதாமாதவ்ஜீயின் ஆலயம். இது என் நண்பரின் தந்தை 'யமுனா வல்லப கோஸ்வாமி' கட்டியது. இங்கே உள்ள கோயில்களுக்குள்ளே பெரும்பாலானவை கோஸ்வாமிகள் கட்டியவைதான். அரசாங்கத்துக்குச் சொந்தமான கோயில்கள் மிகவும் குறைவு. மற்றக் கோயில்களின் சொந்தக்காரர்களே அவற்றின் வரும்படியை உபயோகித்துக் கொள்வார்கள். ஆகவே, கோயில்கள் பிழைக்க வழியாக இருந்தபோதிலும், அவற்றை நிர்வகிப்பவரில் பக்தர்கள் இல்லை என்று கூற முடியாது.

யமுனாவல்லபர் வட இந்தியாவில் கதை சொல்லும் மிகப் பெரிய பாகவதர். அங்கே 'கதை சொல்பவர்' என்றால், பக்தியோடு பாகவத சுலோகங்களுக்கு அர்த்தம் சொல்லிப் பிரவசனம் செய்பவர் என்று பொருள். அநேகமாக நம் நாட்டு ஹரிகதைபோல் இருக்கும்

வட இந்தியாவில் கதை சொல்லும் பாணி. யமுனாவல்லபருக்குச் சிறிய குரலும் பேச்சு வன்மையும் இருந்ததோடு, வங்காளி, ஹிந்தி, குஜராத்தி இந்த மூன்று பாஷைகளிலும் கதை சொல்லும் சாமர்த்தியமும் உண்டு. ஆகவே, அவர் வட இந்தியாவில் இணையற்ற பாகவதராக இருந்தார்.

அந்தக் கோயிலில் அமர்ந்துள்ள பகவான் நீலமேகச்யாமளர். தலையில் மயில் தோகை சூடியிருந்தார். பகவானுடைய வலது பக்கம் கங்கா தேவியும் இடது பக்கம் சுகதேவரும் இருக்கிறார்கள். கண்ணனின் பிம்பம் தொள்ளாயிரம் ஆண்டுகளாக இருந்து வருகிறது. 'கீத கோவிந்தம்' எழுதிய ஜயதேவர் பூஜை செய்துவந்த மூர்த்தி அது. 'வங்காளத்திலிருந்து வந்தது'' என்று எங்களிடம் யமுனாவல்லபர் தெரிவித்தார். கோயிலின் முன்புறம் சுவரில் ஜயதேவரின் போட்டோ ஒன்று மாட்டியிருந்தது.

சிறிய குதுப்மினார்போல் காட்சியளித்தது மிகப் பெரிய மதன் மோகன் ஆலயம். இதைச் சைதன்யரின் சிஷ்யரான ஸநாதன கோஸ்வாமி கட்டியதாகக் கூறுகிறார்கள். இன்று இந்தக் கோயிலைச் சர்க்காரே நிர்வகிக்கிறது. ஒரு கப்பலில் சாமான்களுடன் மதன் மோகன் என்ற வியாபாரி வரும்போது, யமுனையில் ஓர் இடத்தில் அந்தக் கப்பல் தரையில் பதிந்து விட்டது. குறித்த சமயத்தில் போகாவிட்டால் பெருத்த நஷ்டம் ஏற்படுமே என்று வியாபாரி கலங்கினார். மனமாரப் பகவானை வேண்டிக்கொண்டார். கப்பல் நகர்ந்தது. எதிர்பார்த்ததற்குமேல் பிரமாதமாய் லாபம் கிடைத்தது. அதைக் கொண்டு இந்த ஆலயத்தை அவர் கட்டினாராம்.

மதன்மோகன் ஆலயத்துக்குப் பின்புறமாக நடந்து, ஒரு நீரோடையை அடைந்தோம். அங்கே தான் காளியமர்த்தனம் நடந்தது என்கிறார்கள். முன் காலத்தில் யமுனை இந்த வழியாகத்தான் ஓடியதாம். இங்கே கல்லால் படிக்கட்டுக் கட்டிய ஒரு துறை உண்டு. இதற்குக் 'காளிய தஹ் காட்' என்று பெயர்.

அடுத்த ஆலயத்துக்குப் போகும் வழியில் புழுதி ஏராளம். என் நண்பர் தம்முடைய வெள்ளைப் 'பாண்ட்' மீது புழுதி படிவதைக் கண்டு மனம் கசிந்தார். பிருந்தாவனப் புழுதிக்காக ஏங்கிக் கவிதை பாடிய கவிஞர்களைப்பற்றித் தான் அப்போது எனக்கு நினைவு வந்தது.

பிறகு எங்கள் கவனத்தைக் கவர்ந்தது செங்கல்லால் கட்டிய ஓர் அழகிய இடம். அதில் நடுவே கிருஷ்ணனும் ராதையும் நிற்கிறார்கள். சுற்றிலும் ஏழு சகிகள் நின்றுகொண்டு நர்த்தனம் செய்கிறார்கள். பிம்பங்கள் எல்லாம் கண்கவர் வனப்பு வாய்ந்திருந்தன. இதற்கு அஷ்டசகி க்ஷேத்திரம் என்று பெயர்.

மிகவும் அசுத்தமான ஒரு சந்தின் வழியாக 'ஸேவாகுஞ்சம்' என்ற இடத்தை அடைந்தோம். இயற்கை அழகு இங்கே மலிந்திருந்தது. பழங்காலத்தின் இயற்கை வனப்பைக் காத்துவரும் இடம் 'ஸேவாகுஞ்சம்', 'நிதுவனம்' என்ற இரண்டுந்தான் என்றே சொல்லிவிடலாம். ஸேவாகுஞ்சத்துக்கு நாலு புறமும் பெரிய மதில்கள் இருந்தன. உள்ளே மாமரங்கள், கொடிகள், கதம்ப மரங்கள், நாக மரங்கள் இவை எல்லாம் அடர்ந்திருந்தன.

கமான் வளைவுபோல் அமைந்திருக்கும் கொடி விதானங்களைக் கடந்து, ஒரு சிறு கோயிலை அடைந்தோம். இதுதான் மதனகோபால க்ஷேத்திரம். பிரணய கோபம் கொண்ட ராதை, அவளைச் சமாதானம் செய்ய வந்த முகுந்த மாதவன் ஆகிய இருவருடைய பிம்பங்களும் அங்கே இருந்தன.

கொடிகள் சூழ்ந்த புதருக்கிடையே ஒரு கிணறு இருந்தது. அதன் ஜலம் மிகவும் மோசமாயிருந்தது. அதற்கு 'லலிதா குண்டம்' என்று பெயர். தம்முடன் ராஸக்ரீடையில் ஈடுபட்டுக் களைப்புற்றுத் தாகத்தால் வருந்தும் லலிதா என்னும் சகிக்குத் தண்ணீர் கொடுக்கப் பகவான் புல்லாங்

குழல் கொண்டு தோண்டிய கிணறும் இது.

அதற்குப் பிறகு நாங்கள் யமுனைக் கரையிலுள்ள 'சீரஹரண கட்ட'த்துக்குச் சென்றோம். கோபிகளின் ஆடையைப் பகவான் கவர்ந்தது இங்கேதானும். யமுனையில் தலை முழுகுவதுபோல் வளைந்திருக்கும் கதம்ப மரம் ஒன்று இருந்தது. அதில் பல நிறங்களுடைய வஸ்திரத் துண்டுகள் கட்டியிருந்தன. வஸ்திராபகரணப் படம் ஒன்றும் அந்த மரத்தில் தொங்கிக்கொண்டிருந்தது. ஒரு கிழவன் அந்தக் கதையை வருகிற பக்தர்களுக்கெல்லாம் கூறி அவர்கள், கொடுக்கும் சம்மானத்தைப் பெற்றுக்கொண்டிருந்தான்.

அடுத்தபடியாக 'ஸாஹ்ஜி' என்பவர் கட்டிவைத்த பிஹாரிலாலின் சலவைக்கல் கட்டிடம் எங்களைக் கவர்ந்தது. வளைந்திருக்கும் கல் தூண்கள்தான் இங்கே உள்ள விசேஷம். இதன் மேலே வீணாபாணியான சரஸ்வதியின் பிம்பமும் மற்றும் பல தேவ தேவிகளின் பிம்பங்களும் கணக்கில்லாமல் இருக்கின்றன. மொத்தத்தில் நவீன முறையில் கட்டிய அழகான கோயில் இது.

ஸேவாகுஞ்சம் போலவே 'நிதுவன'மும் ஓர் அழகிய பூந்தோட்டமாகும். வாசலில் செருப்பைக் கழற்றிவிட்டு நாங்கள் உள்ளே சென்றோம். இளங் காற்று வீசியது. மணிபுரி நடனம்போல் காற்றில் கொடிகள் ஊசல் ஆடின. நாவல் மரத்தில் மஞ்சள் கிளிகள் உல்லாசமாகக் குலாவிக்கொண்டிருந்தன. அதைக் காணச் சந்நியாசிகள் பலர் சேர்ந்திருப்பது போல் தோன்றியது. படர்ந்திருக்கும் கொடிகளுக்கிடையிலும் மாமரங்களிலும் குரங்குக் கூட்டங்களைப் பார்த்தோம். தாய்மார்களின் முதுகில் குட்டிக் குரங்குகள் ஏறி, 'யானை யானை' ஆடின. ஒரு குரங்கு என் நண்பரின் தொப்பியை எடுக்க முயன்றது.

'நிதுவன'த்தில் ஒரு பஜனை மடம் உண்டு. இது புகழ் பெற்ற பக்தகவி ஹரிதாஸரின் ஸமாதிஸ்தலம். அக்பரின் தர்பாரில் இருந்த தான்ஸேன் என்ற பெருங் கவிஞர் இவரைக் குருவாகப் போற்றி வந்தார். அக்பரும் மாறு வேடம் தரித்துத் தான்ஸேனுடன் சென்று ஹரிதாஸரின் சங்கீதத்தைப் பருகி இன்புற்ற வரலாறு மிகப் பிரசித்தம். ஹரிதாஸரின் கவிதைகள் சாஸ்திரீய முறையில் பாடக்கூடிய பாடல்கள். பஜனை மடச் சுவர்களில் ஹரிதாஸரின் சில கவிதைத் துணுக்குகள் பொறித்திருக்கின்றன.

நிதுவனத்திலிருந்து வெளிவந்தவுடன், என் நண்பரின் செருப்பு ஒன்றைக் காணவில்லை. ஒரு வானர வீரன் அது ஒரு பட்சணம் என்று நினைத்தோ என்னவோ எடுத்து ஓடிவிட்டான். ஒரே செருப்புடன் எப்படி நடப்பது? செருப்போ புதுச் செருப்பு; போனால் போகட்டும் என்றுதான் எப்படி இருக்க முடியும்! தவிர, அந்த ஊரில் வெறுங் காலுடன் நடப்பது அவமானம். 'என்ன செய்வது?' என்று திகைத்தோம். புதருக்குள் புகுந்து செருப்பைத் தேடிக்கொண்டே போனோம். வறுத்த கடலையை வாங்கிக் குரங்குகளுக்கு இறைத்து விளையாடிக்கொண்டே சென்றோம். அப்போது மரக்கிளையில் ஒரு குரங்கு உட்கார்ந்து செருப்பின் வேலைப்பாட்டை ஆராய்ந்துகொண்டிருந்ததைப் பார்த்தோம். கடலையை வாரி இறைத்தோம். அதை எடுக்கச் செருப்பை வீசி எறிந்துவிட்டுத் 'திருடன்' இறங்கி வந்தான்; நாங்கள் செருப்பை எடுத்துக்கொண்டு வந்துவிட்டோம்.

போது போய்க்கொண்டிருந்தது. சிறிதும் பெரிதுமான எண்ணிறந்த கோயில்களைப் பார்த்தோம் என்று பெயர் செய்துகொண்டு வந்தோம். லாலா பாபுவின் க்ஷேத்திரம், பிரம்மசாரியின் க்ஷேத்திரம், ரங்கநாதஜீ க்ஷேத்திரம் இவற்றையெல்லாம் கிடு கிடு என்று பார்த்துவிட்டோம். ரங்கநாதஜீ க்ஷேத்திரம் தென்னிந்திய ஆலயங்களைப்போல் அழகு நிறைந்து என் மனத்தைக் கவர்ந்தது.

பார்ப்பதற்கு இன்னும் எத்தனையோ கோயில்கள் மீதியிருந்

தன. ஆயினும் இருட்டுவதற்குமுன் வடமதுரையை அடைய வேண்டும்; வேறு வழியில்லை. எனவே, ஆலயங்களின் பட்டணமான பிருந்தாவனத்தினிடம் விடை பெற்றுக்கொண்டு, ஒரு குதிரை வண்டியில் ஏறிக்கொண்டோம். வண்டி வேகமாய் ஓடியது.

மதுரைக்குப் போகும் பாதை ஓரத்தில் ஒரு குன்று இருந்தது. அங்கே நாங்கள் இறங்கினோம். குன்றின்மேல் முஸ்லிம்களின் பள்ளிவாசல் ஒன்று இருந்தது. அதன் பின்புறம் 'கிருஷ்ணர் ஜனித்த இடம்' என்று ஒரு பலகையில் எழுதியிருந்தது. கண்ணபிரான் அவதரித்த கம்ஸனின் சிறை இங்கேதான் இருந்தது என்கிறார்கள். ஸிக்கந்தர் லோதி ஆக்கிரமித்தபோது, அந்தச் சிறையை இடித்துவிட்டானும். இப்போது இந்த முஸ்லிம் பள்ளிவாசலின் பின்புறம் ஒரு கோயில் உருவாகிக்கொண்டிருந்தது.

இருள் சூழ்ந்து வந்தது. குளிர் காற்று வீசியது. குன்றைப் பனி மூட ஆரம்பித்தது. நாங்கள் இருப்பிடம் போய்ச் சேர ஆயத்தமானோம். கதிரவனும் குளிருக்குப் பயந்து மறைந்துவிட்டான்.

சுருக்கமான மதிப்புரை

ஜான் பாரிமூர் என்ற பிரபல ஸினிமா நடிகரிடம் ஒரு ஸினிமா கதாசிரியர் வந்து தம்முடைய புதிய கதை ஒன்றைக் கொடுத்துப் படிக்கும்படி சொல்லிவிட்டுப் போனார்.

பிரதியைக் கையில் எடுத்து வெகு சிரமப்பட்டுச் சில பக்கங்களை நடிகர் புரட்டினார். பிறகு அப்படியே அதைக் கீழே போட்டுவிட்டுச் சுகமாய்த் தூங்கினார்.

பல மணி நேரம் கழித்துக் கதாசிரியர் திரும்பி வந்தார். "கதை எப்படி இருக்கிறது?" என்று நடிகரைக் கேட்டார்.

"அதில் ஒரு குணம் இருக்கிறது. அதை ஒரு தடவை கீழே வைத்தால், பிறகு கையில் எடுக்கவே மனம் வராது" என்றார் நடிகர்.

—'ஃபேமஸ் ஃபேபிள்ஸ்'

பிரளயம் வரும்போது

கிறிஸ்துவரின் நியாயத் தீர்ப்பு நாள் (பிரளயம்) வரும்போது, உலகம் என்ன ஆகும் என்பதைப்பற்றி முச்சந்திச் சமயப் பிரசங்கி ஒருவர் பிரமாதமாய் வர்ணித்தார்: "மின்னல் மின்னும். இடி இடிக்கும். புயல் அடிக்கும். மழை கொட்டும். ஆறெல்லாம் வெள்ளக் காடாகும். வானத்திலிருந்து தீ நாக்குகள் மண்ணை நோக்கி நீளும். புயல்! வெள்ளம்! பூகம்பம்!..."

கூட்டத்தினர் ஆழ்ந்து கவலையோடு சிந்திக்கத் தொடங்கினார்கள். அவர்களுக்கு நடுவிலே அம்மாவின் அருகில் நின்ற ஒரு சிறுமி ஆவலுடன், "அம்மா, அம்மா, அன்றைக்குப் பள்ளிக்கூடத்தில் லீவு விட்டுவிடுவார்கள் இல்லையா?" என்று கேட்டாள்.

—'ஹெட் லைன்ஸ்'

செல்வனாக இரண்டு வழி

ஒருவன் செல்வன் ஆவதற்கு இரண்டு வழிகள் உண்டு; ஒன்று, தான் விரும்புவதையெல்லாம் அடைவது; மற்றொன்று, உள்ளதைக் கொண்டு திருப்தி அடைவது.

—'ஸைடு - ட்ராக்'

வேதியனின் காளை

புத்த பகவான் முந்திய பிறவி ஒன்றில் ஒரு சேங்கன்ருக ராஜக்கிருக மன்னனுடைய அரண்மனையில் பிறந்தார். இந்த இளங்கன்றை ஒரு பிராம்மணனுக்குத் தானமாக வழங்கினுர்கள். அவன் அதைக் கொழுகொழுவென்று வளர்த்துப் போஷித்து வந்தான். அது தன் காளை என்பதில் அவனுக்கு ஒரு பெருமை. பாவம், கிடைக்கும் வரும்படி மிகவும் சொற்பமாக இருந்தாலும் அதில் பெரும் பகுதியை அவன் அந்த இளங்காளைக்காகச் செலவிட்டு வந்தான். அந்தக் காளையின் போக்கே விநோதமாக இருந்தது. ஒரு நாள் அது அந்தப் பிராம்மணனைப் பார்த்து, ''இன்று சந்தைக்குப் போய், 'தன்னந்தனியாகத் துணையில்லாமல் என் காளை ஐம்பது நெல் வண்டிகளைப் பாரத்தோடு இழுத்துச் செல்லும், என்று சொல்லுங்கள். அப்படி யாராவது, 'எங்கே காட்டுங்கள், பார்க்கலாம்' என்ருல், 'சரி' என்று இந்தச் சவாலை ஏற்றுக்கொள்ளுங்கள்'' என்றது.

பிராம்மணனுக்கு ஒரே மகிழ்ச்சி. அவன் உடனே சந்தைக்குப்போய்க் காளை சொன்னது போலவே எல்லாரிடமும் விஷயத்தைத் தெரிவித்தான். அங்கிருந்தவர்கள், ''சரி; செய்து காட்டினுல் அவ்வளவு வண்டி நெல்லையும் உங்களுக்குக் கொடுக்கிருேம். ஆனுல் உங்கள் காளை இழுக்காவிட்டால் ஒரு நெல் மணிகூடக் கிட்டாது'' என்ருர்கள். பிராம்மணன், ''சரி'' என்று அவர்களுடைய சவாலை ஏற்றுக்கொண்டான்.

மறு நாள் சந்தையில் காளை தனியாக ஐம்பது வண்டி நெல் இழுக்கப் போவதை வேடிக்கை பார்க்க ஆயிரக்கணக்கான பேர் கூடியிருந்தார்கள். தெருவில் ஐம்பது வண்டிகளும் நெல் மூட்டையுடன் தயாராக இருந்தன.

பிராம்மணனுடைய காளையை வண்டியில் பூட்டினுர்கள். குறித்த நேரம் நெருங்கியது. மக்கள் மூச்சு விடாமல் அது புறப்படும்

நல்ல வார்த்தையினுல், சொல்கிறவருக்கும் லாபம்; கேட்பவருக்கும் உற்சாகம்.

சுவாமி ஸ்ரீதானந்தா

மூலம்: கஹானியா (ஆங்கிலம்: மே '58), 32, பலாத் தோப்பு, சென்னை-4.



காட்சியைப் பார்க்க ஆவலோடு காத்திருந்தார்கள். பிராம்மணன் கையில் ஒரு சவுக்குடன் மிகவும் பெருமையும் கர்வமும் தோன்ற அதனிடம், ''ஏ கழுதை! இது வரை என் தீனியைத் தின்று என்னை ஓட்டாண்டியாக்கினாயே! தின்ற உப்புக்குத் துரோகம் செய்யாதிருக்கும் பிராணியாக இருந்தால் இதோ இந்த வண்டிகளை இழுத்து எனக்கு இவ்வளவு நெல்லும் வெகுமதியாகக் கிட்டும்படி செய், பார்க்கலாம்'' என்றான்.

இப்படி அவன் தன்னை இதம் பதம் பாராமல் பேசியதைக் கேட்டதும், அந்தக் காளை மனம் சோர்ந்துவிட்டது; அவன் இவ்வளவு ஈவிரக்கமின்றிப் பேசியது அதற்கு தாளவில்லை; உடலே விறைத்துவிட்டது போல் அப்படியே நின்றிருந்தது. என்ன தான் அது முயன்று பார்த்தும் அதனால் நகர முடியவில்லை. பிராம்மணனுக்குக் கோபம் கோபமாக வந்தது. ஆனால் காளை மனந்தளர்ந்து கிடக்கும்போது அவன் கோபித்துக்கொண்டு என்ன பயன்? கடைசியில் பிராம்மணன் தலையிறக்கத்தோடு மனம் முறிந்து போய் அங்கிருந்து புறப்பட்டான்.

மறுநாள் காளை அவனிடம், ''இங்கிதம் வேண்டும், எஜமான்! இனிமையாகப் பேசப் பழகவேண்டும். யாராக இருந்தாலும் அவமதிப்பாக நடத்துவது மனுஷத்தனமில்லை. தயை செய்து இனி அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். நேற்று நீங்கள் நடந்துகொண்ட விதம் நியாயம் இல்லை; அதனால்தான் சலித்துச் சோர்ந்துவிட்டேன். ஆகவே, என்னதான் முயன்றும் என்னால் உங்களுக்கு ஒத்தாசை செய்ய முடியவில்லை. ஆனால் இந்தத் தடவை, உங்களுக்கு ஒத்தாசையாக இருக்கிறேன்; 500 வண்டி நெல் இழுத்துக் காட்டுகிறேன், பாருங்கள்'' என்றது.

அடுத்த தடவை சந்தையில் அந்தக் காளை 500 வண்டிகளை இழுக்க ஏற்பாடாயிற்று. பிராம்மணன் அதைத் தட்டிக் கொடுத்து அன்போடு, ''மகனே, இதோ எத்தனை ஜனங்கள் கூடியிருக்கிறார்கள், பார்! இதோ உன்னுடைய அபார வலிமையைப் பார்க்க வேண்டுமென்று காத்திருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி உன் திறமையைக் காட்டு, பார்க்கலாம்; எங்கே இந்த வண்டிகளை இழு! ஆண்டவன் உனக்கு ஊக்க மூட்டி உந்தட்டும்'' என்றான்.

உடனே காளை கிளம்பியது; வண்டிகளும் நகரலாயின. பிராம்மணனுக்கு ஏராளமாக வெகுமதி கிடைத்தது. அப்போதுதான் அவனுக்கு, 'நல்ல குணமே முக்கியம். அது இல்லாமல் வேதம் பயின்றும் பயன் இல்லை' என்ற உண்மை புலனாயிற்று.

நட்பு முடிந்தது!

ஊரில் நடந்த காதல் மணத்தைப்பற்றி உள்ளூர்ப் பத்திரிகை ஒன்று பிரசுரித்த செய்தி: ''...அப்புறம் இந்த ஜோடிக்குச் சென்ற வாரம் திருமணம் நடந்தது. சிறுவயசில் பள்ளிக்கூடத்திலே தொடங்கிய நட்புக் கடைசியாக இப்படி முடிந்தது.''

—'ஃபார்மர்ஸ் வீக்லி'



'பிராவ்தா' முதலிய ஆயிரக் கணக்கான பத்திரிகைகள் ஸோவியத் ருஷியாவில் தோன்றிய விவரம்:

ஸோவியத் பத்திரிகைகள்

எப். குஸ்னெட்சோவ்

"உங்கள் நாட்டில் திடுக்கிடும் சம்பவங்கள் நடைபெறுவதில்லையா? கொலை, கொள்ளை, விபத்து இவை எவையுமே நடப்பதில்லையா? உங்கள் பத்திரிகைகளில் இவை சம்பந்தமான செய்திகளைக் காணவில்லையே!'' என்று ஆச்சரியத்துடன் எங்களைக் கேட்கிறார்கள், வெளி நாடுகளிலிருந்து ஸோவியத் யூனியனுக்கு வரும் சில விருந்தினர்கள். முக்கியமாக மேல் நாடுகளிலிருந்து வருவோர், வெளித்தோற்றத்தில்கூட ஸோவியத் பத்திரிகைகள் பிற நாடுகளில் வெளியாகும் பல பத்திரிகைகளிலிருந்து பெரிதும் மாறுபட்டிருப்பதைப் பார்க்கிறார்கள்!

உண்மைதான், ஸோவியத் பத்திரிகைகள் பார்ப்பதற்குப் படாடோபமாக இல்லை; ஆவேசமான கொட்டை எழுத்துத் தலைப்புக்களை அவற்றில் காணமுடியாது. அழகிகளின் படங்களுக்கோ, பல வகையான விபத்துக்களையும் தனிப்பட்டவரின் சோகங்களையும்பற்றிய செய்திகளுக்கோ அவை முக்கிய இடம் அளிப்பதில்லை. திடுக்கிடும் முதல் பக்கச் செய்திகளை அவற்றில் காண முடியாது.

ருஷிய நாட்டின் உழைப்பாளி மக்கள் தங்களுடைய விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருந்த காலத்தில் பிறந்தவை ஸோவியத் பத்திரிகைகள்; முதல் முதலாகத் தோன்றிய ருஷியத் தொழிலாளர் தினசரிக்கு பிராவ்தா (உண்மை) என்று பெயரிட்டார்கள். அதன் முதல் இதழ் 1912 மே 5-ஆம் தேதி வெளிவந்தது. ஸோவியத் மக்கள் இந்த நாளைப் பத்திரிகைத் தினமாகக் கொண்டாடுகிறார்கள். செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர்கள், இது போன்ற ஒரு பத்திரிகையைத் துவக்கவேண்டும் என்று அன்று இதற்கான நிதியையும் திரட்டிக் கொடுத்தார்கள். ருஷிய நாட்டின் உழைப்பாளி மக்கள் அனைவருமே பிராவ்தா பத்திரிகையைத் தொடங்கும் வேலையில் பங்கெடுத்துக்கொண்டார்கள்.

''பிராவ்தா பத்திரிகை, வரப்போகும் வசந்தகாலத்தின் தூதன். இது ருஷியா எங்கும் எண்ணற்ற தொழிலாளர் பத்திரிகைகள் தோன்றப் போகின்றன என்பதன் அறிகுறியாகும்'' என்று அப்போது லெனின் கூறினார். இந்த வசந்த காலம் 1917 அக்டோபரில் ஆரம்பமாயிற்று. அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சியை நடத்தி வெற்றி கண்ட ருஷிய உழைப்பாளி மக்கள் பேச்சுச் சுதந்தரம் பெற்றார்கள். எல்லா அச்சுக்கூடங்களையும்

மூலம்: ஸோவியத் நாடு (தமிழ்: 14-5-'58), புது டில்லி.

பத்திரிகைகள் அச்சிடுவதற்கான காகிதத்தையும் உழைப்பாளி மக்களின் கையில் ஒப்படைத்தார்கள். எழுத்தறியாமை விரைவில் ஒழிந்தது. ஸோஷலிஸ நாட்டில் மிகக் குறுகிய காலத்தில் மக்களின் பத்திரிகைகள் நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் விரிவான ரீதியில் தோன்றிவிட்டன. கம்யூனிஸ சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்கான காரியத்தில் இவை ஸோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் சக்தி வாய்ந்த ஆயுதங்களாக உதவி வருகின்றன. பிராவ்தா பத்திரிகைமட்டும் இன்று 55 லட்சம் பிரதிகள்வரையில் அச்சாகி விநியோகமாகி வருகிறது. அன்று ஜார் கால ருஷியாவில் வெளியான எல்லாப் பத்திரிகைகளின் மொத்த விநியோகத்தையும் காட்டிலும் இது இரண்டு மடங்கு அதிகம்.

பிராவ்தாவைத் தவிர இன்னும் எத்தனையோ பத்திரிகைகள் ஸோவியத் ருஷியாவில் வெளிவருகின்றன. சுமார் 7,500 பத்திரிகைகள் இன்று இருக்கின்றன. இவை 5 கோடியே 35 லட்சம் பிரதிகளுக்குமேல் அச்சாகி விநியோகமாகின்றன. பொதுப் பத்திரிகைகள், தொழில் சங்கப் பத்திரிகைகள், இளைஞர், குழந்தைகள், எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள் முதலியவர்களின் பத்திரிகைகள் போன்ற பல தரப்பட்ட பத்திரிகைகளும் பிரசுரமாகின்றன. எஞ்சினீர்களுக்கான பிரோமிஷ் லென்னே எகொனமி செஸ்கயா கஜெட்டா, மரத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் லெஸ்னயா பிரோமிஷ் லென்னேஸ்த், கட்டிடத் தொழிலாளர்களின் ஸ்திரோய்தெல்னயா கஜெட்டா போன்ற சுமார் 150 விசேஷப் பத்திரிகைகள் வெளிவருகின்றன.

ஒவ்வொரு குடியரசும் பிராந்தியமும் ஜில்லாவும் தனக்கென்று தனியே பத்திரிகைகளைப் பெற்றிருக்கிறது. இவற்றில் பல, அந்த அந்தப் பிரதேச மொழிகளில் பிரசுரமாகின்றன.

பெரிய தொழிற்சாலைகளும் கல்வி நிலையங்களும் பல கூட்டுப் பண்ணைகளும் அரசாங்கப் பண்ணைகளும் சொந்தத்தில் சிறிய அளவில் பத்திரிகைகளை அச்சிட்டு வெளியிடுகின்றன. அச்சுப் பத்திரிகைகள் இல்லாத நிலையங்கள் சுவரொட்டிப் பத்திரிகைகளை நடத்தி வருகின்றன. கையால் எழுதியோ, டைப் செய்தோ வெளியாகும் இந்தச் சுவரொட்டிப் பத்திரிகைகளும் மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதங்களாகவே விளங்குகின்றன.

ஸோவியத் சகாப்தத்தில் தோன்றியுள்ள 'ஸோவியத்' 'கல்கோஸ்' 'ஸ்பூத்னிக்' போன்ற புதுச் சொற்களை எல்லாரும் அறிவோம். 'ரப்கர்' என்னும் சொல்லும் இவற்றைப் போலவே மக்களின் வழக்கில் நிலையான இடம் பெற்றுவிட்ட ஒரு புதிய சொல். 'ரபோச்சி கரஸ்பாண்டெண்ட்' (தொழிலாளர்களின் நிருபர்) என்பதன் சுருக்கமே இது. ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் கூட்டுப்பண்ணைகளிலும் அரசாங்கப் பண்ணைகளிலும் ஒவ்வொரு ஸோவியத் பத்திரிகைக்கும் நூற்றுக்கணக்கான நிருபர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாரும் சுயேச்சையானவர்கள். தாங்கள் அவசியம் என்று கருதும் எல்லா விஷயங்களையும்பற்றிக் கடிதங்களும் குறிப்புகளும் செய்தி அறிவிப்புகளும் எழுதிப் பத்திரிகைகளுக்கு இவர்கள் அனுப்புகிறார்கள். பாராட்டத் தக்க நல்ல விஷயங்களையும் கண்டிக்கத் தக்க தீய அம்சங்களையும் அப்போதப்போது எழுதியனுப்புகிறார்கள்.

எந்த ஸோவியத் பத்திரிகையைப் பிரித்தாலும் அதில் வெளிவந்துள்ள கட்டுரைகள், செய்திகள், குறிப்புகள் ஆகியவற்றில் ஒரு பாதியைப் பத்திரிகை எழுத்தாளர்கள் எழுதியிருப்பார்கள். மறு பாதியைத் தொழிலாளர்கள், கூட்டுப்பண்ணை விவசாயிகள், ஆசிரியர்கள், எஞ்சினீர்கள் போன்ற சாதாரண மக்களே எழுதியிருப்பதைப் பார்க்கலாம்.

முக்கியமான ஒரு பிரச்னை குறித்துத் தேச மக்களிடையே விவாதம்

நடைபெறும்போது, பத்திரிகை ஆசிரியர்களுக்கு நாடெங்குமிருந்து எண்ணிலடங்காத கடிதங்கள் வந்து குவிந்து விடுகின்றன. யந்திரத் தொழில்கள், நிர்மாண வேலைகள் இவற்றின் நிர்வாகத்தைத் திருத்தியமைப்பதுபற்றி 1957-இல் தேச மெங்கும் விவாதம் நடைபெற்றபோது, 68 ஆயிரத்துக்கு அதிகமானவர்கள் தங்கள் ஆலோசனைகளையும் குறிப்புகளையும் திருத்தங்களையும் பத்திரிகைகளுக்கு எழுதியனுப்பினார்கள். கூட்டுப்பண்ணை அமைப்பை மேலும் வளர்ந்தோங்கச் செய்வது பற்றியும் யந்திர, டிராக்டர் நிலையங்களைத் திருத்தியமைப்பதுபற்றியும் 1958 மார்ச் மாதத்தில் விவாதம் நடைபெற்றபோது, ஸோவியத் பத்திரிகைகளுக்கு 1,26,000 கடிதங்களும் கட்டுரைகளும் வந்து குவிந்தன. இவற்றில் 1,02,000 கட்டுரைகளும் குறிப்புகளும் பத்திரிகைகளில் பிரசுரமாயின.

ஸோவியத் பத்திரிகைகளை யெல்லாம் தொழிலாளர்களும், விவசாயிகளும் அறிவுத்துறை ஊழியர்களுமான உழைப்பாளிகளே தயாரிக்கிறார்கள்; படிக்கிறார்கள். ஆகவே, ஸோவியத் பத்திரிகைகளின் பொருளும் இதற்கேற்றபடி அமைந்திருக்கிறது.

''ஆலையிலும் கிராமத்திலும் நடைபெறும் அன்றாட நிகழ்ச்சிகள் குறித்து ஸோவியத் பத்திரிகைகள் எழுத வேண்டும்'' என்று 1919-ஆம் ஆண்டிலேயே லெனின் வற்புறுத்தினார். ''மற்ற எந்த இடத்தைக் காட்டிலும் இந்த இடங்களில்தான் பண்டங்கள் படைப்பாகின்றன; இந்த இடங்களையே முக்கியமாக விளம்பரப்படுத்தியாகவேண்டும். இவையே மக்களின் கவனத்துக்கும் விமரிசனத்துக்கும் உரிய முக்கியமான இடங்கள். ....அரசியல் வாய்வீச்சு வேண்டியதில்லை; சர்வ சாதாரண வாழ்க்கை உண்மைகள் குறித்தே - கம்யூனிஸ ஆக்க வேலைகளின்போது வாழ்க்கையிலே சோதித்த உண்மைகள் குறித்தே - முக்கியமாய்க் கவனம் செலுத்த வேண்டும்'' என்றார் அவர்.

புதிய சமுதாயத்தை உருவாக்கும் உழைப்பாளி மக்களையும் அவர்கள் வேலைகளையும் வாழ்க்கையையும்பற்றிய கதைகளுக்கும் விளக்கக் குறிப்புகளுக்கும் கட்டுரைகளுக்குமே ஸோவியத் பத்திரிகைகள் தலைமை இடம் அளிக்கின்றன.

வாசகர்கள் எழுதும் விமரிசனங்களில் எதையுமே ஸோவியத் பத்திரிகைகள் உதாசீனம் செய்வதில்லை. பத்திரிகை ஆசிரியர்கள் ஒவ்வொரு விமரிசனக் குறிப்புப் பற்றியும் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்கிறார்கள். இந்த நடவடிக்கையை வாசகர்களுக்கும் தெரிவிக்கிறார்கள். 'வாசகர்களுடைய குறிப்புக்களின் அடிப்படையிலே' என்றொரு தனிப் பகுதியை அவர்கள் இதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள்.

கம்யூனிஸ சமுதாயத்தை அமைத்துவரும் சாமான்ய ஸோவியத் மக்களின் அன்றாட வாழ்க்கையும், அவர்களுடைய வாழ்க்கை நிலைமைகளும், ஓய்வும், பொழுதுபோக்கு வசதிகளும், ஆனந்தமும், துன்ப துயரங்களும், அவர்களுக்கு இடைஞ்சலான விஷயங்களை எதிர்த்து நடைபெறும் போராட்டமுமே ஸோவியத் பத்திரிகைகள் கவனம் செலுத்தும் பிரதான விஷயங்கள். சந்தர்ப்பவாதிகளையும் கசடர்களையும் சோம்பேறிகளையும் அவை அம்பலம் செய்கின்றன.

எப்போதாவது அவை பரபரப்பூட்டும் செய்திகளை வெளியிடுவதுண்டு. ஆனால் இவற்றின் தரமே வேறு. 'ஸ்பூத்னிக்'பற்றிய செய்தி திடுக்கிடும் செய்திதான். அணுசக்தியால் இயங்கிப் பனி உடைக்கும் கப்பல் பூர்த்தியாகிக் கடலுக்குச் சென்றதுகூடப் பரபரப்பூட்டும் செய்திதான். 'டியூ-104' விமானமும் ஓர் அதிசயச் செய்தியே. பிற நாடுகளுக்காகக் காத்திராமல் தானாகவே ஸோவியத் யூனியன் அணு, நீர்வாயு ஆயுத சோதனைகளை நிறுத்தியதும் வியக்கத்தக்க செய்திதான். திடுக்கிடச் செய்யும் இத்தகைய செய்திகளை வெளியிட ஸோவியத் பத்திரிகைகள் என்றுமே தயங்கியதில்லை.

குடி தண்ணீரும் இல்லாமல் கஷ்டப் படுகிறார்களாம் இந்தப் பழங்குடிகள்!

வறுமையில் வாழும் பணியர்

பிலோ இருதயநாத்

உதகையிலிருந்து சுமார் நாற்பது மைல் கடந்து கூடலூருக்குச் சென்று, அங்கிருந்து மைசூர் மார்க்கமாகச் சுமார் ஐந்து மைல் நல்ல ரஸ்தாவிலும் பிறகு குறுக்கே காட்டின் வழியாக இரண்டு மூன்று மைலும் நடந்தால், பணியர்களின் குடிசைகளைக் காணலாம்.



சிறுவரும் சிறுமிகளும்

புத்தூர், தொரப்பள்ளி, பிளாக் கண்டி, கொங்கம் வயல், மங்கூயி, கூடலூர் வயல், நந்தட்டி, ஏர நாடு, குறும்பர நாடு, கோட்டயம் தாலூகா, முதநாடு, சேரங்காடு, சம்பால காடு முதலிய இடங்களில் சிதறுண்ட கூட்டங்களாக இவர்கள் வாழ்ந்தாலும் வயநாடு, கூடலூர்த் தாலூகாவில் மட்டும் 1931-ஆம் ஆண்டு ஜனத்தொகைக் கணக்குப்படி சுமார் 32,350 பணியர்கள் இருக்கிறார்கள். இவர்களைக் காணச் செல்ல வேண்டுமானால், மார்கழி, தை, மாசி, பங்குனி மாதங்களே ஏற்றவை.

இவர்களுடைய குடிசைகள் கோரைப் புல் மேல் கூரையும், மூங்கில் சுவர்களும், வெளியிலே நீண்ட களிமண் திண்ணையும் உடையவை. பல பணியர்கள் சேர்ந்து இவற்றைக் கட்டிக் கொள்ளுகிறார்கள்.

மண் பாண்டங்களை விட மூங்கில் சாமான்களையே இவர்கள் அதிகமாக உபயோகிக்கிறார்கள். ஒரே இடத்தில் நிலைத்து வாழ்கிறார்கள். தங்கள் தனிக் குடிசையைச் 'சாலை' என்றும், கூட்டமாக இருக்கும் குடிசைகளைப் 'பாடி' என்றும் கூறுகிறார்கள்.

ஆண்கள் மிகவும் கறுப்பு. சுருண்டு நீண்ட தலைமயிர். உதடு பருத்து, நல்ல தேகக் கட்டுடன் கையில் வெள்ளிக் காப்பு அணிந்திருக்கிறார்கள். சரியான உயரம். சாதாரண நாளில் வேட்டி கட்டி, மேலே ஒரு துண்டு அணிகிறார்கள். சிலர் காலிலும் காப்புகள் அணிவதுண்டு. கோடரி, மண் வெட்டி, மூங்கில் குழாய், கடப்பாரை, அரிவாள் முதலியவை தான் இவர்களுடைய முக்கியமான ஆயுதங்கள்.

பெண்கள் நம் வீட்டுப் பெண்களைப் போலவே உயரமாக இருக்கிறார்கள். தேகத்தில் பச்சை குத்திக் கொள்கிறார்கள். இடுப்பில் மட்டும் சிறிய துண்டைக் கட்டிக் கொள்கிறார்கள். பரட்டைத் தலையும் கறுத்தமேனியும் தட்டையான மூக்கும் உடையவர்கள். வெளியில் சென்றால், தோளின் மேலே ஒரு துண்டைப் போர்த்துக் கொள்கிறார்கள். சுமார் பத்துப் பன்னிரண்டு வயசுப் பெண்களுக்குக் காதில் ஓர் ஓலையைச் சுருட்டிப் போடுகிறார்கள். காதின் துளை பெரிதாகும்போது, மற்றோர் ஓலையைச் சுற்றிக் காதில் அணிவார்கள். இப்படியே மேலும் மேலும்

காப்பிரைட்: சுதேசமித்திரன் (தமிழ்), சென்னை.



பணிச்சி

அணிந்துகொண்டே இருப்பார்கள். கடைசியில் மூன்று நான்கு அங்குலம் சுற்றளவு காதின் துவாரம் பெரிதானதும், அதற்கு அளவாகக் கட்டையை வட்டமாக வெட்டிக் காதில் அணிந்து கொள்வதுமுண்டு; ஓலையை அந்த அளவுக்கே சுற்றிப் போடுவதுமுண்டு. சிலர் காதில் இருக்கும் பெரிய ஓலையிலோ, கட்டையிலோ, சில மரத்தின் பாலைத் தடவி, அதில் சிவப்புக் குண்டு மணியை ஒட்ட வைத்துக்கொள்வார்கள். அது பார்ப்பதற்கு அழகாகத்தான் இருக்கிறது. பெண்களில் சிலர் மட்டும், ஒன்றிரண்டு பித்தளை அல்லது வெள்ளி வளையங்களைக் கையில் அணிந்திருக்கிறார்கள். சாதாரணமாகப் பெண்களின் கழுத்தில் நூல் சரடுகூட இல்லை. கழுத்தில் எதையும் அணியும் பழக்கம் இல்லையாம். இடுப்பு வரையில் ஆடை அணிகிறார்கள். சிலர் பித்தளை மோதிரம் அணிந்திருக்கிறார்கள்.

ஆண்களும் சரி, பெண்களும் சரி, தலைமயிரைக் கொண்டை போடுவதே கிடையாது. தங்கள் தலையில் எந்த விதமான பூவையும் வைப்பதில்லை. சாதாரணமாய் நான் பழகிய ஆதிவாசிகள் எல்லாருமே காட்டில் இருக்கும் எந்தப் பூவையும் அணிவதே இல்லை. சிலர் அணிந்தாலும் அதிகமாக அணிவதில்லை. இதற்குக் காரணம் என்னவென்று கேட்டதற்கு, ''எங்கள் குல தெய்வத்துக்கு ஆகாது'' என்றோ, ''எங்கள் குடும்பத்தில் வழக்கமில்லை'' என்றோ கூறுகிறார்கள். இப்படி அவர்கள் கூறினாலும், சரியான காரணம் இவை அல்ல. காட்டில் இருக்கும் தேனீக்கள் இரண்டு மூன்று கொட்டினாலும் விலங்குகளே இறந்து விடும் போது, மக்களின் கதி என்னவாகும்? தேனீக்கள் தேனைத் தேடிக் காட்டில் கோடிக்கணக்கில் இங்கு மங்கும் சஞ்சரிப்பதைக் கண்டேன். எனவே, பெண்கள் தலையில் பூ வைத்தால், அதை நாடித் திடீரென்று ஒரு தேனீ முதலில் பூவுக்காகக் கொண்டையில் வந்து உட்காரும். அதைத் தொடர்ந்து எல்லாத் தேனீக்களும் வரும். இப்படி வந்து பெண்களின் தேகத்தையே மூடிவிடும். அவை கொட்டினால், உடனே வீக்கம் உண்டாகி மக்கள் இறந்துவிடுவார்கள். இந்த மாதிரி காரணத்தைக் கொண்டே, ''வெள்ளைச் சட்டை அணிந்து கொண்டு காட்டில் வருவது அவ்வளவு உசிதமல்ல'' என்று காட்டு இலாகா உத்தியோகஸ்தர் ஒருவர் எனக்குக் கூறினர். வெள்ளைத் துணியைக் கண்டதும், 'என்னவோ வெள்ளையாக ஓடுகிறதே' என்று நினைத்துச் சில மிருகங்கள் துரத்துவது வழக்கமாம்.

இவர்கள் தங்கள் குழந்தைகளை இடுப்பிலும் தோளிலும் தூக்கிச் செல்லுகிறார்கள். குழந்தை பிறந்து சுமார் ஆறுவது அல்லது பத்தாவது மாதத்தில் பெயர் வைப்பதுண்டு. குழந்தை பிறந்ததும் தாயின் கந்தைத் துணியிலேயே படுக்க வைப்பார்கள். குழந்தைகளை ஏணையிலோ தொட்டிலிலோ தூங்கவைக்கும் வழக்கம் இல்லை. இதில் ஆண் குழந்தைக்கும் பெண் குழந்தைக்கும் யாதொரு வித்தியாசமும் இல்லை. சந்ததி இல்லாவிட்டால், தத்துப் பிள்ளை எடுத்து, வளர்ப்பதுண்டு. இவர்களுக்கு அரிவாள் தவிர எந்தவிதமான பொருளோ சொத்தோ கிடையாது. ஆனால், இவ்வளவு வறுமையில் இருந்தாலும், ருதுவான பெண்களை வெளியில்

அனுப்புவதில்லை. பெண் ருதுவானால் தனிக் குடிசை கட்டி, அதில் ஏழு நாள் தங்கவைத்து, ஏழாம் நாள் குளிக்கச் செய்து, வசதி இருந்தால் அன்றே அவளுக்கு நவதானியங்களைச் சுற்றி, சடங்கு செய்து வீட்டுக்குள் அழைத்துக் கொள்ளுகிறார்கள். வசதி இல்லாவிட்டால், அடுத்த ஆண்டில் இந்தச் சடங்கைச் செய்து முடிப்பதுண்டு. ஆனால் அதுவரையில் அவள் தனிக் குடிசையில் தங்குவதில்லை. உபாயமாகச் சில சடங்குகள் செய்து, குடிசையைத் தீயிட்டுச் சாம்பலாக்கி விடுவார்கள்.

நல்ல நாளிலும், பௌர்ணமி இரவிலும் ஆண்களும் பெண்களும் கூடி நடனம் ஆடுவது உண்டு. நடனத்தைப் பேய் பிடித்தவர் ஆடுவதைப்போல் ஆடுகிறார்கள். ஆடும்போது 'ஐ-ஓ-ஓ-டூ-டூ' என்று கூக்குரல் போடுகிறார்கள். அதன் பொருள் ஒன்றும் விளங்கவில்லை, சில சமயம் பெண்கள் தனிமையில் நடனம் ஆடும்போது ஆண்கள் 'துடி' அடிப்பதும், 'சின' ஊதுவதும் உண்டு. துடி என்பது ஒரு வித மேளம்; சின என்பது ஒருவித ஓட ஊதுகுழல். ஆண்கள் வேகமாகச் சினத்தை ஊத ஊதப் பெண்கள் வேகமாகச் சுற்றிச் சுற்றிக் கைகளை நீட்டி நீட்டி நடனம் ஆடுகிறார்கள். இவர்களுடைய பழமையான வழக்கப்படி இரவில் விளக்கே ஏற்றுவதில்லை. நெருப்பு வெளிச்சத்தில்தான் இரவில் வேலை செய்கிறார்கள். இரவும் பகலும் பெரிய பெரிய கட்டைகள் எரிந்துகொண்டே இருக்கின்றன.

பணியர்களுக்குள் எந்த வேலை செய்கிறவர்களுக் கிடையிலும் பெண் கொடுக்கல் வாங்கல் உண்டு. பெண்கள் ருதுவான பின்புதான் மணம். பெண்களின் கூந்த லழகையும் காதில் வளையம் பெரியதாக இருக்கிறதா என்பதையும் பார்த்துத்தான் ஆண்கள் மணம் செய்துகொள்வார்கள். ஆனால், இவர்களுக்குள் குறிப்பிட்ட மண வயசுமில்லை; முகூர்த்த நாளுமில்லை. பிரியப்பட்ட நாளில் மணம் நடத்துகிறார்கள். மணத்



பணியன்

துக்கு முன், பெண்ணை ஆண் பார்ப்பதில்லை. பந்தற்கால் ஒன்றும் இல்லை. எந்தவிதமான சடங்கும் செய்வதில்லை. பணிச்சிகளை மற்றவர்கள் மணக்க இவர்கள் சம்மதிக்க மாட்டார்கள். மணம் என்றால், முதலில் ஒரு முறை மட்டும் பஞ்சாயத்துப் பேசிப் பெண்ணை அழைத்துக்கொண்டு போகிறார்கள். மறுபடியும் மணம் என்ற பெயரே கிடையாது. ஆனால், இரண்டு மூன்று மனைவிகளுடன் ஆண்கள் வாழலாம். பணிச்சியர்களுக்குள் விதவை இல்லை. கிழவிகளும் சுமங்கலிகள் தான். மணத்துக்கு முன் கர்ப்பவதியாக இருந்தால், பெரியவர்கள் பேசி, குழந்தை பிறப்பதற்கு முன் அவளைச் சம்பந்தப்பட்டவனுக்கே மணம் செய்து வைக்கிறார்கள். மணம் வீட்டில் நடைபெறும். அன்று பூசனிக்காய், வாழைக்காய் சேர்த்துச் சமையல் செய்து, ஊர் விருந்து நடத்துவார்கள். சில பணியர் தங்கள் குடும்பத்தில் சிறு வயசு முதல் ஒரு பணியப் பையனை வளர்த்து, வீட்டுப் பெண்ணை அவனுக்குக் கன்னிகாதானமாகக் கொடுத்து, வீட்டிலேயே வைத்துக் கொள்வதும் உண்டு.

இவர்கள் இனத்தில் பால்யவிவாகம் இல்லாவிட்டாலும், காதல் மணம் உண்டு. காதல் மணத்தையும் பெரியவர் கூடிப் பேசியே முடிப்பார்கள். ஆனால், சாதாரண மணத்தின்மூலம் பெண்ணை எடுப்ப



புல் குடிசை

தாக இருந்தால், மாமனருக்கு ரூபாய் ஐந்தோ பத்தோ மாப்பிள்ளை கொடுக்க வேண்டும். பெரியவர்களுக்குத் தெரியாமல், காதல் கொண்டு, குழந்தை பிறந்தால், பஞ்சாயத்து மூலம் அபராதம் இருவருக்கும் விதித்துப் பிறகு அவர்களுக்கே மணம் நடத்தி வைப்பார்கள். எந்த மணமாக இருந்தாலும் சம்பிரதாயப்படி தான் நடைபெறும். மணமான பெண்களைக் காதலித்து மணம் புரிந்தால், அதற்கு அபராதம் விதிப்பதுண்டு. ஒருவனே இரண்டு சகோதரிகளை மணக்கலாம். காதல் மணம் மட்டும் இரவில் நடைபெறும். அதைப் பகலில் செய்வதில்லை. விடிவதற்குள் அதை முடித்துவிடுவார்கள்.

மணத்துக்கென்று விசேஷ ஆடை ஆபரணங்கள் வாங்குவதில்லை. எப்பொழுதும் இருக்கும் ஆடையுடனேயே மணம் நடைபெறும்.

மணத்துக்கென்று நான்கு கால் நட்டுப் பந்தல் போடுவதுண்டு. மணப் பெண்ணை விடியற்காலையில் சேவல் கூவுவதற்குமுன், பந்தலுக்கு அழைத்து வருவார்கள். அழைத்து வரும்போது எந்த விதமான சடங்கும் கிடையாது. மாப்பிள்ளை மட்டும், மாமனர் கையில் சக்திக்குத் தகுந்தாற்போல் கொஞ்சம் பணம், எல்லாருக்கும் தெரியும்படி கொடுக்கவேண்டும்.

மணத்தில் தாலி கட்டுவதே கிடையாது. 'ஆணுக்குத் துணை ஒரு பெண்ணை அழைத்து வருகிறன்' என்பதே இவர்களுடைய கொள்கை. மணத்தில் எந்த விதமான பலியும் குலதெய்வத்துக்குக் கிடையாது. ஊர்த் தலைவனின் எதிரில் மாப்பிள்ளை, 'இந்தப் பெண்ணை நான் மணக்கிறேன்' அல்லது, 'இவளை நான் அழைத்துப் போகிறேன்' என்று சொல்லவேண்டும்.

விதவைகள் பிரியப்பட்டால், தங்களுக்குப் பிரியமான வாலிபனை ஒரு தடையும் இல்லாமல் மறுமணம் புரியலாம். இந்த மணச் சடங்கில் யாதொரு வித்தியாசமும் இல்லை. ஆனால், விதவைகளுக்குத் திருமணம் இரவில்தான் நடைபெறும். விதவைகளும் சரி, சுமங்கலிகளும் சரி நெற்றியில் போட்டு வைப்பதில்லை.

தம்பதிகளுக்குள் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டால், பஞ்சாயத்து மூலம், சமாதானம் செய்து வைப்பார்கள். அது முடியாவிட்டால், ''இருவரும் தனியாகப் போங்கள்'' என்று சொல்லுவார்கள். ''இதற்கு ஏதாவது சட்டம் உண்டா?'' என்று நான் கேட்டதற்கு, அவர்கள் சிரித்தார்கள். ''பிரியப்படாத பொருளை வேண்டாமென்று சொல்வதற்குச் சட்டம் என்ன வேண்டி இருக்கிறது?'' என்றார்கள். கணவன் வேண்டாமென்று, பெண் தாயகம் செல்லும்போது, குழந்தைகளை அவளே அழைத்துச் செல்லவேண்டும். அவள் கொண்டுவந்த பொருள்களையும், அவளே தாயகம் கொண்டு போகலாம். பெற்றோர்களின் அநுமதி பெற்று, அவள் மறுமணம் செய்துகொள்ளலாம்.

இவர்களை அடிக்கடி குளிர் காய்ச்சல், கால்கை வீக்கம், வயிறு திடீரென்று வீங்குவது போன்ற வியாதிகள் பீடிக்கின்றன. இதற்குக் காரணம், இவர்களுக்கு நல்ல குடி தண்ணீர் கிடைக்காததுதான்.

வியாதி வந்தால் உடனே பச்சிலைகளையும் வேர்களையும் கொண்டு 'கியாழம்' செய்து குடிக்கிறார்கள். ஆஸ்பத்திரி அருகில் இருந்தால் அங்கும் போவது

உண்டு. நூற்றுக்கு 90 சதவீதம் கை மருந்துகளையே உபயோகிக்கிறார்கள். பெண்ககளும் பிரசவத்துக்கு வைத்தியசாலைக்குப் போவதில்லை. வயசான ஒவ்வொரு மங்கையும், கைதேர்ந்த மருத்துவச்சியே. மருத்துவப் பணியைப் பெண்கள் ருதுவானதும், கற்றுக்கொடுக்கிறார்கள். வைத்தியசாலை அருகில் இருந்தாலும், இவர்கள் வைத்தியசாலைக்குப் போவதற்கு மிகவும் பயப்படுகிறார்கள்.

பிரசவமாவதற்கு இரண்டு மூன்று நாளைக்கு முன், தனிக் குடிசைக்குப் போகிறார்கள். பிரசவக் குடிசையை இவர்கள் குடியிருக்கும், 'பாடி'க்குச் சிறிது தூரத்தில் கட்டுகிறார்கள். பிரசவமான பத்தாம் நாள் அல்லது பதினைந்தாம் நாள் குளித்துவிட்டுத் தம் குடிசைக்கு வருகிறார்கள். அதுவரையில், கணவன்தான் ஆகாரம் சமைத்தும் 'கியாழம்' தயார் செய்தும் கொண்டுபோய்க் குடிசைக்கு வெளியிலிருந்து கொடுக்க வேண்டும்.

உறவினர்கள் வந்தபின் மூன்றாம் நாள் இறந்தவர்களைப் புதைப்பார்கள். மூங்கிலால் பாடை கட்டிப் பிணத்தைப் படுக்கவைத்தாற்போல் தூக்கிச் செல்லுகிறார்கள். பெண்ணுக்கும் ஆணுக்கும் சவ அடக்கத்தில் வித்தியாசம் இல்லை.

கணவன் இறந்தால் மனைவிக்கும், மனைவி இறந்தால் கணவனுக்கும் மயானச் சடங்கோ சாவுச் சடங்கோ ஒன்றுமே கிடையாதாம். மரித்தவர்களின் ஆத்மா சாந்தி அடைய, அவர்களை நினைத்துச் சுமார் பத்துப் பேருக்கு அரிசிக் கஞ்சி காய்ச்சி விருந்து வைப்பார்கள். அன்றிரவு துக்கம் தெரியாமல் இருக்க நடனமாடிப் பாடுவார்கள். கணவன் இறந்தால் மனைவி மயானத்துக்குப் போகலாம். மனைவி இறந்தாலும் கணவனே மயானத்தில் பலருடன் சேர்ந்து அவளைப் புதைத்துவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் வரவேண்டும்.

இவர்களுக்கு நல்ல ஆகாரம் கிடைப்பதில்லை. அரிசிக் கஞ்சிதான் மூன்று வேளையும் உணவு. காட்டுக் கிழங்குகளை வேக வைத்துச் சில குடும்பத்தினர் சாப்பிடுகிறார்கள். வயல் நண்டுகளை இவர்கள் அதிகமாகச் சாப்பிடுகிறார்கள். இது தலைமயிர் நரைக்காமலும் விழாமலும் இருப்பதற்காகவாம். கிடைத்தால் கஞ்சா, சாராயம் குடிக்கப் பிரியப்படுகிறார்கள்.



மூங்கில் சாமான்

சாதாரணமாய்ப் பணியரில் பெரும்பாலோர் முதலாளிகளிடம் வேலை செய்து அவர்களிடம் வாரத்தில் ஆண்கள் மூன்று படி நெல்லும் பெண்கள் இரண்டு படி நெல்லும், (படி என்றால் சென்னைப் படியில் அரைப்படி) கூலியாகப் பெறுகிறார்கள். ஆனால் முன்காலத்தில், வில்லைக் கொண்டு வேட்டையாடிப் பிழைத்தார்களாம். இப்போது இவர்களில் சிலர் ராகி, சோளம், மிளகு, ஏலக்காய், வாழை போன்றவற்றைப் பயிர் செய்தும் பிழைக்கிறார்கள். சிலர் மூங்கில் காடுகளில் மூங்கில் வெட்டியும், யானை பிடித்தும் பிழைக்கிறார்கள். காடுகளில் வேட்டையாட வரும் தனவந்தர்களுக்கு உதவியாளாகவும் பணியாற்றி வருகிறார்கள். ஆனால் நூற்றுக்குத் தொண்ணூறு சதவீதம் கூலிகளாகவே வேலை செய்கிறார்கள். ஓடைகளின் அருகில் இருப்பவர்கள், தண்ணீரில் விஷவேர்களைக் கரைத்து, மச்சங்கள் மயக்கம் அடைந்ததும் அவற்றைப் பிடித்து, மயக்கம் நீங்கியதும் சமைத்து உண்பார்கள். முதலாளிகளிடம் செய்யும் பணிக்குக் கூலியாகக் கிடைக்கும் நெல்லைக் கொண்டு,



பேய் நடனம்

வேண்டிய பொருளைப் பண்டமாற்றாக வாங்கிக்கொள்ளுகிறார்கள்.

ஒவ்வொரு பாடிக்கும் ஒவ்வொரு தலைவன் உண்டு. தலைவனைப் பாட்டன் என்றும் குட்டன் என்றும் குறிக்கிறார்கள். பல தலைவர்கள் கூட்டமாக இருந்தால், அவர்களை 'மூப்பன்மார்' என்று குறிப்பிடுகிறார்கள். மூப்பன்மாருக்குள் யாருக்கு முதிர்ந்த வயசோ அவனைத் தலைவன் ஆக்குகிறார்கள். குற்றங்கள் செய்தால், மூப்பன்மார்களும் பெரியவர்களும் சேர்ந்து நியாயம் பேசி, குற்றம் செய்தவர் இத்தனை படி நெல் கொடுக்க வேண்டுமென்று அபராதம் விதித்து விடுகிறார்கள். அபராதத்தில் கிடைக்கும் நெல்லைப் பஞ்சாயத்தார்களின் முடிவுப்படி உபயோகிப்பார்கள். அப்படி அபராதம் கொடுக்க முடியாவிட்டால், மூப்பனின் காலில் விழவேண்டும். இதையும் செய்யக் குற்றவாளி மறுத்தால், அவனைப் 'பாடி'யிலிருந்து வெளியேற்றிவிடுகிறார்கள்.

இவர்களுக்குத் தனிக் கோவில் ஒன்றும் இல்லை. பெரிய மரத்தடியில், சிறிய உயிர்ப்பலி கொடுக்கிறார்கள். பலி கொடுக்கும் இடத்தில் திண்ணை ஒன்று கட்டி இருக்கிறார்கள். சூனியம், மந்திரம், பேய், காற்றுக் கறுப்பு இவற்றில் நம்பிக்கை அதிகம் உண்டு. குல தெய்வம் எதுவும் இல்லை. எந்த நாளிலும் எவனுக்குச் சன்னதம் வந்து பாட்டுப் பாடி ஆடினாலும் அதுதான் தெய்வமென்று மதிக்கிறார்கள். ஆடுகிறவன் சொல்லும் குறைகளை நிவர்த்தி செய்கிறார்கள். இதற்குக் குறித்த நாள் ஒன்றும் இல்லை. கடவுளுக்குப் பூஜை போடுவதும் பலியிடுவதும் 'குட்டன்' தான். கூளி போன்ற தெய்வத்துக்குப் பூஜை போடும் போது, 'கோமரம்' என்ற தெய்வத்தின் அருளால் 'அசரீரி வாக்காகக்' குட்டன் ஏதாவது கட்டளை இடுவதுண்டு. அதன்படி கிராமத்தார் ஜாக்கிரதையாக நடப்பார்கள்.

இவர்கள் தமிழும் மலையாளமும் கலந்து, விளங்காத வகையில் பேசுகிறார்கள். இவர்களுடைய பாஷைக்கு இலக்கணமும் இலக்கியமும் இல்லை. தமிழ் எழுத்தை வாசிக்கவும் எழுதவும் உபயோகிக்கிறார்கள். இவர்களில் அநேகர் இன்று கன்னடம் அதிகமாகப் பேசவும் எழுதவும் வாசிக்கவும் பழகி வருகிறார்கள்.

இவர்களுடைய பாஷையில் உள்ள சில சொற்கள் இவை:

தமிழ்	பணியர் பாஷை
1. அக்காள்	ஏடத்தி
2. அக்குள்	குதப்பே
3. அம்மா	அம்மே
4. ஆட்டு	குலிக்கு
5. ஆந்தை	கூமை
6. (இ)லத்தி	தூர்த்தா
7. உச்சி	மூர்தாவு
8. உதை	கவுட்டு
9. உருளைக் கிழங்கு	கியாங்கு
10. ஏப்பம்	தேக்கா
11. ஒன்று	ஒந்து
12. சமாதி	சுடலே

சர்க்கார் இவர்களுக்கு நிலமும் மாடும் அளிப்பதுடன் தங்குவதற்கு நல்ல குடிசையாவது கட்டிக் கொடுக்க வேண்டும். குடி தண்ணீருக்குப் பதிலாகச் சாக்கடைத் தண்ணீரையே குடிக்கிறார்கள். இவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்காவிட்டால், இவர்கள் சந்ததியே இன்னும் சில ஆண்டில் அழிந்து போகும் என்றுதான் அஞ்சவேண்டியிருக்கிறது.

என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டும் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிறார். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்த பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.

வி. காமாட்சி, திருச்சி.

கடிதத்துக்குப் பதில்: பிப்ரவரி மாதத்து 'மஞ்சரி'யில் நரம்புச் சிலந்திக்குப் பரிகாரம் சொல்லியிருக்கிறது. இந்தப் பரிகாரம் வைத்தியசாலைகளில் செய்யும் சிகிச்சை. காமாட்சியம்மாள் ஒரு பரிகாரம் கூறுகிறார்; கண்ணால் கண்ட நன்மையையும் சொல்லுகிறார்.

பப்பாளிப் பழத்தை எடுத்து நன்றாகக் கையால் பிசைந்து ஓர் இலையில் வைத்துப் புண்மேல் போட்டுக் கட்டிவைக்க வேண்டும். மூன்று நாளில் நரம்புச் சிலந்தி பகுதி பகுதியாகவே நூல்போல் வந்துவிடும். இந்த மாதிரி வைத்தியம் ஒருவனுக்குச் செய்து குணம் ஏற்பட்டதைக் கண்ணால் பார்த்திருக்கிறோம்.

பப்பாளியில் ஒரு வகை ஜீர்ண சாரம் இருக்கிறது. இது எந்தப் புரதப் பொருளையும் ஜீர்ணிக்கச் செய்யும். இது பட்டவுடன் நரம்புச் சிலந்தி கரைந்ததோ என்ற சந்தேகம் எழுகிறது. அதனால் இந்த மருந்தை நோயாளிகளுக்குப் போட்டு மேலும் சோதிப்பது அவசியம். திருச்சிப் பக்கம் இந்த நோய் இருப்பதால், காமாட்சியம்மாள் கருத்துச் செலுத்திச் சோதித்து விளக்குவார் என்று நம்புகிறேன்.

எம். பாலன், தென்காசி.

கே: காலையில் எழுந்தபின் சோம்பல் முரிக்கும்போது, கிறுகிறுப்பு ஏற்படுகிறதே; ஏன்?



வி: அப்படிச் சோம்பல் முரிக்கும்போது மூச்சைப் பெரிதும் அடக்கிக்கொள்கிறோம். மூச்சை அடக்கிக்கொள்வதாலேயே கிறுகிறுப்பு உண்டாகிறது. எழுந்தவுடன் சோம்பல் முரிக்காமல் காற்றோட்டமுள்ள இடத்துக்குச் சென்று சாதாரணமான தேகப் பயிற்சி செய்வது நலம்.

எம். ஜி. என். தாஸ், தேனீ.

கே-1: இந்த மண்ணுலகில் ஒருவன் பிறந்ததுமுதல் இறக்கும் வரையில் சுகமாக ஜீவித்திருக்க முடியுமா? இதற்கு முன் அப்படிச் சுகமாக ஜீவித்தவர் உண்டா?

வி: நண்பர் பெரிய கேள்வியைக் கேட்டுவிட்டார். உலகில் மனிதன் பிறந்த நாள் முதல் இந்தச் சுகவாழ்வைத்தான் தேடிக் கொண்டிருக்கிருன். உயிர்கள் அனைத்துக்குமே இதுதான் இயல்பு. சுகம் என்பது துயரம் என்ற உணர்ச்சியை ஒட்டியே இருக்கிறது. வெயில் அடித்துத் தவிக்கும் போது வானம் கறுத்து மாரி பெய்தால், மனிதன் உள்பட உயிர்கள் அனைத்தும் சுகமடையும். உடலும் இதே முறையில் வியாதி என்ற குறியை எதிர்த்தே ஆரோக்கியமும் சுகமும் பெறுகிறது. இது இயற்கையின் நியதி. முயற்சி எப்போதும் வெற்றி தரும். நண்பர், 'பிறந்தது முதல் இறக்கும் வரையில்' என்று சொன்னுர். அப்படியானல் இறப்பதும் ஒரு சுகந்தானே?

கே-2: அதிகமாக அறிவைச் செலுத்திப் படித்தால் தலைமயிர் வெளுத்துவிடுமா?

வி: நண்பர் அவ்வளவு பெரிய கேள்விக்குப் பிறகு இந்தச் சிறிய கேள்வியையும் கேட்டிருக்கிருர். அறிவைச் செலுத்துவதால் தலை நரைக்கும் என்று நான் கேட்டதில்லை. ஆனல் என்னைப் போல் தலை நரைக்கும் காலம் வந்த பிறகுதான் அறிவும் வளரும் என்பது உண்மை. அதனலே தலை நரைத்தவர்களுக் கெல்லாம் அறிவு வந்திருக்குமென்றும் சொல்ல முடியாது.

பெயர் சொல்லாத ஒருவர்.

கே: சாதாரண உப்பைத் தலையில் தேய்த்துக்கொண்டால், தலை நரைத்துவிடும் என்கிருர்களே! உண்மையா?

வி: மீனவர் உப்புத் தண்ணீரிலேயே முழுகி வேலை செய்கிறவர்கள். இவர்களுடைய தலை நம் தலையைவிட அதிக காலம் நரைக்காமல் இருந்துவருகிறது.

பி. சூர்யா.

கே: தினமும் ஒரு மணி நேரம் தேகப்பயிற்சி செய்து வருகிறேன். ஆனல் அடிக்கடி வெளியூருக்குப் போகவேண்டியிருப்பதால் அப்போதெல்லாம் வாரத்தில் மூன்று நான்கு நாள் தேகப்பயிற்சி இல்லாமல் இருக்க நேருகிறது. இப்படி விட்டு விட்டுச் செய்வதால், உடலுக்குக் கேடு உண்டா? ஆயுள் குறைவுபடும் என்று சிலர் சொல்கிருர்களே; உண்மையா?

வி: தேகப்பயிற்சியைத் தினசரி குறிப்பிட்ட வேளையில் செய்வது அவசியம். இதை அயர்வு ஏற்படும் வரையில் செய்யலாகாது. விட்டு விட்டுச் செய்வதால், உடலுக்குச் சிரமம் உண்டாகும். ஊரை விட்டுச் சென்ருலும் தேகப்பயிற்சியை ஓரளவு செய்தேயாகவேண்டும்.

ஏ. முகம்மது கரீம்.

கே: பதிஞறு வயசிலிருந்து பீடி குடித்து வந்தேன். இப்போது வயசு 18. அதைக் கைவிட்டு விட்டேன். என் உடம்பில் ரத்தம் இல்லாமல் ஒடிந்து மெலிந்து போயிருக்கிறேன். எடையும் குறைந்துவிட்டது.



வி: சிங்கப்பூரிலிருந்து இந்த வாலிபன் (மஞ்சரி வாசகன்) கேட்பதால், இந்தக் கேள்வி முக்கியத்துவம் பெறுகிறது. காங்கை தோன்றுவதில்லையானல், தினமும் இரண்டு முட்டையை ஒரு டம்ளர் பாலில் விட்டுச் சாப்பிட்டு வரட்டும். ஒரு மாதத்தில் குணம் பெறுவான்.

கே. எஸ். சிதம்பரம், காரைக்குடி.

கே-1: எனக்கு வகுப்பில் அடிக்கடி தூக்கம் வருகிறது. எவ்வளவு தான் தூக்கத்தை ஒழிக்க முயன்

ருலும் முடியவில்லை. பரிகாரம் என்ன?

வி: வகுப்பில் தூக்கம் வருவது பல மாணவர்களுக்கு இயல்பே. இதற்கு மூன்று விதமான காரணங்கள்: (1) வகுப்புக்கு வருவதற்கு முன் நன்றாகச் சாப்பிட்டு விட்டு வருவார்கள். 'வயிறு நிறைந்த புத்தி' என்று இதைக் கேலியாகக் குறிப்பிடுவதுண்டு. இந்தப் புத்தி தூக்கத்துக்கு இதமானது. (2) பாடத்தில் மாணவர்களின் உண்மையான கருத்துப் பதிந்திருப்பது அபூர்வம். (3) சில ஆசிரியர்கள் பாடத்தை எவ்வளவு கடினமாக்கலாமோ அவ்வளவு கடினமாக்கி விடுகிறார்கள்.

பரிகாரம், மாணவர் சம்பந்தப்பட்ட மட்டும் சிற்றுண்டி சாப்பிட்டுத்தான் வகுப்புக்கு வரவேண்டும். முக்கியமான சாப்பாடு முடிந்த பிறகு இரண்டு மணி நேரமோ ஒரு மணி நேரமோ ஓய்வு வேண்டும். பரீட்சையில் தேறவேண்டுமே என்ற கவலையை மறந்து, பல விஷயங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தோடு பாடங் கற்பதில் கருத்துச் செலுத்த வேண்டும். ஆசிரியர்களும் பாடத்தில் உற்சாகம் ஊட்டவேண்டும்.

கே-2: சிறுநீர் கழிக்கும்போது எனக்குக் கண்ணீரும் மளமள வென்றுவருகிறது. காரணம் என்ன?

வி: இது அதிசயமான ஒரு நிகழ்ச்சி. நான் இதுவரைக்கும் கேட்டதில்லை. சிறுநீர் கழிக்க ஆரம்பிக்கும்போது, முக்க நேரலாம்; அப்போது கண்ணையும் சற்று மூடினாற்போல் செய்துகொள்ள வேண்டியிருக்கும். இதனால் கண்ணிலிருந்து கண்ணீர் வரலாம். சிலருக்குச் சிரிக்கும்போது கண்ணீர் வரும்; பக்தி பரவசமாகிறவர்களும் கண்ணீர் விடுவதுண்டு.

மாரிமுத்து, காரைக்குடி.

கே: கண்களில் லேசாகச் சதை வளர்ந்து வருகிறது. இதை 'டெரிஜியம்' என்று டாக்டர்கள் கூறுகிறார்கள். லேசான ஆப்பரேஷன் செய்து நீக்கலாம் என்கிறார்கள். சதை வளராமல் இருக்க அது வரைக்கும் நான் என்ன செய்ய வேண்டும்?

வி: ஆப்பரேஷன் செய்ய வேண்டியது அவசியம். அதைத் தவிர வேறு ஏதாவது செய்துகொள்ளலாமா என்பதை இதற்கு முன் கேட்டுக்கொண்ட டாக்டரையே கேட்கலாம்.

ராஜகோபாலன், ஸ்ரீவில்லிபுத்தூர்.

கே: வயசு 17. என் காலில் முட்டுக்கு முட்டு நடக்கும்போதும் நிற்கும்போதும் ஓடும்போதும் தட்டுகிறது. இதைச் சரிப்படுத்த வழி சொல்லுங்கள்.

வி: குழந்தையாயிருக்கும் போது, கணைநோய் தோன்றி இந்த மாதிரி கால்கள் வளைந்து போயின. இப்போது திருத்துவது மிகவும் கஷ்டம். சஸ்திர வைத்தியர் தக்க ஆலோசனை சொல்வார்.

சீனிவாசன், ஸ்ரீவில்லிபுத்தூர்.

கே: வயசு 19. பேசும்போது இரட்டைக் குரலுடன் பேச்சு மாறுகிறது. ஒரே குரலில் பேச்சு வரச் சிறந்த வழி வேண்டும்.

வி: இது இயற்கையான கோளாறு. இதைத் தவிர்க்க வழி இருக்கிறது. திறந்த வெளியில் சென்று உரக்கப் பேசிப் பழகுவதே அது.

எம். ஆர். ராஜன், கல்கத்தா.

கே: நான் சர்க்கார் உத்தியோகஸ்தன். வயசு 21. சுமார் 11 மணிக்குப் படுக்கைக்குச் செல்



கிறேன். காலையில் என்னால் ஏழரை மணிக்குமுன் படுக்கையை விட்டு எழுந்திருக்க முடியவில்லை. சில சமயம் எட்டு மணிகூட ஆகி

றது. இதனுல் உடம்புக்குக் கேடு உண்டா? சாதாரணமாகக் காலை யில் நான் எத்தனை மணிக்கு எழுந் திருக்க முயலவேண்டும்?

வி: ஜி. கே. செஸ்டர்ட்டன் என்ற பிரபல ஆங்கில எழுத் தாளர் இந்த விஷயத்தைப்பற்றி நகைச்சுவையோடு ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதிகாலையில் எழுந்திருப்பது பெருமைப் படக் கூடிய ஒரு காரியந்தான். இதனுல் ஆரோக்கியம் அதிகமாகிறதென்று எண்ணுவது தவறு. தூங்கும் நேரமும் எழுந்திருக்கும் நேரமும் ஒவ்வொருத்தருக்கும் தனி. சிறு வர்கள் வெகு நேரம் தூங்குவார் கள். இரவு நேரம் கழித்துத் தூங்கினுல் காலையில் சீக்கிரம் எழுந்திருப்பது கஷ்டமாகியிருக் கும்.

எம். ஜி. நாராயணதாஸ்,
பாளையங்கோட்டை.

கே: உலகிலேயே சிறந்த மருத்துவ நிபுணரையும் அவரைப் பற்றிய ஒரு சிறு குறிப்பையும் அறிய மிக ஆவலா யிருக்கிறேன்.

வி: மருத்துவம் முன் நாளில் இருந்ததுபோல் அல்லாமல், இன்று பல வகையாகப் பிரிந்திருக்கிறது. ஒவ்வொரு பிரிவிலும் நிபுணர்கள் இருக்கிறார்கள். சாதாரண நோய், சஸ்திரம், பிரசவம், தொண்டை, மூக்கு, காது, இரு தயம் என்று மருத்துவத்தில் பல பிரிவுகள் இருப்பதால், மருத்துவத் துறை ஒவ்வொன்றிலும் நிபுணர் கள் இருக்கிறார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன் மருத்து வம் பிரிவுபடாமல் இருந்தது. அந்தக் காலத்தில் வைத்தியர்கள் எல்லாருமே எல்லா வகை வைத்தி யத்திலும் திறமை பெற்றிருக்க வேண்டியிருந்தது. அப்போது ஒரு வைத்தியர் மிகச் சிறந்த மருத்துவ நிபுணராக விளங்கினுர். அவ ருடைய சிலை இன்று சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியின் முன் புறத்தை அலங்கரிக்கிறது.

கருணை, தர்ம சிந்தனை, தொண்டு, தொழில் திறமை- இவ்வளவும் நிறைந்தவராக அவர் இருந்தார்.

பெயர் ரங்காசாரி. பணம் என்று கையேந்தி அவர் வாங்கிய தில்லை. நோயின் கடுமையால் வருந்தும் நோயாளிக்குச் சிகிச்சை செய்ய யார் போய் அழைத்தா லும் சரிதான்; அழைத்த சிறிது நேரத்துக்கெல்லாம் வந்து விடுவார்; தக்க சிகிச்சையும் செய்துவிடுவார். பிரசவச் சிக்கல், சஸ்திர வைத்தியம், காது, மூக்கு, தொண்டை, கண் முதலிய உறுப்புக்களில் வரும் நோய் எல்லாவற்றிலும் நிகரற்ற திறமை உடையவர். அயர்வு என்பதே அவருக்கு இல்லை. குடிசை களிலும் அரண்மனைகளிலும் போய் வித்தியாசம் இல்லாத கருணையுட னும் திறமையுடனும் வைத்தியம் செய்வார். பெரிய மோட்டாரில் ஏறிக்கொண்டு சின்னக் குடிசை முன்பு ஆஜராகிவிடுவார். விமா னத்தில் பறந்து சென்று வைத்தி யம் செய்வார். அவரைப் போன்ற வேறு வைத்தியரை நான் பார்த்த தும் இல்லை; கேட்டதும் இல்லை.

சி. ஆர். ராமநாதன், மதுரை.

கே: பிரபல பல் வைத்தியர் ஒருவர், ''பல்லை வருஷத்துக்கு வருஷம் 'க்ளீன்' செய்துகொள்ள வேண்டும்'' என்றார். ''அப்படிச் செய்யாவிட்டால் 'பயோரியா' வியாதி தோன்றிப் பல் விழ ஆரம் பித்துவிடும்'' என்கிருர். பல் வைத்தியரிடம் சென்று ஒரு தடவை 'க்ளீன்' செய்துகொண்ட வர்களுக்கு நாளடைவில் பல்லிலே ஆட்டம் ஏற்பட்டு விழத் தொடங்கி விடும் என்றும், 'க்ளீன்' செய்வது கெடுதல் என்றும் வேறு சில பேர் சொல்லுகிறார்களே. உங்கள் அபிப் பிராயம் என்ன?

வி: வருஷத்துக்கு ஒரு தடவை வைத்தியரிடம் சென்று பல்லை 'க்ளீன்' செய்துகொள்வதால், இடுக்குகளில் சேர்ந்திருக்கும் காரை முதலியவை நீங்கும். 'பயோரியா' நோய் தோன்றுமல் தடை செய்ய இது நல்ல உபாயம். இதனுல் பல்லுக்கு ஆட்டம் ஏற் படாது. 'க்ளீன்' செய்துகொள் ளாமல் காரை சேர்ந்தால்தான், கட்டாயம் ஆட்டம் கொடுக்கும்.

முகம்மது முஸ்டாபா, இளங்கா குறிச்சி.

கே-1: வயசு 27. சென்ற நாலைந்து வருஷமாக ஓயாத தலை வலி. சில சமயம் மலச்சிக்கல் ஏற்படுகிறது. ஆனால் மலச்சிக்கல் இல்லாத காலத்திலும் தலைவலி தான்.

வி: இந்தத் தலைவலியின் காரணத்தை நன்ருக ஆராய வேண்டும். கண் பார்வைக் குறை இருந்தால், அதைச் சரிக்கட்ட வேண்டும். ரத்தத்தில் குறை இருந்தால் அதையும் சீர் செய்துகொள்ள வேண்டும்.

கே-2: உள்ளங்கை எப்போதும் வறட்சியாக இருக்கிறது. உடம்பு முழுவதும் மின்சார ஓட்டம்போல் உணர்ச்சி உண்டாகிறது.

வி: வைத்தியரை நேரில் கண்டு தக்க சோதனை செய்துகொண்டு சிகிச்சை பெற வேண்டும்.

உமா பார்வதி, வளவனூர்.

கே-1: டான்சில்ஸ் ஆப்பரேஷன் செய்தாகிவிட்டது. ஆனாலும் அடிக்கடி இருமல் வருகிறது. ஏன்?

வி: டான்சில் ஆப்பரேஷன் செய்த பிறகும் தொண்டையில் கிருமிகள் வந்து நோய் தோற்றுவித்திருக்கலாம்.

கே-2: இயோசிஞேஃபில் நோய் பெற்றோருக்கு இருந்தால், குழந்தைகளுக்கும் வருமா? மனித ரத்தத்தில் சாதாரணமாக இயோசிஞேஃபில் அணுக்கள் எந்த அளவு இருக்க வேண்டும்? அவை அதிகமாயிருந்தால் என்ன என்ன கேடுகள் உண்டாகும்?

வி: பெற்றோரிடமிருந்து இந்த நோய் பிள்ளைகளுக்கு வருவதாய்த் தெரியவில்லை. இயோசிஞேஃபில் அணுக்கள் இயல்பாக நூற்றுக்கு 3 இருக்கலாம். அதிகமாவதற்குப் பல காரணங்கள் உண்டு. வைத்தியர் ஆராய்ந்து தெரிந்துகொண்டு தக்க வைத்தியம் செய்வார்.

சரியான பரிசுப் போட்டி

கம்பெனி முதலாளி ஒரு நாள் தம் ஆட்களையெல்லாம் அழைத்தார். "உங்களில் யார் யார் அதிகமாக நம் சரக்குகளை விற்கிறீர்கள் என்று பார்க்க ஒரு பெரிய போட்டி நடத்தப் போகிறேன். அதை நான் நேரே இருந்து கண்காணிக்க எண்ணம்" என்று குஷியாய்ச் சொன்னார்.

எதற்காக இந்தப் போட்டி, இதில் என்ன பரிசு கிடைக்கும் என்றெல்லாம் ஆட்கள் யோசித்தார்கள். திடீரென்று முதலாளிக்குத் தாராள மனசு வந்துவிட்டதா என்று ஆச்சரியப்பட்டார்கள்.

கொஞ்சம் வயசான பழைய ஆள் ஒருவனுக்கு மட்டும் சற்றுச் சந்தேகம் வந்தது. "சரி, ஸார். இந்தப் போட்டியில் வென்றவனுக்கு என்ன பரிசு கிடைக்கும்?" என்று கேட்டான்.

"ஏன், அவனுக்கு அவனுடைய உத்தியோகம் நிலைக்கும்" என்றார் முதலாளி, புன்சிரிப்புடன்.

—'ஐரிஷ் டைஜெஸ்ட்'

பறக்கும் தட்டு விஷயம்

"பறக்கும் தட்டு, பறக்கும் தட்டு என்கிறீர்களே, இதில் எனக்குத் துளியும் நம்பிக்கை இல்லை."

"எனக்குந்தான் முன்னே இதில் நம்பிக்கை இல்லாதிருந்து வந்தது. ஆனால், எனக்குக் கலியாணம் ஆன பிறகு, இதன் உண்மை நிச்சயமாய்த் தெரிந்துவிட்டது."

—ஜான் கார்ப்பெண்டர், 'ஈவினிங் ந்யூஸ்.'



மாமி கொலு

அசல்: ராஹுல் ஸாங்கிருத்யாயன் தமிழ்: சௌரி

பல மொழிகளில் புலமை பெற்ற ராஹுல் பௌத்தர்; பொது உடைமைவாதி; நூறு புஸ்தகங்கள் வரைக்கும் ஹிந்தியில் எழுதியிருக்கிருர்; அவருடைய 'ராஜஸ்தானத்து அந்தப்புரங்கள்' என்ற அரிய நூலிலிருந்து எடுத்த ஒரு பகுதி இது: முழுப் புஸ்தகத்துக்கும் மொழிபெயர்ப்பு உரிமையைச் 'சௌரி' பெற்றிருக்கிருர்.

எங்குமே மாமிகளுக்கு மருமகள் என்றுல் இளப்பந்தான். வேறிடத்துப் பெண் என்ற எண்ணத்தில், மருமகளைச் சந்தேக நோக்கோடு கண்காணிப்பது மாமிகளுக்கு வழக்கம். இதில் மட்டும் மேல்தரம், நடுத்தரம், கீழ்த்தரம் என்ற வகுப்புவாரி வேற்றுமை கிடையாது. எல்லா மாமிகளும் ஏறக்குறைய ஒரே ரகந்தான், ஒரே இனந்தான்.

ராஜஸ்தானத்து அந்தப்புரங்களில், மாமி ராணிகளின் ஆதிக்கம் மிக அதிகம். 'ஓர் அரசருக்குப் பல மனைவிகள்' என்பது ராஜ குடும்பத்தில் சர்வசகஜம். இதனுல் ஒவ்வொரு மருமகளுக்கும் பல மாமிகள் இருப்பார்கள். பட்டத்தில் இருக்கும் அரசரின் தாய்க்கோ பிரிய ராணிக்கோதான் அதிகார உரிமை உண்டு. பட்டத்து ராணியாக இருந்தாலும் மாமி உயிரோடு இருந்தால் அவளுக்கு அடங்கி ஒடுங்கித்தான் வாழவேண்டும்.

ராஜபுதனத்து அந்தப்புரம் மாதிரி கடுமையான கட்டுப்பாடுகள் நிறைந்த இடத்தை வேறு எங்கும் பார்க்க முடியாது. ஒவ்வொரு கோட்டைக்குள்ளும் அந்தப்புர மாளிகை தனியாக இருக்கும். பல மாடிகளைக் கொண்ட கட்டிடம் இது. பெரிய மதில் சுவர்கள் நாலு பக்கமும் எழும்பி நிற்கும். பிரதான வாயிலின் வெளிப் பக்கத்தில் ஆண் காவல்; உள் பக்கம் பெண் பாராக்காரி. அதுமுதல், பல வாயில்கள்,

காப்பிரைட்: ராஜஸ்தானீ ரநிவாஸ் (ஹிந்திப் புஸ்தகம்).
வெளியிட்டது: ராஹுல் ப்ரகாசன், மஸூரி. விலை: ரூ. 5.

கட்டுகள், மாடிகள், அறைகள் எல்லாவற்றையும் பணிப் பெண்கள் காவல் காத்து நிற்பார்கள். ஆண் வாடையே வீசக் கூடாது. ஒவ்வொரு ராணிக்கும் பிரத்தியேக அறை உண்டு. கணவன்மார் மட்டும், முன்னறிவிப்புடன் தம் தம் மனைவிகளின் அந்தப்புர அறைக்குப் போக வேண்டும். அதுவும் இரவு முதல் ஜாமத்துக்குப் பிறகுதான் போகலாம். பிற சமயங்களில், பெரிய ராணியின் அநுமதி பெற்றுத்தான் மனைவியைச் சந்திக்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பங்களில், வேலைக்காரிகள் படுதாவினால் நாலு புறமும் திரையிட்டு மறைத்துத்தான், அரசரையோ அரச குமாரரையோ அவருடைய மனைவியின் அறைக்கு அழைத்துச் செல்லுவார்கள்.

பட்டத்து அரசர் அல்லது டாகுரின் சொந்தத் தாய்தான் அந்தப்புரத்தில் ஆதிக்கம் செலுத்தும் உரிமை பெற்ற பெரிய ராணி. இவளைவிட வயசில் மூத்த சக்களத்திகளும் இருப்பார்கள்; ஆனால் இவர்களுக்கு அதிகாரம் எதுவும் கிடையாது. விரதங்களோ விழாக்களோ நடைபெறும் நாட்களில், சிறியவர்கள் இந்தக் கிழவிகளை வணங்கி, ஆசி பெற்றுச் செல்லுவார்கள். இந்த ஒரு பெருமை தான் இவர்களுக்கு.

வெளி அரண்மனையில் அரசர் எப்படித் தர்பார் நடத்துகிறாரோ, அதேபோலப் பெரிய ராணியும் அந்தப்புரத்துக்குள் தர்பார் நடத்துவாள். சக்களத்திகளும், மாட்டுப் பெண்களும், பணிப் பெண்களுந்தான் இங்கே தர்பாரிகள்.

மாமியின் ஆணைப்படிதான் மருமகள்மாரின் ஒவ்வொரு காரியமும் நடக்க வேண்டும். தினமும் விடியற்காலையில் எழுந்திருந்து, மாமியாரிடம் வந்துவிட வேண்டும். முதல் நாள் இரவே, ''நாளைக்கு மூன்று மணிக்கெல்லாம் வந்துவிடுங்கள்!'' என்று உத்தரவு பிறப்பித்துவிடுவாள் மாமி. மருமகள்மார் மறு பேச்சுப் பேசாமல் அப்படியே வந்து நிற்க வேண்டும். பர்தா மறைப்பை விலக்கக் கூடாது. மாமி கண்ணை மூடிக்கொண்டே, 'நிற்கட்டுமே கொஞ்ச நேரம்' என்ற பாவனையில் படுத்திருப்பாள். பிறகு, எழுந்து பல் துலக்கச் செல்வாள். பல் குச்சி கொடுப்பது, தண்ணீர் வார்ப்பது, துணி எடுத்துக் கொடுப்பது என்று ஒவ்வொருத்தியாகப் பணிவிடைகளில் மருமகள்மார் பங்கு கொள்ளுவார்கள். பல் துலக்கியானதும், மாமி தன் தர்பார் மண்டபத்துக்கு வந்து சேருவாள். மருமகள்மார் பர்தாவை லேசாக விலக்கி, மாமியின் எதிரே மண்டியிட்டு வணங்க வேண்டும். பிறகு, 'உட்காருங்கள்' என்று அவள் சொல்லுகிறவரையிலும் எல்லாரும் நின்றுகொண்டிருக்க வேண்டும். எந்த மருமகளாவது தாமதமாக வந்துவிட்டால், அவள் கையால் மாமி பணிவிடையை ஏற்க மாட்டாள்; அவள் வணங்கும் போது, முகத்தைத் திருப்பிக் கொண்டு விடுவாள். அந்தக் குற்றவாளியை வெகு நேரம் வரையிலும் 'உட்கார்' என்றே சொல்ல மாட்டாள். சில சமயம், மாமிக்கு எல்லா மருமகள்மாரிடமும் கோபம் வந்துவிடும். அப்போது பணிவிடைகளை வேலைக்காரிகளைக் கொண்டு செய்துகொள்ளுவாள். மருமகள்மாருக்கு இது பெரிய அவமானமாகத் தோன்றும். சில மாமிகள் இந்தச் சமயத்தில் மருமகளின் குலம், கோத்திரத்தையெல்லாம் இழுத்து ஏசித் தீர்ப்பார்கள்.

பிறகு, மாமி கொலுக் கூடும். பெரிய ராணி உயர்ந்த ஆசனத்தில் அமர்வாள். எதிரே நாத்திகளும், பெண்களும், மற்ற உறவுப் பெண்களும் உட்கார்ந்திருப்பார்கள். இளம் பெண்களுக்குப் பக்கத்தில் மருமகள்மார் உட்கார்ந்திருப்பார்கள். மாமி ஏதாவது கேள்வி கேட்டால், மருமகள் எவளும் நேரிடையாகப் பதில் சொல்லக்கூடாது. பக்கத்தில் இருக்கும் நாத்தியிடம் மெள்ளச் சொல்ல வேண்டும். அதுவே மாமி காதில் விழுந்துவிடும்; மாமி செவிடாயிருந்தால், பக்கத்துப் பெண் வந்து அறிவித்துவிட்டுப்

போவாள். நாலைந்து குழந்தைகளுக்குத் தாயாகும் வரையிலும் மருமகள் மாமியுடன் நேருக்கு நேரே பேசக்கூடாது.

கொஞ்ச நேரம் கொலு நடந்ததும், காலை உணவுக்காக எல்லாரையும் பெரிய ராணி போகச் சொல்லுவாள். மருமகள்மாருக்கு அனுப்பும் உணவுத் தட்டுகளை மாமி பார்த்துத்தான் அனுப்புவது வழக்கம். இஷ்டம் இருந்தால் முழு வயிற்றுக்கும் உணவு கிடைக்கும்; இல்லாவிட்டால் அரை வயிற்றுக்கே பற்றுக்குறையாக இருக்கும். எந்த மருமகள் பேரிலாவது அதிகக் கோபம் இருந்தால், மாமி அவளுக்குச் சாப்பாடு அனுப்பாமலே இருந்துவிடுவாள். தப்பித் தவறி அனுப்பினாலும், ஊசிப்போனதும் மிச்சம் மீதியுந்தான் அவளுக்குப் போய்ச் சேரும்; அதுவும் அரை வயிறு, கால் வயிருகத்தான் இருக்கும். இந்தச் சங்கடத்திலிருந்து தப்பிக்க வெளியேயிருந்து ஏதாவது வரவழைத்துச் சாப்பிடலாம் என்பதற்கும் வழி கிடையாது. பெரிய ராணியின் வேவுகாரிகள் எப்போதும் மருமக்கள்மாரைக் கண்காணித்துக்கொண்டே இருப்பார்கள். எப்போதாவது மருமக்கள்மாரின் பிறந்த வீட்டிலிருந்து பட்சணக் கூடைகள் வந்து சேரும். இவற்றையும் மாமிதான் முதலில் பிரித்துப் பார்ப்பாள். அவள் எடுத்து அனுப்பியதைத்தான் மருமகள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

காலை உணவு முடிந்ததும் அந்தப்புரப் பெண்கள் பூத் தையல், பின்னல் முதலிய வேலைகளில் சற்று நேரம் ஈடுபடுவார்கள். குழந்தைக்காரியாக இருந்தால், அதன் பராமரிப்புத்தான் சரியாக இருக்கும். மணி ஒன்பது அடித்ததும், எல்லா மருமகள்மாரும் மாமி கொலுவில் ஆஜராக வேண்டும். மாமி உயிரோடுள்ள வரைக்கும் எந்த மருமகளும் திண்டுகள் தைத்த ஆசனத்தில் உட்காரக் கூடாது. இந்த ஆசனத்துக்கு உரியவள் மாமி ஒருத்திதான். எதிரே விரித்திருக்கும் கம்பளத்தில் மருமகள்மார் பணிவாக உட்கார்ந்திருப்பார்கள். பன்னிரண்டு மணி வரையிலும் இந்தக் கொலு நடைபெறும். ஊர்வம்பும் சுயகுலப் பிரதாபமும் தற்புகழ்ச்சிகளுந்தான் பொழுதுபோக்குப் பேச்சாக இருக்கும்.

பழைய காலத்து அந்தப்புரங்களில் ராணிகளின் அறைகள் எவ்வளவு மோசமான நிலைமையில் இருந்தன என்பதைக் காண வேண்டுமானுல், ஆக்ரா, குவாலியர் இரண்டு இடங்களிலும் உள்ள அரண்மனைகளில் போய்க் காணலாம். அந்த அறைகளில் வாயில் கதவுகளைத் தவிர, வெளிச்சத்துக்கோ காற்றுக்கோ வேறு வழி கிடையாது. இவற்றைக் கட்டியவர்கள், 'சாகும் வரையில் கைதிகளாக வாழவேண்டியவர்களுக்காகவே இந்த அறைகளைக் கட்டினேம்' என்பதை நிச்சயம் உணர்ந்திருப்பார்கள்.

பகல் உணவுக்குப் பிறகு, மாலை வரைக்கும் மருமகள்மாருக்கு ஓய்வு கிடைக்கும். தங்கள் தங்கள் அறைகளுக்குள்ளேயே அந்தரங்க வேலைக்காரிகளுடன் அவர்கள் ஏதாவது பேசிப் பொழுதுபோக்கிக்கொண்டிருப்பார்கள். சாயங்காலம் ஆனதும், எல்லாரும் குளித்துவிட்டு, சர்வ அலங்காரங்களும் செய்துகொண்டு, நேரே மாமியின் கொலுவுக்கு வந்துவிட வேண்டும்; மாமியை ஒவ்வொருத்தியாக வணங்கிவிட்டு எதிரே வரிசையாக நிற்கவேண்டும். தன் மைந்தனை மகிழ்விக்கும் அளவுக்கு மருமகள்மார் சிங்காரிப்பெல்லாம் சரிவரச் செய்துகொண்டிருக்கிறர்களா என்று பெரிய ராணி பார்வையிடுவாள். விளக்கு வைக்கும் வரையில் எல்லாரும் இப்படியே நின்றுகொண்டிருக்க வேண்டும். பிறகு மாமியின் உத்தரவு பிறந்ததும், மருமகள்மார் தங்கள் தங்கள் அறைகளுக்குத் திரும்பிப் போவார்கள்.

இரவு முதல் ஜாமம் சிறிது கழிந்ததும், மறுபடியும் மாமியின் சந்நிதானத்துக்கு மருமகள்

மார் வரவேண்டும். மாமி ராணியின் மனசு சரியாக இருந்தால், அதிகம் தாமதிக்காமல் தன் கால்களை நீட்டுவாள். உடனே மருமகள்மார் மரியாதையுடன் அவளுடைய பாதங்களைப் பிடித்து விடுவார்கள். மாமி ராணிக்கு ஏதாவது கோபதாபம் இருந்துவிட்டால், அவ்வளவுதான்; கால்களை லகுவில் நீட்ட மாட்டாள்; அமுத்தலாகவே இருந்து விடுவாள்! அந்தப் பரதேவதையின் மனம் இளகும் வரையிலும் எதிரேதான் அவர்கள் நின்று கொண்டிருக்கவேண்டும்!

இந்தக் 'கால் பிடிக்கும்' மரியாதை முடிந்ததும், மாமிக்குச் சாப்பாடு வந்து சேரும். முதலில் மாமி சாப்பிடுவாள். பிறகுதான் மருமகள்மார் சாப்பிட வேண்டும். மருமகள்மார் சூழ்ந்திருந்து உபசரிக்க, மாமி ராணி நிதானமாகப் போஜனம் செய்வாள். அது ஆனதும் களைப்பாறப் பஞ்சணை மஞ்சத்தில் சயனித்துக் கொள்ளுவாள். உடனே, சுற்றிலும் நின்றுகொண்டு, உடம்பைப் பிடித்துவிடும் கடமையை மருமகள்மார் பயபக்தியுடன் நிறைவேற்றுவார்கள். 'போதும்' என்று மாமி சொன்ன பிறகுதான், அவர்கள் நிறுத்த வேண்டும்; 'போகலாம்' என்று மாமியின் உத்தரவு பிறந்த பின்பே தங்கள் தங்கள் இடத்துக்கு அவர்கள் திரும்பவேண்டும். சில சமயம் பாதி ராத்திரியானாலும் அவர்கள் திரும்பிப் போக மாமி உத்தரவு கொடுக்க மாட்டாள். இதில் யாரும் குறுக்கிட முடியாது.

மருமகள்மார் அநேகமாகப் பதினொரு மணிக்குள் தங்கள் அறைக்கு வந்து, சாப்பாட்டை முடித்துக்கொண்டு, கணவனுக்காகக் காத்திருப்பார்கள். ஒருவனுக்கு ஒருத்தி என்று இருந்துவிட்டால், கட்டாயம் கணவன் வருவான் என்று எதிர்பார்க்கலாம்; பல ராணிகளையும் ஆசை நாயகிகளையும் கொண்டவன் எப்படி எல்லாரையும் ஒரே காலத்தில் திருப்திப்படுத்த முடியும்? ராஜஸ்தானத்து அந்தப்புரக் காரிகைகள் தங்கள் கணவனின் அன்பை வெளிப்படையாகப் பெற்றுவிட முடியாது. மேலும், கணவன்-மனைவியின் நெருக்கமான தொடர்பையும் அன்புப் பழக்கத்தையும் அந்தக் காலத்துச் சமுகமே இழிவாகத்தான் கருதி வந்தது.

இந்த மாமிப் பதவி பெறுவதற்குப் பலத்த போட்டி இருக்கும். ராஜபுதனத்து மன்னர்கள் பல பெண்களை மணந்துகொள்வதால், ராணிகளின் எண்ணிக்கை, அதிகமாகிவிடுகிறது. எந்த ராணி தன் அழகாலோ, அந்தஸ்தாலோ, புத்திர பாக்கியத்தாலோ பட்டத்து அரசனான கணவனின் தனி மதிப்புக்குப் பாத்திரமாகிறாளோ, அவளுக்குத்தான் பெரிய ராணிப் பதவி. பிரதான மாமி அவள்தான். அவளே அதிகாரம் செலுத்துவதற்கு உரியவள் ஆகிறாள். மாமியான இந்தப் பெரிய ராணியின் அதிகார வரம்பு அந்தப்புரத்தோடு நிற்காது; வெளியே அரசாங்கக் காரியங்களிலுங்கூட அவளுடைய தலை நீளும். ஆனால், இவ்வளவும் 'பர்தா' மறைப்புக்குள்ளேதான். தொண்ணூறு வயசுத் தொண்டு கிழவிகூடத் தன் உருவை மறைக்காமல் வெளியே காட்டக் கூடாது. சுமங்கலியாக இருக்கும் வரைக்கும் இந்தக் கிழ ராணி இளங்குமரி போலவே சகல அலங்காரங்களும் செய்துகொள்ளுவாள். கண்களுக்கு மை தீட்டிப் பல நகைகளையும் பூட்டிக்கொண்டு கணவனுக்கெதிரே இவள் நாணிக் கோணி நிற்பதே ஒரு விசித்திர மான காட்சியாயிருக்கும்.

ஸல்மாடா பிரதேசத்துச் சமஸ்தானங்களில், மருமகள்மார் மாமிக்கு எதிரே தங்கள் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுக்கக் கூடாது. மாமி கொலுவில் மருமகள்மார் உட்கார்ந்திருக்கும் போது ஒரு கைக் குழந்தை அழுதால், அதன் தாய்க்கு எழுந்து போக அநுமதி கிடைத்துவிடும். ஆனால், இதையே வியாஜமாக எப்போதும் அவள் வைத்துக் கொண்டுவிட்டால் சங்கடந்தான்.

இப்போது காலமே மாறிக் கொண்டு வருகிறது. ராஜஸ்தானத்து அந்தப்புரப் பெண்கள் 'அஸூர்யம் பச்யா' (சூரியனைக் கூடக் காணுதவர்கள்) என்று 'புகழ்' பெற்றிருந்த காலமும் உண்டு. ஆனால், இப்போது அங்கே மேல்நாட்டு நாகரிகம் பல மாக ஊடுருவிப் பல புரட்சிகளைச் செய்துவிட்டது. ராணிகள் கூந்தலை 'பாப்' செய்துகொள்வதும், மேஜையில் கணவர், மாமனர், மைத்துனர்களுடன் சமமாக உட்கார்ந்து சாப்பிடுவதும், மாமியையும் 'வயசான ஒரு தோழி' போலவே பாவிப்பதும் இன்று சகஜம்.

முன்பெல்லாம் மருமகள்மார், ''இந்தக் கிழப் பிசாசு என்றைக்குச் சாகுமோ?'' என்று தினம் சபித்தபடியே மாமியின் நிரந்தரமான மறைவை எதிர் நோக்கிக்கொண் டிருப்பார்கள். இப்போதெல்லாம் அந்தச் சாபம் கிடையாது. மருமகளுக்கு இஷ்டம் இருந்தால்தான், மாமியின் கொலுவுக்கோ பணிவிடைக்கோ அவள் வருவாள். கிழ ராணிகளும் இனி ஜம்பம் சாயாது என்று உணர்ந்துகொண்டு விட்டார்கள். இருந்தாலும், விதிவிலக்காகப் பழைய தோரணையைக் காப்பாற்றும்சில மாமிகளும் மருமகள்மாரும் இன்றும் இல்லாமல் போகவில்லை.

பசும்பாலும் தாய்ப்பாலும்

நியூ யார்க் நகரத்துச் சுகாதார இலாக்காதார், ஆரம்பப் பள்ளிக்கூடத்துச் சிறுவர்களுக்கு அடிக்கடி வினுத்தாள் கொடுத்துப் பரீட்சை செய்கிருர்கள். அவர்களுடைய ஒரு கேள்வி இது: ''பசும்பாலைவிடத் தாய்ப்பாலில் உள்ள நன்மைகள் எவை?''

ஒரு சிறுவன் சிரமப்பட்டுச் சிந்தனை செய்து தந்தது இந்தப் பதில்: ''(1) அதிக மலிவு; (2) வாரம் முழுவதும் கெடாதிருக்கும்; (3) கீழே விழுந்து, டப்பா உடையாது; (4) பூனை வந்து அடித்துக்கொண்டு போகாது.''

—'ஹெல்த்', சென்னை-1.

சம்பள உயர்வு வேண்டாம்!

ஷார்ட்-ஹாண்ட் டைப்பிஸ்ட் ஒருத்தி தன் முதலாளியிடம் கூறியது: ''ஸார், எனக்குச் சம்பள உயர்வுதான் அளிக்க முடியாது என்கிறீர்கள். அது முடியாது போனல் போகட்டும்; பழைய சம்பளத்தையே இப்போதைவிடச் சற்று அடிக்கடியாவது கொடுத்துக்கொண் டிருங்கள்.''

—'கான்ஸ்டலேஷன் பாரிஸ்'

ஒரு நாள் சந்தோஷம்

''நன்ருய்ப் படி, மகனே! பள்ளிக்கூட நாட்களில் நேரத்தை வீணடிக்காமல் படித்தால்தான் ஒரு நாள் சந்தோஷமா யிருக்க முடியும்'' என்ருர் சிற்றப்பா.

''அது சரி, சிற்றப்பா. ஆனல், அந்த என்ருே ஒருநாள் சந்தோஷத்துக்காக இன்று இந்த நாளெல்லாம் நான் வேதனைப் பட்டுக்கொண் டிருக்க வேண்டுமா?'' என்று பதில் அளித்தான் சிறுவன்.

—'கோரியர் டே பிக்கோலி,' மிலான்.

பிரிட்டனில் கல்விப் புரட்சி

எடித் மேஸன்

சுமார் பதினைந்து ஆண்டுக்கு முன்பு பிரிட்டனில் கல்வி முறையில் புது மாறுதலுக்கான அறிகுறி தெரிந்தது. இரண்டாம் யுத்தம் முடிந்த பிறகு அந்த மாறுதல் கல்வித் துறையிலேயே பெரும் புரட்சி என்று சொல்லக் கூடியபடி ஆகிவிட்டது. ஆயினும் இப் புரட்சி வெகு அமைதியாக நடந்து வந்திருக்கிறது. நம் நாட்டில் கல்வி முறையில் அபிவிருத்தி ஏற்பட விரும்புவோர் இதைக் கூர்ந்து கவனிக்கவேண்டும்.



எல்தாம் க்ரீன் என்ற இடத்தில் உள்ள காம்ப்ரெஹென்ஸிவ் பள்ளிக்கூடம்

★

பிரிட்டிஷ் கல்வியிலாகா மந்திரி மிஸ்டர் ஜெஃப்ரி லாயிட் சமீபத்தில், ''பிரிட்டனிலுள்ள புதிய பள்ளிக்கூடங்கள் முன்னை விட நன்றாகப் பலன் அளித்துவருகின்றன. செலவாகும் பணம் வீண் போகவில்லை'' என்றார். அவர் முக்கியமாகக் கட்டிட அமைப்பு, அதற்கான செலவு இவைகளைக் குறித்தே, புதிய ஜூனியர் ஸ்கூல் ஒன்றைத் திறந்தபோது இப்படிப் பேசினார். இருந்தாலும், இப்போது பள்ளிக்கூடத்தில் குழந்தைகளுக்கு அளித்துவரும் கல்விப் பயிற்சிபற்றியும் அவர் சொன்னது பொருந்தும். பிரிட்டிஷ் கல்வி முறையில் சென்ற மகா யுத்த காலம் தொடங்குவதற்கு முன்பே அமைதியான பெரிய மாறுதல் ஒன்று ஏற்பட்டுவிட்டது.

நாட்டில் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் பரிபூர்ணமான கல்விப் பயிற்சி அளிப்பதே இதன் முக்கிய நோக்கம். குழந்தைகளின் தனித் தனி இயல்பையும் திறமையையும் இதில் நன்றாகக் காட்டச் சந்தர்ப்பம் இருக்கிறது. ஸெகண்டரி கல்விப் பயிற்சியின்போது இதன் பலன் தெளிவாகத் தெரிகிறது.

இப்போது பிரிட்டனில் ஒவ்வொரு குழந்தைக்கும் இலவச

காப்பிரைட்: 'மஞ்சரி'க்குப் பிரத்தியேகமாக இதை உதவியது:
பிரிட்டிஷ் இன்ஃபர்மேஷன் ஸெர்வீஸஸ், ஈஸ்டர்ன் ஹவுஸ், மான்ஸிங் ரோடு, புது டில்லி.

ஸெகண்டரி கல்விப் பயிற்சிக்குரிய வசதி உண்டு; இதோடு, ஏற்கனவே சென்ற நூற்றாண்டின் இறுதியிலிருந்து இலவச ஆரம்பக் கல்விப் பயிற்சியும் இருந்து வந்திருக்கிறது. இலவசமான இடவசதி, பள்ளிக்கூட நிர்வாகத்துக்கான மானியத் தொகை இவைகளும் கொடுத்து உதவுவதால், உயர்தரக் கல்விக்குத் தகுதி பெற்றிருந்தால், ஏழை மாணவ மாணவிகளும் சர்வகலாசாலையில் படிக்க நல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

சென்ற மகாயுத்தம் முடிவதற்குச் சற்று முன்னால் பார்லிமெண்டில் நிறைவேறிய ஒரு சட்டப்படி எல்லாக் குழந்தைகளுக்கும் இலவச ஸெகண்டரி கல்விப் பயிற்சி அளிப்பது என்று தீர்மானமாயிற்று; இது மகத்தான முயற்சியாகும். மேலும் மேலும் பள்ளிக்கூடங்கள் கட்ட வசதி அளிப்பதென்றால் எவ்வளவு முயற்சி வேண்டும்? ஆரம்பத்தில் இந்த மாதிரி முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. சென்ற பத்து ஆண்டுகளில் பிரிட்டனில் இப்படி ஏராளமான பள்ளிக்கூடக் கட்டிடங்களை நிறுவியிருக்கிறார்கள். சென்ற டிசம்பரில் 3,700 புதிய பள்ளிக்கூடங்கள் கட்டிப் பூர்த்தியாகியிருக்கின்றன; 20 லட்சத்துக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு அவற்றில் கல்வி பயில வசதி ஏற்பட்டிருக்கிறது, அடுத்தபடியாக, இந்தக் கல்வி முறையை நடைமுறையில் கொண்டுவருவது மிகவும் முக்கியமான அம்சம். என்னதான் முயன்றாலும் 30 குழந்தைகளை ஒரு வகுப்பில் வைத்துக்கொண்டு வெற்றிகரமாக அதை நடத்துவதென்றால் முடியுமா? அதுவும், உயர்தரக் கல்வி முறையிலிருந்து அசல் செயல் முறைக் கல்விவரையில் பல வகைக் கல்வி கற்பதில் குழந்தைகளுக்கு ஈடுபாடு இருக்கும்போது அதெப்படிச் சாத்தியம்? ஆகவே, இந்த மாதிரி எல்லா அம்சங்களும் பொருந்திய கல்வி முறையில் ஒவ்வொரு குழந்தையின் திறமையையும் கவனிக்கவேண்டியது அவசியமாயிற்று.

மூன்று வகையில் முயன்று இந்தச் சிக்கலுக்கு முடிவு கண்டிருக்கிறார்கள். முதல் வகை, கிராமர் ஸ்கூல் என்பது; இது சர்வகலாசாலையில் பட்டம் பெற உயர்தரக் கல்வி பயில விரும்பும் மாணவ மாணவிகளுக்காக வகுத்தது; அடுத்தது, ஸெகண்டரி மாடர்ன் ஸ்கூல்; இதில் பரந்த முறையில் பொதுக்கல்வி கற்பிக்கிறார்கள்; செயல் முறைக் கல்விக்கே இதில் முக்கியத்துவம் அளிக்கிறார்கள். மூன்றாவது வகை, ஸெகண்டரி டெக்னிகல் ஸ்கூல்; தொழில் துறை, விவசாயத்துறை இவைகளில் வேலை செய்வதற்கேற்ற பயிற்சி அளிப்பதே இதன் முக்கிய நோக்கம். இந்தமாதிரி அரசாங்கக் கல்வித் திட்டப்படி பயிலும் பிள்ளைகளுக்குப் பதினொரு வயசு வந்ததும், ஜூனியர் ஸ்கூலிலிருந்து மேலே சொன்ன மூன்று வகையான ஸெகண்டரி பள்ளிக்கூடங்களில் ஏதாவது ஒன்றுக்கு அவர்கள் மாறுகிறார்கள். அந்த அந்த ஸ்தலக் கல்வி அதிகாரிகளே பிள்ளைகளின் திறமையைக் கவனித்து இப்படி மாற்றத் தீர்மானிக்கிறார்கள்.

காம்ப்ரெஹென்ஸிவ் ஸ்கூல் என்பது மகாயுத்தத்துக்குப் பின் ஏற்பட்ட அபிவிருத்தி முயற்சியாகும். ஒரே இடத்தில் மூன்று வகை ஸெகண்டரி கல்விப் பயிற்சியும் இணைந்தது இந்தக் காம்ப்ரெஹென்ஸிவ் கல்வி முறை. இப்படிப் பொதுவான ரீதியில் இந்தக் காம்ப்ரெஹென்ஸிவ் பள்ளிகள் நடப்பதைப் பார்க்கவேண்டும்; ரசமாக இருக்கும். இந்த வகைப் பள்ளிக்கூடக் கட்டிடங்கள் பெரியவையாகவும் விசாலமாகவும் இருந்தாக வேண்டும். சுமார் 2,000 மாணவர்கள் இந்தமாதிரி பள்ளிக்கூடத்தில் படிப்பார்கள். சில பேர்-இவர்களுக்குக் குறைவில்லை-இவைகளைக் 'கல்வித் தொழிற்சாலைகள்' என்று குறை கூறுகிறார்கள். மற்ற வகைப் பள்ளிகளில் இருப்பதுபோல் இந்தக் காம்ப்ரெஹென்ஸிவ் பள்ளிகளில் நெருங்கி ஒருவரோடு ஒருவர் அந்தரங்கமாகப் பழக வாய்ப்பு இராது என்பது வாஸ்தவந்தான். என்றாலும், இந்த வகைப் பள்ளிக்

கூடக் கட்டிடம் பெரிதாகவும் விசாலமாகவும் இருப்பதால் இதனுல் சில நன்மைகளும் உண்டு. ஓர் உதாரணம்: கல்வித் திட்டத்தில் காணுத பல அம்சங்களுக்கு இதில் வாய்ப்பு இருக்கிறது. காம்ப்ரெஹென்ஸிவ் பள்ளிக்கூடங்களிலே பல துறைகளில் விருப்பங் கொண்ட மாணவர்கள் இருப்பதால் பல வகைச் சங்கங்கள், வேடிக்கை விளையாட்டுக்கள் நடத்த முடிகிறது. இப்படி ஏராளமான பேர் இருப்பதால் அதனுல் பொருள் வருவாயும் உண்டு. இருந்தாலும், இந்தக் காம்ப்ரெஹென்ஸிவ் கல்விமுறை பிரிட்டனில் பிரபலமாகும் என்று இப்போதே சொல்லிவிடுவதற்கில்லை. மற்ற வகைப் பள்ளிகள் 30,000 இருக்கின்றன என்ருல், இந்தக் காம்ப்ரெஹென்ஸிவ் பள்ளிகள் 30 தான் இருக்கின்றன, பிரிட்டனில். ஆயினும், அரசாங்கக் கல்வித் திட்டத்தில் ஏற்பட்ட அமைதியான மாறுதல் காரணமாகப் புதிய முறையில் நன்கு யோசித்து நடைபெறும் கல்வி ஸ்தாபனங்களுக்கு ரசமான ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது இந்தக் காம்ப்ரெஹென்ஸிவ் பள்ளி முறை.

பண்டிதர் போராட்டம்

உலகத்துக்கு இதுவே என் நோட்டீஸ்: என்னுடைய புனிதப் போராட்டத்தைக் கைவிட்டு விலகுகிறேன் என்று இதனுல் சகலமான ஜனங்களுக்கும் நான் அறிவித்துக்கொள்கிறேன். செய்திப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் நடக்கும் ஆபீஸ்களில் உட்கார்ந்து, அச்சுக்கு வரும் பிரதிகளைத் திருத்தி, வாசக மகாஜனங்களின் இலக்கணத்தை ஒழுங்கு படுத்த நானும் நாற்பது வருஷ காலமாக ஓயாமல் முயன்று பார்த்துவிட்டேன். மற்றச் சீர்திருத்தக்காரர்களுக்கெல்லாம் என்ன வெற்றி கிடைக்கிறதோ அதுதான் எனக்கும் கிடைத்திருக்கிறது. விஷயம் வரவர மோசமாகிக் கொண்டே வருகிறது.

ஒருமைக்குப் பன்மை போடுவது, பெயர்ச் சொல்லை வினைச் சொல்லாக உபயோகிப்பது, ஒரு பொருள் சொல்லை மறு பொருள் சொல்லாக ஆள்வது இந்தப் பிழைகளெல்லாம் நிகழ்ந்துகொண்டே யிருக்கின்றன.

இப்போது என் புனிதப் போராட்டத்தைக் கைவிட்டு விடுகிறேன். பொது மக்கள் குழாத்துக்குத் தன்னை அறியாமலே விசுவ ஞானம் ஒன்று இருக்கிறது. அந்த ஞானத்தினுல் பாஷையை அவர்கள் மாற்றிக்கொண்டே யிருக்கிருர்கள். இந்தச் சங்கதி எனக்குத் தெளிவாய்த் தெரிந்து விட்டது. அவர்களுடைய வேலையை நான் தடுத்து நிறுத்த முடியாது. பாஷை என்று தோன்றியதோ அன்று முதல் மக்களின் இந்த வேலை நடந்துகொண்டேதான் இருக்கிறது. இந்த மக்கள் வெள்ளம் என் போன்ற கூச்சல்காரர்களை இழுத்துக்கொண்டு போய்விடுகிறது. நாங்கள் கையையும் காலையும் உதைத்துக்கொண்டால் என்ன? வீரிட்டுப் புலம்பினுல் என்ன? நாங்களும் கடைசியிலே இந்த மக்கள் வெள்ளத்தின் வாலைப் பிடித்துக்கொண்டுதான் போகவேண்டி யிருக்கிறது. இன்னும் ஒரு பத்து வருஷம் சென்ருல், என்னை விடத் தூய மொழிக்காரர்களெல்லாங்கூட, இன்று எனக்கு வேதனை தரும் இலக்கணப் பிழைகளையெல்லாம் சகஜமாக ஏற்றுக்கொள்ளத்தான் போகிருர்கள்.

—ப்ரூஸ் ப்ளிவென், 'தி ஸாட்டர்டே ஈவினிங் போஸ்ட்'.

மறுபடியும் சூதாட்டம்

★

துச்சாசனன் பாஞ்சாலியின் துகிலை இழுத்து இழுத்துக் களைப்புற்றான். பாண்டவர் கோபத்தால் துடித்தார்கள். தர்மர் பேசாமல் இருந்தார். பாஞ்சாலி கூறுவாள்: ''துரியோதனா, நீ என்னை உட்காரும்படி உன் துடையைக் காட்டினாயே! உனக்கு மரணம் துடையில்தான். உன் தம்பி என்னைத் துன்புறுத்துகிறான். அவன் ரத்தத்தைப் பீமசேனர் குடிப்பார். கொடிய நெஞ்சம் கொண்டவன் கர்ணன். மகனுடனும் சுற்றத்தாருடனும் அவனை அர்ஜுனர் கொல்வார். அற்பன் சகுனி; தீய மனம் உடையவன்; அவனை உறவினரோடு சகதேவர் அழிப்பார்.''

இந்தச் சபதத்தை விண்ணோர் கேட்டு மகிழ்ந்தார்கள்; பூமாரி சொரிந்தார்கள். அர்ஜுனனை நினைத்து நடுக்கமுற்ற சபையில் நிச்சப்தம் நிலவியது.

திரௌபதியின் சொல் அர்ஜுனனின் சினத்தைத் தூண்டியது. ''திரௌபதியின் நிலையைக் கண்டு கட்டிலடங்காமல் பொங்கி வருகிறது என் கோபம். சபையோர் அனைவரையும் இப்பொழுதே கொல்வேன். நம் அரசரோ (தர்மர்) எப்பொழுதும் இரக்கம் உடையவர். என்னைத் தடுத்துக் கொண்டே இருக்கிறார். ஒரு நொடியில் பகைவர் அனைவரையும் யமனுலகுக்கு அனுப்புவேன்'' என்று கர்ஜித்து, கண் சிவக்க, வில்லை ஏந்தி, சபை நடுவே குதித்து எழுந்தான். பகைவர்களைப் பார்த்தான். பிரளயகாலத்து அக்கினியோ என்று சிலர் கருதினார்கள். தட்ச யக்ஞத்தில் தோன்றிய வீரபத்திரனோ என்று சிலர் அஞ்சினார்கள். சபையோர் பயத்தால் நடுங்கி உயிரற்றவர்போல் இருந்தார்கள். அர்ஜுனனையும் தர்மரையும் மாறிமாறிப் பார்த்தார்கள்.

தர்மர் கனிந்த கருணையுடன் அர்ஜுனனைச் சமாதானம் செய்து

மகாபாரதத்தில் வரும் உபாக்கியானங்களும் சரி, பாத்திரங்களும் சரி, பலவகை. ஒவ்வொரு கதையிலும் ஒரு பேருண்மையைக் கண்டறியலாம்; ஒவ்வொரு பாத்திர வர்ணனையும் தனித் தனிக் குணசித்திர மாகும்.

கொண்டு, ''அர்ஜுனா, யோசியாமல் எதையும் செய்யாதே! நம் புகழைப் பார்க்காதே! நானுந்தான் கர்ணனைக் கொல்ல நினைக்கிறேன். ஆனால் அவன் காலைப் பார்த்தால் என் கோபம் தணிந்து விடுகிறது. நீ உலகத்தாருக்காகக் கோபத்தை அடக்கிக் கொள்'' என்றார். அர்ஜுனன் கோபத்தைத் தணித்துக்கொண்டான். உலகமே சமாதானம் அடைந்தது. இதற்கிடையில் திருதராஷ்டிரனின் அரண்மனையில் அபசகுனங்கள் ஏற்பட்டன. அனைவரும் வருத்தமுற்றார்கள்; திருதராஷ்டிரன், ''மதியற்ற துரியோதனா, நீ அழிந்து போவாய்! கௌரவர் சபையில் ஒரு பெண்ணை, அதிலும் திரௌபதியை, பாண்டவரின் பத்தினியை, நீ இழுக்கலாமா?'' என்றான். தன் குலத்துக்கு நன்மையைக் கருதிப் பாஞ்சாலியைப் பார்த்துச் சமாதானமாகக் கூறினான்.

பிறகு ''பாஞ்சாலி, உனக்கு வேண்டியதைத் தருகிறேன், கேள். தருமத்தையே சரணடைந்த நீ என் மருமகள்மார் அனைவரிலும் மேலானவளாயிற்றே'' என்றான்.

''எந்த நிலையிலும் தர்மம் வழுவாத யுதிஷ்டிரர் அடிமைத் தனத்திலிருந்து விடுபடட்டும். என் மகனுக்கு அடிமையின் மகன் என்ற பெயர் வேண்டாம்'' என்றாள் பாஞ்சாலி.

திருதராஷ்டிரன் மேலும் தொடர்ந்து, ''கல்யாணி, உனக்கு ஒரே வரம் கொடுப்பதால் மட்டும் என் மனசு சமாதானம் அடையாது. மேலும் வேண்டியதைக் கேள். நான் தருகிறேன்'' என்றான்.

''தேருடனும் வில்லுடனும் பீமசேனர், அர்ஜுனர், நகுலர், சகதேவர் நால்வரும் அடிமைத் தனத்திலிருந்து விடுபடட்டும். இது நான் கேட்கும் இரண்டாவது வரம்'' என்றாள் திரௌபதி.



"என் மருமகள்மாரில் சிறந்த உனக்கு இரண்டு வரம் கொடுத்தால் போதுமா? போதவே போதாது. மேலும் வேண்டியதைக் கேள். தருவேன்" என்ருன் திருதராஷ்டிரன்.

"அரசே, பேராசை தர்மத்தை அழிக்கும். என் கணவன்மார் விடுபட்டுவிட்டார்கள் அல்லவா!" என்று அடக்கமாகச் சொன்ருள் திரௌபதி.

அப்பொழுது கர்ணன், "நீரில் மூழ்கும் பாண்டவருக்குத் திரௌபதி கரையேற்றும் கப்பலாருள்" என்று ஏளனமாகச் சொன்ருன். இதைக் கேட்டுப் பீமன் மனம் கொதித்தது; கர்ணன், 'பாண்டவருக்குப் பெண்கள்தான் கதி' என்று கூறுவதாகப் பீமன் எண்ணிருன். "பகைவரை இப்பொழுதே அழித்துவிடுகிறேன்" என்று சொல்லிக்கொண்டு தன் கதையைப் பார்த்தான். தர்மர் அவனைக் கையால் பிடித்துக்கொண்டு, "பீமா, வேண்டாம். பேசாமல் இரு" என்ருர் சமாதானமாக; கூப்பிய கைகளுடன் திருதராஷ்ரனிடம் வந்தார். "அரசே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்? தங்கள் உத்தரவுக்குப் பணிந்து நடக்கிருேம். எப்பொழுதும் தங்களுக்குப் பணிந்திருப்பதில்தான் எங்களுக்கு ஆசை" என்று வேண்டினர்.

அப்பொழுது திருதராஷ்டிரன் சொல்லுவான்: "அஜாத சத்துருவே, நீ உன் தம்பிமாருடன் ராஜ்யத்துக்குத் திரும்பிப் போ. உன் பணம் பண்டங்களை நீயே எடுத்துச் செல். நான் உனக்கு எவ்வளவோ நல்ல வார்த்தைகள் சொல்லி இருக்கிறேன். அவற்றை மறக்காதே! சிறந்த மனிதர் பகையைப் பாராட்டார். பேச்சில் எவ்வளவோ கொடிய சொற்களைத் துரியோதனுதியர் கூறினர்கள். உத்தமனுன நீ பதில் சொல்லவில்லை. என் உறவினரான உங்களைக் காண ஆசைப்பட்டேன்; என் மக்களின் பலத்தையும் சோதிக்க விரும்பினேன். அதனுல்தான் சூதாட்டத்தை நான் தடுக்கவில்லை. உன்னிடம் தர்மம் நிலைபெற்றுள்ளது. அர்ஜுனனிடம் வீரமும், பீமனிடம் பராக்கிரமமும், நகுலனிடம் சிரத்தையும், சகதேவனிடம் குரு சேவையும் நிலைத்துள்ளன. தர்மா, நீ இந்திரப்பிரஸ்தம் போய் வா! உன் சகோதரரான துரியோதனுதியரிடம் பகைமை பாராட்டாதே!"

தர்மர் தம்பிகளோடு, கதிரவனைப் போல் ஒளிரும் தேர்களில் ஏறிக்கொண்டு இந்திரப்பிரஸ்தத்துக்குப் புறப்பட்டார்.

துரியோதனன் இந்தச் செய்தி தெரிந்து வருந்தினுன்; கர்ணன் முதலியவர்களோடு கலந்து ஆலோசித்தான். தந்தையிடம் சென்று, "அர்ஜுனின் வீரம் லேசானதா? அர்ஜுனனை இப்பொழுது விட்டது நம் நாசத்துக்குக் காரணமாகி விடுமே! அவனுக்கு நிகரானவன் கார்த்தவீரியன் ஒருவன்தான்" என்று கூறிக் கார்த்தவீரியனின் வரலாற்றைத் தந்தைக்கு விளக்கினுன். திரௌபதியின் சுயம்வரம் முதல் காண்டவ தகனம் வரையில் அர்ஜுனனுடைய ஒவ்வொரு வீரச் செயலையும் தந்தைக்கு எடுத்துக் காட்டினுன். "பாண்டவர்களோடு போர் புரிந்தால் நம்மவர் மடியத்தான் நேரும்" என்று விரிவாக எடுத்துக் காட்டினுன். தந்தை, "வீரர்களான பாண்டவர்களுடன் பகைமை பாராட்டாதே! அவர் நட்பு உனக்கு நன்மை அளிக்கும்" என்று உபதேசித்தான். அதைத் துரியோதனன் கேட்கவில்லை. மீண்டும் சூதாடத் தர்மரை அழைக்கும்படி தந்தையிடம் சொன்ருன். புத்திரபாசத்தால் கட்டுண்ட திருதராஷ்டிரன் மனம் இசைந்தான். "குலம் அழியக் காரணமாகும் சூதாட்டம்!" என்று காந்தாரி முதலியோர் பலவாறு தடுத்தும் திருதராஷ்டிரன், "குலம் அழிந்தாலும் அழியட்டும். என் மனத்தை மாற்றிக்கொள்ள என்னுல் முடியவில்லை. என் மைந்தர்கள் பாண்டவர்களுடன் சூதாடட்டும்" என்று தீர்மானமாகக் கூறிவிட்டான்.

உடனே பிராதிகாமி துரியோதனனின் உத்தரவை, வழியில் சென்றுகொண் டிருக்கும் தர்மரைத் தொடர்ந்து போய்த் தெரி

வித்தான். "சபை கூடியிருக்கிறது. பாச்சைக் காய்கள் வைக்கப் பெற்றிருக்கின்றன. தங்கள் தந்தை தங்களை மீண்டும் சூதாட அழைக்கிறார்" என்றான்.

"மக்கள் விதி வசத்தால் நன்மை தீமைகளை அடைகிறார்கள். அவற்றைத் தவிர்க்க முடியாது. கிழவர் சூதாட அழைக்கிறார். அதன் விளைவு அழிவுதான் என்பது தெரியும். இருந்தாலும் மறுக்க இயலாதவனாக இருக்கிறேன்" என்று கூறிக்கொண்டு தர்மர் தம்பிமாரோடு திரும்பினார். சகுனியின் மாயை அவருக்குத் தெரியாதா? தெரிந்தே மீண்டும் சபைக்குள் நுழைந்தார். பாண்டவர்களின் நண்பர்கள் மனம் நொந்தது. விதியின் நிர்ப்பந்தத்தால், உலகமே அழியத்தான் போலும், பாண்டவர் சூது ஆடும் சபையில் மீண்டும் அமர்ந்தார்கள்.

சகுனி அவர்களைப் பார்த்துச் சொல்வான்; "தர்மா, கிழவர் உங்களுக்குப் பணம் பண்டங்களைத் திருப்பி கொடுத்தார்; உண்மை தான். ஆயினும், அவை நாங்கள் முன்பே வென்றவைதானே? ஆகவே, அவற்றைப் பணயமாக வைக்க வேண்டாம். வேறொரு பணயம் கேள்: நம்மில் யார் தோற்றாலும் அவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் காட்டில் மான்தோலைக் கட்டிக்கொண்டு வாழவேண்டும். பதின்மூன்றாம் ஆண்டு ஒருவருக்கும் தெரியாமல் மறைந்து வாழவேண்டும். தெரிந்துவிட்டால் மீண்டும் பன்னிரண்டு ஆண்டுகள் காட்டில் இருக்கவேண்டும். நாங்கள் வென்றால், நீங்கள் பாஞ்சாலியோடு காட்டில் இருக்கவேண்டும். நீங்கள் வென்றால், நாங்கள் அதே மாதிரி செய்கிறோம். இந்த ஏற்பாட்டில் சூதாடுவோம். இதைக் கேட்டுச் சபையோர், "பாண்டவருக்குப் பின்னால் விபரீதம் நேரும் என்று தெரியவில்லையே!" என்று கூறி வருத்தம் அடைந்தார்கள். தர்மர், மக்கள் பலவாறு தம் சூதாட்டத்தை ஒப்பாமல் கூறும் வார்த்தையைக் கேட்டும் அதற்குச் செவி சாய்க்க வில்லை. கூச்சத்தாலும் தர்மத்துக்குக் கட்டுபட்டிருந்ததாலும் சூதாடத் துணிந்தார். கௌரவருக்கு இந்தச் செயல் அழிவைச் செய்யாமல் இருக்கவேண்டும் என்று தமக்குள் கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டார். "சகுனி, என்னைப் போல் தர்மத்தை விடாமல் கடைப்பிடிப்பவன் இவ்விதம் நீ சூதாட அழைத்தால் பின் வாங்குவானா?.. ஆடுகிறேன்" என்றார்.

இப்படி விதியின் பலத்தால் தூண்டப் பெற்ற தர்மர், பீஷ்மர், துரோணர், விதுரர், கிருபர், சஞ்சயர், காந்தாரி, குந்தி, பீமன், அர்ஜுனன், நகுலன், சகதேவன், விகர்ணன், திரௌபதி, அசுவத்தாமன் முதலியோர் சேர்ந்து தடுத்தும் நிற்கவில்லை. தேவர்களின் காரியம் நிறைவேற வேண்டும் போலும்! சகுனியிடம், "வனவாசத்தைப் பணயமாக வைத்து ஆடுவோம்" என்றார். சொக்கட்டானை உருட்டி ஆடினார்கள். சகுனி, "நான் ஜயித்தேன்" என்றான்.

உடனே பாண்டவர்கள் காட்டுக்குப் புறப்பட ஆயத்தம் செய்தார்கள். மான் தோலை உடுத்துக்கொண்டார்கள். அவர்களைப் பார்த்துத் துச்சாசனன் துச்சமாகப் பேசினான்; "தங்களுக்கு மேலானவர் இல்லை என்று பாண்டவர்கள் இறுமாந்திருந்தார்கள். இப்பொழுது தங்கள் நிலையைக் கவனிக்கட்டும். அதோடு, துருபதன் பாண்டவருக்குப் பெண்ணைக் கொடுத்தது பெரிய முட்டாள்தனம். செயலற்ற நபும்சகர்களை அல்லவோ பாஞ்சாலி கணவன்மாராக அடைந்தாள்! பாஞ்சாலி, நீ வேறு யாரையாவது மணந்துகொள். கௌரவர்களில் யாரை உனக்குப் பிடித்ததோ அவரை மணந்துகொள். உன் கஷ்டம் நீங்கிவிடும். உயிரற்ற மிருகங்கள் பாண்டவர்கள். அவர்களுக்குப் பணிந்து நீ அடையக்கூடிய லாபம் என்ன?" என்றெல்லாம் பிதற்றினான்.

பீமன் துச்சாசனனையும் அவனைச் சார்ந்தவர்களையும் கொல்வதாக மீண்டும் பிரதிக்ஞை

செய்தான். அர்ஜுனன், ''செயலில் காட்டிக்கொள்வோம். வாயால் பேசவே வேண்டாம்'' என்று அவனைத் தடுத்தான். முன்போலவே, கௌரவரைக் கொல்வதாக அர்ஜுனன் முதலியோர் சபதம் செய்தார்கள்.

தர்மர் அனைவரிடமும் விடைபெற்றுக்கொண்டு காட்டுக்குப் புறப்பட்டார். விதுரர், ''குந்தி என் வீட்டில் இருக்கட்டும்; காட்டுக்குச் செல்லவேண்டாம்'' என்று கூறி நிறுத்தினர். பாண்டவருக்குத் தக்க அறிவுரைகளைக் கூறினர். தர்மர் தம்பிமாருடனும் மனைவியுடனும் காடு செல்லும் கோலத்தைக் காண வருத்தம் சூழக் குடிமக்கள் மாடியில் ஏறினர்கள். மரவுரியும் மான் தோலும் உடுத்து, கால் நடையாகச் செல்லும் தர்மரைப் பார்த்துப் பலவாறு புலம்பினர்கள். ''முன்பு சதுரங்க சேனை பின் தொடர்ந்து செல்ல வந்த தர்மர் பாஞ்சாலியுடன் நடந்து செல்கிருரே! தம்பிமாரையும் ராஜ்யத்தையும் உதறிவிட்டுத் தர்மத்தையே கடைப்பிடித்த யதிஷ்டிரர் காடு செல்கிருரே! ஆகாயத்தில் செல்லும் சித்தர் முதலியோருங்கூட எவளைப் பார்க்க முடியாதோ அந்தப் பாஞ்சாலியை நகரத்தின் நடுத் தெருவில் அனைவரும் காண வேண்டியிருக்கிறதே! அவள் உடல் வெயிலில் வாடப் போகிறதே! மழையில் நனைந்து குளிரில் வருந்தப் போகிறதே! சாதாரண மகனைப் பிரியக்கூடத் தாய்க்கு மனம் வராது. உலகத்துக்கே சிறந்து விளங்கும் இந்த மகனை விட்டுப் பிரியக் குந்தி எவ்வாறு துணிந்தாள்?'' என்றெல்லாம் பேசிக் கொண்டார்கள்.

குந்தி, பாஞ்சாலியைப் பார்த்து, ''குழந்தாய், இந்தத் துயரத்தை நினைத்து வருந்தாதே! பெண்களின் தர்மம் உனக்குத் தெரியும். நான் கூறவேண்டாம் உனக்கு. கணவன்மாரைக் கவனித்துக்கொள் என்று நான் உனக்குச் சொல்வதும் அநாவசியமே. உன் சக்தியால் கௌரவர் எரியாதது அவர்கள் அதிருஷ்டம். நான் உனக்கு ஆசி கூறுகிறேன். நீ போய் வா. விரைவில் நன்மையே கிட்டும். சகதேவனைக் காட்டில் சரியாகக் காப்பாற்றி வா! அவன் மனம் சோர்ந்து விடக்கூடாது'' என்று சொன்னுள்.

பாஞ்சாலி, ''அப்படியே ஆகட்டும்'' என்று கூறிக் கண்ணீர் பெருக ரத்தம் தோய்ந்த ஓர் ஆடையுடனும் அவிழ்ந்த தலையுடனும் சென்ருள். அழுதுகொண்டே போகும் பாஞ்சாலியைக் குந்தி சிறிது தூரம் தொடர்ந்து சென்ருள்.

காணமல் போன தபால் தலை

''எங்கே, நாவை 'ஆ' என்று நீட்டுங்கள், புரொபஸர், பார்க்கலாம்'' என்ருர் டாக்டர்.

அப்படியே, ''ஆ!'' என்று புரொபஸர் நாவை நீட்டினர்.

''அடடா! நாக்கு என்னவோபோல் நிறம் மாறியிருக்கிறதே...இல்லை, சற்று அப்படியே இருங்கள்'' என்று கூறிய டாக்டர், சற்றுக் கூர்ந்து புரொபஸரின் நாவைக் கவனித்தார். பிறகு தொடர்ந்து, ''ஓஹோ! நாவில் என்னவோ ஒட்டிக்கொண் டிருக்கிறது - மூன்று காசுத் தபால் தலை'' என்ருர்.

''அட ஆண்டவனே! அதைத்தானே நான் எங்கேயெல்லாமோ தேடிக்கொண் டிருந்தேன்! இங்கேயா இருக்கிறது அது?''

—'ஹெல்த்', சென்னை-1

சர்மத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்வதே இதற்கு வழி

மேனி அழகு

சாவித்திரி

நாகரிக உலகத்தில் பெண்களுக்கு அழகு முக்கியமானது. உடலின் பகுதிகளில் சர்மம் முக்கியமானது. அதை அழகாக வைத்துக்கொள்ளவே எல்லாரும் விரும்புவார்கள்.

சர்மம் மேல் பார்வைக்குச் சர்வ சாதாரணமாகத் தோன்றுகிறது. இதைப் பரீட்சித்துப் பார்த்தால், இதன் அமைப்பு மனிதனின் கற்பனைக்கு எட்டாத அதிசய முறையில் அமைந்திருக்கிறதென்பது புலனாகும். சர்மத்தின் தொழிலும் நமக்கு ஆச்சரியத்தை விளைவிக்கக் கூடியதே. சரிசமமானதும் அழகு பொருந்தியதுமான தோற்றத்தை உடலுக்கு உண்டாக்குவது சருமமே. அதோடு சருமத்துக்கு உள்ளே இருக்கும் உடலின் பகுதிகளுக்கு ஊறு வராமல் காப்பதும் இதுவே. வேர்வையை வெளியே தள்ளிவிட இது உதவுகிறது. உடலின் கழிவுப் பொருளான பல விஷப்பொருள்களைச் சர்மம் வெளியேற்றுகிறது. உடலைச் சரியான சீதோஷ்ண நிலையில் வைப்பதில் இது முக்கியமானது. பல நரம்புகளின் முனைகளைத் தனக்குள் அடக்கிக் கொண்டு, சூடு, குளிர்ச்சி, நோவு முதலிய பரிச உணர்ச்சிகளை மூளைக்கு எட்டவைப்பதும் இதன் வேலையேதான்.

சர்மத்தின் அமைப்பைச் சாமானியமாகச் சொல்லிவிட முடியாது. ஆனாலும் வெளிப்பகுதியின் அடித்தளத்தில் 'பிக்மெண்ட்' என்னும் நிறப் பொருள் இருக்கிறது. இது தான் சர்மத்துக்குக் கறுப்பு, மஞ்சள், சிவப்பு, வெள்ளை என்ற நிறங்களைக் கொடுக்கிறது.

சர்மத்துக்குக் கீழே இருக்கும் இந்த நுண்ணிய நிறப்பொருளை மிகவும் ஜாக்கிரதையாகப் பாதுகாக்க வேண்டும். இல்லாவிட்டால் மேனி அழகு அழிந்துவிடும். பெண்களின் அழகுக்கெல்லாம் அழகு செய்வது அழகிய சர்மம். இது மிருதுவாய் இருக்க வேண்டும். சர்மத்தை மிருதுவாக வைத்துக்கொள்வதோடு உடலில் உள்ள குறைகளை நீக்கிக் கவர்ச்சியாக வைத்துக்கொள்வதையும் பெண்கள் பெருமையாகக் கருதுகிறார்கள். ஆரோக்கியத்தை இழந்த சர்மம் உடலை விகாரப்படுத்திவிடும்.

சர்மத்தைக் காக்க வெளிப்புறப் பாதுகாப்பே போதுமென்று சிலர் நினைக்கிறார்கள். இது தவறு. தோலை உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் கவனித்துப் பாதுகாக்கவேண்டும். உடலின் உட்புறத்துக் கோளாறுகள்-முக்கியமாக, ஆகாரக் குழாய்களில் ஏற்படும் நோய்கள் - சர்மத்தையே பாதிக்கும். ஆரோக்கியத்துக்கு எதிரான உணவுகளின் தீமைகள் சர்மத்திலேயே பிரதிபலிக்கும். தடிப்பு, நிறமாறுதல், கொப்புளம், பரு இவை எல்லாம் மலச்சிக்கலின் பலனே. தித்திப்புப் பண்டங்களையும் கொழுப்புப் பொருள்களையும் அதிகமாய் உண்பவர்களின் சர்மம் தடித்துவிடுவது சகஜம். டீ, காபி போன்ற பானங்களை அதிகமாகக் குடிப்பது, சாப்பாட்டுக்கு இடையில் சிற்றுண்டிகளைச் சாப்பிடுவது, வேளை கெட்ட வேளையில் உண்பது - இந்தமாதிரி பழக்கங்கள் நிச்சயமாகச் சர்மத்தின் அழகைக் கெடுத்துவிடும்.

மிதமான சாதாரண உணவே சிறந்தது. பழம், காய்கறிகள், தண்ணீர் இவற்றை நிறைய உட்கொண்டால், சர்மத்தை மிருது

மூலம்: பிரஜா மத (கன்னடம்: 23-2-'58), பங்களூர்]

வாய் வைத்துக்கொள்ளலாம்; இழந்துபோன மிருதுத்தன்மையையும் திரும்பப் பெறலாம்; சர்மத்தின்மேல் ஏற்பட்ட விகாரத்தை நீக்கவும் இது உதவியாக இருக்கும். பரிசுத்தமான காற்று, தகுந்த உழைப்பு இரண்டும் சர்மத்தை மிருதுவாக வைத்துக் கொள்ள முதல் படியாகும். 'உழைப்பு எதற்கு?' என்று சிலர் ஆச்சரியப்படலாம். உழைப்பினுல் வேர்வை விடும். உடலில் தங்கியிருக்கும் அசுத்தப் பொருள்கள் அந்த வேர்வையால் வெளிப்பட்டு விடும்; சர்மம் சுத்தமாகும்.

சர்மத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும். வேர்வைக்குப் பின் தங்கிய அழுக்கோ மயிர்க்கால்களில் தங்கிய கொழுப்புக் கழிவுப் பொருள்களோ உடம்பில் அங்கங்கே நின்றுவிடாமல் கவனித்துக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் இவை மயிர்க்கால்களை அடைத்துக்கொள்ளும்; கழிவுப் பொருள்களை உடலிலிருந்து வெளியேறவிடாமல் தடுத்துவிடும். இதன் பலனுக, ஆபத்துக்கிடமான விஷக் கிருமிகள் உடலில் குடியேறி, அரிப்பு, எரிச்சல் முதலிய தொந்தரவுகளைத் தரும். உடலை நன்ருய்ச் சுத்தம் செய்துகொள்வதால், சர்மத்தில் தங்கிய எண்ணெய்ப் பிசுக்கு, கிருமி, தூசி எல்லாம் அகன்று, உடலுக்கு மென்மையும் ஆரோக்கியமும் உண்டாகின்றன.

கிராமங்களில் ஆவி பறக்கும் வெந்நீரில் குளிப்பது வழக்கம். இது தவருன முறை. வெதுவெதுப்பான வெந்நீர் சர்மத்துக்குச் சஞ்சீவி. அழுக்குப் போகத் தேய்ப்பதற்குப் பொன்னுலங் கொட்டை, சீயக்காய், சோப் இவற்றில் எதை யாவது உபயோகிக்கலாம். உடலின் எண்ணெய்ப் பிசுக்கையும் அழுக்கையும் அகற்றுவதில் வெது வெதுப்பான வெந்நீர் மிகச் சிறந்தது. வெதுவெதுப்பான வெந்நீரின் சூடு உடம்பின் சூட்டுக்குச் சமமான சூடு. எனவே, இந்த வெந்நீரால் உடம்புக்குச் சுகமாகவும் இருக்கும். இது தோலை ஒட்டிய ரத்தக் குழாய்களை ஊக்கி ரத்த ஓட்டத்தை அதிகப்படுத்தும்; சர்மத்தில் தங்கிய கழிவுப்பொருள்களை ரத்தத் துக்கு இழுத்துக்கொண்டு போய், வியாதிகளிலிருந்து சர்மத்தைக் காக்கும்.

கிணற்று நீரிலும் குளத்து நீரிலும் உப்புப் பொருள்கள் கலந்தே இருக்கும். அது உடலுக்கு நல்லதல்ல. அதனுல் உப்புத் தண்ணீரைச் சுத்த ஜலமாக மாற்ற வழி கண்டுபிடிக்க வேண்டும். குளித்த பின் உடலுக்கு, ஆரோக்கியமான 'டாயிலட் பவுடர்' ஒத்திக்கொள்வது நல்லது. இங்கே ஒரு விஷயத்தைச் சொல்லவேண்டியிருக்கிறது. தண்ணீரில் குளித்தால் சர்மம் சுருங்கும். உடனே நரம்பு மண்டலங்கள் சுறுசுறுப்பு அடைகின்றன. இது சர்மத்துக்கு விரும்பத் தகுந்த உழைப்பே. இதனுல் தோலுக்கு நல்ல வலிவு ஏற்படுகிறது. ஆனுல் மெலிந்தவர்களும் இதய நோய் உள்ளவர்களும் இருமல் உள்ளவர்களும் இந்தப் பரீட்சைக்கு உட்படக் கூடாது. யாருக்காவது குளிர்ந்த நீரால் உண்டான குளிர் சில விநாடிகளில் சரியாகிவிட்டாலும், தண்ணீர் பட்டதும் சர்மத்துக்கு ஏற்பட்ட நீலநிறம் சில விநாடிகளில் குங்கும நிறத்துக்கு மாருவிட்டாலும், அவர்கள் தங்களுக்குத் தண்ணீரில் ஸ்நானம் ஒத்துக்கொள்ளாதென்று அறிந்து, அந்த வழக்கத்தை விட்டுவிட வேண்டும். இல்லாவிட்டால் இது திடீரென்று உயிருக்கு ஆபத்தை விளைவிக்கலாம். அதனுல் தண்ணீரில் ஸ்நானம் செய்து ஒத்துக் கொள்ளாதவர்கள் வெதுவெதுப்பான வெந்நீரில் சுகஸ்நானம் செய்யப் பழகவேண்டும்.

பாங்கர் யார்?

உங்களுக்குப் பணத் தேவையே இல்லை என்பதைத் திருப்திகரமாக நீங்கள் ருசுப்பித்துவிட்டால் உங்களுக்குக் கடன் கொடுக்கிறவர்தான் பாங்கர்.

—'பென்னி நிக்கோலஸ்'

ஐஸ் பெட்டி வாங்க ஏழைக்குக் கட்டுமா?
அவனுக்குக் குளிர் நீர் தரும் கருவி இதுவே.

மண் கூஜா

கே. ஏ.

ஏப்ரல் மாதத்தின் முதல் பகுதியில் விழும் மழைத் துளிகளின் மண்வாசனையை நினைவூட்டும் வாசனைப் பொருள் ஒன்று பிரான்சில் பிரசித்தி பெற்றுவிட்டது. அந்தப் பொருளைக் கண்டுபிடித்து, வியாபாரத்தில் இன்றியமையாததாகச் செய்த பெருமை மூக்கையே சாரும். ஆனால் இந்தியக் குடித்தனத்தின் எஜமானி இதை முதலிலேயே கண்டு பிடித்துவிட்டாள். இந்த வாசனையோடு கூடிய தண்ணீரைத் தயாரிப்பதை அவள் அநாதிகாலமாகவே கையாண்டு வருகிறாள். அதன் பலனாகவே இன்று நம் நாட்டில் வீட்டுக்கு வீடு, மண் கூஜாவில் தண்ணீரை நிரப்பிக் குடிப்பது வழக்கமாய் இருக்கிறது.

கோடைக்காலம் தொடங்கியவுடன், நெருப்பு ஜ்வாலையாக வெயில் எரிக்கிறது. அந்தச் சமயத்தில் ஏழை ரெஃப்ரிஜெரேடரை எங்கே தேடிப்போவான்? பானையே அவனுடைய 'ரெஃப்ரிஜெரேட்டர்.' சாலையின் ஓரத்தில் ஒரு மரம் இருந்தால் போதும்; அங்கே ஒரு மனிதன் தண்ணீர்ப் பந்தல் வைத்துத் தருப்பூசிப் பழங்களைக் கடை பரப்பிவிடுவான். தெருவோடு போகும் மனிதர்கள் ஜில்லென்ற பழத்துக்கும் பானைத் தண்ணீருக்கும் ஆசை கொண்டு அங்கே கூடிவிடுவார்கள். குடி தண்ணீரின் ஜிலுஜிலுப்போடு விளாமிச்ச வேரின் 'கம்' என்ற வாசனையும் சேர்ந்தால் கேட்க வேண்டுமா?





கூர்ஜரத்தில் தயாரிக்கும் 'போரஸ்' வகை மண்கூஜா, குடிநீரை ஜில்லென்று வைப்பதில் மிகச் சிறந்தது. இந்தக் காலத்தில் யந்திரமூலமாகவும் மின்சார சக்தியாலும் குடிதண்ணீரை ஜில்லென்று வைக்க முயலுகிறார்கள். ஆனாலும் ஜனங்கள் மண் கூஜாவில் நிரப்பிய தண்ணீரையே பெரிதும் விரும்புகிறார்கள்.

விளாமிச்சை ஏராளமாகப் பயிராகும் வட நாட்டில் குடி தண்ணீருக்கு அதன் வேரை ஊற வைப்பதால் வாசனை ஏற்றுகிறார்கள். தென்னாட்டில் அதையோ அதற்குப் பதிலாகக் கேசரியையோ கலந்து குடி தண்ணீரைப் பானையில் இட்டு மூடிவைத்து உபயோகிக்கிறார்கள். முதலில் வேரையோ,

காப்பிரைட்: கர்மவீர் (கன்னடம்: 30-3-'58), ஹுப்ளி.

வாசனையையோ பானையில் மூடி வைத்துச் சில நிமிஷங்களுக்கப்புறம் அதில் தண்ணீரை ஊற்றி வைப்பார்கள். இதனால் தண்ணீர் சீக்கிரமாக வாசனையை ஏற்கிறது.

கறுப்பு மண்ணாலும் செம்மண்ணாலும் செய்த கூஜாக்கள் இருக்கின்றன. கறுப்பு நிறக் கூஜாவுக்கு நாட்டுப்புறங்களில் நல்ல கிராக்கி இருக்கிறது. பட்டண வாசத்தில் சிவப்பு நிற மண் கூஜாவையே அதிகமாக உபயோகிக்கிறார்கள்.

சிவப்பு நிறக் கூஜாக்களை அநேகமாகக் கறுப்பு நிற நகாசு வேலையால் அலங்கரிப்பார்கள். இந்த வேலைப்பாடு அபூர்வமான கவர்ச்சியோடு அமைந்திருக்கும். சில சமயம் அவற்றை வெள்ளை அல்லது ஆழ்ந்த மஞ்சள் நிறத்தாலும் அழகுபடுத்தியிருப்பார்கள். இந்த முறைகள் சிறப்பாகக் கூர்ஜரத்திலேயே வழக்கில் இருக்கின்றன. வடநாட்டிலும் மண் கூஜாவை வண்ண வேலைப்பாடுகளால் சிறப்பிக்கிறார்கள். அவை பாரசீக வேலைப்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கின்றன.

இந்த மண் கூஜாக்களுள் சிறந்த வேலைப்பாடு நிரம்பியவை, ஹைதராபாதிலிருந்து வருகிறவை தான். கடைகளில் தென்னாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வரும் மண் கூஜாக்கள் கிடைக்கின்றன. கலைத்திறமையைக் காட்டும் வேலைப்பாடுகள் இவற்றிலும் நிரம்பியிருக்கின்றன. இவற்றில் சில வகைகளில் நகாசு வேலைப்பாடுகளெல்லாம் செய்திருக்கிறார்கள். இந்த வகைக்கு நல்ல கிராக்கியும் இருக்கிறது. ஆனால் இவற்றைத் தயாரிக்க மிகுந்த உழைப்பும் ஜாக்கிரதையும் வேண்டியிருக்கின்றன. சாதாரணமாக இவற்றைச் செய்வதற்கு முன்பே, மாதிரி ஒன்றைத் தயாரிப்பார்கள். பாரிஸ் பிளாஸ்டரால் இந்த மாதிரி அச்சுகள் தயாரிப்பார்கள். நகாசு வேலைக்கு வேண்டிய பொருள்களை நனைத்து அவற்றைக் கூஜாக்களின் மேல் இணைத்து அதற்கு மேல் நயம் கொடுப்பார்கள். இவற்றைக் காயும் வரையில் தனியாக வைத்திருந்து பிறகு சூளையில் இடுவார்கள்.

இவற்றுக்குள் எல்லாருக்கும் அதிகமாகப் பிடித்த மாதிரி, கெண்டியின் சாயலில் அமைந்திருப்பது. கெண்டியின் மூக்கு ஓர் எருதின் முகத்தைப் போல் இருக்கும். சில கூஜாவின் பிடிகளில் பலவிதமான சித்திர வேலைப்பாடுகள் செய்திருப்பார்கள். எருதின் முகத்தைப் போலவே வேறு முகங்களையும் அமைப்பதுண்டு. ஆனால் அவை அபூர்வமாகவே இருக்கும். பானை செய்யும் தொழிலாளிக்கு அந்த மாதிரிகளை அமைப்பதில் அவ்வளவு கவர்ச்சி தோன்றுவதில்லை. ஜனங்கள் எருதைப் புனிதமாகக் கருதுகிறார்கள். பானைக்காரன் நெருங்கிப் பழகும் பிராணிகளில் எருது முக்கியமானது. இதனால்தான் எருதின் முகத்தை அதிகமாக அவன் அமைத்துவிடுகிறான். நடு வயிற்றில் சித்திர வேலைகள் செய்திருக்கும் கூஜாக்கள் சிறந்தவை. இவற்றை ஹைதராபாதில் மட்டுமே தயாரிக்கிறார்கள். குயவன் செதுக்கு வேலைகளைச் செய்துவிட்டு வெள்ளி வர்ணத்தை நிரப்புகிறான். அதனால் அது மூங்கிலில் பர்மாக்காரர் செய்யும் வேலையைப்போல் இருக்கிறது.

சாதாரணமான மாதிரிகளில் உருண்டை வடிவமே அதிகமாகக் கிடைக்கிறது. இது எல்லா ஊரிலும் அதிகமாகக் கிடைக்கும். அதிக அளவு தண்ணீரும் கொள்ளும். சாதாரணக் கூஜாக்களும் சரி, வேலைப்பாடமைந்த கூஜாக்களும் சரி, சாதாரண விலைக்குக் கிடைக்கின்றன, அதனால் இதை ஏழையின் 'ரெஃப்ரிஜெரேட்டர்' என்று சொல்கிறார்கள்.

விருப்பு வெறுப்பு வேண்டாமா?

விருப்பு வெறுப்பே இல்லாமல் ஒருவன் நடந்துகொண்டால், அவனைக் கோழை என்று ஜனங்கள் நினைத்துவிடுகிறார்கள்.

—ஃப்ராங்க்ளின் பி. ஜோன்ஸ்

ஜெர்மன் கதை :

லட்சம் தந்த பரிசு

மூலம்: ஹெர்பெர்ட் மலேச்சா

தெலுங்கு: என். வி. சர்மா

தமிழ்: சீதா தேவி

பாஸஞ்சர் வண்டி ஸ்டேஷனுக்குள் நுழைந்து நிற்கும் போதே ரெட்லுஃப் வண்டியிலிருந்து இறங்கி, 'விடு, விடு' என்று வெளியே நடந்தான். அவன் அந்த ஊருக்குப் புதியவன் அல்ல. ஒரு காலத்தில் ஊரின் மூலை முடுக்குகளிலெல்லாம் புகுந்து புறப்பட்டவன். கண்டவர்களையெல்லாம் பயமுறுத்த அவன் கையாண்ட முறைகளை நினைத்தாலே, உடம்பெல்லாம் நடுங்குகிறது. அந்தக் காலம் வேறு; இந்தக் காலம் வேறு. காலத்துக்கேற்றபடி வேஷம் போடவேண்டும் அல்லவா? இந்தச் சூழ்நிலைக்குச் சரியாக, கவனித்து முன்னேற்பாடுகளையெல்லாம் செய்துகொள்ள வேண்டும் என்னும் ரகசியம் ரெட்லுஃப்புக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. அதனால் அவன் எவ்வளவுதான் அவசரமாக நடந்தாலும் நாலு பக்கமும் கவனித்துக் கொள்வதை மட்டும் மறக்கவில்லை. எல்லாம் தான் போட்ட திட்டப்படியே நடப்பதை அறிந்து திருப்தியாக ஒரு பெருமூச்சு விட்டான்.

அவனுடைய அதிருஷ்டத்துக்குத் தகுந்தாற்போல், ஒரு டாக்ஸி அப்போது அவனுக்குப் பக்கத்தில் வந்து நின்றது. டாக்ஸியைக் கூப்பிட்டு, தான் போகவேண்டிய விலாசத்தை டிரைவரிடம் சொல்லிவிட்டு, ரெட்லுஃப் அதில் ஏறி உட்கார்ந்தான். ஸ்டேஷனிலிருந்து டாக்ஸி வெளியே வந்தது. பல சந்துகளைக் கடந்து ஹைரோட்டுக்குப் பாய்ந்து வந்தது. ரோட்டிலும் இரு பக்கத்துப் பிளாட்பாரங்களிலும் எள் போட்டால் எள் விழாத கூட்டம். ஜனங்கள் வழி விட்டால்தானே டாக்ஸி நகரும்! டிரைவர் கொண்டை கிழியக்கத்தினான்; ஹாரனை அமுக்கினான். அந்தக் கூட்டத்தில் அவனை யாரும் லட்சியமே செய்யவில்லை. அதிகப்படி நெருக்கம் உள்ள இடங்களில் போக்கு வரத்தைச் சமாளிக்கப் போலீஸ் இருந்தது. போலீஸ்காரர் இருக்கும் சந்திப்பு இடங்களில்மட்டும் வண்டிகள் ஒழுங்காகப் போய்க்கொண்டிருந்தன. அவர்களைத் தாண்டி முன்னேறியது டாக்ஸி.

மறுபடியும் மனிதக் கடல் கொந்தளித்து எழுந்தது. டிரைவர் அலுத்துச் சலித்துவிட்டான். நிமிஷத்துக்கு நிமிஷம் 'பிரேக்' போடவேண்டியிருந்தது. வழியில் தன்னை யாராவது கண்டு பிடித்துவிடுவார்களோ, அதனால் என்ன ஆபத்து விளையுமோ என்று ரெட்லுஃப் நடுங்கிக்கொண்டேயிருந்தான். அப்படித் திடீர் 'பிரேக்' போடுவதால் மன அமைதி கெடுவதோடு நிற்கவில்லை; உடல் எலும்புகளும் துண்டு துண்டாய் நொறுங்குவதுபோல் அவனுக்குத் தோன்றியது. முதலில் அந்த யமவாதனையை ஒருவாறு சகித்துக் கொண்டான்; ஆனால் எவ்வளவு நேரம் இந்தச் சித்திரவதையைச் சகிக்கமுடியும்? டிரைவரைக் கூப்பிட்டு, ''ரஸ்தாவில் ஏன் இவ்வளவு கூட்டம்?'' என்று கேட்டான். சுற்றிலும் இருந்த இரைச்சலில் அவனுடைய கேள்வி டிரைவரின் காதில் விழவே இல்லை.

அதற்குமேல் ரெட்லுஃப்புக்குப் பொறுக்க முடியவில்லை. இப்படி எறும்புபோல் ஊர்ந்தால் அவன் போக வேண்டிய இடத்துக்கு எப்போது போக முடியும்? டாக்ஸி முன்னேறிக்கொண்டே இருந்தது. எவ்வளவு கூட்டம்! 'இந்த ஊரில் எதற்காக இன்று இவ்வளவு பேர் கூடியிருக்கிறார்கள்?' என்பதைப் பற்றி அவன் யோசித்து யோசித்து மூளையைக் குழப்பிக்கொண்ட

தைத் தவிர, விஷயம் புரியவில்லை. 'இவர்களுக்குள்ளே பல தினுசு மனிதர்கள் இருப்பார்கள்; துப்பறிபவர்கள் நிச்சயமாக இருப்பார்கள். அவர்களுடைய வலையில் விழாமல் தப்ப, ஆயிரங் கண்களோடு ஜனங்களைக் கவனித்துக் கொண்டிருக்கவேண்டும். இந்த நிலையில் டாக்ஸியில் போவது பிசகு. பிசகு மட்டுமா? இவ்வளவு ஜன நெருக்கடியில் டாக்ஸியில் போவது ஆபத்து' என்று அவன் நினைத்தான். டாக்ஸியை ஒரு தெரு முனையில் நிறுத்தச் சொல்லி, அதற்கு உரிய கட்டணத்தைக் கொடுத்துவிட்டான். இந்தச் சமயத்தில் நடைப்பாதையில் நடந்துபோய், தான் உத்தேசித்த இடத்தைச் சேர்வதே நன்மை என்று நிச்சயித்து மேலே நடக்கத் தொடங்கினான்.

கூட்டத்தில் முண்டியடித்துக் கொண்டு வெகு தூரம் நடந்தான். இவ்வளவு கூட்டம் அங்கே சேரக் காரணம் என்ன என்பதே புரியவில்லை. யாரையாவது கேட்டாலும் உசிதமாய் இராது என்று பேசாமல் இருந்துவிட்டான். ஜனங்களுடைய உற்சாகத்தைக் கண்டு அந்த ஊரில் அன்று ஏதோ திருவிழா நடந்துகொண்டிருக்கிறதென்றும் அதற்காகவே பெரியவர்களும் சிறியவர்களும் ஆண்களும் பெண்களுமாக நன்றாய் அலங்காரம் செய்துகொண்டு கிளம்பியிருக்கிறார்களென்றும் ரெட்லூஃப் ஊகித்தான். நடக்க நடக்க அவன் போக வேண்டிய இடமும் எட்டிப் போய்க் கொண்டிருந்தது. அலுப்பும் சோர்வும் வந்து மூடின. ஆனால் இதை வெளியில் காண்பித்துக்கொண்டால் ஆபத்து!

திட்டங்கள் வகுப்பதிலும் அவற்றை நடைமுறையில் கொண்டுவருவதிலும் ரெட்லூஃப் தேர்ந்த புள்ளி. திருடர்களுக்குள் திருடன்; கொலைகாரர்களுக்குள் தேர்ந்த கொலைகாரன். தங்கு தடை இல்லாமல் இதுவரையில் அவனுடைய வண்டி ஓடிக்கொண்டிருந்தது. அவனைப் போன்ற முடிச்சு மாறி அந்தப் பிராந்தியத்தில் எங்குமே இல்லை. இன்று அவனை இங்கே கண்டால் நாளைக்கு வேறு எங்கேயோ பார்க்கலாம். ஒரு நாள் காடுகளில் புகுந்து மறைந்துவிட்டான். அங்கே சிறிது காலம் வரையில் இருந்துவிட்டு, 'இனிமேல் அபாயம் இல்லை' என்ற தைரியம் வந்தபின் சுற்று வட்டாரத்துக் கிராமங்களில் நடமாடத் தொடங்கினான். வேஷத்தை மாற்றிக் கொண்டான். அதற்குத் தகுந்தபடி பெயரையும் மாற்றிக் கொண்டான். அந்த இடத்து அமைதியான சூழ்நிலைக்குப் பழக்கப்பட்டுவிட்டான். எவ்வளவு நாள்தான் இப்படியே இருந்துவிட முடியும்? அவனைப் போலீஸார் மோப்பம் பிடித்துவிட்டால் உடனே விலங்கு பூட்டிவிடுவார்கள். மாதக்கணக்கில் கோர்ட்டில் கேஸ் நடக்கும். . அப்புறம். .?

அவனைக் கண்டு பிடிக்கப் போலீஸார் நாடெங்கும் ரகசிய ஆட்களை வைத்திருந்தார்கள். அதற்காக அவர்கள் கையாளும் ரகசிய முறைகள் அவனுக்குத் தெரிந்தவையே. இவ்வளவு காலமாக எப்படியோ அவர்கள் கண்ணில் படாமல் தப்பி வந்தான். காலம் தனக்கு எதிராக மாறிவிட்டால் ஆபத்துத்தான். அதற்கு முன்னதாகவே கம்பி நீட்டிவிடுவது மிகவும் நல்லது. சற்றுத் தாமதித்தாலும் அவனுடைய திட்டங்கள் எல்லாம் படுதோல்வியில் முடிந்துவிடும். அது கோடைக்காலம் ஆனதால் அவன் இப்படிச் சுயேச்சையாய் அலைய முடிந்தது. பத்துப் பதினைந்து நாளில் குளிர்காலம் வந்துவிடும். அப்போது இந்த நாடகம் ஆட முடியாது!

தான் எங்கே போய்த் தலை மறைவாக இருக்கவேண்டும் என்பது அவனுக்குத் தெரியும். அவன் இப்போது திடீரென்று அந்த நகரத்துக்கு வந்ததே அதற்காகத்தான். அது துறைமுகப்பட்டணம். அவன் போக வேண்டிய நாட்டுக்குப் புறப்படும் கப்பல் அந்த நகரத்துத் துறைமுகத்தில் வந்திருந்தது. அதிலே இடம் பெறப்பட்ட பாடு போதும் போதும் என்றாகி விட்டது. எப்படியோ

கிடைத்து விட்டது. கப்பல் புறப்படும் வேளை அவனுக்குத் தெரியாது. எப்படியாவது அன்றிரவு ஊருக்குள் போதைப் போக்கி விட்டால், அதிகாலையில் கப்பலுக்குப் போய் விடலாம். அப்புறம் அவனைக் கட்டிப் பிடிப்பவர்கள் இல்லை. வாழ்க்கையைக் கவலையும் துன்பமும் இல்லாமல் கடத்தி விடலாம். அதுவரைக்கும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவனுடைய திட்டங்களெல்லாம் காற்றில் சிக்கிய மணல் வீடுபோல் 'பொல பொல' என்று உதிர்ந்துவிடும்.

இந்த யோசனையிலேயே, கூட்டத்தில் இடித்துப் புகுந்து கொண்டு போனான் ரெட்லுஃப். கொஞ்ச தூரம் நடந்த பிறகு, கோட்டைச் சரிப்படுத்திக் கொண்டான். உள் ஜேபியைத் தடவிப் பார்த்துக்கொண்டான். பணங் காசுகள் அப்படியே இருந்தன. மற்றொரு ஜேபியை அமுக்கினான். அதில் பாஸ்போர்ட் வைத்தபடியே இருந்தது. அப்பப்பா! அதை வாங்குவதற்கு அவன் கையாண்ட முறைகளை நினைத்துப் பார்த்தாலே பயமாக இருந்தது. எப்படியோ அவன் முயற்சி வீண் போகவில்லை. அந்தக் காகிதத்தைக் கொடுப்பதற்குள் அவர்கள் நூற்றுக்கணக்காகப் பணத்தைப் பிடுங்கிவிட்டார்கள்.

என்ன கூட்டம்! இவர்களுக்குள்ளே யார் பணக்காரர், யார் ஏழை என்பதைச் சுலபமாகக் கண்டு பிடிக்க முடியாது. அந்த மாதிரியான ஒரு நிலைமை, பண்டிகை நாளில் தானே வரும்! அவர்கள் எல்லாரும் எவ்வளவு அட்டகாசத்துடன் இப்படியும் அப்படியும் போய்க் கொண்டிருக்கிறார்கள்! பலர் அவனைப் பார்த்தார்கள். அவனுடைய நடையுடை பாவனைகளைப் பார்த்தே அவன் அந்நிய நாட்டவன் என்று புரிந்துகொண்டிருப்பார்கள். அதனாலேயே, யாரும் அவனிடம் பேச்சுக் கொடுக்கவில்லை. கூட்டத்தில் தனக்கு அறிமுகமான பலரை அவன் பார்த்தான். அவர்கள் தன்னை அடையாளம் கண்டுபிடிக்காத வரையில் அவனுக்குச் சந்தோஷமே; அன்று அவன் மாறுவேஷம் போட்டுக் கொண்டதும் அலங்காரம் செய்து கொண்டதுமே அதற்குக் காரணம்.

இருட்டி விட்டது. விளக்கேற்றி விட்டார்கள். தான் போக வேண்டிய இடத்தைச் சீக்கிரம் பிடித்துவிட வேண்டுமென்று ரெட்லுஃப் பறந்தான். அது அவன் இஷ்டப்படி நடக்கக் கூடியதா? கால வெள்ளத்தில் நீந்த வேண்டியிருந்தது. எவ்வளவு தூரம் அப்படி நீந்த வேண்டுமோ, யார் சொல்ல முடியும்?

யாராவது அவனை அடையாளம் தெரிந்துகொண்டு நிறுத்தி விட்டால் குடி முழுகிவிடும்! மூன்று மாத காலமாய்ப் போலீசுக்கு டிமிக்கி கொடுத்து வந்திருக்கிறான். இவனைப் பிடிக்க அவர்களும் அவர்களுக்கு வேண்டியவர்களும் தங்கள் முறைப்படி வலை விரித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அது இவனுக்குத் தெரிந்ததுதான். ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கு முன்னும் இவனுடைய போட்டோவையே ஒட்டி, எல்லாருக்கும் தெரியவேண்டுமென்று கொட்டை எழுத்தில் இவன் பெயரையும் எழுதி, அடியில் சிவப்பு மையால் கோடிட்டிருக்கிறார்கள்! நல்ல வேளை, இவனுடைய மாறுவேஷத்தை யாராலும் கண்டு பிடிக்க முடியவில்லை. அடிக்கடி பத்திரிகைகளில்கூட இவனைப் பற்றிய விளம்பரம் வந்துகொண்டிருக்கிறது. இவனைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்குப் பெரிய தொகையை வெகுமதியாகக் கொடுக்கிறோம் என்றுகூட விளம்பரம் கொடுத்திருக்கிறார்கள்.

இத்தனை மாத காலமாக அவர்கள் கண்ணில் மண்ணைத் தூவி விட்டான். இன்னும் இரண்டு மூன்று ஜாமந்தான். தப்பி விட்டால், இந்த நாட்டுக்கும் மனிதர்களுக்கும் ஒரு வணக்கம் சொல்லிவிட்டுப் பரந்த உலகத்தில் புகுந்து மறைந்து விடலாம். அது வரையில் பொறுத்திருக்க வேண்டும். தைரியத்தை இழக்கக்

கூடாது. இதுபோன்ற சந்தர்ப்பங்களில் துணிச்சல் - ராட்சஸத் துணிச்சல் - அதிகமாக வேண்டும். அது இல்லாவிட்டால்..?

இந்த எண்ணங்களில் திளைத்த ரெட்லுஃப்பின் மூளையில் என்ன தட்டியதோ, அப்படி முன் நோக்கிப் போவதில் பயனில்லை என்று நினைத்தான். ரஸ்தா அங்கே வளைந்து போகிறது அதில் திரும்பினான். பெரிய ரஸ்தாவில் இருந்த அளவு அங்கே கூட்டம் இல்லை. விளக்கு வெளிச்சமும் குறைவுதான். அந்த வழியில் ஒருவரை ஒருவர் சட்டென்று அடையாளம் கண்டு பிடிக்க முடியாது. காற்று அடித்தது. அது அநேகமாகத் துறைமுகத்துப் பக்கத்திலிருந்தே வருவதாக அவன் ஊகித்தான். குளிர் தாங்க முடியவில்லை. அதற்குமேல் துணிந்து நடப்பது நல்லதல்ல என்று தோன்றியது.

அருகிலேயே சிறிய ஹோட்டல் ஒன்று இருப்பதைப் பார்த்தான். அதைப் பார்த்த பிறகுதான், தான் காலையிலிருந்து ஒன்றுமே சாப்பிடவில்லை என்பது ஞாபகம் வந்தது. வாசல் கதவைத் திறந்து கொண்டு நேராக உள்ளே நுழைந்தான்.

அது சிறிய ஹோட்டல்தான்; என்றாலும் வாடிக்கைக்காரர்களின் சௌகரியத்துக்காக மேஜைகளை நல்ல முறையில் அமைத்திருந்தார்கள். உட்கார நல்ல நாற்காலிகள்; மேஜை விரிப்புகள் அழகாக இருந்தன. கூட்டமும் அதிகமாக இல்லை. இரண்டு மூன்று சிப்பாய்கள்மட்டும் ஒரு மேஜைக்கருகே உட்கார்ந்திருந்தார்கள். அவர்களோடு ஒரு பெண்ணும் உட்கார்ந்திருந்தாள். அவளோடு சிரித்துப் பேசி அவர்கள் உல்லாசப் பொழுது போக்கினார்கள். ஒரு மூலையில் பியானோ இருந்தது. அதில் யாரோ வாசித்துககொண்டிருந்தார்கள். அங்கே சாப்பிட வருபவர்களுக்காக எல்லாப் பொருள்களும் வைத்திருந்தார்கள். அவர்கள் வரும் நேரம் ஆகாததால் சாப்பாட்டுக் கூடத்தில் கூட்டம் இல்லை.

காலியாக இருந்த மேஜைக்கருகே வந்து ரெட்லுஃப் உட்கார்ந்தான். அவன் அப்படி நுழைந்தது, சுற்றும் முற்றும் பார்த்தது, மேஜைக்கு முன் போய் உட்கார்ந்தது எல்லாவற்றையும் ஒரு மூலையில் நின்றுகொண்டிருந்த ஹோட்டல் வெயிட்டர் பார்த்தான். உடனே பக்கத்தில் வந்து, "என்ன வேண்டும்?" என்று மரியாதையாகக் கேட்டான்.

"குடிக்க ஏதாவது வேண்டும்; விறுவிறுப்பாக வேண்டும்" என்றான் ரெட்லுஃப். வெயிட்டர் அதைக் கொண்டுவரப் பக்கத்து அறைக்குப் போனான்.

தன் தொப்பியை இன்னும் கையிலேயே வைத்திருப்பதை ரெட்லுஃப் உணர்ந்தான். பக்கத்திலே காலியாய் இருந்த ஒரு நாற்காலிமேல் அதை வைத்தான். சிகரெட் பெட்டியை ஜேபியிலிருந்து எடுத்து மேஜைமேல் வைத்து ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டான். புகையை இழுத்துக் கொண்டே சுற்றும் முற்றும் ஒரு தடவை கவனித்தான். அங்கே குளிரவில்லை. வெளியில் குளிரிலே நடந்துகொண்டிராமல் அங்கே வந்ததற்குச் சந்தோஷப்பட்டான். சற்று நேரம் அங்கேயே தங்குவது மேல் என்று நினைத்தான். 'மெல்லிய இனிய குரலில் இந்தப் பாடகி பியானோவுடன் லயித்துப் பாடுவது என்ன சுகம்! இந்தப் பாட்டைக் கேட்டுக் கொண்டேயிருந்தால், எப்படிப் பட்ட கஷ்டங்களும் அடியோடு மறந்து போகுமே' என்று நினைத்தான்.

ஒரு சிகரெட், இரண்டு சிகரெட் என்று கொளுத்தி முடித்தும் வெயிட்டர் வரவில்லை. எவ்வளவு நேரம் அந்தப் பானத்துக்காகக் காத்திருப்பது! குடிக்காமல் உணவுண்டு அவனுக்குப் பழக்கம் இல்லை.

அப்போது வாசல் கதவு திடீரென்று திறந்துகொண்டது. ஹோட்டலுக்கு முன் ஒரு கார் நின்றது. அதிலிருந்து இரண்டு பேர் இறங்கினார்கள். ஒருவர் குள்ளம்; மற்றவர் பருமன். இருவரும்

உள்ளே வந்து ஹாலைச் சுற்றிக் கண்ணோட்டம் விட்டார்கள். புதிய ஆசாமிகள் உள்ளே வந்தும்கூட அந்தச் சிப்பாய்கள் தங்கள் சரச சல்லாபங்களை நிறுத்தவே இல்லை. அந்தப் பெண்ணும் குஷியாய் அவர்களோடு அரட்டை அடித்துக்கொண்டிருந்தாள். வந்த இருவரும் ஓவர் - கோட்டை எடுக்கவே இல்லை; தொப்பிகளையும் எடுக்கவில்லை. சாப்பிட வருகிறவர்கள் ஹோட்டல்களில் இப்படி நடந்துகொள்வதுமரியாதை அல்ல. 'இவர்கள் இருவரும் ஏன் இப்படி நடந்துகொள்ளுகிறார்கள்!' என்று ரெட்லுஃப் அவர்களை ஓரக் கண்ணால் பார்த்துக்கொண்டே திகைத்தான். இவர்கள் அவர்கள் தானோ?..

அவர்கள் மூலை முடுக்குகளை விட்டுத் திரும்பி நேராக ரெட்லுஃபிடமே வந்தார்கள். வரும்போதே பருத்தவர் காதில் குள்ளர் ஏதோ சொன்னார். அவர் தலையை ஆட்டினார். மேஜையின் கிட்ட வந்து இருவரும் ரெட்லுஃபை ஏற இறங்கப் பார்த்தார்கள். பருத்தவர், ''உங்களைத் தொந்தரவு செய்வதற்கு மன்னிக்க வேண்டும்; உங்கள் பாஸ்போர்ட்டைக் காண்பியுங்கள்'' என்று தம் போலீஸ் வில்லையைக் காட்டினார்.

ரெட்லுஃப் தன் வாழ்நாளில் இது போன்ற எத்தனையோ சந்தர்ப்பங்களைக் கண்டவன்; மலையே பெயர்ந்து விழுந்தாலும் தளராத உறுதி வேண்டும் என்பதை நன்றாய் அறிந்தவன்.

அவர்களைக் கண்டதும் புன்சிரிப்பை வரவழைத்துக் கொண்டான். எரிந்துகொண்டிருந்த சிகரெட்டைச் சாம்பல் தட்டும் தட்டில் போட்டுவிட்டு ஜேபியைத் தடவினான். உடுப்புக்குள்ளே அவன் உடல் 'வெட, வெட' என்று நடுங்கியது. ஆனால் அதைக் கொஞ்சமாவது வெளிக்குக் காட்டிக்கொண்டால் தலைக்குக் கல்தான்.

ஜேபியிலிருந்து பாஸ்போர்ட்டை எடுத்து அவருடைய கையில் கொடுத்தான். அவர் அதைப் பரீட்சித்தார். ஹாலில் வெளிச்சம் குறைவு. அதனால் அதைப் படிப்பதற்காகத் தம் டார்ச்சை எடுத்தார். ரெட்லுஃபின் பார்வை முழுவதும் அதன் மேலேயே லயித்தது. அவர் எவ்வளவு நேரந்தான் அப்படிப் பரீட்சித்துக்கொண்டிருப்பார்?

அவர் தம் சோதனைகளை முடித்துவிட்டு அதை ரெட்லுஃபிடம் நீட்டிக்கொண்டே, ''உங்களைத் தொந்தரவு செய்ததற்காக மன்னிக்க வேண்டும், வால்ட் அவர்களே! எங்கள் கடமையை நாங்கள் செய்யத்தானே வேண்டும்!'' என்று அதிகார தோரணையிலேயே சொன்னார். ரெட்லுஃப் அந்தப் பாஸ்போர்ட்டை வாங்கி ஜேபியில் பத்திரப்படுத்தினான்.

கண்டம் தாண்டிவிட்டது. அவர்கள் அங்கிருந்து போய்விட்டார்கள்.

அவர்கள் வெளியில் போய்க் காரில் உட்கார, கார் 'விர்' என்று போன பிறகுதான், அவனுக்கு உயிர் வந்தது. அப்புறம் கவலை எதற்கு? நம்முடைய புதிய நாடகத்தில் எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்ற பயம் இதுவரையில் ரெட்லுஃபை அரித்துக்கொண்டிருந்தது. அதற்கு இது ஒத்திகை என்றுதான் சொல்ல வேண்டும். இதில் வெற்றி கிடைத்துவிட்டது. இனிமேல் தயக்கமில்லாமல் வண்டி ஓடும். தன் சந்தோஷத்தை வெளிக் காண்பிப்பது அபாயம். அதனால் அந்தக் கண்டத்திலிருந்து மீண்ட மகிழ்ச்சியை மனசுக்குள்ளேயே எண்ணி எண்ணித் திருப்தி அடைந்தான். அவன் வந்த காரியம் வெற்றிகரமாய் முடிந்துவிட்டது. அதற்குமேல் அங்கே என்ன வேலை? ஹோட்டலுக்குச் சேரவேண்டிய சில்லறையைக் கொடுத்துவிட்டு ரெட்லுஃப் வேகமாக வெளியே வந்தான்.

வெளியில் நல்ல வெளிச்சமாக இருந்தது. சந்து திரும்பிப் பெரிய சாலைக்கு வந்தான். சாலையின் இரு சாரியிலும் உள்ள மாடி வீடுகள் ஒளிமயமாய்ப் பளிச்சிட்டன. சினிமாவில் முதல் ஆட்டம் முடிந்து திரும்புகிறவர்களும் புதிய ஆட்டம் பார்க்க விரைபவர்களுமாக வெறி பிடித்தாற்போல் ஒரு

வரை ஒருவர் முட்டி மோதிக் கொண்டு வந்து போய்க்கொண்டிருந்தார்கள்.

இந்தக் காட்சிகளை யெல்லாம் பார்த்துக்கொண்டே வெகு தூரம் நேராகப் போனுன் ரெட்லுஃப். காட்சிச்சாலையை நெருங்கினுன். அவ்வளவு பெரிய காட்சிச்சாலையை அவன் தன் ஆயுள் காலத்திலே எங்கும் பார்த்ததில்லை. அதைப் பார்ப்பதற்காகத்தான் அன்று அவ்வளவு கூட்டமும் போகிற தென்று அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது. வருகிறவர்களையும் போகிறவர்களையும் கட்டுப்படுத்துவதற்காக அந்தக் கட்டிடத்தைச் சுற்றிலும் போலீஸ் பாரா இருந்தது. உள்ளே போகிறவர்களைக் கணக்கிட்டவண்ணம் ஒரு பெண் கேட்டுக்குமுன் நின்றுகொண்டிருந்தாள். அவளுக்குமுன் மைக் இருந்தது. டிக்கெட்டை வாங்கிக் கொண்டு உள்ளே போகிறவர்கள் அவளைத் தாண்டியே போகவேண்டும். டிக்கெட்டை அவளிடம் காண்பிக்கவேண்டும். தங்கள் பெயரையும் ஊரையும் சொல்லவேண்டும். இன்ன எண் உள்ள டிக்கெட்டை வாங்கிய இன்ன பெயருடையவர் உள்ளே போகிருர் என்பதை அவள் மைக்கில் சொல்லுவாள். அவளுக்குப் பக்கத்தில் இருப்பவன் அவர்களைப் போட்டோ எடுப்பான்.

இவற்றை யெல்லாம் ரெட்லுஃப் தூரத்திலிருந்தே கவனித்தான். தானும் அந்தக் கூட்டத்தோடு உள்ளே போய்ச் சற்று நேரம் இருக்கவேண்டும் என்று அவனுக்கு ஆசை தோன்றியது.

எல்லாரையும் போல் டிக்கெட் வாங்கினுன். அதை அங்கே நின்ற பெண்ணிடம் காண்பித்தான். அதைப் பார்த்தவுடன் அவளுக்குக் கட்டில் அடங்காத சந்தோஷம் உண்டாகிவிட்டது. அவள் அவனுடைய கையைப் பிடித்து அழுத்திப் புன்சிரிப்புடன், ''உங்கள் டிக்கெட்டின் எண் லட்சம்! இந்தக் காட்சிச்சாலையைப் பார்க்க வந்தவர்களின் கணக்கு உங்களோடு சேர்ந்து லட்சம் ஆகிறது. இவ்வளவு பெரிய கௌரவம், உங்களால் எங்களுக்குக் கிடைத்தது. இந்தச் செய்தியை நீங்களே ஜனங்களுக்குச் சொன்னுல் அவர்கள் மிகவும் சந்தோஷப்படுவார்கள். இதோ மைக்; இதைக் கையில் வாங்கிக்கொண்டு சொல்லுங்கள்'' என்று கொடுத்தாள்.

அதைக் கேட்ட ரெட்லுஃபுக்குச் சந்தோஷத்தால் தலைகால் புரியவில்லை. அந்த உற்சாகமும் ஆவேசமும் அவனைப் பரபரக்கச் செய்தன. ''இவ்வளவு பெரிய கௌரவம் என்னுல் உங்களுக்குக் கிடைத்ததற்கு நான் அதிருஷ்டசாலிதான்! அதற்கு நான் கொடுத்து வைத்தேன். என் பெயர் ரெட்லுஃப்; ஜேம்ஸ் ரெட்லுஃப்'' என்று மைக்கில் சொன்னுன். அப்போது, அவன் உலகத்தையே மறந்துவிட்டான்.

அந்தப் பேச்சு அவன் வாயிலிருந்து வெளிப்பட்ட கணத்தில் ஒலிபெருக்கி மூலம் அங்கே கூடியிருந்த ஜனங்களோடு, இரண்டு பர்லாங் தூரம் வரையில் சுற்றிலும் கூடியிருந்த பலர் இந்தச் செய்தியைத் தெளிவாகக் கேட்டார்கள்.

போலீஸார், தாம் இவ்வளவு காலமாகத் தேடிக்கொண்டிருந்த பெரும் போக்கிரி இப்போது இங்கே இருக்கிருன் என்ற செய்தியைக் கேட்டதும் பிரமானந்தம் அடைந்தார்கள். மைக்கை அந்தப் பெண்ணிடம் கொடுத்துவிட்டு ரெட்லுஃப், உள்ளே நுழையப் போனுன்... போலீஸார் நாலுபுறத்திலிருந்தும் படையெடுத்து அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். தன் சந்தோஷப் பெருக்கில் உலகையே மறந்துவிட்ட ரெட்லுஃபுக்குத் தான் செய்த தவறு காரணமாக இப்படிக் காரியம் மிஞ்சி விடுமென்று தோன்றவே யில்லை. அவனைப் போலவே கால சக்கரமும் தன் வேலையை ஒழுங்காய்ச் செய்யவேண்டும் அல்லவா; அதைத் தடுக்க நம்மால் முடியுமா?

உழவன் மனைவி

பொது உடைமைச் சீனாவின் ஆரம்ப நாள் நிலையைச் சித்திரிக்கும் முதல் நாவல். இந்தச் சீனக்காரி இதை ஆங்கிலத்திலே எழுதி, அமெரிக்காவில் 1955-இல் சார்லஸ் ஸ்கிரிப்னெர்ஸ் அண்ட் ஸன்ஸ் மூலம் வெளியிட்டிருக்கிறாள். போரும் புரட்சியும் நடந்து முடிந்த அடியில் இருந்த இந்த நிலை இன்று மாறியிருக்கலாம். சுருக்கத்தை 'மஞ்சரி'யில் வெளியிட அனுமதி தந்தவர் அ. கி. ஜயராமன்.

அசல்:
மிஸ் இலீன் சாங்

தமிழ்:
எஸ். விசுவநாதன்



காப்பிரைட்: உழவன் மகள் (தமிழ் மொழிபெயர்ப்பு நாவல்). வெளியிட்டது: ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி, சென்னை-5.
விலை ரூ. 2—50.

உழவன் மனைவி

★

அந்தச் சிறு நகரத்துக்குள் நுழைந்தவுடன் காட்சி யளிப்பவை அங்கே வரிசையாக உள்ள ஒரே மாதிரியான ஏழெட்டுக் கூரைக் குடிசைகள்தான் அவற்றைச் சுற்றி எங்கும் வெறிச்சோடிக் கிடந்தது. சில சமயம் அந்தக் குடிசைகளிலிருந்து மேலெழும்பும் புகை, காற்றில் கலந்து மணம் வீசிக்கொண்டிருந்தது. வெள்ளை அடித்த அந்தக் குடிசைகள்மீது வீசிய மாலைச் சூரியனின் மஞ்சள் ஒளியில் அவை மங்கலாகப் பிரகாசித்துக்கொண்டிருந்தன.

குடிசைகளை அடுத்துப் பல கடைகள் தென்பட்டன. கடைகளுக்குப் பின்னால் பெரிய மலைத்தொடர் நீண்டு உயர்ந்திருந்தது. அது ஏதோ வானத்தை மறைத்து விரிந்து நிற்கும் கரும் போர்வை போல் காட்சி அளித்தது. அதன் நடுவில் அங்கங்கே இரண்டொரு நீலநிற உறைபனிச் சிகரங்கள் மேலே வான்முகட்டை நோக்கி நீண்டு உயர்ந்திருந்தன.

சரளைக் கற்கள் வேய்ந்த அந்தச் சாலையின் எதிர்ப்புறத்தில் ஆழமான நீரோடை சலசலத்து ஓடியது. சாலை நெடுகிலும் சரளைக் கற்கள் பதிந்து கிடந்தன. அங்கிருந்த கடை ஒன்றிலிருந்து அழுக்குத் தண்ணீர் நிறைந்த சிவப்பு எனாமல் பாத்திரத்தைத் தாங்கிக்கொண்டு யாரோ ஒரு பெண் மெதுவாக வெளியே வந்தாள். சாலையைக் கடந்தாள். அங்கே பதிந்து கிடந்த கற்களின்மேல் கையிலிருந்த அழுக்குத் தண்ணீரை வீசிக் கொட்டினாள்.

அங்கிருந்த ஒவ்வொரு கடையிலும் பெண்கள்தான் வியாபாரம் செய்துகொண்டிருந்தார்கள். கருமஞ்சள் நிறத்தில் இருந்த அவர்களுடைய மெலிந்த தோற்றம் மிகவும் பயங்கரமாகக் காட்சியளித்தது. தலைமயிர் தோள் பட்டை வரையில் நீண்டு வளர்ந்திருந்தது. தலையில் கம்பளி நூலால் பின்னிய தொப்பியை அணிந்துகொண்டிருந்தார்கள். மயில் கழுத்துப் போல் கருநீல வர்ணக் காதணிகள் பூட்டியிருந்தார்கள்.

எல்லாருக்கும் முன்னால் மணமகள் பொன்மலர் வேகமாகச் சென்றுகொண்டிருந்தாள். அவள் எந்த நிமிஷத்திலும் திரும்பி ஓடிப் போய் விடக்கூடும் என்று பயந்து கண்காணிப்பதைப் போல் அவளுக்குப் பின்னால் அவளுடைய காலடிகளைத் தொடர்ந்து அத்தைக் கிழவி மெதுவாக நடந்து வந்துகொண்டிருந்தாள். அவர்கள் இருவருக்கும் பின்னால் கையில் தன் மகளைத் தூக்கிக்கொண்டு தங்கவேர் வேகமாகச் சென்றான். ஜில்லா காரியாலயத்துக்குச் சமீபத்தில் வந்தவுடன் அத்தைக் கிழவி பொன்மலரின் அருகே சென்று அவள் தோள்பட்டையைப் பிடித்து நிறுத்திப் பின்னால் தள்ளிவிட்டுத் தான் முன்னால் வந்தாள். பிறகு கண் தெரியாத மணப்பெண்ணுக்கு வழிகாட்டி அழைத்துக் கொண்டு செல்வதுபோல் அழைத்துச் சென்றாள்.

"அத்தை, ரொம்பக் கர்நாடகமாக நடந்துகொள்ளாதே! அவள் தானே நடந்துவருவாள்" என்றான் தங்கவேர்.

"கர்நாடகமாம் கர்நாடகம்! இந்தப் புதிய தலைமுறை வருவதற்கு முன் நான் இந்த மாதிரி வார்த்தைகளைக் கேள்விப்பட்டது கூடக் கிடையாது" என்று முணுமுணுத்தாள் அத்தைக் கிழவி.

ஜில்லாப் பொதுக் காரியாலயத்துக்கு முன்னால் வேடிக்கை பார்க்க வந்திருந்த கூட்டத்தினர் அங்கங்கே உலவிக்கொண்டும் உட்கார்ந்துகொண்டும் இருந்தார்கள். அத்தைக் கிழவி மணப்பெண்ணை அழைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தவுடன் அவர்கள் எல்லாரும் பரபரப்புடன் தங்களுக்குள், "மணப்பெண் வந்துவிட்டாள்!" என்று கசமுசவென்று பேசிக்கொண்டார்கள். வந்திருந்த சௌ கிராமத்தினர் பலர் தங்கவேரின் முன்னால் வந்து, தங்கள் பாராட்டைத் தெரிவித்துக் கொண்டார்கள். மணமகனின் விதவைத் தாய் அங்கே வந்திருந்தாள். அவளுக்கு ஐம்பது வயசுக்குமேல் இருக்கும். முகத்தில் அநுபவத்தின் ஒளி தேங்கி நின்றது. நல்ல உயரமாக இருந்தாள். அவள் அத்தையின் அருகே சென்று அவளை இரு கைகளாலும் இறுகக் கட்டிப் பிடித்துக்கொண்டு, "அடடா! உங்களை வெகு தூரம் நடக்கும்படி செய்துவிட்டோம்!" என்று தன் அநுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டாள்.

அவர்களுக்குச் சமீபத்தில் ஒரு பக்கமாக அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு நின்றான் மணமகன். அங்கே இருந்தவர்களில் யாருமே மணப்பெண்ணை நேரடியாக நோக்கவில்லை. அவள் தன்னைச் சுற்றிலும் இருந்தவர்களை முகத்தில் புன்னகை தவழக் கண்ணோட்டம் விட்டுக்கொண்டிருந்தாள்.

வரவேற்பு உபசாரங்கள் முடிவடைந்தவுடன் எல்லாரும் உள்ளே சென்றார்கள். அங்கே இருந்த கான்பூவிடம் (பொதுஜன ரிஜிஸ்ட்ராரிடம்) யார் போய்த் தாங்கள் வந்திருக்கும் நோக்கத்தைத் தெரிவித்துக்கொள்வது என்பதைப் பற்றி அவர்கள் தங்களுக்குள் தர்க்கம் செய்துகொண்டார்கள். முடிவில் மணமகனின் அண்ணன் சென்று கான்பூவிடம் விஷயத்தைத் தெரிவித்துக்கொண்டான். விவரங்களைச் சொல்லி முடித்தவுடன், எல்லாரும் கான்பூவின் மேஜையைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டு நின்றார்கள். திருமணப் பதிவுக்கான பாரங்களை அவர் எடுத்தார். மணமக்களை மேஜைக்கு முன்னால் கொண்டுவந்து நிறுத்தினார்கள். வெட்கத்தால் இருவரும் தலையைக் குனிந்துகொண்டு நின்றார்கள்.

"உன் பெயர் என்ன?" என்று மணமகனைப் பார்த்துக் கான்பூ கேட்டார்.

"செல்வன் சூ."

"உன் ஊர் எது?"

"சௌ கிராமம்."

"நீ யாரை மணம் புரிந்து கொள்ள விரும்புகிறாய்?"

அதற்கு அவன் மிக அவசரமாக, "பொன் மலரை" என்றான்.

"நீ ஏன் அவளை மணம் புரிந்து கொள்ள விரும்புகிறாய்?"

"அவள் நன்றாக உழைப்பாள். அதனால்தான்!"

மணமகள் பொன்மலரிடமும் இப்படியே சில கேள்விகளை அவர் கேட்டார். "நீ ஏன் அவனை மணம் புரிந்துகொள்ள விரும்புகிறாய்?" என்று கேட்டதற்கு அவளும் மணமகனைப் போலவே, "அவர் உழைத்து வேலை செய்வார்" என்று பதில் அளித்தாள்.

மணமக்கள் இருவரும் கான்பூ பூர்த்தி செய்திருந்த திருமணப் புத்திரத்தில் தங்கள் கட்டை விரல் அடையாளத்தைப் பதித்தார்கள். சட்டபூர்வமாக இருவரும் கணவன் மனைவி ஆகிவிட்டார்கள் என்று அறிவித்தார் கான்பூ. சர்க்கார் அலுவலகத்துக்கு வெளியே சம்பந்திகளான இரு தரப்பினரும் விடை பெற்றுக் கொண்டார்கள்.

பெண்வீட்டாரான டான் கிராமத்தினர், இந்தச் சின்னஞ் சிறு நகரத்தின் வழியாக வேடிக்கை பார்த்துக்கொண்டே மெதுவாக நடந்து சென்றார்கள்.

அந்த நகரத்தில் இருந்த ஒரே ஒரு சிற்றுண்டிச் சாலையைத் தாண்டிச் சென்றார்கள். அந்த ஓட்டலிலிருந்து எழும் சந்தோஷ ஆரவாரம் தெருவில் வந்து எதிரொலித்தது.

அந்த ஓட்டல் கதவுக்கெதிரே வந்தவுடன் தங்கவேரின் குழந்தை பெக்கி மேற்

கொண்டு நடக்க மறுத்து நின்று விட்டாள். சிறுமியின் கையைப் பிடித்து இழுத்துச் செல்லப் பொன் மலர் முயன்றபோது, சிறுமி அழுது கொண்டே பின்னுக்குத் திமிறிக் கொண்டு அடம் பிடித்துத் தரையில் உட்கார்ந்து விட்டாள்.

''அழாதே, கண்ணே! நாளைக்கு உனக்கு வேண்டும் அளவு நல்ல நல்ல தின்பண்டங்களெல்லாம் கிடைக்கும்; தின்னலாம். நாளைக்கு நாம் எல்லாரும் உன் அத்தையின் கல்யாண விருந்துக்குப் போகப்போகிறோம். அங்கே நிறையத் தின்பண்டமெல்லாம் சாப்பிடலாம். நீ இந்த மாதிரி அழுது அடம் பிடித்தால், நாளைக்கு உன்னை விருந்துக்கு அழைத்துச் செல்ல மாட்டோம்'' என்று அதட்டினாள் கிழவி.

எதைச் சொல்லியும் சிறுமி தன் அழுகையை நிறுத்தவில்லை; எழுந்திருக்கவும் இல்லை.

தங்கவேர் குழந்தையைத் தூக்கிக்கொண்டு நடக்க ஆரம்பித்தான். குழந்தை கைகால்களை உதைத்து அவனுடன் போராடினாள். அவன் நகரத்தின் எல்லையைத் தாண்டி நடந்தான். குழந்தை பெக்கி அவனுடைய தோளில் அமர்ந்தபடி பரிதாபமாகத் தேம்பித் தேம்பி அழுதுகொண் டிருந்தாள்.

''அழாதேம்மா! உன் அம்மா நாளைக்கு வீட்டுக்குத் திரும்பி வருகிறாள். அவள் உனக்கு நல்ல தின்பண்டங்கள் கொண்டு வருவாள். உன் அம்மாவை உனக்கு ஞாபகம் இருக்கிறதா?'' என்று அவளிடம் இதமாகக் கேட்டான்.

சிறுமி பெக்கியின் தாய் ஷாங்காயில் ஒரு வீட்டில் வேலைக்காரியாக இருந்தாள்; ஆனால் சில மாதங்களுக்கு முன்பு அவள் தன் எஜமானனிடம் தான் வேலையை விட்டு நின்றுவிடுவதாகக் கூறப் போவதாகவும், திரும்பவும் ஊருக்கே வந்து நிலத்திலேயே பாடுபட்டு உழைக்கப் போவதாகவும் எழுதியிருந்தாள். நிலச் சீர்திருத்தங்கள் ஏற்பட்ட பிறகு தங்கவேர் சொந்த நிலம் உடையவன் ஆகிவிட்டான். ஆயினும் குடும்பத்துக்குப் பணம் தேவையாக இருந்ததால், அவள் பட்டணத்தில் ஒரு பெரிய மனிதரின் வீட்டில் வேலை செய்துகொண் டிருந்தாள். இப்போது குழந்தையிடம், நிச்சயமாக அவள் வந்துவிடுவாள் என்று சொன்னபோதிலும், புது வருஷக் கொண்டாட்டத்துக்குள் தன் மனைவி வீட்டுக்குத் திரும்பி வருவாளோ என்று தங்கவேருக்குச் சந்தேகமாகவே இருந்தது.

''பெக்கி, அழாதே! சீக்கிரமாகவே அம்மா வீட்டுக்குத் திரும்பி வந்துவிடுவாள். வரும்போது உனக்கு நிறையத் தின்பண்டங்கள் கொண்டுவருவாள்'' என்று தங்கவேர் சதா சொல்லிக் கொண் டிருந்தான்.

குழந்தை மனத்தில் அது பதிந்ததாகவே தோன்றவில்லை. மெல்ல மெல்ல இவர்கள் வீடு போய்ச் சேர்ந்து படுத்து உறங்கினார்கள்.

பெக்கி படுக்கையில் படுத்துத் தூங்குவதற்கு முன்பாக அவளைத் தங்கவேர் வெளியே கொண்டு விட்டு அழைத்து வந்தான். பொன்மலருக்கு விவாகமான பிறகு அவனையும் இந்தச் சிறுமியையும் தனியாக விட்டுவிட்டு அவள் புக்ககம் போய்விட்டாள். இனி இந்தச் சிறுமியைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு அவனுடையது. குழந்தையைப் பராமரிக்க அவனுக்குத் திறமை போதாது; பழக்கமும் இல்லை.

வெளியே வீசிக்கொண் டிருந்த குளிர்காற்று உடலுக்குப் புத்துணர்ச்சி ஊட்டியது. நிலவொளி பரவிக்கிடந்த கருநீல வான வெளியை முட்டி நின்ற மலைச் சிகரம் பார்ப்பதற்கு ஏதோ அசையாத கருமொட்டைப்போல் நிழல் படிந்து கிடந்தது. பெக்கியின் முழங்கால்களுக்கு அடியில் கை கொடுத்துத் தூக்கிக் குழந்தையின் தடித்த இடுப்புப்புறம் கீழே தொங்கத் தொட்டிலாட்டிக் கொண் டிருந்தான்.

யாரோ ஒரு பெண் பிள்ளை தோளில் பெரிய வெள்ளை நிறமான மூட்டை ஒன்றைத் தொங்க விட்

டுக்கொண்டு கையிலே ஒரு விளக்குடன் வந்தாள். காற்றில் ஆடும் விளக்கொளி அவளுடைய முகத்தில் விழுந்தபோது, அவள் யார் என்பது தங்கவேருக்குப் புரிந்துவிட்டது; அவள் அவனுடைய மனைவி நிலாமணம் என்பவளே. அவன் சந்தோஷத்துடன் குழந்தையைக் கையில் ஏந்திக்கொண்டே சுற்றிச் சுற்றி வந்தான். பிறகு குழந்தையைக் கீழே இறக்கிவிட்டான்; சாலையில் வந்துகொண்டிருந்த தன் மனைவியை நோக்கி வேகமாய் ஓடினன்.

அவளுக்குச் சமீபத்தில் சென்றவுடன் அவளைப் பார்த்துச் சிரித்தான். பதிலுக்கு அவளும் தன் கணவனைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள்.

''நான் சௌ கிராமத்துக்கு வந்ததும் இருட்டி விட்டது. அதனால் உங்கள் சகோதரியின் வீட்டுக்குச் சென்று அவர்களுடைய விளக்கைக் கேட்டு வாங்கிக்கொண்டு வந்தேன்'' என்ருள் நிலாமணம்.

''ஓகோ! நீ அவர்கள் வீட்டுக்குப் போயிருந்தாயா? என் தங்கையைப் பார்த்தாயா?''

''பார்த்தேன். அவர்களுடைய மாமிகூட மிக நல்லவள். என்னைத் தங்களுடன் சாப்பிடும்படி வற்புறுத்தினள். ஐயையோ! எனக்கு ரொம்பச் சங்கடமாகக்கூட இருந்தது.''

அவளுடன் பேசிக்கொண்டே பக்கத்தில் அவன் நடந்துவந்தான். அவன் காலில் அணிந்திருந்த கால் உறைகளில் ஒன்று ஈரமாகி இருந்தது. அதனால் அது ஜில்லென்று பாதத்தின்மீது ஒட்டிக்கொண்டிருந்தது.

''மருமகனைப் பார்த்தாயா?'' என்று கேட்டான்.

''அவருக்கு உடம்பு சரியில்லை. உள்ளே படுக்கையில் படுத்துக்கொண்டிருந்தார். நான் அறைக்குள் சென்று பார்க்கவில்லை.''

''உடம்பு அப்படி ஒன்றும் மோசமாக இல்லையே? தங்கை எப்படி இருக்கிருள்?''

''நன்ருகத்தான் இருக்கிருள்! குழந்தை பெக்கி தூங்கிவிட்டாளா?''

அவன், எதிரே நோக்கி, ''பெக்கி! பெக்கி!'' என்று கூவியழைத்தான். ஆனல் குழந்தை அவன் கூப்பிட்டதும் வரவில்லை. பிறகு அவனே போய்க் குழந்தையைப் பிடித்துக் கூட்டிக்கொண்டு வந்தான்.

''என் கண்ணு இவ்வளவு பெரியவள் ஆகிவிட்டாளே!'' என்று கூறி நிலாமணம் ஆச்சரியத்துடன் சிரித்துக்கொண்டே தன் கையில் இருந்த விளக்கைக் குழந்தைக்கு நேராகக் கீழே தாழ்த்திப் பிடித்து விளக்கொளியில் அவள் முகத்தை நன்ருகக் கூர்ந்து பார்த்தாள். தகப்பனின் பிடியிலிருந்து பெக்கி திமிறிக்கொண்டு வீட்டை நோக்கி ஓடினுள். வீட்டின் முன் இருந்த வேலிக்கம்பங்களை நிலவொளியில் மெள்ளத் தாண்டினுள். அவர்கள் வீட்டில் கூடை பின்னுவதற்கு உபயோகப்படுத்தி வந்த நீளமான மூங்கில்களை வீட்டின் முன்னல் பரப்பியிருந்தார்கள். அவற்றின் மீது அந்தச் சிறுமி நடந்து செல்லுகையில், அவள் கால்கள் இடறி மொள மொளவென்று சப்தம் கேட்டது. அதைக் கேட்டு நாய்கள் பலமாகக் குரைத்தன.

மகளைத் தொடர்ந்து வேகமாக வந்துகொண்டிருந்த நிலாமணம், ''ஜாக்கிரதையாகப் பார்த்துப் போ! இருட்டில் எங்கேயாவது இடறி விழப்போகிருய்'' என்று கூவிக் கொண்டிருந்தாள். தங்கவேரின் முன்ஞேர் கட்டிய வீடு அது. வெள்ளை பூசிய அந்த வீட்டில் ஒரு முழு அறையும், மற்ருேர் அறையில் பாதியும் இவர்கள் பாகத்துக்கு இருந்தன. பக்கத்தில் இருந்த அறைகளில் பெரிய மாமாவின் குடும்பத்தினர் வசித்தார்கள். அத்தை அப்போது ஜன்னல் வழியாக, ''யார் அது? தங்கவேரா? ஏண்டா, மருமகள் நிலாமணமா வந்திருக்கிருள்?'' என்று தன் கீச்சுத் தொண்டையில் கேட்டாள்.

''ஆமாம், அத்தை! நான்தான். நீங்கள் சௌக்கியந்தானு, அத்தை? பெரிய மாமா எப்படி இருக்கிருர்?'' என்று கேட்டாள் நிலாமணம்.

''சௌக்கியந்தான்.''

காகிதம் ஒட்டியிருந்த ஜன்னலுக்குப் பின்னால் இருந்த விளக்குக் காற்றில் படபடத்தது. படர்ந்திருந்த நிழல்கள் அங்குமிங்கும் ஆடி அசைந்தன. கிழவன் லொக்கு லொக்கென்று இருமினான். தூங்கிய குழந்தைகள் அந்தச் சப்தத்தில் விழித்துக்கொண்டன.

''தங்கமணி அண்ணி சவுக்கியமாக இருக்கிறாளா?'' என்று கேட்டாள் நிலாமணம்.

''நான் சௌக்கியமாகத்தான் இருக்கிறேன்'' என்றாள் அந்தக் குடும்பத்தின் மருமகளான தங்கமணி. கணவனைக் கட்டாய ராணுவ சேவையில் இழந்த துர்ப்பாக்கியவதி அவள்.

பிறகு அவர்கள் எல்லாரும் தங்கவேரின் அறைக்குள் சென்றார்கள். அத்தையின் மருமகள் தங்கமணியும் அவர்களுடன் வந்து சேர்ந்துகொண்டாள். அந்த அறையில் எல்லாரும் உட்கார்ந்து பேச வசதியாக இடமில்லை. ஆனால் பெரிய அத்தை நிலாமணத்தைப் பிடித்து இழுத்து வலுக்கட்டாயமாகத் தன் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டாள்.

அவர்கள் எல்லாருமே சந்தோஷத்துடன் ஒருவருக்கொருவர் குலவிச் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். சதா கவலையோடு இருக்கும் மருமகள் தங்கமணியும் அவர்களுடைய மகிழ்ச்சியில் கலந்துகொண்டாள். எலும்பு தெரியும் நீண்ட அவள் முகத்தில் கண்கள் மட்டும் பிரகாசமாக இருந்தன. வாழ்க்கை அவளுக்குச் சுமையாக இருந்தது. பிறரைச் சந்திக்கும்போது மேலுக்குச் சிரித்துக்கொண்டாலும், அந்தச் சிரிப்பில் உயிர் இருக்காது; துன்பத்தின் வெறுப்புத்தான் அதில் தேங்கியிருக்கும். ஆனால் இப்போது அவள் மற்றவர்களுடன் கலந்து தன்னை மறந்து கலகலவென்று வாய்விட்டுச் சிரித்தபோது அவள் ஒரு பைத்தியக்காரி போல் தோன்றினாள்.

''இந்த வருஷம் பனிக்காலத்தில் பனியே பெய்யவில்லை. கிராமாந்தரத்தில் எப்படி இருந்தது?'' என்று கேட்டாள் நிலாமணம்.

''மழை ரொம்ப நன்றாகப் பெய்தது. இனிப் பனி பெய்யும்'' என்றாள் அத்தை.

''பஞ்சாங்கத்தின் பிரகாரம் பனிக்காலம் இன்னும் வரவில்லை.''

சிறிது நேரம் அமைதி நிலவியது. பிறகு மாமாக்கிழவர் சொன்னார்: இன்னும் சில நாளில் கட்டாயம் பனி பெய்ய ஆரம்பித்துவிடும். என் எலும்புகளில் ஏற்படும் வலியிலிருந்தே தெரிகிறது'' என்றார்.

பெரிய அத்தை, இரைந்து, ''அடுத்த வருஷம் விளைச்சல் நன்றாக இருக்கும். ஏனென்றால், இந்த வருஷம் நல்ல மழை பெய்திருக்கிறது. அடியே! இப்போதெல்லாம் கிராமாந்தரங்கள் ரொம்பச் செழிப்பாக இருக்கின்றன. நம் கிராமத்தில் இப்போது தரித்திரம் மறைந்துவிட்டது. நல்ல காலமாக வருண பகவானும் அருள் சுரந்தான். இந்த வருஷ மகசூலைப்போல இதற்குமுன் ஒருபோதும் விளைந்ததில்லை! நல்ல விளைச்சல்! உன் கணவன்தான் விவசாயிகளிலேயே சலியா உழைப்பினால் பெரிய வெற்றி கண்டவன். கிராமமே அவனைப் போற்றிப் புகழ்ந்து கௌரவித்தது. நம் குடும்பத்திலேயே அவனுக்குக் கிடைத்ததைப் போன்ற கௌரவமும் புகழும் வேறு யாருக்கும் இதுவரைக்கும் கிடைத்ததில்லை. மார்பில் பெரிய சிவப்புப் பூவைச் செருகிக்கொண்டு அன்று அவன் உட்கார்ந்திருந்த கம்பீரத்தைப் பார்க்க வேண்டுமே! நம் ஜில்லா அதிகாரி தோழர் வாங் தம் கையினாலேயே அந்தச் சிவப்புப் பூவை அவனுடைய மார்பில் குத்திக் கௌரவித்தார்'' என்றாள்.

இந்தச் செய்தி நிலாமணத்தின் மனத்தில் வியப்பையும் பெருமிதத்தையும் உண்டாக்கியது. அவள் தன் கணவனைத் திரும்பிப் பார்த்தாள். இந்தப் பார்வையினால் அவன் லஜ்ஜையடைந்துள்ளது போல் தோன்றியது. சலித்துப்போன அவர்களுடைய சம்பாஷணையைத் தான் கவனிக்காததுபோல நடித்தான்.

பிறகு, நிலப் பிரிவினையைப்பற்றி அவர்களிடம் நிலாமணம் விவரம் கேட்டு அறிந்துகொண்டாள்.

ஒவ்வொரு நிலச்சுவான்தாரின் மரச்சாமான்களையும் அவனுடைய உயர்ந்த துணிமணிகளையும் வீட்டுப் பாத்திரம் பண்டங்களையும் பொதுவாகக் கணக்கெடுத்து அவற்றை மக்களுக்கு எப்படி அவரவர் தேவைக்கு ஏற்றபடி விநியோகித்தார்கள் என்பதை அவர்கள் விவரமாகச் சொன்னார்கள். பெரிய மாமாவின் குடும்பத்துக்கு ஒரு பூத்தொட்டியும், சிறு பெண்கள் அணியும் பட்டுச் சொக்காய் ஒன்றும் கிடைத்தன. தங்கவேருக்கு ஒரு பெரிய நிலைக் கண்ணாடி கிடைத்தது.

''அந்தக் கண்ணாடி எங்கே இருக்கிறது?'' என்று கேட்டுக்கொண்டே நிலாமணம் அந்த அறையைச் சுற்றும் முற்றும் பார்த்தாள்.

''அது என் சகோதரியின் கல்யாணச் சீர்வரிசைகளுடன் சென்றுவிட்டது'' என்றான் தங்கவேர்.

''நிலாமணம், உங்களுக்கு நல்ல உயர்ந்த ரகமான நிலைக் கண்ணாடி கிடைத்தது'' என்று ஆரம்பித்தாள் அத்தை.

கூச்சமுள்ளவளான தங்கமணி இதைக் கேட்டதும் தனக்கு ஏற்பட்ட உற்சாகத்தில் தன் மாமியின் வார்த்தையை இடைமறித்து, ''ஆமாம், ஆமாம்; நிஜமாகவே அது மிக அழகாகத்தான் இருந்தது, அண்ணி! ஸ்வஸ்திக் உருவத்தில் செய்திருந்த அந்த நிலைக் கண்ணாடியின் கருங்காலிச் சட்டங்கள் ஓர் அங்குல அகலம் இருந்தன. விசாலமாக இரண்டடி உயரம் இருந்தது அந்தக் கண்ணாடி'' என்றாள்.

''இரண்டடியா?''

''இன்னும் உயரமாக இருந்தது!'' என்றாள் அத்தை.

''அதன் நான்கு மூலைகளிலும் பச்சையும் சிவப்புமான கோடுகள் வரைந்திருந்தன. சீர் வரிசையுடன் அதை அனுப்பியபோது மிக அழகாகத்தான் இருந்தது!''

குளிர் காயும் கணப்புக் கூடையைக் கையிலிருந்த குச்சிகளால் கிளறி விட்டுக்கொண்டே கிழவர் நிலாமணத்தைப் பார்த்து, ''அருமையான கண்ணாடி! மற்ற எதையும் விடச் சிறந்த பொருள்! அது உங்களுக்குக் கிடைத்தது'' என்றார்.

அந்தக் கிழவியும், ''எல்லாரும் உங்களைத்தான் அதிருஷ்டசாலிகள் என்று சொன்னார்கள்'' என்றாள்.

''நீ என் தங்கை வீட்டுக்குப் போயிருந்தபோது ஏன் அதைப் பார்க்காமல் வந்தாய்?'' என்று தன் மனைவியிடம் கேட்டான் தங்கவேர்.

''உங்கள் தங்கையின் அறையில் தான் மருமகப் பிள்ளை காய்ச்சலாகப் படுத்துக்கொண்டிருந்தார். நான் உள்ளே சென்று பார்க்க முடியவில்லை'' என்றாள், நிலாமணம் சிரித்துக்கொண்டே.

''என்றைக்காவது ஒரு நாள் அதை மறக்காமல் போய்ப் பார்த்துவிட்டு வா'' என்று வற்புறுத்தினாள் தங்கமணி.

தன் மனைவி அதைக் கண்ணால் பார்க்கு முன்னமேயே தங்கவேர் அதைத் தன் சகோதரிக்குத் திருமண வரிசையாகக் கொடுத்துவிட்டான். அவளுடைய அபிப்பிராயத்தைக் கேட்டிருந்தாலும், 'கொடுக்க வேண்டாம்' என்று அவள் தடுத்திருக்க மாட்டாள். அவளிடம் அதைத் தெரிவித்திருக்கவேண்டும். அவள் சிரித்துச் சிரித்துப் பேசியபோதிலும் இந்த விஷயம் அவள் மனத்தை வருத்திக்கொண்டுதான் இருந்தது. மேலே அவர்களுடைய பேச்சில் கலந்துகொள்ள அவள் மனம் இடம் தரவில்லை.

நடுநடுவே அவள் மௌனமாக இருப்பதைப் பார்த்து, அத்தை இதைப் புரிந்துகொண்டாள். ''இந்தத் தடவை நாங்கள் நிஜமாகவே புறப்பட்டுப் போகிறோம்'' என்று சொல்லி எழுந்து நின்றாள். பிறகு, ''போகாமல் இருந்தால் நாங்கள் போன பிறகு பின்னால் எங்களைச் சபிக்கமாட்டீர்களா?'' என்றாள்.

''இதென்ன பேச்சு, அத்தை? இன்னும் கொஞ்ச நேரம் இருந்துவிட்டுப் போங்கள்'' என்று கூறி, அவள் கையைப் பற்றி இழுத்தாள் நிலாமணம்.

''இல்லை, உண்மையில் நேரமாகிவிட்டது. நீயும் பிரயாணத்தினால்

களைப்படைந்திருக்கிறாய். சீக்கிரமாகப் படுத்துத் தூங்குங்கள். இளந்தம்பதிகளான நீங்கள் வெகு நாளைக்குப் பிறகு ஒன்று சேர்ந்திருக்கிறீர்கள். உங்களுக்குள் பேசிக்கொள்ள வேண்டியது எத்தனையோ இருக்கும். நாங்கள் உங்களுக்கு இடையூறாக இருக்கலாமா?'' என்றாள் அத்தை.

பிறகு அத்தையின் குடும்பத்தார் வேடிக்கையாகப் பேசிக்கொண்டே வெளியே புறப்பட்டார்கள். நிலாமணமும் அவள் கணவனும் கதவுவரையில் வந்து வழியனுப்பினார்கள்.

அகல் விளக்கு மங்கியது. எண்ணெய் வார்ப்பதற்குப் பதிலாகச் சிவப்பு மெழுகுவர்த்தித் துண்டு ஒன்றை எடுத்து விளக்கில் கொளுத்தி அதை ஓர் ஓட்டைத் தகரத்தின்மேல் தங்கவேர் பொருத்தி நிற்கவைத்தான்.

கதவைச் சாத்தித் தாழ் இட்ட பிறகு நிலாமணம் அவன் பக்கம் திருமபி, ''இவ்வளவு நேரமாக நான் உங்களை ஒன்று கேட்கவேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்தேன். ஆனால் அவர்கள் முன்னால் கேட்கக்கூடாது என்று இருந்தேன். இந்த வருஷம் நிலங்களில் விளைச்சல் நன்றாக இருந்தது என்கிறார்கள். ஆனால் என்ன காரணம், உங்கள் சகோதரி வீட்டில் வெறும் நொய் அரிசிச் சோற்றையும் கஞ்சியையும் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள்?'' என்றாள்.

சிவப்பு வர்த்தியில் தங்கவேர் தீவிரமாக ஈடுபட்டிருந்ததால், அவளுக்குப் பதில் அளிக்கவில்லை.

''சௌ கிராமத்தினர் மிகவும் கஷ்டப்பட்டுத்தான் ஜீவனம் நடத்துகிறார்கள். கல்யாணத் தரகர் எங்களை வீட்டுக்குள்ளே அழைத்துச் சென்றார்'' என்றாள் நிலாமணம்.

தங்கவேர் பக்கென்று சிரித்துவிட்டு, ''நீ சொல்வதன் அர்த்தம் என்ன? ஒவ்வொரு குடும்பத்திலும் இதே நிலைமைதானே; நம் வீட்டிலுந்தான் நொய்யரிசிக் கஞ்சி சாப்பிட்டுக்கொண்டிருந்தோம்'' என்றான்.

அவன் சொன்னதைக் கேட்டதும் நிலாமணம் திடுக்கிட்டாள். ''ஆமாம், வயல்கள் நன்றாக விளைந்தன. அறுவடையில் தானியம் நிறையக் கண்டு முதலாகியிருக்கிறது. அப்படியிருந்தும் சாப்பாட்டுக்குக்கூட அரிசி இல்லையென்றால், இதன் காரணம்..?'' என்று கேட்டாள்.

அவன் சட்டென்று ஜன்னல் பக்கமாக முகத்தைத் திருப்பிக்கொண்டான். அவளைச் சப்தம் போடாமல் இருக்கும்படி ஜாடை காட்டினான். அவன் தடுப்பதற்கு முன்னதாகவே அவள் வேகமாகச் சென்று ஜன்னல் கதவைத் திறந்தாள். அதே சமயம் வீட்டின் முன்புறத்தில் கிடந்த மூங்கில் கழிகளின் மீது தடதடவென்று யாரோ ஓடும் சப்தம் கேட்டது. அருகில் நாய்கள் குரைக்க ஆரம்பித்தன. நிலவொளி சாய்ந்து தரையிலிருந்து மேலேறிச் சுவரில் வீசியது. முன்புறம் இருள் அடைந்தது. ஜன்னல் வழியாகக் கீழே குனிந்து வெளியே கவனித்துப் பார்த்தாள். அங்கே ஒருவரையும் காணவில்லை.

ஜன்னல் கதவை மூடிவிட்டு, ''யார் அது?'' என்று கேட்டாள்.

''சோம்பேறிப் பயல்கள்! தங்களுக்குச் சம்பந்தமே இல்லாதவர்களின் வீட்டு ஜன்னலுக்கடியில் மறைந்து ஒட்டுக் கேட்கும் சோம்பேறிகள் இங்கே நிறையப் பேர் இருக்கிறார்கள்.''

அவனை வெறித்துப் பார்த்துவிட்டு மெதுவாகச் சென்று தான் கொண்டுவந்த மூட்டையை நிலாமணம் அவிழ்க்கலானாள். கணவனுக்காக ஷாங்காயிலிருந்து தான் வாங்கி வந்திருந்த கால் உறைகளையும் சிகரெட் பாக்கெட்டுகளையும் வெளியில் எடுத்தாள்.

தன் குழந்தை பெக்கிக்காக மிட்டாய் வாங்கி வந்திருந்தாள். தாயும் மகளும் மிட்டாய்த் துண்டுகளைத் தின்றார்கள். கணவனிடமும் ஒன்றைக் கொடுத்தாள்.

பெக்கியைத் தூக்கிப் படுக்கையில் விட்டுக் காலில் இருந்த பூட்சுகளைக் கழற்றி எடுத்தாள். ''உனக்குக் குளிராக இல்லை? எங்கே, சீக்

கிரமாகப் போர்வையை இழுத்து மூடிக்கொள்.''

பிறகு தன் ஜாக்கெட் பித்தான் களைக் கழற்றிக்கொண்டே இருந்த வள் திடீரென்று நினைத்துக் கொண்டு அதன் பையிலிருந்த பணத்தை எடுத்துப் பார்த்தாள். திரும்பத் திரும்ப எண்ணிப் பார்த் துக்கொண் டிருந்தாள். இதே சமயம் தங்கவேர் சட்டென்று எழுந்து படுக்கையருகே அடுக்கி வைத்திருந்த பெட்டிகளுக்குப் பக் கத்தில் ஒதுங்கி நின்றான்.

அவனைத் திரும்பிப் பார்த்து விட்டு, ''இந்த நேரத்தில் பெட்டி யைப் போய் எதற்குத் திறந்து கொண் டிருக்கிறீர்கள்?'' என்று நிலாமணம் கேட்டாள்.

பதில்பேசாமல் நீளமான காகி தம் ஒன்றை எடுத்து மேஜையின் மேல் பிரித்துவைத்துவிட்டு அவள் பணத்தை எண்ணி முடிக்கும் வரையில் பொறுமையாக அந்தக் காகிதத்தையே பார்த்துக்கொண் டிருந்தான். பிறகு அந்த நிலச் சாஸனப் பத்திரத்தை அவள் முன் னால் போட்டு அமைதியாகச் சிரித் துக்கொண்டே, ''இதைப் பார்!'' என்றான்.

அழகான கையெழுத்தில் எழுதி யிருந்த அந்தப் பத்திரத்தில் இருந்த நீண்ட எண் வரிசையில் தன் பெயர் இருந்த இடத்தை அவளுக்குச் சுட்டிக் காட்டினான் தங்கவேர். விளக்கு வெளிச்சத்தில் இருவரும் ஒன்றாகக் குனிந்து அதை உற்றுக் கவனித்தார்கள்.

அவளுக்குச் சந்தோஷமாக இருந்தது. ''இந்த நிலம் நமக்குச் சொந்தம். ஆனால் இப்போது யுத் தம் ஒன்று நடந்துகொண் டிருப்ப தால் நிலைமை மோசமாக இருக் கிறது. யுத்தம் முடிந்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடும்; கஷ்டங்க ளெல்லாம் பறந்தோடிவிடும். பிறகு நிலந்தான் நமக்கு இருக் கவே இருக்கிறது!'' என்று அவன் அவளுக்கு விளக்கினான்.

குழந்தை பெக்கி தூக்கத்தில் இனிய கனவு கண்டுகொண் டிருந் தாள். அவளுடைய கனவுத்திரை யில் அப்பாவும் அத்தை பொன் மலரும் மற்றும் பலரும் காட்சி யளித்துக்கொண் டிருந்தார்கள். நெடுநாளைக்குப் பிறகு வீடு திரும்பி யிருந்த அம்மாவிடம் அவளுக்குப் பாசம் ஏற்படவில்லை; அம்மாவின் உருவம் அவளுடைய கனவில் தோன்றவில்லை.

வீட்டு ஓடுகளின்மீது உறைந் திருந்த பனிக்கட்டிகள் காலைச் செங்கதிரில் உருகிக்கொண் டிருந் தன. அவர்களுடைய வீட்டுக்குப் பின்னணியில் ஓங்கி உயர்ந்து நின்ற மலைத்தொடர்கள் அந்தப் பிரதேசத்துக்கே அழகூட்டிக் கொண் டிருந்தன. மலையடிவாரத் தில் தழைத்து வளர்ந்து நின்ற பசிய மரங்கள் சூரிய ஒளியில் அற்புதமாய்த் திகழ்ந்தன.

வானைத் துடைக்க எழுந்தவை போல் மலை உச்சியில் கருஞ்சிறகு விரித்து நின்ற மரங்களை நிமிர்ந்து பார்த்தாள் நிலாமணம். மேலே உச்சியில் ஓர் இடம் பள்ளமாகக் குகைபோல் தென்பட்டது அதற்கு மேலே வெண்மையான மேகங்கள் சூழ்ந்து நின்றன.

நேற்று ஊருக்குத் திரும்பி வந்த பிறகு அவளுக்குத் தெரிய வந்த நிலைமை முன்னமே தெரிந்திருந் தால், அவள் இங்கே வராமல் ஷாங்காயிலேயே தங்கியிருந்திருப் பாள்; கணவனையும் அங்கே வந்து தன்னுடன் இருக்கும்படி கூறி இருப் பாள். ஆனால் ஒன்று: ஷாங்காய் நகரத்துக்குப் போகப் பிரயாண அநுமதி கிடைப்பதுதான் மிகவும் கடினம். அவள் திரும்பி வரு வதற்கு விண்ணப்பித்துக்கொண்ட உடனேயே சாலைவழியாகக் கிராமத்துக்கு நடந்துவர அநுமதிச் சீட்டுக் கிடைத்துவிட்டது. ஏனென்றால், இப்போது தொழி லாளிகளையெல்லாம் கிராமங்களுக் குச் சென்று நிலத்தில் உழைத்து வேலை செய்யும்படி வற்புறுத்தி வந்தார்கள்.

யோசித்தபடி வீட்டுக்குள் திரும்பிவந்து முகம் பார்க்கும் கண்ணாடியைச் சட்டத்தில் சரியாக நிற்கவைத்து நிலாமணம் தலை யைச் சீவிக்கொண்டாள். கழுத் தளவுக்கு வெட்டி விட்டிருந்த தன் அழகிய கூந்தலைக் கண்ணாடியில்

பார்த்துக்கொண்டாள். முன் தலையில் தலைமயிரை மிக அழகாகப் பின்னியிருந்தாள். அவள் கணவன் வீட்டுக்கு வரும்போது கொண்டு வந்திருந்த வட்ட வடிவமான நிலைக் கண்ணாடி வெகு நாளைக்கு முன்னேயே உடைந்து போயிற்று. உடைந்த துண்டுகள் இரண்டையும் பசை போட்டுச் சிவப்புக் கம்பளி நூலால் கட்டி ஒட்டி இருந்தாள். இதைப்பற்றி முன்பெல்லாம் விசேஷமாக அவள் கவலைப் படுவதில்லை. ஆனால் இன்று முகம் பார்க்கும்போது குறுக்கே இருந்த அந்த நூலுக்காக முகத்தை மேலும் கீழும் ஆட்ட நேர்ந்தது அவளுக்கு வருத்தமாக இருந்தது.

சமீபத்தில் அவர்களுக்கு ஒரு நல்ல நிலைக்கண்ணாடி கிடைத்தது. ஆனால் அதைத் தங்கவேர் தன் தங்கைக்குச் சீராகக் கொடுத்து விட்டான்! ஆகவே, அவள் முகம் பார்க்க இந்த உடைந்த கண்ணாடியையே உபயோகிக்க வேண்டியிருந்தது.

''நிலாமணம், நிலாமணம்'' என்று, வெளியே நின்று ஆவலுடன் உள்ளே பார்த்தபடி, இவளை அழைத்தாள் தங்கமணி.

''யார் அது, தங்கமணியா? வா, வா; உள்ளே வந்து உட்கார்'' என்றாள் நிலாமணம்.

''அண்ணா எங்கே போயிருக்கிறார்?'' என்று கேட்டாள் தங்கமணி.

''விறகு வெட்டிக் கொண்டுவர மலையடிவாரத்துக்குப் போயிருக்கிறார்.''

தங்கவேர் உள்ளே இல்லை என்று தெரிந்ததும், தங்கமணி பயமில்லாது ஆடம்பரமாக உள்ளே நுழைந்தாள்.

''என்ன, தலை வாரிக்கொண்டிருக்கிறாயா? அடடா! என்ன இது? ஏன் கண்ணாடியை உடைத்து விட்டாய்?'' என்றாள். இந்த உடைந்த கண்ணாடியைப் பார்த்ததும் நிலாமணத்தைப் போலவே அவளுக்கும் அந்த அழகான மற்றக் கண்ணாடியின் ஞாபகம் வந்தது. உடனே அவள் கண்களில் ஒரு புத்தொளி வீசியது. ''இதோ பார், நிலாமணம்! என்றைக்காவது ஒரு நாள் நீ சௌ கிராமத்துக்குச் சென்று அங்கே உன் நாத்தியின் வீட்டில் உள்ள கண்ணாடியைப் பார்த்துவிட்டு வா. எவ்வளவு அழகான கண்ணாடி தெரியுமா அது?'' என்றாள்.

நிலாமணம் மௌனமாகச் சிரித்தாள். பிறகு கிராமத்திலுள்ள பலரைப்பற்றியும் விசாரித்தாள். அப்புறம் சிறிது நேரம் இருவரும் வம்பு பேசினார்கள். ஆனால் தங்கமணி என்னவோ அங்கிருந்து கிளம்புவதாக இல்லை. கடைசியில் வெட்கத்தால் முகம் சிவக்கத் தயங்கிக்கொண்டே மெதுவாக, ''அந்தக் கிழங்கள் இரண்டுந்தான் உன்னிடம் போய்க் கேட்கச் சொல்லின. உன்னிடம் இதைப் பற்றி வாயைத் திறந்து கேட்கவே சங்கடமாக இருக்கிறது. ஆனால்..'' என்றாள்.

நிலாமணத்திடமிருந்து கொஞ்சம் பணம் கடனாகக் கேட்டு வாங்கிக்கொள்ள அவர்கள் நினைத்தார்கள். அவர்களுக்கு இந்த வருஷம் அறுவடையில் கண்டு முதல் நிறைய இருந்தது. ஆனால் சர்க்காரின் பொதுக் களஞ்சியத்துக்குக் கொடுக்கவேண்டியதைக் கொடுத்த பிறகு, அவர்களிடம் எஞ்சிய நாணயம் சொற்பந்தான். இப்போது மக்கள் ஒரே ஒரு வரி தான் செலுத்தவேண்டும்; பொதுக் களஞ்சிய வரி. அந்த வரியினால் அவர்களுடைய தானியத்தில் பெரும்பகுதி பொதுக் களஞ்சியத்துக்குப் போய்க்கொண்டிருந்தது. இந்த வரிச்சுமையை அவர்களால் தாங்க முடியவில்லை. தவிர, அவர்களுடைய பட்டுப்பூச்சிகளையும் தேயிலைகளையும் சர்க்காருக்கே மிகவும் சொற்ப விலைக்கு விற்க வேண்டியதாகவும் இருந்தது.

இதெல்லாம் போக, தாங்கள் எல்லாரும் ராணுவத்தினருக்காகப் பூட்ஸ் தயாரிக்க வேண்டியிருந்ததைப்பற்றியும் தங்கமணி சொன்னாள். அநேகமாக ஒவ்வொரு குடும்பத்தினரும் குறைந்தது ஐம்பது முதல் எண்பது ஜோடி வரையில் தைத்துக் கொடுக்க வேண்டியிருந்தது. இரவு பகல் பாராமல் பூட்ஸுகளைத் தயாரித்

துக் கொடுத்தார்கள்: அந்தத் தடித்த தோல்களுக்குள் ஊசியால் குத்திக் குத்தித் தன் விரல்கள் காய்த்துப் போய்விட்டன என்றாள் தங்கமணி. ''பூட்ஸுகளுக்கு மேலே தைப்பதற்கு மோட்டாத் துணியும் ஓரங்களுக்கு வைத்துத் தைக்க அதைவிட மட்டமான மெல்லிய துணியும் வாங்கிக் கொள்ள எங்களிடம் பணம் கொடுத்தார்கள். ஆனால் நாங்களோ பூட்ஸ் தைக்கும் நூலிலிருந்து அதற்குத் தேவையான துண்டு அட்டைகள் கிழிந்த துணிகள்வரையில் எல்லாம் கைக்காசு போட்டு வாங்கவேண்டியிருந்தது'' என்றாள்.

ராணுவத்தினருக்குப் பூட்ஸ் தைத்துக் கொடுக்கும் வேலை முடிந்த பிறகு கிராமத்தினரை யுத்த முன்னணிக்கு ஆட்களைக் கொடுத்து உதவும்படி கேட்கும் இயக்கம் வலுத்தது. அதன் பிறகு ஒன்றன்பின் ஒன்றாகப் பல தொல்லைகள் வந்துகொண்டேயிருந்தன.

தங்கமணி இதையெல்லாம் விவரித்துவிட்டு, நிலாமணத்தின் காதருகே நெருங்கி, ''ஜனங்கள் சொல்வதுண்டு தெரியுமா, 'ஏழை பணக்காரனை நம்பியிருக்கிறான்; பணக்காரன் கடவுளை நம்பியிருக்கிறான்' என்று. முன்பெல்லாம் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டால் மிராசுதார்களிடம் நம்மைப் போன்ற ஏழை மக்கள் போய்ச் சாப்பாட்டுக்கு அரிசி கடன் கேட்டு வாங்கி வருவது வழக்கம்'' என்று இரையாமல் கூறினாள். பிறகு வீட்டின் முன்னாலிருந்த கதவு மூடும் சப்தம் கேட்டு வெளியே எட்டிப் பார்த்தாள்.

விறகுக் கட்டுடன் தங்கவேர் திரும்பிவந்தான். அவன் உள்ளே வந்ததும், தங்கமணி அங்கிருந்து மறைந்துவிட்டாள்.

அன்று காலை முழுவதும் கிராமத்தினர் பலர் அந்த வீட்டுக்கு வந்து நிலாமணத்தை க்ஷேமம் விசாரித்தார்கள். ஒவ்வொருவரும் அவளிடம் பணம் கடன் கேட்டார்கள். ஏதோ ஒரு சிறு தொகைதான் கடன் கேட்டார்கள். ஆனால் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் அவர்கள் வரவில்லையாதலால், திரும்பும்போது வருத்தமோ ஆத்திரமோ இல்லாமல் திரும்பிச் சென்றார்கள்.

நிலாமணத்துக்குப் பயமாகப் போய்விட்டது. அவள் தன் கணவனிடம், ''கிராமத்திலுள்ள எல்லாரும் என்னிடம் பணம் கேட்க வருவதைப் பார்த்தால், நான் ஏதோ நிறையப் பணம் சேர்த்துக் கொண்டு வந்துவிட்டேன் என்று நினைத்துக்கொண்டிருப்பார்கள் போல் இருக்கிறது'' என்றாள்.

''எப்போதுமே இங்கே இப்படித்தான். நகரத்துக்குப் போய்விட்டு யார் திரும்பி வந்தாலும் அவர்கள் கையில் பணம் சேர்த்துக்கொண்டு வந்திருப்பதாகவே ஜனங்கள் நினைக்கிறார்கள்'' என்று சிரித்துக்கொண்டே, அவளுக்கு ஆறுதலாகப் பதிலளித்தான் தங்கவேர்.

பகல் சாப்பாட்டுக்குச் சோறு வடிப்பதற்குத் தேவையான அளவு அரிசியை எடுத்துக் களையும்படி சொன்னான். நன்றாகச் சமைத்த சோறு சாப்பிட வேண்டுமென்று அவனுக்கு ஆசை.

அவனுடைய விருப்பப்படியே தேவையான அளவு கெட்டியான அரிசிக் கஞ்சி காய்ச்சிவைத்தாள் நிலாமணம்.

அவர்கள் சாப்பிட உட்காரு முன், வாசற்கதவை அவன் தாழிட்டு வந்தான். ''இந்தமாதிரி நாம் வயிறு நிறையச் சாப்பிடுவதை மக்கள் பார்த்துவிட்டால் நிச்சயம் நம்மிடம் கடன் கேட்க வந்துவிடுவார்கள்!'' என்றான்.

பிறகு வாசல் கதவுக்கு அருகே நின்றபடி வெளியில் ஏதாவது காலடிச் சப்தம் கேட்கிறதா என்பதை உற்றுக் கேட்டுக்கொண்டே, சாப்பிட்டான்.

இந்தச் சமயம் வெளியே இருந்து தோழர் வாங் என்ற அதிகாரி, ''தங்கவேர் இருக்கிறானா?'' என்று இரைந்து கூப்பிடுவது கேட்டது.

தன் கையில் இருந்த வட்டிலை நிலாமணத்தின் கையில் திணித்துவிட்டு, தங்கவேர் வெளிவாசலுக்கு விரைந்தான். இரண்டு

வட்டில்களையும் படுதாவுக்குப் பின்னால் இருந்த கட்டிலின்மேல் நிலாமணம் ஒளித்துவைத்தாள். வட்டிலில் இருந்த நொய்யரிசிக் கஞ்சி கீழே கொட்டிவிடாதபடி அதை வெகு ஜாக்கிரதையாகப் படுக்கைமீது வைத்தாள். பிறகு குழந்தை பெக்கியின் கையில் இருந்த பாத்திரத்தையும் பிடுங்கி வைப்பதற்காக அவள் பக்கம் திரும்பினாள். ஆனால் குழந்தை பெக்கியோ தன் கஞ்சிப் பாத்திரத்தைக் கொடுக்க மறுத்துவிட்டாள். இதற்குள் தங்கவேரும் தோழர் வாங்கும் உள்ளே வந்துவிட்டார்கள்.

''சரி, சரி; நீங்கள் உங்கள் சாப்பாட்டு வேலையைப் பாருங்கள். அசந்தர்ப்பமான வேளையில் வந்துவிட்டேன்'' என்றார் வாங்.

அவர்கள் இருவரும் தாங்கள் சாப்பிட்டு முடித்துவிட்டதாகச் சொன்னார்கள். பெக்கி தன் சாப்பாட்டு வட்டிலைத் திடும் என்று நாற்காலியின்மீது வைத்தாள். தோழர் வாங் குழந்தையைக் கடிந்துகொண்டு, ''உம்! கஞ்சி ஆறிப்போவதற்குள் சாப்பிடு, பெக்கி'' என்றார்.

நிலாமணம் சிரித்துக்கொண்டே ''தோழர் வாங், தயை செய்து உட்காருங்கள்!'' என்று கூறி உபசரித்தாள்.

வாங் அப்படியே உட்கார்ந்து, ''நிலாமணம், இந்தத் தடவை நீ திரும்பி வந்த பிறகு கிராமம் முன்னைப்போல் இல்லாமல் பெரிய மாறுதலுடன் இருப்பதைப் பார்த்திருப்பாய். ஏழைக் குடியானவர்கள் எப்படியோ தங்கள் கஷ்டங்களை எல்லாம் தாங்கிச் சமாளித்துவிட்டார்கள். இப்போது அரசாங்கமே மக்களுடைய சொந்த அரசாங்கமாகிவிட்டது. மக்கள் வெகு தூரம் மாறுதல் அடைந்துவிட்டார்கள்'' என்றார்.

சிறிது நேரம் கழித்துத் தோழர் வாங் எழுந்து போய்விட்டார். பிறகு தங்கவேர் சொன்னான்: ''தோழர் வாங் உண்மையிலே நல்லவர். பழங்காலத்து அரசாங்க அதிகாரிகளைப்போல இதைக் கொடு, அதைக் கொடு என்று கேட்டு நமக்குத் தொந்தரவு கொடுப்பவரல்ல! தோழர் வாங் நல்ல மனிதர்!''

அன்று முழுவதும் அவன் முகம் வாட்டமாகவே இருந்தது. தான் சாப்பிட்டுக்கொண்டிருந்த கஞ்சி வட்டிலைத் தோழர் வாங் பார்த்திருப்பாரோ என்று பயந்தான்.

வெகு நாளைக்குப் பிறகு கணவனை வந்தடைந்த நிலாமணத்துக்குக் குடும்ப வாழ்க்கை இன்பமாக இருந்தது. இந்த இன்ப வாழ்க்கைக்காக அவள் நெடுந்தூரம் நடந்தே வந்து கணவனை அடைந்தாள். ஒரு வாரத்துக்கெல்லாம் அவளுக்கு வாழ்க்கை பழகிவிட்டது. தான் பல நாள் வெளியூரில் இருந்த எண்ணமே போய்விட்டது.

மாதர் சங்கம் ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தது. பக்கத்து வீட்டில் இருந்த அண்ணி தங்கமணியைக் கூட்டிக்கொண்டு போவதற்காக அங்கே சென்றாள் நிலாமணம்.

''அவள் ஓடையில் துணி துவைத்துக்கொண்டிருக்கிறாள்'' என்று சொன்னாள் அத்தைக் கிழவி.

நிலாமணம் சென்ற பிறகு கிழவி, தனக்குள், ''உனக்குக் கூட்டத்துக்குப் போகவேண்டும் போல் இருந்தால் நீ போகிறதுதானே; மற்றவர்களையும் எதற்குக் கட்டி இழுக்கிறாய்? தொழிலாளர் இயக்கத்துக்கே இவள்தான் ஓர் உதாரணமாக விளங்குகிறாள்!'' என்று முணுமுணுத்துக்கொண்டாள்.

''சரி; சரி; போதும்; நிறுத்து உன் கதையை!'' என்று தாழ்ந்த குரலில் கூறினார் மாமாக் கிழவர்.

''ஐயே! இந்தக் காலத்து பிள்ளைகளெல்லாம் முட்டாளாக இருக்கிறார்கள். இவர்களை எல்லாம்விட நான் வயசானவள்; கிழவி. இவர்கள் வாழ்நாளில் சாப்பிட்டிருக்கும் சோற்றைவிட நான் சாப்பிட்டிருக்கும் உப்பின் அளவே அதிகமாக இருக்கும். என் வாழ்க்கையில் நான் அநேக விஷயங்களைப் பார்த்திருக்கிறேன்.

ஒரு சமயம் இந்த ராணுவம் வருகிறது; மற்றொரு சமயம் வேறொரு ராணுவம் வருகிறது. ராணுவத்துக்குப் பின்னால் கொள்ளைக் கூட்டம் வருகிறது. ஆனால் இந்தத் தடவை கொள்ளைக் கூட்டத்தினரைவிட மோசமானவர்கள் வந்திருக்கிறார்கள். நான் சொல்லுவது உண்மை. நாலு படி சோளத்தைக்கூடத் தெரியாமல் மறைத்து வைத்துத் தப்பிக்க முடியாது!''

அத்தை அங்கே உட்கார்ந்தபடி பட்டு இழையை ஒட்டிக்கொண்டே இதையெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தாள்.

''அட கடவுளே! என்ன பேச்சு இது! உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன?'' என்று கடிந்துகொண்டார் மாமா.

அவ்வளவுதான்; அத்தைக் கிழவி உடனே கூச்சல் போட ஆரம்பித்து விட்டாள். ''கிழவரே, பயப்படாதீர்! பயப்படாதீர்! உம்மை நான் எதிலும் சிக்க வைக்கமாட்டேன். அவர்கள் என்னைப்பற்றிப் புகார் செய்யட்டும். அதனால் கிடைக்கும் புகழையும் அடையட்டும். தோழர் வாங்கை அவர்கள் எவ்வளவுதான் திருப்திப்படுத்தட்டும். முடிவில் நம்மைப் போலவே அவர்களுந்தான் பட்டினி கிடக்கிறார்கள்'' என்றாள்.

அத்தைக் கிழவியை அடக்கும் முயற்சியைக் கைவிட்டு மாமா பேசாமல் இருந்துவிட்டார்.

நிலாமணம் திரும்பி வந்தாள். குழந்தையைப் பார்த்துக்கொள்ளும்படி கணவனிடம் சொல்லி விட்டுப் போகவே திரும்பி வந்தாள். வீட்டில் நுழையும் போதே அத்தை ஏதோ கூச்சல் போட்டுக்கொண்டிருந்தது கேட்டது. அத்தை என்ன சப்தம் போடுகிறாள் என்பதைச் சற்றுக் கவனித்துக் கேட்டாள். தங்கவேரின் முகத்தில் கோபம் அனல் கக்கிக்கொண்டிருந்தது. அவன் மனம் புண்படும்படி பேசிய அந்தக் கிழவிமீது நிலாமணத்துக்கு ஆத்திரம் வந்தது.

''இந்த மாதிரி ஊரே கூடிவிடும்படி போடும் கூச்சலை நாங்கள் கேட்டால் பரவாயில்லை. ஆனால் வேறு யார் காதிலாவது விழுந்தால் உங்களைப்பற்றிப் புகார் செய்து விடுவார்கள். பிறகு எங்கள்மீது பழியைப் போட்டுவிடுவீர்கள்'' என்று சுவர் அருகே போய் நிலாமணம் இரைந்து சொன்னாள்.

''புகார் செய்வதைப்பற்றி நான் பயந்துகொண்டிருக்கவில்லை! என்னைப்போன்ற கிழங்கள் என்றைக்காவது ஒரு நாள் ஓட்டின் மீது உறைந்திருக்கும் பனியைப் போலவும், காற்றில் எரியும் விளக்கைப்போலவும் அணைந்து மறையப் போவது நிச்சயம். ஆனால் எதிர்கால வாழ்வைப்பற்றிச் சிந்திக்க வேண்டிய இளைஞர்களான நீங்கள் இதயத்தை இருட்டடிப்புச் செய்துகொண்டு பிறருக்குத் தீங்கு செய்யாதீர்கள். அப்படிச் செய்தால் உங்களுக்கு நல்வாழ்வு கிட்டாது'' என்று தன் வீட்டில் இருந்தபடியே இரைந்து சொன்னாள் கிழவி.

''சரி; சரி. கொஞ்சம் அடக்கித்தான் பேசேன்'' என்று பெரிய மாமா மீண்டும் கடிந்துகொண்டார்.

''காரணம் இல்லாமல் பிறரை 'வஞ்சக எண்ணம் கொண்டவர்கள்', 'இதயத்தை இருட்டடிப்புச் செய்தவர்கள்' என்றெல்லாம் பழிப்பது நல்லதல்ல. வயசானவர்கள் அதற்குத் தகுந்தாற்போல் நடந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அவர்களுடைய நீண்ட நாளைய வாழ்வை நாயின் வாழ்வோடுதான் ஒப்பிட வேண்டும்!'' என்றாள் நிலாமணம்.

''என்ன! என்னைத் திட்டும் அளவுக்கு உனக்குத் தைரியம் வந்துவிட்டதா? நான் என்ன வேற்று மனுஷியா நீங்கள் திட்டுவதற்கு? அடி மட்டியே! நீ என்ன சோறு தின்கிறாயா அல்லது வேறு ஏதாவது தின்கிறாயா?'' என்று தன் வீட்டில் இருந்தபடியே அத்தை கூச்சல் போட்டாள்.

''நீ பேசுவதை நிறுத்தவே மாட்டாயா?'' என்று மாமா பல்லைக் கடித்துக்கொண்டே கத்தினார்.

அடுத்த கணம் உள்ளே ஏதோ அடி விழும் சப்தமும் ஒருவரை

ஒருவர் கடிந்துகொள்வதும் கேட்டன.

''சரி, சரி; என்னை நன்ருக அடி! நன்ருக அடி! வயசான என்னை இன்னுமா அடிக்கிருய்? வேண்டுமானுல் என்னை அடித்துக் கொன்றுவிடு! எனக்கு இனி உயிர் வாழ ஆசை இல்லை! வாழ்வதற்கு எனக்குத் தெம்பும் கிடையாது'' என்று அழுது ஓலமிட ஆரம்பித்தாள் அத்தை.

கடைசியில் தங்கவேர் உள்ளே போனுன். ''என்ன இது!'' என்று சொல்லி, அந்தக் கிழவரை மறு பக்கம் இழுத்து வந்தான். ''கல்யாணமாகிப் பல வருஷங்கள் ஆன பிறகு இவ்வளவு வயசாகியும் நீங்கள் இப்படி நடந்துகொண்டால் ஊரார் சிரிப்பார்கள்'' என்ருன்.

அத்தை தரையில் எழுந்து உட்கார்ந்து விசித்துக்கொண்டிருந்தாள். பூனை மீசையைப் போன்ற சிறிய மயிர்கள் அவளுடைய தாடைமீது ஒட்டிக்கொண்டிருந்தன.

கிழவருடன் பேசி அவருடைய கோபத்தைத் தங்கவேர் தணித்தான். வீட்டுக்குத் திரும்பி வந்த போது நிலாமணத்தை அறையில் காணவில்லை. அவள் கூட்டத்துக்குப் போய்விட்டாள்.

அன்று முதல் பெரிய அத்தையும் நிலாமணமும் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதை நிறுத்திவிட்டார்கள்.

குடியானவர் சங்கத்தில் ஒரு தீர்மானம் நிறைவேறியது. அதன்படி புது வருஷப் பிறப்பின்போது கிராமத்தினர் எல்லாரும் தங்களுக்குச் சமீபத்தில் வசிக்கும் சிப்பாய்களின் வீடுகளுக்குச் சென்று புத்தாண்டு வாழ்த்துக் கூறிவிட்டு, இயன்ற அளவு பரிசுகளையும் கொடுத்துவிட்டு வரவேண்டும். ஒவ்வொரு வீட்டுக்காரனும் தன் பங்குக்கு ஒரு பாதி பன்றி இறைச்சியும் நாற்பது கேக்குகளும் கொடுக்க வேண்டும். தங்களிடம் பன்றி இல்லாத வீட்டுக்காரர்கள் பணமாகக் கொடுக்க வேண்டும். பட்டாசு வெடிகளுக்காக ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட தொகை கொடுக்க வேண்டும். நன்கொடைகள் எல்லாம் வருஷக் கடைசிமாதத்தில் இருபத்தைந்தாம் தேதிக்குள் கிராமப் பொதுக் காரியாலயத்தில் கொடுபட்டுவிட வேண்டும். அன்றைத் தினம் இந்தத் தீர்மானத்தை யாரும் எதிர்க்கவில்லை. நடைமுறையில் அது சாத்தியமா என்பதை ஆலோசிக்காமலே குடியானவர் எல்லாரும் அதை ஆதரித்துக் கைகளைத் தூக்கிவிட்டார்கள். பின்னுல் ஒவ்வொருவனும் தன் அண்டை வீட்டுக்காரன் என்ன செய்கிருனே அதுபோலவே தானும் செய்யலாம் என்று காத்துக்கொண்டிருந்தான்.

தோழர் வாங் ஒவ்வொரு வீடாகச் சென்று குடியானவர்களைத் தீர்மானத்தின்படி நடக்க வற்புறுத்திஞர். தங்கவேரின் வீட்டுக்கு வந்தபோது, ''தம்பி, நீ தொழிலாளர் இயக்கத்துக்கே உதாரண புருஷனுக விளங்குகிருய். அதனுல் நீதான் முதலில் தீர்மானப்படி நடந்து மற்றவர்களுக்கு வழிகாட்டியாக விளங்க வேண்டும். விடுதலை நல்கும் சுதந்தர வீரர்களின் குடும்பத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை நாம் ஏற்றுக்கொண்டுதானே ஆக வேண்டும்!'' என்ருர்.

தங்கவேர், ''என்னுல் பணமோ புத்தாண்டுக் கேக்குகள் செய்ய அரிசியோ சம்பாதிக்க முடியாது. கடந்த இரண்டு மாதங்களாக நாங்களே அரை வயிற்றுக் கஞ்சி தான் குடித்து வருகிறோம்'' என்று பதில் அளித்தான்.

''ஆமாம், எனக்குத் தெரியாதா என்ன? உங்களுக்கு இப்போது கஷ்டமான நிலைதான். ஆனுல் உன் மனைவி நகரத்தில் வேலை செய்துகொண்டிருந்தாள். இரண்டு பேரும் பாடு படுகிறீர்கள்; சம்பாதிக்கிறீர்கள். குடும்பத்திலும் அதிகப் பேர் இல்லை. மற்றவர்களைவிட நீங்கள் நல்ல சாப்பாடுதான் சாப்பிட்டு வருகிறீர்கள்'' என்ருர் வாங்.

விவாதம் முடிவில்லாமல் போய்க்கொண்டிருந்தது. தங்க

வேர் தன் ஏழைமையை எடுத்துக் கூறினான். ஆனால் அதை நம்பாமல் போர் வீரரின் குடும்பத்தினருக்கு உதவி செய்ய வேண்டிய கடமையை அவனுக்கு இடித்துரைத்தார் வாங்.

''அவர்களைவிட உன் கஷ்டம் பெரிதென்று மிகைப்படுத்திப் பேசாதே, தோழா! எதிர்காலத்தை நம்பிக்கையுடன் நோக்கு, தோழா!'' என்று புத்தி மதி கூறினார்.

''அடுத்து வரும் வசந்த காலத்துக்கே சாப்பாட்டுக்கு இல்லையே! எதிர்காலத்தைப்பற்றி எப்படி நம்பிக்கை கொள்ள முடியும்? நாம் எல்லாரும் என்ன கூட்டாகப் பெரிய பானையில் பொங்கிச் சாப்பிடப் போகிறோமா?'' என்றான் தங்கவேர்.

'கூட்டாகப் பெரிய பானையில் பொங்கிச் சாப்பிடுவது' என்ற வார்த்தையைக் கேட்டவுடன், தோழர் வாங்குக்குப் பேராத்திரம் வந்தது. நாட்டின் விடுதலைக்கு முன்பு மக்களிடம் தேசியவாதிகளின் கைக்கூலிகள், 'கம்யூனிஸ்டு ஆட்சி வந்தால் எல்லாரும் ஒரே இடத்தில் பெரிய பானையில் பொங்கி ஒன்றாகச் சாப்பிட வேண்டி வரும்' என்று சொல்லிப் பயமுறுத்தினார்கள். இதைக் குடியானவர்கள் வெறுத்தார்கள். ஆனால் இப்போதோ அதை விரும்பி வரவேற்கும் நிலைமையை அடைந்துவிட்டார்கள்!

''கூட்டாஞ் சோறு பொங்கிச் சாப்பிடுவதைப்பற்றிக் கனவு காண்பதை நிறுத்திவிட்டு, உங்கள் நிலத்தில் அதிக விளைச்சலுக்கு முயற்சி செய்தால் நீங்கள் இன்னும் நல்ல நிலையில் இருக்கலாம்'' என்று சொன்னார் வாங்.

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே நிலாமணம் உள்ளே படுக்கைக்குப் பக்கத்தில் இருந்த இருட்டு மூலைக்குச் சென்று கையில் எதையோ எடுத்துகொண்டு வந்தாள். தத்தளிக்கும் மனத்துடன் தோழர் வாங்கிடம் வந்து சிரித்துக்கொண்டே, ''தோழரே, அவருக்குத் தெரியாமல் நான் கொஞ்சம் பணம் வைத்திருந்ததை இதோ கொண்டு வந்திருக்கிறேன். என்னிடம் இருப்பதெல்லாம் இதுதான். தயை செய்து இதை எடுத்துக்கொண்டு போய் நமக்குத் தேவையான பட்டாசுக் கட்டுகள் வாங்கிக்கொண்டு வாருங்கள். சிப்பாய்களின் குடும்பத்தினருக்கு அன்பளிப்பாகக் கொடுப்பதற்கு அரைப் பன்றியாவது விலை கொடுத்து வாங்கியாக வேண்டும்'' என்றாள்.

வாங் அவள் பக்கம் திரும்பி விறைப்பாக, ''ஆமாம், நீ இதை ஏன் முதலிலேயே சொல்லவில்லை? இவ்வளவு நேரமும் உங்களிடம் ஒரு பைசாக்கூட இல்லை என்று வேஷம் போட்டீர்களே!'' என்று கேட்டார்.

''ஆமாம்; நான் செய்தது தவறு தான், தோழரே! ஆனால் உண்மையில் என்னிடம் பணம் இருக்கிறது என்பது அவருக்குத் தெரியவே தெரியாது. அவர் அப்பாவி!'' என்று கெஞ்சினாள் நிலாமணம்.

''சரி, நாள் நெருங்கிவிட்டது. நாளை மறு நாளைக்குள் புது வருஷக் கேக்குகளை யெல்லாம் தயார் செய்து வைத்துவிடு'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து கிளம்பினார் வாங்.

தோழர் வாங் வெளி வாசலைக் கடந்து மற்றொரு வீட்டுக்குள் நுழையும்வரைக்கும் நிலைப்படியில் நின்று பார்த்துக்கொண்டிருந்தாள் நிலாமணம். திடீரென்று யாரோ பின்னாலிருந்து தலை மயிரைப் பிடித்து இழுப்பது தெரிந்தது. அவளைப் பிடித்து இழுத்து மாற்றி மாற்றி அவள் செவிகளில் அடித்தான் தங்கவேர். அவளும் பதிலுக்கு அவனை வேகமாக உதைத்தாள்.

ஆனால் தங்கவேர் சும்மா விடவில்லை. ''ஓகோ! உன்னிடம் பணம் இருக்கிறதோ? அதைக் கொண்டு ஒடையில் போடு! உன் எச்சில் காசு யாருக்கு வேண்டும்? கடைசியில் என்னைப் புளுகனாக ஆக்கிவிட்டாய்! இருக்கட்டும்! நிஜமாகவே நான் ஒரு பொய்யன் ஆகிவிடுகிறேன் பார்!'' என்றான் ஆத்திரமாக.

நிலாமணத்துக்கு அழுகை பொங்கிவந்தது. எவ்வளவு அடக்கியும் அடி தாங்க முடியாமல் விம்மி அழுதுவிட்டாள். கடைசியில் மாமாவும் இதுவரைக்கும் நிலாமணத்துடன் பேசாத அத்தையும் வந்து சமாதானம் செய்து வைத்தார்கள்.

மறு நாள் அவர்கள் எல்லாரும் அதிகாலையிலேயே புது வருஷக் கேக்குகள் செய்வதற்காக அரிசியைப் போட்டு மாவரைத்துக் கொண்டிருந்தார்கள். பழைய யந்திரம் பேரிரைச்சல் போட்டுக் கொண்டு மெதுவாகச் சுழன்றது. திசையின் அச்சாணிமீது பூகோளம் சுற்றி உருண்டு காலத்தை மாற்றுவதுபோல் இருந்தது அந்த இரைச்சல்.

மாலையில் வீட்டின் முன்னல் ஒரு மேஜையைக் கொண்டு வந்து போட்டு அதன்மீது ஒரு விளக்கை ஏற்றி வைத்துவிட்டுச் சுற்றி நின்றுகொண்டு புதுவருஷக் கொண்டாட்டத்துக்கான பணியாரங்களைச் செய்துகொண்டிருந்தார்கள்.

அதிகாலையில் கிராமத்து ஆண்களெல்லாம் பன்றிகளையும் புதுவருஷக் கேக்குகளையும் கூடைகளில் போட்டுத் தூக்குக் கழிகளில் சுமந்து சென்று கிராமப் பொதுக் காரியாலயத்தில் சேர்த்தார்கள்.

இங்கே வீடு வெறிச்சோடிக் கிடந்தது. ஏதோ பெண்ணுக்குக் கல்யாணம் நடந்த வீட்டில் விருந்தினரெல்லாம் போன பிறகு அமளி அடங்கி வெறிச்சென்றிருக்கும் வீட்டைப்போல் காட்சியளித்தது. நிலாமணத்துக்கு முன்போல வீட்டு அலுவல்களைக் கவனிப்பது கஷ்டமாக இருந்தது. பக்கத்து வீட்டுக்குச் சென்று பெரிய மாமா வந்துவிட்டாரா என்று விசாரித்தாள்.

''அவர் இன்னும் திரும்பி வரவில்லையே'' என்றாள் அத்தை. பிறகு, ''நம் புது வருஷப் பரிசுகளை அவர்களிடம் கொடுக்கும்போது முகமலர்ச்சியுடன் சிரித்துக் கொண்டே கொடுக்கும்படி சொன்னேன். கொடுப்பதென்னவோ கொடுக்கிறோம்; மூஞ்சியைச் சிணுங்கிக்கொண்டே கொடுத்துக் கெட்ட பெயர் வாங்குவானேன்!'' என்றாள்.

இருவரும் பேசிக்கொண்டே கணவன்மாரின் வருகையை வழி பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் வெளி முற்றத்தில் நின்று பேசிக்கொண்டிருக்கும் போது, கிழ மாமா பரபரப்புடன் உள்ளே நுழைந்தார்.

''கதவை உடனே மூடு! சீக்கிரம் கதவை மூடித் தாழ்ப்பாள் போடு! ஹூம், சீக்கிரம்! சீக்கிரம்! குழந்தைகள் எல்லாம் எங்கே? எல்லாரும் உள்ளே இருக்கிறார்களா? நீங்கள் முதலில் உள்ளே செல்லுங்கள்!'' என்றார் படபடப்புடன்.

''ஆமாம்; என்ன விஷயம்? என்ன ஆயிற்று?'' என்று கேட்டாள் அத்தை.

கிழவர் கதவைத் தாழிட்டுவிட்டுக் கிழவியின் பக்கம் திரும்பி, ''அவர்கள் ரகளை செய்யக் கூட்டமாக வருகிறார்கள்'' என்று இரையாமல் சொன்னார்.

''யார் வருகிறார்கள்?'' என்றாள் கிழவி.

''என் கணவர் எங்கே?'' என்று அவள் கேள்வியை இடைமறித்து நிலாமணம் கேட்டாள்.

''என்னிடம் அந்தத் தங்கவேரின் பேச்சையே எடுக்காதே! நான்தான் அப்போதிருந்தே சொல்லி வருகிறேனே, 'இவன் என்றைக்காவது ஒரு நாள் பெரிய ஆபத்தில் மாட்டிக்கொள்ளப் போகிறான்' என்று. சற்று முன்பு எல்லாருடைய புது வருஷப் பணியாரங்களையும் எடை போட்டுப் பார்க்கையில் தங்கவேரின் பங்கு மிகவும் குறைவாக இருந்தது: மற்றும் பலரும் அதேபோல் குறைவாகக் கொண்டு வந்திருந்தார்கள். அவர்கள் எல்லாரையும் வரிசையாக நிறுத்தி வைத்திருக்கிறார்கள். நல்ல காலம், நான் அவர்களிடமிருந்து தப்பித்து வந்துவிட்டேன்'' என்று கிழவர் ஆத்திரமாகப் பேசினார்.

நிலாமணத்துக்கு வருத்தமாகவும் இருந்தது. அவள், ''பெரிய மாமா, என் மகன் பெக்கியைச்

காணவில்லை. அங்கே பார்த்தீர்களா?'' என்று கேட்டாள்.

கிழ மாமா ஒரு கணம் பிரமித்து நின்றார் பிறகு திடீரென்று விரலைச் சுட்டிக் காட்டி, ''இந்தா, சீக்கிரம் ஓடு! முதலில் போய்க் குழந்தையைக் கூட்டிக்கொண்டு வா. அதுவும் அப்பனுடன் கோயிலுக்கு வந்துவிட்டது, பார்த்தேன்!'' என்றார்.

கோயிலை நோக்கி நிலாமணம் வெகு வேகமாக ஓடினாள்; சிந்திக்கும் உணர்ச்சியே இல்லாமல் ஏதோ அந்தரத்தில் பறந்து செல்வதுபோல் தன் நினைவற்று ஓடினாள். கோயிலின் சிவப்புச் சுவர்களுக்கு அப்பாலிருந்து கூச்சலும் கோஷமும் கேட்டுக்கொண்டிருந்தன. நேரே கோயில் வாசலில் புகுந்து ஓடினாள். முற்றத்தில் நல்ல வெளிச்சமாக இருந்தது. ஆனால் அது காலியாகக் கிடந்தது. கோயில் புரைகளில் புறாக்கள் சிறகடித்துப் பறந்தன. அப்போது திடீரென்று ராணுவச் சிப்பாய் ஒருவன் பளபளக்கும் ஈட்டியை நீட்டிக்கொண்டு கிழக்குப் பக்கத்திலிருந்து வந்தான். அந்த ஈட்டியில் சிவப்புக் குஞ்சம் ஒன்று தொங்கியது. நிலாமணம் திகைத்துப்போய் அசையாமல் நின்றுவிட்டாள். அந்த ராணுவ வீரன் வெகு வேகமாக அவளைக் கடந்து வெளிவாசலில் புகுந்து மறைந்தான்.

முன்னால் இருந்த படிகளில் ஏறி, உயரமான இருளடைந்த பிரதான மண்டபத்துக் கதவு வழியாக உள்ளே எட்டிப் பார்த்தாள். அங்கே யாருமே இல்லை. திரும்பி வெளியே ஓடிவந்தாள். இப்போது ஜனக் கூட்டத்தின் கோபாவேசமான பேரிரைச்சல் ஷென்லா மரக்கடையிலிருந்து கேட்பது போலிருந்தது. சர்க்கார் அந்தக் கடையை எடுத்துக்கொண்டு அரசாங்கப் பண்டகசாலையாக உபயோகித்து வந்தது. அங்கே வேகமாக ஓடிச்சென்று, ''பெக்கி, பெக்கி!'' என்று நிலாமணம் கூவியழைத்தாள்.

கட்டிடம் மிகவும் தாழ்வாக இருந்தது. அதன் வாசலில் பெரிய ஜனக்கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது.

கூட்டத்துக்கு முன்னால் சட்டியுடன் நின்றுகொண்டிருந்த சிப்பாய்கள் எல்லாரும், ''வீட்டுக்குச் செல்லுங்கள்! எல்லாம் சரியாகி விட்டது; எல்லாரும் வீட்டுக்குச் செல்லுங்கள்!'' என்று கூவினார்கள்.

''புது வருஷ தினத்துக்காக நாங்கள் எல்லாரும் அரிசி கடன் வாங்கிக்கொள்ள வந்திருக்கிறோம்'' என்று கூட்டத்தினரில் ஒருவன் கத்தினான்.

''நல்ல அறுவடை ஆகியிருக்கிறது. புது வருஷ தினத்தன்று வயிற்றுக்குச் சோறு இல்லாமல் பட்டினி கிடக்கவேண்டுமா?''

''வயிற்றுச் சோற்றுக்கு அரிசி கடன் கேட்பதுகூடக் குற்றமா?''

''கடன் கேட்பதாவது? இது என்ன அர்த்தமற்ற பேச்சு! அது நம்முடைய தானியந்தானே?''

தொடர்ந்து சரமாரியாக வந்துகொண்டிருந்த குரல்களிலிருந்து நிலாமணம் தன் கணவனின் குரலைக் கண்டுகொள்ள முடியவில்லை. விவரிக்க முடியாத விசித்திரமான ஓர் உணர்ச்சி அவள் உடலெங்கும் ஊடுருவிப் பாய்ந்தது. ''பெக்கியின் அப்பா, வீட்டுக்கு வாருங்கள்'' என்று கணவனைக் கூப்பிடவே அவளுக்கு வெட்கமாக இருந்தது.

பிற கூச்சல்களுக்கு மேலே, ''சகோதரர்களே, உங்கள் குறை எதுவாக இருந்தாலும் சொல்லுங்கள். பேசித் தீர்த்துக்கொள்ளலாம். உங்கள் பிரச்னை எதுவாக இருந்தாலும் நாம் அதை விவாதித்துத் தீர்த்துக்கொள்ளலாம். இப்போது எல்லாரும் வீட்டுக்குச் செல்லுங்கள். நான் உங்களுடைய தேவைக்கு வாக்குறுதி கொடுக்கிறேன்'' என்றார் தோழர் வாங் அவர் பேச்சு மேற்கொண்டு கேட்கவில்லை. தூக்குக் கழிகளால் கூட்டத்தினர் கதவை இடிக்கும் ஒலியில் அது மங்கிவிட்டது.

பயந்துபோன குழந்தை ஒன்று விம்மி வீரிட்டு அழும் சப்தத்தைக் கேட்டு நிலாமணம் உடனே, ''பெக்கி, பெக்கி!'' என்று

கூவிக் கூட்டத்தில் புகுந்து முண்டியடித்துக்கொண்டே போனாள்.

''அம்மா! அம்மா!'' என்று கதறி அழுதாள் பெக்கி.

சிப்பாய்கள் தங்கள் தடிகளாலும் ஈட்டிகளாலும் இடித்துத் தள்ளிக் கூட்டத்தைக் கலைத்துக் கொண்டிருந்தார்கள். ஒருவன் வலி பொறுக்க மாட்டாமல்,''அட பாவி மகனே! இதில் யாரோ ஒருவன் சாகப்போகிறான்! அது நிச்சயம்!'' என்று கத்தினான்.

தூக்குக் கழிகளால் கதவை மக்கள் தாக்கிக்கொண்டே இருந்தார்கள். 'மளார்!' என்ற சப்தத்துடன் கதவு பிளந்து வழி விட்டது.

''சகோதரர்களே, எல்லாரும் சற்று அமைதியாக இருங்கள்! இது பொதுமக்களுடைய சொத்து! பொது மக்களுடைய சொத்தை யாரும் தொட முடியாது!'' என்று தோழர் வாங் கடுமையாக எச்சரித்தார். பிறகு,''பொது மக்களுடைய சொத்தை நாம் அனைவரும் சேர்ந்து பாதுகாப்போம்!'' என்று இரைந்து கூவினார்.

தூக்குக் கழி ஒன்று தடாலென்று அவருடைய மண்டையில் அடித்தது. உடனே கையில் துப்பாக்கி ஏந்தி நின்ற மூன்று ராணுவ வீரர்களும் கூட்டத்தை நோக்கிக் குறி பார்த்தார்கள். அங்கிருந்த டான் கிராமவாசிகளில் ஒருவன் அந்தத் துப்பாக்கியைப் பிடுங்க முயன்றான். உடனே அவனுடைய வயிற்றில் துப்பாக்கி வீரர்களில் ஒருவன் சுட்டான். பிற ராணுவ வீரர்களும் சுட்டார்கள். கூட்டத்தினர் திகிலடைந்து போய் மௌனமாக நின்றார்கள். ராணுவ வீரர்கள் மீண்டும் துப்பாக்கிகளில் குண்டுகளைக் கெட்டித்துக்கொண்டே பின் வாங்கிச் சென்றார்கள். ஆத்திரம் அடைந்த கூட்டம் இரைச்சலிட்டு அவர்களை நோக்கி அலைமோதிக் கொண்டு வந்தது.

மற்றொருவனுடைய துப்பாக்கியைப் பிடுங்கி இடுப்புக்கு நேராகத் தாழ்த்திப் பிடித்துக்கொண்டார் வாங். கதவை நோக்கி வேகமாக முண்டியடித்து முன்னேறிய குடியானவர்களை நோக்கி இரக்கமின்றிச் சுட்டார்; அதிவிரைவில் காலியான துப்பாக்கியில் ரவைகளைப் போட்டு நிரப்பிக்கொண்டு மறுபடியும் சுட்டார்; குடியானவர் சிதறி ஓடும்வரை சுட்டார்; தம்முடைய குண்டுகளினால் அந்த இடம் வெறிச்சோடிப் போகும் வரையில் சுட்டுக்கொண்டிருந்தார்.

துப்பாக்கியை முன்னும் பின்னுமாகத் திருப்பித் திருப்பிச் சுட்டுத் தள்ளினர். அவருடைய முகமெல்லாம் மக்கள் எறிந்த கல்லடி பட்டு ரத்த விளாறாகிவிட்டது. ஆடையெல்லாம் கிழிந்தன. தலைத் தொப்பியும் போய்விட்டது. தள்ளாடிக்கொண்டே கோயிலின் மேற்குத் தாழ்வாரத்திலுள்ள தம் இடத்துக்கு ஓடினார்.

அங்கிருந்த நாற்காலி ஒன்றில் போய்ச் சாய்ந்து விழுந்தார்; துப்பாக்கியை முழங்கால் மீது சாய்த்து வைத்துக்கொண்டு தலையை நட்டுக் கொண்டு சாய்ந்தார்.

''இந்தக் கலகத்துக்கு யாரோ ஒற்றர்கள்தான் பின்னணியில் இருந்து வேலை செய்திருக்கவேண்டும்'' என்று முணுமுணுத்துக் கொண்டார்.

டான் கிராமத்தில் பெருங் குழப்பம் நடந்துவிட்டது என்ற செய்தி சௌ கிராமம் முழுவதிலும் பரவிவிட்டது. ஓடிப்போன கலகக்காரர்களை ராணுவ வீரர் தேடுவதாகவும் வதந்தி. இந்தச் சேதியைக் கேட்டுப் பொன்மலர் கலக்கம் அடைந்தாள். தன் ஊரில் என்ன நடந்ததோ, தன் குடும்பத்தினருக்கு என்ன ஆபத்து ஏற்பட்டதோ என்ற கவலை அவள் மனத்தை வாட்டத் தொடங்கியது.

மாலையில் மஞ்சள் வெயிலில் தண்ணீர் கொண்டுவர வெளியே சென்றாள். தோளில் உள்ள தூக்குக் கழியில் இரண்டு பானைகள் தொங்கின. அவற்றை ஆடாமல் அசையாமல் தாங்கிக்கொண்டு நீரோடைப் படிகளில் தண்ணீரை நோக்கி இறங்கிச் சென்றாள்.

அடிவானத்தில் இருள் படர்ந்து, கரிய மலைகளையும் குன்றுகளையும் மெள்ள மெள்ள மூடத் தொடங்

கியது. நீரோடையில் சலசலத்துக் கொண்டிருந்த தண்ணீரில் மட்டும் மஞ்சள் ஒளி பளிச்சிட்டு வீசியது.

திடீரென்று அவள் முதுகின்மீது ஒரு கூழாங்கல் வந்து அடித்தது.

''எந்தப் பிசாசு கல் வீசுகிறது?'' என்று, திரும்பிப் பாராமல் முணு முணுத்த குரலில் அவள் சொன்னாள். கிராமத்தில் இன்னமும் அவளை எல்லாரும் புது மருமகள் என்றுதான் சொல்லி வந்தார்கள். அவள் எங்கே சென்றாலும் பின்னாலேயே குழந்தைகள் தொடர்ந்து வந்து கேலி செய்துகொண்டு போவார்கள்.

மற்றொரு கல் அவளுடைய தோள் பட்டையைத் தொட்டுக் கொண்டுபோய்த் தண்ணீருக்குள் விழுந்தது. மற்றொரு பானையிலும் தண்ணீர் நிரப்பிக்கொண்டு சுமைக் கழியைத் தோளிலிருந்து இறக்கி விட்டு ஆத்திரத்துடன் இடுப்பில் கைகளை வைத்துக்கொண்டே திரும்பிப் பார்த்தாள். சிறுவன் எவனையும் காணவில்லை.

அப்போது, ''தங்கச்சி, பொன் மலர்த் தங்கச்சி!'' என்று யாரோ மெதுவாகக் கூப்பிடுவது கேட்டது. தலையைச் சுழற்றி நாலு புறமும் பார்த்தாள். அடுத்த கணம் கீழே குனிந்து தூக்குக் கழியைத் தோளில் தூக்கிக்கொண்டு ஒரு நொடியில் படியேறி மேலே வந்து சேர்ந்தாள். எதிரே உள்ள மூங்கில் புதரில் அவளுடைய அண்ணி நிலாமணம் பேய்த் தோற்றத்தில் நின்றுகொண்டிருப்பதைக் கண்டாள். தலையை அலங்கோலமாக விரித்துப் போட்டுக்கொண்டு தடித்த முழு நிஜாரும் மேலே வெள்ளைச் சட்டையும் அணிந்து அலங்கோலமாக நின்ற நிலாமணத்தின் தோற்றம் பயங்கரமாகக் காட்சி அளித்தது.

''என்ன நடந்தது, அண்ணி?'' என்று பரபரப்புடன் கேட்டாள் பொன்மலர்; வார்த்தை குழறியது.

நிலாமணம் பதில் பேச முயன்றாள். ஆனால் குளிரினால் அவள் வாய் குழறியது. அவள் என்னவோ பீதியுற்றுப் போயிருந்தாள் என்பது தெரிந்தது.

''அண்ணி, உன் ரவிக்கை எங்கே?''

''உன் அண்ணனிடம் இருக்கிறது. அவருக்கு ரத்தப் பெருக்கு அதிகரித்து விட்டதால் ரொம்பப் பலவீனமாக இருக்கிறார். ரவிக்கையை அவருடைய தோள்மீது போட்டுச் சுற்றிக்கொள்ளச் சொல்லியிருக்கிறேன்.''

''அண்ணாவுக்கு என்ன நேர்ந்தது?'' என்று படபடப்புடன் கேட்டாள் பொன்மலர்.

''அவருக்கு ஒன்றுமில்லை. நன்றாகத்தான் இருக்கிறார். அவர்கள் துப்பாக்கியால் சுட்டார்கள். அதனால் அவருக்குக் காலில் காயம் பட்டிருக்கிறது. உயிருக்கு ஆபத்தில்லை'' என்றாள் நிலாமணம்.

''அவர்கள் ஏன் அவரைச் சுட்டார்கள்?''

''சர்க்காரின் நெல்களஞ்சியத்தில் ஏதோ குழப்பம் நடந்ததாம். கிராமத்து மக்கள் புது வருஷக் கொண்டாட்டத்துக்காகக் கொஞ்சம் அரிசி கடன் கேட்டார்கள். அதற்காக அவர்களைச் சுட்டுத் தள்ள ஆரம்பித்தார்கள். பெக்கி மாண்டுவிட்டாள்'' என்று வெறுப்புடன் மடமடவென்று நிலாமணம் சொன்னாள்.

''என்ன, பெக்கி இறந்துவிட்டாளா?''

''ஆம்; அவள் செத்து மடிந்துவிட்டாள்.''

ராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டதைப்பற்றிய விவரங்களையெல்லாம் பொன்மலருக்கு நிலாமணம் சொன்னாள்.

''ஓகோ! அப்படியானால் உங்களைத்தான் அவர்கள் தேடிக் கொண்டிருக்கிறார்களோ?'' என்று கேட்டாள் பொன்மலர்.

''ஆமாம்; நாங்கள் இங்கேயிருந்து போய்விடவேண்டும். ஷாங்காய்க்குப் போகலாம். ஆனால் இப்போதே போக முடியாது. அவருக்கு எழுந்து நடமாடக்கூடச் சக்தியில்லை. அவர் மலைமீது இருக்கிறார். உன் வீட்டில் சில நாள் தங்கியிருக்கவேண்டும்'' என்று கூறினாள் நிலாமணம்.

அதைக் கேட்டுத் திடுக்கிட்ட பொன்மலர் வாய் பிளந்தாள்;

அவள் இதற்குச் சம்மதிக்காமல் நடந்துவிட்டாள்.

அவள் போன பிறகு நீரோடையின் கரையில் இருந்த ஒரு புதருக் கடியில் நிலாமணம் வந்து நின்றாள். 'தம் தங்கையிடம் மட்டற்ற வாஞ்சை கொண்டிருக்கும் அவரே இப்போது தெரிந்துகொள்ளட்டும்! கல்யாணமான மகளும் தரையில் கொட்டிய தண்ணீரும் ஒன்றுதான்' என்றெல்லாம் எண்ணினாள். பிறகு கணவனைத் தேடி மலைக்குச் சென்றாள்.

வீரன் கோயிலில் வாங் தங்கியிருந்த இடம் பயங்கரமான தனிமை நிறைந்தது. முன் ஒரு காலத்தில் வீரன் கோயிலாக இருந்த அந்த இடம் அழகாகவும் விசாலமாகவும் இருந்தது. அங்கிருந்த சிலைகளையும் தெய்வச் சின்னங்களையும் அப்புறப்படுத்தி விட்டார்கள். ஆனால் வெகு நாளாக மண்டிக் கிடந்த சிலந்திக் கூடுகளும் குப்பைகளும் அப்படியே தான் இருந்தன. ஒரு மூலையில் எண்ணெய் விளக்கு எரிந்தது. ஒரு பக்கம் படுக்கையும் மேஜையும் சில நாற்காலிகளும் பெஞ்சுகளும் கிடந்தன. அதுவே வாங்கின் காரியாலயமாகவும் தூங்குமிடமாகவும் உபயோகப்பட்டு வந்தது. அந்தத் தனி இடத்தில் இரவின் தாளமுடியாத குளிருக்கு இடையில் நாற்றமும் பலமாக வீசியது. கைதான கலகக்காரர்களைக் கோயிலின் முன் மண்டபத்தில் சித்திரவதை செய்துகொண்டிருந்தார்கள்.

வதைக்கு ஆளானவர்கள், ''ஐயோ! ஐயோ!'' என்று உரக்கக் கூவிக்கொண்டிருந்தார்கள்; நடு நடுவே தணிந்து இரைப்பு வாங்கி விட்டுப் பிறகு மறுபடியும் ஒரே மூச்சாகக் கட்டிடமே அதிரும்படி ஓலமிட்டார்கள்.

வேலைகளை எல்லாம் முடித்துக் கொண்டு வாங் உள்ளே படுக்க வந்தபோது வெகு நேரம் ஆகி விட்டது. படுக்கையில் வாங் புரளும்போது கட்டில் பலகை கிரீச்சிடும் சப்தமும் அவர் காறி எச்சில் உமிழும் சப்தமும் கேட்டன. விளக்கு அணைந்தது. பிறகு கேட்க ஆரம்பித்தது குறட்டைச் சப்தம். காரிருள் மண்டிய இரவையே இழுத்து விழுங்குவதுபோல் 'கொர், கொர்' என்று வாயாலும் மூக்காலும் வாங் குறட்டை விட்டுக் கொண்டிருந்தார்.

திடீரென்று மலைகளுக்கு இடையில் சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களின் ஒலி கேட்டது. உதவி அதிகாரி ஒருவன் கையில் விளக்குடன் அறைக்குள் வந்தது தெரிந்தது.

''தோழர் வாங், தோழர் வாங், பண்டகசாலை தீப்பற்றி எரிகிறது!'' என்று கத்தினான் அவன்.

விழிப்புற்ற வாங் அவசரம் அவசரமாக உடைகளை அணிந்து கொண்டே, ''அந்த விளக்கை அணை!'' என்று எரிந்து விழுந்தார். பிறகு வெளியே கிளம்பினார்.

ராணுவத்தினர் கிராமத்தின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்குத் தீ விபத்தைப் பறை அறிவித்துக்கொண்டு போனார்கள்: ''தீ, தீ! தீப் பிடித்துவிட்டது! தீ! தீ! தீயை அணைக்க உதவுங்கள்!'' என்று கூவிக்கொண்டிருக்கும் சப்தம் வெகுதூரம் வரைக்கும் கேட்டது.

வாளிகளுடனும் மற்றும் பல பாத்திரங்களுடனும் எல்லாத் திசைகளிலிருந்தும் மக்கள் நீரோடையை நோக்கி விரைந்தார்கள். அவர்களுடைய உழைப்பின் பலனாகக் கிடைத்த அரிசி நெருப்பில் எரிந்து சாம்பலாவதைக் கண்டு அவர்கள் உள்ளம் குமுறியது.

என்ன செய்தும் என்ன? ஒன்று கூட மிஞ்சாமல் பண்டகசாலையில் இருந்த அரிசி முழுவதும் எரிந்து சாம்பலாகிவிட்டது. ஜ்வாலை விட்டு எரியும் தீ நாக்குகளுக்கிடையே அந்தப் பண்டகசாலைக் கட்டிடத்தின் விட்டங்கள் மட்டும் அப்படியே எலும்புக் கூடுபோல் நின்று கொண்டிருந்தன.

ஆந்தைகளும் கோட்டான்களும் தூரத்தில் உள்ள மரங்களில் வரிசையாக அமர்ந்து, அணைந்து கொண்டிருக்கும் தீயைத் திரும்பித்

திரும்பிப் பார்த்துக்கொண் டிருந்தன.

ஹிஸியன் பொதுஜனப் பாதுகாபபு நிலையத்திலிருந்து பொன் மலரும் அவள் கணவன் செல்வன் சூவும் நடந்து வந்துகொண் டிருந்தார்கள்.

ஆற்றில் மிதந்துவந்த பிணம் ஒன்றை அடையாளம் கண்டு சொல்லுவதற்காகப் பொான் மலரைச் சநதைப் பட்டணத்துக்கு அழைத்திருந்தார்கள். வெகு தூரத்திலிருந்து ஆற்று நீரில் மிதந்து வந்திருந்த அந்தச் சவத்தின் அங்க அடையாளங்களெல்லாம் தங்கவேரின் சாயலை ஒத்திருந்தன. இதனுல் அவளைக் கொண்டு அது அவன்தானு என்பதை ஊர்ஜிதப்படுத்திக்கொள்ள விரும்பினுர்கள்.

போலீஸ் ஸ்டேஷனுக்குப் பின்னுல் இருந்த கிடங்கில் மரக் கட்டில் ஒனறில் பிணத்தைப் போட்டு வைத்திருந்தார்கள். ஒரு சிறு மின்சார விளக்கு எரிந்து கொண் டிருந்தது.

சவத்தைக் கண்டதும் தங்க ளிடம் ஏதாவது உணர்ச்சி தென் படுகிறதா என்று போலீஸ் காரர்கள் கவனித்துக்கொண் டிருந்தார்கள் என்பதைச் செல்வன் சூ அறிந்துகொண்டான். தன் மைத்துனனின் சவத்தைக் காலோடு தலை பார்த்தான். அதிகமாகத் தன் ஆச்சரியத்தை வெளியிடவில்லை. ''என் அண்ணன்'' என்று தன் மனைவி வாய்க்குள்ளேயே மெதுவாகச் சொன்னது அவனுக்குக் கேட்டது.

முதல் முதலாக இப்போதுதான் குண்டுக் காயத்தை அவன் பார்க்கிறுன். துடையில் ஏற்பட்ட காயத்தை ரத்தமே இல்லாதபடி கழுவியிருந்தார்கள். விசாரணைக் காகப் போலீஸ்காரர்கள் அவர்களை வெளியே அழைத்துச் சென்ருர்கள். கடைசியாக அங்கிருந்த உத்தியோகஸ்தர் ஒருவர், அவர்களால் படித்து அறிந்துகொள்ள முடியாத சில காகிதங்களில் கையெழுத்து வாங்கிக்கொண்டு அவர்களைப் போகச் சொல்லிவிட்டார். பிரேதத்தை அடக்கம் செய்வதுபற்றிப் பேச்சு வந்தது. அந்த உத்தியோகஸ்தர், ''நீங்கள் அடக்கம் செய்ய ஏற்பாடுகள் ஒன்றும் செய்யாவிட்டால் நாங்களே அவற்றைக் கவனித்துக்கொள்ளுகிருேம்'' என்று கபடமாகப் பேசினுர். செல்வன் சூவும், 'சரி' என்று தலையை ஆட்டினுன்.

தங்கவேரைத் திரும்பவும் தங்கள் கிராமத்துக்குக் கொணடு வராமல் இருப்பதே நல்லது என்று இருவரும் எண்ணினுர்கள்.

ஆயினும், திரும்பியபோது பொன் மலரின் கண்களில் நீர் பெருகியது. இந்தச் சர்வ நாசத்தினுல் முதல் தடவையாக அண்ணனிடம் அவளுக்கு உண்மையிலேயே அநுதாபம் உண்டாயிற்று.

தீ விபத்துக்கு மறுநாள் சேதங்களை அப்புறப்படுத்தும்போது, இடிந்த சுவர் இரண்டின் இடுக்கில் ஒரு சவத்தைக் கண்டெடுத்தார்கள். அது உட்கார்ந்த நிலையிலே இருந்தது. அந்தத் தீப் பாழுக்கு மத்தியில் உடலெங்கும் சிவந்து கருகிப் போய் அமர்ந்திருந்த அந்தச் சவத்தின் தோற்றம் வெகு கேரமாய்க் காட்சியளித்தது. சவம் உட்கார்ந்திருந்த நிலை, கோயிலின் இரு புறங்களிலும் அமைந்துள்ள அருகர்களின் பிம்பங்களை நினைப் பூட்டியது. அத்தைக்குத் தோன்றியதுபோல்தான் மற்றவர்களுக்கும் தோன்றியது. பயமும் பீதியும் அவளை ஆட்டி வைத்தன. பிட்சுக்கள் இறந்தவுடன் அவர்களைப் பெரிய ஜாடியில் இந்த மாதிரிதான் உட்கார்வைத்துச் சமாதியில் இடுவார்கள். ஆனுல் தங்கவேரின் மனைவியிடம் தெய்வாம்சம் ஏதாவது இருக்குமோ? தீக் குவியலுக்கிடையே இருந்து அகப்பட்ட பெண்ணின் சவம் நிலாமணத்தினுடையதுதான் என்பது அவளுக்கு நிச்சயமாகத் தெரியும். என்னவோ, நிலாமணம் முன் பிறவியில் நிச்சயம் ஒரு பிட்சுவாக இருந்திருக்க வேண்டும்!

அது நிலாமணம் என்பது அவளுக்குத் தெரிந்துவிட்டது. ஆனு

லும் மற்றவர்களைப் போலவே அவளும் பேசாமல் இருந்து விட்டாள். கலகத்தில் பங்கு எடுத்துக்கொண்டது ஒன்று, களஞ்சியத்துக்குத் தீ வைத்தது மற்றொன்று - அந்த இருவரில் ஒருவர் தான் இந்த இரண்டு வேலைகளையும் செய்திருக்க வேண்டும் என்று எல்லாருமே சந்தேகித்தார்கள். அதுபற்றி ஆராயாமலும் பேசாமலும் விட்டுவிடுவதுதான் நல்லது. பதிலுக்கு எந்தவிதமான தண்டனை கிடைக்குமென்று யாருக்குத் தெரியும்? ஜப்பானியர்களின் காலத்தில் நடந்ததுபோல இந்தக் கிராமம் முழுவதையுமே அதிகாரிகள் அடியோடு அழித்துவிட்டாலும் அழித்துவிடலாம்.

உழவர் சங்கத்தின் தலைவர்கூட இதைச் செய்தது யார் என்று தம்மால் அறிய முடியாததுபோல் பாசாங்கு பண்ணிவிட்டார்.

சிப்பாய்க் குடும்பத்தினர்களுக்கு வாழ்த்துக் கூறும் தினத்தை மற்றொரு நாளைக்குத் தள்ளிப் போட்டார்கள். ஏனென்றால், தீவிபத்தில் வாணங்கள் யாவும் எரிந்து போய்விட்டன. உடனடியாக அவற்றைத் தயாரிப்பது முடியாத காரியம். வருஷப் பிறப்புக் கழித்த ஐந்தாவது நாள் குடியானவர்களிடமிருந்து தோழர் வாங் மீண்டும் ஒரு முறை பணம் வசூலித்துக்கொண்டு வாண வெடிகள் வாங்கப் பட்டணத்துக்குப் போனார்.

மறுநாள் அதிகாலையில் கிராமப் பொதுக் காரியாலயத்துக்கு வெளியே மக்கள் கூடியிருந்தார்கள். நெல்கதிர்க் கீதம் பாடும் குழுவினர் முன்னால் சென்றார்கள். அவர்களுக்குப் பின்னால் பரிசுகளைத் தூக்கி செல்பவர்கள் வந்தார்கள். அவர்கள் சேகண்டிகளையும் காங் ஜாலராவையும் முழக்கினார்கள். வர்ணம் பூசிய கன்னங்களில் உதய சூரியனின் செவ்வொளி வீச நடனமாடும் ஆண் பெண் இருபாலாரும் ஒருவர் பின் ஒருவராக இரண்டு வரிசையாக அணிவகுத்து வழக்கம் போல் நடனம் ஆடினார்கள். கலகத்தில் உறவினர்களைப் பறிகொடுத்தும் சோற்றுக்கு இல்லாது வறுமையில் வாடியும் இருக்கிற அவர்கள், உள்ளத்திலே உள்ள வெறுப்பை வெளியே காட்ட வகையில்லாமல்தான் நடனம் ஆடினார்கள். பரிசுகளைச் சுமந்துகொண்டிருந்தவர்கள் அந்தச் சுமை தாளாமல் குனிந்துகொண்டார்கள். பாதை வழியாக அவர்கள் நிதானமாகப் போய்க்கொண் டிருந்தார்கள். சேகண்டிகளும் தாளங்களும் ஒன்றாக இழைந்தன.

'சாங், சாங்! சி! சாங் சி!
சாங், சாங்! சி சாங் சி!'

என்ற பாட்டின் கோஷம் ஒலித்துக் கொண்டே சென்றது.

எங்கும் வியாபித்து நின்ற அகண்டமான வான வெளிக்குக் கீழே அந்தச் சப்தம் காற்றில் கலந்து தேய்ந்துகொண் டிருந்தது.

உப்பிலே சிற்பம்

இன்று பாகிஸ்தானாகப் பிரிந்திருக்கும் பிரதேசத்தில் கி. பி. 1,500 - இலிருந்து ஒரு குடும்பத்தார் உப்புப் பாறைகளில் பலவிதச் சிற்பங்களைச் செதுக்குவதையே தொழிலாகக் கொண் டிருக்கிறார்கள்.

உப்புச் சுரங்கம் ஆரோக்கியம் அளிக்குமாம். ஜல தோஷம், ஆஸ்த்மா போன்ற நோய்களுக்கு உப்புச் சுரங்கத்தில் போய் இருந்தால் நல்லது என்று சுரங்கக்காரர் சொல்லுகிறார்கள்.

—'நேஷனல் ஜியாகிராஃபிக் நியூஸ் புல்லட்டீன்,' யு. எஸ். ஏ.

EDITED PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.